2 7215

# T. N. L. A. Debates

## OFFICIAL REPORT

VOL: LI. No: 1 and 2

April 22 and 23
1983

V211, 31 N83
N83.51.1&2
136045

[1983 ஏப்ரல் 22

மூலமாக நம்மால் இயன்ற அளவிற்கு நாம் செய்துவருகிறோம். தென்னாட்டில் இருக்கக்கூடிய வேறு ஆறு மாவட்டங்களுக்கு mini project இன் கீழே நாம் அங்கே உதவி செய்து கொண்டு வருகின்றோம். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் டேனிடாவைப் பொறுத்தவரையிலும் இரண்டு மாவட்டங்களில் தான் நாம் செய்து கொண்டு வருகின்றோம்.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, செயல்படுத்தப் படும் குடிநீர்த் திட்டங்கள் அனைத்திற்கும் ஒப்புதல் அளிக்கப் பட்டு விட்டதா? டேனிடா திட்டம் மூலம் செயல்படுத்த மல்டி பர்ப்பசில், அரசிற்கு ஏதாவது கருத்து மாறுதல் ஏற்பட்டு, இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட தடை உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 'டேனிடா' திட்டத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலம் மிகச்சிறப்பான வகையிலே, திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டுவருகிறது. என்னென்ன இலக்கு வைத்திருக்கிறோமோ, அந்த நேரத்திற்கு முன்பாக 'Before the particular point of time' முடித்துக்கொண்டு வருகிறோம். ஆகவே இதில் எந்தவிதமான மந்தத் தன்மையும் இல்லை, வேகமாக செயல்படுத்துகிறோம். Multi Purposes Workers Scheme—அவர்களை மாநிலம் பூராவும், அந்தப் பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய தாய்—சேய் நல விடுதி களில் நியமிக்க வேண்டுமென்று முடிவெடுத்தோம். அது டைரக்ட் ஆக டேனிடாவிற்குச் சம்பந்தமில்லை என்றாலும், கோர்ட்டுக்குச் சென்று தடை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடை இருப்பதன் காரணமாக நாம் வேகமாக செயல்படுத்த முடியவில்லை. அங்கே தடை வாங்கி இருப்பதால் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையிலுள்ள ஆம்புலன்ஸ் வண்டிகள்

*வினா எண் 845—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வண்டிகள் எத்தனை உள்ளன?

(ஆ) இவ்வண்டிகள் எப்பொழுது வாங்கப்பட்டன?

(இ) இந்த ஆம்புலன்ஸ் வண்டிகள் பழுதடைந்து இருப்பது அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் ஒரே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி உள்ளது.

(ஆ) இந்த வண்டி 1965-ம் ஆண்டு வாங்கப்பட்டது.

(இ) மாநில சுகாதார போக்குவரத்து அலுவலக பழுது பார்க்கும் பொறியாளர் அவர்களால் 19—1-1983 அன்று இவ் ஊர்தி பழுதுபார்க்கப்பட்டு தற்போது ஓடும் நிலையிலுள்ளது.



1933 ஏப்ரல் 22]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆம்புலன்ஸ் வண்டி கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக ஓடுவதற்கு லாயக்கில்லாமல், மரத்தடியில் கிடந்தது. இதுபோன்ற ஆம்புலன்ஸ் வண்டிகள் மிகவும் அத்தியாவசியமாக இருக்கிற காரணத்தால், இந்த சர்வீஸ் இன்ஜினீயர்களை விட்டு, வெளியிலே அந்த வண்டிகளை உடனடியாகப் பழுது பார்க்கப் பட்டு, பொதுமக்களுக்கு உதவுகின்ற வகையில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, இப்போது இந்த ஆம்புலன்ஸ் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன். எம்.ஜி.எம். 5013 என்ற அந்த வண்டியைச் சொல்கிறார் என்று கருதுகிறேன். அந்த ஸ்டாண்டர்டு வண்டி 6350 கிலோ மீட்டருக்கு ஓடியிருக்கிற காரணத்தால், கொஞ்சம் பழைய வண்டியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புது வண்டி வேண்டுமென்று மறைமுகமாகக் கேட்கிறார்கள். அந்த வண்டி ஓடவில்லை என்று அதிகாரிகள் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: இதைப்போன்ற ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு, மாதத்திற்கு இத்தனை லிட்டர் பெட்ரோல்தான் 'கன்சம்ஷனுக்கு' என்று நிர்ணயம் செய்து இருப்பதால், அந்த வண்டி ஓடமுடியாத நிலையில் இருக்கிறது. மேல் அந்த 'கன்சம்ஷன்' லிமிட்டை உயர்த்தி, தேவையான பெட்ரோல் அளவு வாங்கிக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, இது ஒரு பாலிசி டெசிஷன். கொள்கை அளவிலே நாம் எடுக்க வேண்டிய முடிவு. ஆகவே இந்த நேரத்திலே சொல்வது பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

31-10-1982 வரை தமிழகத்தில் தொழில் துவங்கஅனுமதி கோரி மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள்

*வினா எண் 846—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

31-10-1982 வரை தமிழகத்தில் தொழில் தொடங்க அனுமதி கோரி, அரசு துறையிலும் தனியார்களிடமிருந்தும் வரப் பெற்ற விண்ணப்பங்கள், மாநில அரசால் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளவை எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: 1977-லிருந்து 1982 அக்டோபர் திங்கள் வரையில் மாநில அரசால் பரிந்துரைக்கப் பட்ட தனியார் விண்ணப்பங்கள்: 473

வெளியீடு 28-11-1983]

[Issued 28-11-1983

(கன்னிமாரா பொது நூலகம் மற்றும் ஆராய்ச்சி நூலகம், எழும்பூர், சென்னை-600 008 — 2725)

# தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU

# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 22, 1983—தொகுதி LI எண் 1

Friday the 22nd April 1983 Volume LI No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department Fort St. George

Madras-600009

[Price Rs. 3-50 Paise

விலை ரூ. 3-50 காசுகள்]

அரசுத்துறை விண்ணப்பங்கள்: 33 ஆக 506 விண்ணப்பங்கள் மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மாநில அரசு பரிந்துரை செய்து மத்திய அரசிற்கு அனுப்பியதில், மத்திய அரசு எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது? எவ்வளவு ரூபாய்க்குத்தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது? அந்த அளவை உயர்த்த மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவரவர்களே• 1977-ல் பரிந்துரை செய்யப்பட்டது 61, உரிமங்கள் வழங்கப்பட்டது 42; 1978-ல் பரிந்துரை செய்யப்பட்டது 45, உரிமங்கள் வழங்கப்பட்டது 33; 1979-ல் பரிந்துரை செய்யப்பட்டது 49, உரிமங்கள் வழங்கப்பட்டது 32; 1980-ல் பரிந்துரை செய்யப்பட்டது 108, உரிமங்கள் வழங்கப்பட்டது 57; 1981-ல் பரிந்துரை செய்யப்பட்டது 82, உரிமங்கள் வழங்கப்பட்டது 39; 1982-ல் பரிந்துரை செய்யப்பட்டது 151, உரிமங்கள் வழங்கப்பட்டது 30. ஆக மொத்தம் 1971-லிருந்து 1982 10-வது மாதம் வரைபரிந்துரைகள்செய்யப்பட்டது506. அதிலே உரிமங்கள்வழங்கப்பட்டது 233. ரூபாய் 3கோடிக்கு மேலே போனால் அந்த உரிமங்களுக்கான மனுக்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட வேண்டும். ரூபாய் 3 கோடி வரைக்கும் டி.ஜி.பி. ரிஜிஸ்ட்ரேசனுக்காக, அதுவும் மைய அரசினுடைய சம்பந்தப்பட்ட இயக்குநருக்குத்தான், அந்த டி.ஜி.பி. ரிஜிஸ்ட்ரேசனுக்காக ரூபாய் 3 கோடி வரைக்கும் அவர்களுக்குப்பரிந்துரை செய்யவேண்டும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர் ளே, 1956-ஆம் ஆண்டு இன்டஸ்ட்ரியல். டெவலப்மென்ட் ரெகுலேசன் ஆக்ட்டின்படி சாதாரண தொழில்களுக்கு அனுமதி கொடுப்பது, அதை முறைப்படுத்துவது என்ற உரிமை கூட மிகச் சாதாரண தொழில்களுக்குக்கூட மத்திய அரசுக்கு அந்தச் சட்டம் உரிமை வழங்குகிறது. ஆகவே இதிலே இருக்கின்ற பல தொழில்களுக்கு அனுமதி வழங்க இதிலே ரெகுலேட் செய்ய வேண்டுமென்று உரிமைகள் மாநிலத்திற்குத்தான் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி அதைப் பெற முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களேஇப்போது டி.ஜி.பி.ரிஜிஸ்ட்ரேசனுக்காக 3 கோடி ரூபாய் வரை என்று இருக்கிற அந்த அளவை 5 கோடி வரையில் ஆக்கலாமா என்று மத்திய அரசு பரிசீலித்துக் கொண்டிருப்பதாக மத்திய அமைச்சர் நாடாளு



மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். எனவே அதிக அளவிலே மத்திய அரசு அனுமதிகளை வழங்குமானால் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றுதான். இப்போது இருக்கிற பிரச்னை, உரிமையை நமக்கு வழங்குவது ஒரு புறத்திலே இருந்தாலும் உரிமைகள் உரிய நேரத்திலே வந்து சேர்ந்தால் சரிதான். தமிழ்நாடு அரசு உரிமங்கள் வழங்கக்கூடிய அளவுக்கு

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு பரிந்துரை செய்து மத்திய அரசு அனுமதி பெற்றுக்கொண்டிருக்கிற தொழில்களுக்கு உரிமங்கள் வழங்குவதில் இவ்வளவு நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்று ஏதாவது கால நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையெனில் தாமதத்தை தவிர்க்கின்ற வகையில் கால நிர்ணயம் செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதில் கால வரையறை ஏதும் மத்திய அரசு நிர்ணயிக்கவில்லை. இது ஒரு மாநில அரசு மட்டும் வற்புறுத்தி நடக்கிற விஷயம் அல்ல. அது அனைத்திந்திய அளவிலே எடுக்கப்பட வேண்டிய, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவேண்டிய ஒரு கொள்கை. அவர்கள் முடிவு செய்ய வேண்டியதை நாம் பேசிப் பிரயோசனம் இல்லை.

## தூத்துக்குடியில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

*வினா எண் 847—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நெல்லை மாவட்டம் தூத்துக்குடியில் 'சிப்காட்' தொழிற்பேட்டை பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, 700 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் ''சிப்காட்'' நிறுவனம் தொழிற்பேட்டைகளை (Industrial Complex) அமைக்கும் பொருட்டு தூத்துக்குடி வட்டார வளர்ச்சிக்காக (Tutico in Area Development) கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 1,157 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்தும், மேலும் 150 ஏக்கர் நிலத்தை புதிதாக கையகப்படுத்தவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் சில நில உரிமையாளர்கள் மேற்படி அரசு ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுக்களை (Writ Petitions) தொடுத்துள்ளனர். உயர்நீதி மன்றமும் அரசு ஆணை நிறைவேற்றப்படுவதை தடுப்பு ஆணை

(Stay order) மூலம் நிறுத்தி வைத்துள்ளதால், மேல் நடவடிக்கைகள் எடுப்பது தடைப்பட்டுள்ளது. தடுப்பு ஆணையை நீக்கும் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு வழக்கறிஞர் மூலம் அரசு எடுத்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் அமைய இருக்கும் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அங்கே உள்ள நிலச்சுவான் தாரர்கள் கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஸ்டே வாங்கிய இடத்தைத் தவிர மீதி இடங்களில், அந்த தொழிற்பேட்டையை அமைக்க முடியுமா? இப்போது உள்ள அந்த ஸ்டேவை வெக்கேட் பண்ணு வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட நிலங்கள் அனைத்துமே உயர்நீதி மன்றத்தாலே ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டு அரசுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. நான் ஏற்கனவே அவற்றை விரிவு படுத்தி, அந்த ஸ்டேவை வெக்கேட் செய்வதற்கு அரசு நடவடிக் கைகளை மேற்கொண்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் அமையவிருக்கும் அந்த சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு கோர்ட் ஸ்டே வாங்கியிருக்கிற காரணத்தால் அதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆதலால் இந்த காலதாமதத்தை தவிர்க்கும் அளவிலே அந்த சிப்காட் தொழிற்பேட்டையை பனைமரத்துப்பட்டி, சேரன்மா தேவி, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பின்தங்கிய ஊர்களில் அரசு அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத்தலைவர் அவர் களே, இது குறித்து தனிக்கேள்வி போடவும்.

திரு. செ. இராமலிங்கம்: துணைத்தலைவர் அவர்களே, சிப்காட் இருக்கும் தொழிற்பேட்டைகளில் இருக்கும் தொழில் கூடங்களை 1-4-1982 முதல் அவர்களுக்கே சொந்தமாக்கும் விதத்தில் 20% இனிசியல் பேமென்ட் செய்து விட்டு, மீதமுள்ளதை தவணை முறையில் கட்டலாம் என்று 19-3-82ல் தான் அரசு ஆணை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1-4-1982 முதல் வாடகைக்கு பதிலாக அந்தத்தொகைக்கு வட்டி கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அதை வாடகையாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிட்கோவைப் பற்றி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரிடத்தில் அந்தக் கேள்வியைக் கேட்குமாறு தெரிவித்துக்கொள் கிறேன்.



மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கொண்டாரெட்டி இனமக்களின் எண்ணிக்கை.

*வினா எண் 657—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971—ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி கொண்டாரெட்டி இனம் தமிழகத்தில் எவ்வளவு?

(ஆ) 1981-ம் ஆண்டு கணக்குப்படி கொண்டாரெட்டி இனம் எவ்வளவு என்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) 1971- ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்புப்படி இவர்களுடைய எண்ணிக்கை 714.

(ஆ) 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகை அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. எனவே புள்ளி விவரம் இல்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971—மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கொண்டாரெட்டி வகுப்பினர் தமிழகத்தில் எந்த எந்த மாவட்டத்தில் எத்தனைபேர் இருக்கிறார் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் 2 பேர் செங்கற்பட்டில் 10 பேர், தென்னாற்காடு மாவட்டத்தில் 19பேர், சேலத்தில் 378 பேர், கோயம்புத்தூரில் 300 பேர், தஞ்சாவூரில் 7 பேர் என்று 1971 ஆம் ஆண்டு கணக்குப்படி அவர்களுடைய எண்ணிக்கை இருக்கிறது.

செல்வி ப. விசயலட்சுமி: தலைவர் அவர்களே, கொண்டா ரெட்டி வகுப்பினர் தமிழகத்தில் பேக்வார்ட் கம்யூனிட்டி என்றா, அல்லது பார்வார்ட் கம்யூனிட்டி என்றா, எப்படி வகை செய்யப்பட்டுள்ளது? சிலர் ஜாதியை மாற்றிக்கொண்டு சான்றிதழ் பெற்று, சலுகைகள் பெற்றதாக தகவல்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எஸ். டி. லிஸ்டில் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட பிரிவினர் பட்டியலில் இருக்கி றார்கள். போலியாக சான்றிதழ்கள் பெற்று சிலர் தமிழகத்தில் அந்த வகுப்பில் சேர்ந்துள்ளதாக அரசின் கவனத்திற்கு சில குறிப்புகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த கொண்டாரெட்டி பிரிவினர் வடாற்காடு மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறோம் என்று ஒரு கூட்டத்தைக் கூட்டி, தீர்மானம் போட்டு அரசுக்கு எங்களையும் கொண்டாரெட்டி

VRII,31 MC5
N83.51.1 P2
சென்னை-600 008.
136045

உள்ளடக்கம்.

22—4—1983

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். i

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். vii

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்) ix

1. வினாக்கள்—விடைகள் :
உடுக்குறியிட்ட வினாக்கள் 1—35

2. தகவல் கோரல் :
உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 36—38

3. உரிமைப் பிரச்சினை :
உள்ளாட்சித் துறை அமைச்சர் மீதும் மற்றும் "தினகரன், எதிரொலி, குங்குமம்" ஆகிய பத்திரிகைகள் மீதும் 38—40

4. ஒத்திவைப்புத் தீர்மானம் :
சர்க்கரை ஆலைகள் ஒப்பந்தம் செய்து கொண்ட சாகுபடியாளர்களின் கரும்பை வாங்கிக் கொள்வது 40—49

5. அறிக்கை அளித்தல்:
விதி 106-ன் கீழ் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை 49—50

6. அறிவிப்புகள் :
(அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் 50—51
(ஆ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம் 51—52
(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் 52—53
(ஈ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம் 53

வகுப்பில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கோரிக்கை அனுப்பி
யிருப்பதாகத் தெரிகிறது. அவர்களை இந்த தாழ்த்தப்பட்ட
பட்டியலில் சேர்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? 30
ஆண்டுகளுக்கு முன்பாகவே, பத்திரப் பதிவு அல்லது வேறு
சான்றிதழ்களில் அவர்கள் கொண்டாரெட்டி வகுப்பைச் சேர்ந்த
வர்கள் என்ற அத்தாட்சி வைத்து இருந்தால் போதுமா? அவர்கள்
அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நிருபிப்பதற்கு வேறு
என்ன சான்றிதழ்கள் தேவைப்படுகிறது? இந்தத் தகவல்களை
அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே,
கொண்டாரெட்டி வகுப்பினரைப் பொறுத்தவரையில் அவர்கள்
ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் இடம் பெற்று
இருக்கிறார்கள். பழங்குடியினர் பட்டியலில் இடம்
பெற்றுள்ளனர். அவர்களுக்கு சில மரபுகள், பழக்க வழக்கங்கள்
பண்பாடுகள் என்று இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றுகிறவர்
களை அந்தப் பட்டியலில் சேர்த்துள்ளனர். இவர்கள் வடாற்காடு
மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழகம் எங்கிலும் சிதறிக்கிடக்கின்ற
இவர்களை எல்லாம் அந்தப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று
சொன்னால், அதற்காக சில ஆய்வுகளைச் செய்யவேண்டியிருக்
கிறது. சிலர் போலிச் சான்றிதழ்களை வாங்கி அந்தப் பிரிவினர்
என்று சொல்லுகின்ற நிலைமை இருப்பதால், அதை ஆராய்ந்து
பார்த்து, அதற்குப் பிறகு அவர்களை அந்தப் பட்டியலில்
சேர்ப்பது என்று முறை வைத்து இருக்கிறோம். முன்பு இந்தச்
சான்றிதழ்களை வட்டாட்சியர் அளித்து வந்தார். தற்போது
அதை மாற்றி, கோட்டாட்சியர் தரவேண்டும் என்று உத்தரவு
பிறப்பித்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் தற்போது
தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

(முற்பகல் 10-10)

திரு. ஜி. மூர்த்தி: தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும்
இவர்கள் குறிப்பிட்ட இடத்தில் குறைவாக இருப்பதினால்
சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து சான்றிதழ் வழங்கும்போது
அந்த ஊருக்குச் சென்று விசாரித்து அதன்பிறகு சான்றிதழ்
வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே,
நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தவறுகள் நடைபெற்ற
தாக அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதன் காரணமாக
இதற்கு முன்பு வட்டாட்சியர் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கி
வந்ததற்குப் பதிலாக தற்போது கோட்டாட்சித் தலைவர்
மூலமாக தீர விசாரித்து பரிசீலனை செய்து கண்காணித்து
கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.
தவறுகள் நடைபெறுவதாகச் சொன்னதால் அதன்மீது அரசு
நடவடிக்கை எடுத்திருக்கிறது. வருங்காலத்தில் இத்தகைய
தவறுகள் நேராது என்ற எண்ணத்தோடு இந்த ஏற்பாடு செய்யப்
பட்டிருக்கிறது.



திருமதி தா. இராசாம்பாள்: தலைவரவர்களே, தற்போது
கொண்டாரெட்டி என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் மலைவாழ்
மக்கள் என்று சான்றிதழ் பெற்று எவ்வளவு பேர் கல்லூரிகளிலும்
வேலைவாய்ப்பிலும் இடம் பெற்றுள்ளார்கள் என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அது
பற்றிய விவரங்கள் தற்போது இல்லை; தனிக்கேள்வி போடவும்.

பள்ளிகளில் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை மாற்றி
பணமாகவே கொடுக்கும் திட்டம்.

*வினா எண் 658—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி
திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் உதவித்தொகைக்குப் பதிலாக புத்தகங்கள்
வழங்கும் திட்டத்தை மாற்றி மீண்டும் அதைப் பணமாகவே
கொடுத்து விடுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) பள்ளிகளில் உதவித்
தொகைக்குப் பதிலாக புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை
மாற்றி மீண்டும் அதைப் பணமாகவே கொடுத்து விடுவது குறித்து
ஆராய்ந்து தற்போதுள்ள புத்தகங்கள் வழங்கும் முறையை
மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும் தொடர்ந்து இதே
முறையையே செயல்படுத்தலாம் என்றும் அரசு ஏற்கனவே இறுதி
முடிவெடுத்து ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இந்த பள்ளிகளில்
பயிலும் ஏழை குழந்தைகளுக்கு 1 முதல் 10—வது வகுப்பு
வரையில் படிக்கிற குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள்
வழங்கப்படுவதாகச்சொல்லப்படுகிறது. ஆனால் அந்த புத்தகங்கள்
பரீட்சை முடியும் தருவாயின்தான் கொடுக்கப்படுகின்றன.
ஆகவேதான் இதை பணமாகக் கொடுக்க வேண்டுமென்று
சொன்னேன். ஆகவே, அரசு இதை மீண்டும் மறுபரிசீலனை
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே,
அரசினால கொடுக்கப்படுகிற இந்த புத்தகங்கள் காலம் கடந்து
கொடுக்கப்பட்டு வந்தது என்று சொல்லுகின்ற நிலை முன்பு
இருந்தது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் இது
குறித்து எடுத்துரைத்திருக்கிற காரணத்தால் அரசு இதை
ஆராய்ந்து மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்கள் மூலமாக
ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 31-ந் தேதிக்குள் கொடுக்க
வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பித்திருக்கிறது.

(உ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ) 60

7. கவன ஈர்ப்புகள் :

(அ) வேடசந்தூரில் இருந்து வந்த மின் துறை வருவாய் பிரிவு அலுவலகம் திண்டுக்கல்லுக்கு மாற்றப்படுதல். 54—55

(ஆ) வேதாரண்யம் பகுதியில் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுதல். 56—58

8. தன்னிலை விளக்கம் :

உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்ட கருத்துக்கு திரு. ரா. உமாநாத் விளக்கம். 58—59

9. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) கேளிக்கை வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 60

(ஆ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 60—82

(இ) பொது விற்பனை வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 82—97

(ஈ) கேளிக்கை வரி விதிப்பு (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 97—100

(உ) விளம்பர வரி விதிப்புசட்ட முன்வடிவு, 1983 100—117

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: 117


---

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்:**

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர் —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) —நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) —மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி,

தற்போது அத்தகைய நிலைமை இல்லை என்ற தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எங்காவது அந்த தேதிக்குள் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வார் களானால் அதன்மீது நடவடிக்கை எடுத்து வருகின்ற ஆண்டில் அத்தகைய பிரச்னை எழாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, அரசு இது சம்பந்தமாக உறுப்பினர்கள் சொன்ன கருத்தை ஏற்று, அதை மீண்டும் உரிய நேரத்தில் கொடுக்க உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அரசு உத்தரவு போடவில்லை என்று நான் சொல்லவில்லை. அங்கே மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரி யிடமோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ கேட்டால் புத்தகங்கள் வந்து சேரவில்லை ஜூலை, ஆகஸ்ட் மாதம் வரையில் கூடவரவில்லை என்று சொல்கிறார்கள். என்னுடைய சொந்த ஊரிலேயே சில பிள்ளைகளுக்கு புத்தகங்கள் சரியான நேரத்தில் கிடைக்கவில்லை. என்னுடைய பக்கத்து வீட்டு குழந்தைக்கு ஆகஸ்ட் வரையில் கிடைக்கவில்லை. ஆகவே, கைப்பணத்தைப் போட்டு வாங்கினோம் என்று சொன்னார்கள். இது சென்ற ஆண்டில் நடந்தது. கொடுப்பதாக இருந்தாலும் ஒன்றிரண்டு புத்தங்கள் கொடுக்கிறார்கள்; நோட்டுப் புத்தகங்கள் கொடுப்பதில்லை. ஆகவே அவர்களுக்கு அந்தத் தொகையை கொடுப்பதுதான் நல்லது; அமைச்சரவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயாசாரதி: தலைவரவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டுக்கு ஒரு மாவட்டத்தில் எத்தனை புத்தகங்கள் தேவை என்ற விவரத்தை தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாவட்ட நல அலுவலர்கள் பட்டியல் தயார் செய்து முன்கூட்டியே அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசு இதுபற்றி ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிற காரணத்தால் மறு பரிசீலனை தேவையில்லை என்று கருதுகிறேன். எங்காவது பிரச்னை இருந்தால், அரசின் கவனத்திற்கு வந்தால் அத்தகைய குறைபாடுகள் எழாமல் அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகவே, இதில் நடவடிக்கை எடுத்திருப்பதால் இதை மீண்டும் மாற்றி, பணமாகக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, பரீட்சை முடிந்த பிறகு புதிய வகுப்புக்கு அவர்கள் செல்லுகிற நேரத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கு பாட புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் உடனடியாகப் ஆதிதிராவிட நல அலுவலர்கள் மூலம் கொடுக்காத காரணத்தால் பள்ளியில் உள்ள தலைமை ஆசிரியர்கள் அந்த புத்தகங்கள், நோட்டு புத்தகங்களுக்குள்ள விலையை பணமாக மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அதன் பிறகு, இலாகாவிலிருந்து அவை வந்தவுடன் அவற்றைக் கொடுக்கின்ற நிலைமை பள்ளிகளில் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்.



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற குறைபாடுகள் இதுவரையில் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால். அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்குபதிலாகபணமாகக் கொடுக்கவேண்டும் என்றுதான் நாங்கள் கோரிக்கை விட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதுவரையில் அரசுக்கு அதுபோன்ற குறைபாடுகள் வரவில்லை என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு கூட, மார்ச், ஏப்ரல் மாதத்தில் இது குறித்து நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று,4,5 மாதங்களுக்குப் பிறகுதான் புத்தகங்கள் வருகின்றன. ஆனால், புத்தகங்களை வாங்கினால்தான் படிக்க முடியும் என்று ஆசிரியர்கள் அவர்களிடத்திலே சொல்கிறார்கள். இடைக் காலத்தில், அந்த மாணவ, மாணவிகள் விளையாடக்கூடிய சூழ்நிலைதான் வளர்ந்து வருகிறது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் பள்ளி திறந்தவுடன் அவர்களுக்கு புத்தகங்களைக் கொடுக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தாலும், நடை முறையில் அப்படி இல்லை. அதற்காக, புத்தகங்களைக் கொடுப்பதற்கு பதிலாக பணமாகவே கொடுத்து, பெற்றோர்கள் காலத்தோடு, புத்தகங்களை பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய அரசு மீண்டும் இதை பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபாட்டைச் சுட்டிக் காட்டவில்லை என்று நான் சொல்லவில்லை. சென்ற ஆண்டு கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் குறைபாடுகளின் மீதுதான் அரசு நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பித்தது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாத இறுதிக்குள், அந்த புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் பள்ளிகள் துவங்குவதற்கு முன்பாகவே, மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு, எவ்வளவு புத்தகங்கள் தேவை என்று ஆராய்ந்து பார்த்து உடனடியாகவே அனுப்பவேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறோம். ஆகவே அதன் மீது அரசு கண்காணிப்போடு நடவடிக்கை எடுத்திருக்கிறது. வருகிற ஆண்டிலே வேண்டுமானால் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]*

[1983 ஏப்ரல் 22

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய, இந்த அவையினுடைய கௌரவத்தை பாதுகாக்கின்ற பிரச்னையாகத் தான் இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை ரைஸ் பண்ணுகிறேன். அவைத் தலைவரிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன் ஒரு பத்திரிகையிலே வந்த செய்தி என்றால் அத்தோடு விட்டுவிடுவேன் 3,4 நாட்களாகவே வந்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய லோகல் அட்மினிஸ்ட்டிரேஷன் அமைச்சர்– (குறுக்கீடு) It is already in the press. ஆகவே, நான் சொல்லித்தான் புதியதாக பத்திரிகையில் வரவேண்டும் என்பது அல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து வேறு சில முடிவுகளை நான் அறிவிக்க வேண்டியிருக்கிறது. இப்போது அனுமதிப்பது சரியல்ல. அதனால் பிறகு, இந்த அவையில் எடுக்கும்போது பேசலாம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே கொடுமையான நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது. மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இலாகா சம்பந்தப்பட்ட விஷயம். அரசு அலுவலகத்தில் லிப்ட் இயங்காததன் காரணமாக, ஒரு அதிகாரி தவறி விழுந்து இறந்திருக்கிறார்கள். அதற்கு யார் பொறுப்பு?....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக பலர் தந்திருக்கிறார்கள். அதை அனுமதிக்கும் போது இதை நீங்கள் பேசலாம். திடீர் என்று எழுந்து நீங்கள் மட்டும் இதைச் சொல்லவேண்டாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைத் தலைவர் அவர்கள் அதைக்குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறார்கள் என்பது குறித்து நீங்கள் ஒரு கடிதம் கூட எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்....

திரு. துரைமுருகன்: நான் சொல்லி முடித்துவிடுகிறேன் அதற்குப் பிறகு நீங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 ஏப்ரல் 22]

திரு. துரைமுருகன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் ஏற்கெனவே துணைத்தலைவர் அவர்களால் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அதற்கு மேல் அப்பீல் கிடையாது. ஆனால் என்ன பேசினீர்கள், என்ன காரணம் என்பதை வேண்டுமானால் நான் பார்க்கிறேன். இப்போது அதை உடனடியாக எடுத்து விவாதிப்பதற்கு இல்லை.

(முற்பகல் 10–20)

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் சொன்னது என்னவென்றால் **

எனவே இதைப்பற்றி மறுபரிசீலனை செய்து அவை அவைக் குறிப்பிலே இருக்கலாமா அல்லது வேண்டாமா என்பதை முடிவு செய்கின்ற அந்த உரிமை தங்களுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே அமர்ந்திருக்கின்ற தலைவரிடத்திலே அந்தக் குறிப்புகளைக் கொடுத்து அவற்றை அவையிலே சொல்லப்போகிறேன் என்று சொல்லியதற்குப் பிறகு சொல்லி இருந்தால் பிரச்சினைகள் வந்திருக்காது.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் பேசிய பேச்சு அவைக்குறிப்பிலே இருக்கத் தேவையில்லை என்றுதான் நான் தீர்ப்புக் கொடுத்திருக்கிறேனே தவிர இருக்குமேயானால் என்று சந்தேகத்தோடு நான் தீர்ப்பு கொடுக்கவில்லை. நீதி விசாரணை நடந்துகொண்டிருக்கின்றன. எனவே அதுபற்றிய விவாதம் இங்கே தேவையில்லை என்றுதான் தீர்ப்பளித்திருக்கிறேன்.

* * *

டாக்டர் மு. கருணாநிதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை பூராவையும் நான் பார்த்து விட்டு அப்புறம் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைக்கு யார் தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் சொல்கின்ற தீர்ப்புதான் இறுதியான தீர்ப்பாகும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for finance), —Finance, Legislature, Election, Food, Fisheries. Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk. Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Torism Development Corporation, Cinematograpy Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை ..., மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், திருமணங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை சம்பந்தமாக அலுவல்கள்



2725

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலப் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றம் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Watter Supply and Drainage Board, Town Planning and Accommodation Countrol.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation —Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing. Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.**

பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல் (சார்புச்செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சீ. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்.)

(விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த டெக்னிகல் டிடெய்ல்ஸ் எல்லாம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பிரச்சினையை நான் பார்த்துவிட்டு பிறகுதான் தீர்ப்பளிக்க முடியும். அதுவரை இந்தப் பிரச்சினையைப் பத்திரிகைகளிலும் மற்றவைகளிலும் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதோடு பிரச்சினை முடிந்துவிடுகின்றது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அவையிலே இருக்கின்றபோது அப்படித் தீர்ப்பளிக்கவேண்டிய ஒரு பிரச்சினை வரும். அதுபோல் நீங்கள் இல்லாத நேரத்தில் துணைத்தலைவர் அவர்கள் அவையிலே எழுந்த பிரச்சினை பற்றி ஒரு தீர்ப்பளித்தபிறகு, அவைக் குறிப்பிலே இருந்து நீக்குவதாகத் தீர்ப்பளித்த பிறகு, அப்படி இன்று நடைபெற்றதை மீண்டும் நாளைக்கு ரிக்கார்டிலே கொண்டு வந்து திரும்பவும் அதிலே திருத்தம் செய்வது என்பது வரலாற்றிலேயே இல்லாத ஒன்று. வேண்டுமானால் திரு. துரை முருகன் அவர்கள் பேசும்போது மீண்டும் ஒருமுறை பேசலாம். அப்போது யார் அவையிலே தலைமை ஏற்று இருக்கிறார்களோ அவர்கள் அந்த பேச்சினுடைய மெரிட்டைப் பார்த்து அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டதை யொட்டி அவைக்குறிப்பிலே இருந்து இது நீக்கப்பட்டிருக்கின்றது. அதோடு முடிந்துவிட்டது அதற்குப் பிறகு திரும்ப ஏதாவது பிரச்சினை வந்தால் பார்த்துக்கொள்ளலாம்.

### 3. உரிமைப் பிரச்சினை.

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீதும் மற்றும் தினகரன், எதிரொலி, குங்குமம். ஆகிய பத்திரிகைகள் மீதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் குறித்த பிரச்சினை ஒன்றை எடுத்துக்கொள்கிறேன். ஒரு பொருள் பற்றி அல்லது அதற்குத் தொடர்பான பிரச்சினை பற்றி, வெவ்வேறு உறுப்பினர்கள் வெவ்வேறு கோணத்திலிருந்து உரிமைப் பிரச்சினைகளைக் கொடுத்துள்ளார்கள்.

முதலவது, 21-3-1983 அன்று திரு. தாமரைக்கனி மற்றும் 23-3-1983 அன்று டாக்டர் கே. பி. இராமலிங்கம் ஆகியோர் 'தினகரன்' பத்திரிகையில் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் நடந்த விவரங்களை அக்குழுவின் முடிவுகளைப் பேரவைத் தலைவர் பேரவைக்கு அறிவிக்கும் முன் வெளியிட்டுள்ளது பற்றி





இரண்டாவதாக, 16-4-1983 அன்று மாண்புமிகு அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் தன்மீது வேண்டுமென்றே களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு பேரவைத் தலைவர் தீர்ப்பில் கூறாத சில வாசகங்களை (போலி ரிக்கார்டுகள்) கொடுத்ததாக தலைப்பு, குறுந்தலைப்புக் கொடுத்து பிரசுரித்துள்ள 15-4-1983 தேதியிட்ட எதிரொலி மற்றும் 16-4-1983 தேதியிட்ட 'தினகரன்' நாளிதழ்கள் மீதும்.

மூன்றாவதாக, 18-4-1983 அன்று திரு. இரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் 16-4-1983 அன்று பத்திரிகை நிருபர்களிடையே பேசும்போது அலுவல் ஆய்வுக் குழுவிற்கு தான் சொல்லிய குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்வதற்கு தகுதியும் அதிகாரமும் இல்லை என்று சொல்லியது பற்றியும்;

நான்காவதாக, பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் 19-4-1983 அன்று அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் கொடுத்த ஆவணமும் ரசீதுகளும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் அலுவல் ஆய்வுக் குழுவை ஏமாற்றும் எண்ணத்துடன் செய்யப்பட்ட மோசடி, மற்றும் அவையின் உரிமையை மீறிய செயல் என்றும், அமைச்சர் பின்னர் வெளியே சென்று செய்தியாளர்களிடம் இந்தப் பிரச்சனை குறித்து விசாரணை செய்ய அலுவல் ஆய்வுக் குழுவிற்குத் தகுதி இல்லையென்று கூறி இருப்பதும் உரிமை மீறிய செயல் என்றும் உண்மைக்கு மாறான ஆவணங்களைத் தாக்கல் செய்வது உறுப்பினரது நடத்தை தவறிய குற்றங்களை செய்துள்ளதால் உறுப்பினராக நீடிக்கும் உரிமையை அவர் இழந்தவராவார் என்றும் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டும்; உரிமை மீறல் பிரச்சினைகளுக்கான முன்னறிவிப்புக்கள் கொடுத்துள்ளனர்.

21-4-1983 அன்று மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தை வேலு அவர்கள் 'குங்குமம்' வார இதழ் மீதும் மற்றொரு உரிமை மீறல் பிரச்சினைக்கான முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.

இவைகள் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புள்ள பிரச்சினைகளாக இருப்பதனாலும், அவை உரிமைகளைப் பாதிக்கும் செயலாகவும் இருப்பதனாலும், உறுப்பினர்களின் நடத்தைபற்றி இருப்பதனாலும், இதுபற்றிய பிரச்சினைகள் அனைத்தையும் விசாரித்து ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக எனக்கு பேரவையின் 255-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தனி அதிகாரத்தின்படி நானாகவே, உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப் பெற்ற பெயர்ப் பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 அப்துல்ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7 அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 அரங்கராசன், திரு. வெ. | உப்பிலயாபுரம் |
| 10 அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 12 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 15 அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 ஆறுமுகம், திரு. எம். | அவிநாசி (செ.வ.) |
| 19 சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 20 ஆறுமுகம், திரு. க. | அரியலூர் |
| 21 அனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22 இரத்தினம், திரு. எம். வி. | பொன்னேரி |
| 23 இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 இராசாம்பாள், திருமதி தா. | தலைவாசல் (செ.வ.) |

[1983 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி கருத்துக்கள் இருந்தால் வேண்டாம், உரிமைக்குழுவில் போய் எல்லாவற்றையும் பேசுங்கள். அதற்காகத்தான் என்னுடைய தனி அதிகாரத்தை இதில் பிரயோகப்படுத்தியிருக்கிறேன். விவாதத்தை நான் வரவேற்க விரும்பவில்லை. (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: ** (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு)

* மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். விரைவில் இதைப்பற்றி முடிவு தெரிவிக்கவேண்டும் என்று கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. இதில் எது உண்மை என்பதைப்பற்றி விரைவிலே தீர்ப்பு கூறுவதற்கு நீங்கள் வழி செய்யவேண்டும் என்று அவர் கேட்கலாம். ** அந்த பேச்சில் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி மட்டும் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினைக்குரியதாக இருப்பதால் மாண்புமிகு பேராசிரியருடைய கருத்துக்களை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். உரிமைக் குழுவுக்கு நீங்கள் விரைவிலே தகவல் தருவீர்களானால் விரைவிலே அவர்கள் தீர்ப்பு அளிப்பார்கள்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சர்க்கரை ஆலைகள் ஒப்பந்தம் செய்து கொண்ட சாகுபடியாளர்களின் கரும்பை வாங்கிக் கொள்வது.

*மாண்புகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இல. பலராமன், என். ஏ. பூங்காவனம், த. வேணுகோபால். வி. எம். தேவராஜ், என். எஸ். வி. சித்தன், பெ. சு. திருவேங்கடம், பாபு ஜனார்த்தனன் துரைமுருகன், கே. ஆர். சுந்தரம். செ. இராமலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன் ஆகியோர் வடாற்காடு மாவட்டம், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அங்கத்தினர்கள் பதிவு செய்த கரும்பை ஆலைக்கு வழங்கி மாதக்கணக்காக ஆகியும் அதற்கான பணம் அவர்களுக்கு வழங்காதது குறித்தும், தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையிலும் குறுங்குளம் அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



சாகுபடியாளர்களுக்கு 13 மாத காலமாகியும் கரும்பு வெட்ட உத்திரவு வழங்கப்படாதது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பல மாதங்களாக. 6 மாதங்களுக்கு மேல் ஆகியும், இன்றையதினம் வரையில் இது போன்ற வறட்சியான காலத்திலே கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கடுமையான வேதனைக்குள்ளாக்கக்கூடிய முறையிலே அவர்களுக்கு பணம் வழங்கப்படவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக இந்த அவையின் ஒத்தி வப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 7 தாலுகாக்கள், வேலூர், ஆரணி' வாலாஜா, அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி, போளூர் ஆகியவை அதற்கு இணைந்த பகுதியாக அதனுடைய பகுதியாக அமைந்திருந்தும் 1982-83 அவை ஆண்டுக்கு 12 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் பதிவு செய்ததில் செய்யப்பட்ட பல ஊழல்கள் இருக்கின்றன. ஆண்டாண்டாக அவர்கள் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பதிவு செய்தவர்களுக்கு இல்லாமல் புதிதாக பல நபர்களுக்கு பதிவு செய்து அதிலே முறைகேடு இருக்கிறது என்பதைப்பற்றி ஏற்கெனவே அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஏறத்தாழ நவம்பர் மாத மத்தியிலே ய ஆரம்பிக்கப்பட வேண்டியது அக்டோபர் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு. ஆரம்பிக்கப்பட்டதிலேகூட வருத்தம் இல்லை. ஆரம்பிக்கப்பட்டதை ஒரு பக்கம் வரவேற்றாலு, வெட்டு உத்திரவு கொடுப்பது என்பது மிகக் குறைந்த அளவு வயதுள்ள கரும்புக்குத் தந்திருக்கிறார்கள். 13 மாதங்கள் 14 மாதங்கள் ஆகியுங்கூட வெட்டு உத்தரவு வழங்காமல் இன்றைய வரையிலும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்கு நிர்வாகச் சீர்கேடு அங்கே இருக்கிறதுஎன்பதைச் சுட்டிக் காட்டகடமைப்பட்டிருக்கிறேன். அங்கே சி. சி. ஓ. என்ற நபர் இல்லாத நிலை, சி. டி. ஒ. என்பவர்தான் பொறுப்பாக இருக்கிறார், அந்த சி.சி. ஓ. வை ஏதோ வேலை நீக்கம், சஸ்பென்ஷன் செய்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். நிர்வாகச் சீர்கேட்டினாலே தான் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நவம்பர் மாதம் நான்கூட கரும்பை வழங்கினேன். ஆனால் 110 ரூபாய் அன்றைக்கு அட்வான்ஸ் ஆக வழங்கினார்கள். மீதிப்பணம் அரசு நிர்ணயித்த பணம்

வழங்கப்படாத நிலையில் இன்றைய தினம் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய பல தொல்லைகளிலே இப்படி வழங்காமல் இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவுமில்லாமல் ஜனவரி மாதம் 20 ஆம் தேதி அளவுக்கு 100 டன்னுக்கு மேலாக கரும்பைக் கொடுத்தவர்களுக்கு குறிப்பாக நானே அந்த ஆலைக்கு வழங்கினேன். இன்றைய தினம் ஒரு பைசா கூட பணம் வழங்காமல் இருக்கிறது. ஆகவே நிர்வாகச் சீர் கேடு காரணமாக, மிக மெத்தனமான போக்கு காரணமாக அதிகாரப் பற்றற்றவர்கள் இல்லாததன் காரணமாக அந்த ஆலையில் அதிகமான டீசல் இருந்தது, அதிகமாககணக்கில் வராத சர்க்கரை இருந்தது என்று மத்திய எக்சைஸ் டிபார்ட்மெண்ட் கண்டுபிடித்தது என்ற ஒரு நிலைமை பரவலாக இருப்பதன் காரணமாக இ போன்ற நிலைமை அந்த ஆலையிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக கரும்பு உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் கொடுத்த கரும்புக்கு விலையைக் கொடுக்காத நிலை இருக்கிறது. அதை சீர்படுத்து வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் புதிய ரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்து கிறார்கள் எட்டு மாதத்திலே அதுவயதிற்கு வந்து விடும்;எட்டு மாதத்தில் அதிலே சர்க்கரை கட்டுமானம் நிறைய இருக்கிறது இரண்டு ஆண்டுகளில் மூன்று முறை வெட்டலாம் என்ற நிலைகளில் விவசாயிகளை ஊக்குவித்தாலும் அத்தகைய கரும்புகளைத்தான் ஆலை ஏரியாவிலே பதிவு செய்யக்கூடிய வகையில், அந்த கரும்பு வகைகளைத்தான் நடவேண்டுமென்று ஒரு நிலைக்கு நிர்பந்தப்படுத்தினாலும், மூன்று முறைகள் வெட்டுவதற்கான சூழ்நிலையை அந்த ஆலை வைத்திருக்கிறதா? மூன்று முறைகள் வெட்டுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி யிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. 13 மாதங்கள், 14 மாதங்கள், 15 மாதங்கள் ஆகிறபோது அவைகள் விளைந்தாலும் மற்றைய கரும்புகளை விட 20 டன், 30 டன், தான் சராசரியாக வருகின்றன. இதைப்போல ஹை—யீல்டிங் வெரைட்டி என்று புதிய ரகங்களை கொண்டு வருவதால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. அதிக நாள் ஆவதினால் காய்ந்து போவது ஒரு நஷ்டம், வறட்சியான இந்த காலத்தில் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. பணம் வழங்காததால் அவர்களுக்கு செலவிற்கு கூட பணமில்லாத ஒரு நிலையிருக்கிறது. அந்த ஆலையில் இன்றைக்கு தனி அதிகாரியின் நிர்வாகத்திலே பல ஊழல்கள், பல நிலைகளில் பல தவறுகள் நடைபெறுகின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் அந்த ஆலைப்பகுதியிலிருக்கிற விவசாயிகள் பெரிய தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் பணம் வழங்குவதற்கும் அந்த கூட்டுறவுச் சர்க்கரைஆலை நல்லமுறையில் வளமாக இருப்பதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். மூன்று அமைச்சர்கள் மத்தியில் இந்த பொறுப்புகள் இருப்பதால் இதை, விவசாயத்துறை அமைச்சராக இருந்தாலும் சரி, அல்லது தொழில் அமைச்சராக இருந்தாலும் சரி, ஒரு அமைச்சரிடத்தில் பொறுப்புகளை வழங்கினா[illegible]ளவிற்கு



அந்த ஆலையை நல்ல முறையில் நிர்வகிக்க முடியும் என்ற உணர்வோடு அரசு அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு பணம் விரைவாக வழங்கப்படு வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்த பகுதியிலிருக்கிற விவசாயிகளைக் காக்க வேண்டும். அந்த ஆலையில் இருக்கிற நிர்வாகச் சீர்கேட்டை போக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்பது என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு ஆலையாகும். இந்த ஆலையில் ஏறத்தாழ12 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களில் இவர்கள் சென்ற ஆண்டு அக்ரிமெண்ட் செய்திருக் கிறார்கள். இந்த ஆலை நடக்கிற முறையினால் விவசாயி களுக்கு ஏற்படுகிற துன்பங்கள் சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக நிச்சயிக்கப்பட்ட கால கெடுவில் கரும்புகளை வெட்ட மறுக்கிறார்கள் என்பது ஒன்று. இப்படி காலந்தள்ளி கரும்பை வெட்டுவதினால் கரும்பின் சாரம் குறைகிறது; சாரம்குறைவதன் காரணமாக சர்க்கரை கிடைப்பது குறைகிறது. விவசாயிகளுக்கு அதனால் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. இரண்டாவதாக கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு 1[illegible]0 ரூபாய் என்ற விலையில் ஒருமுறை பணம் கொடுத்தார்கள். அதோடு நிற்கிறது. அண்மையிலே அரசாங்கம் ஒரு விலை நிர்ணயித்து 175 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அந்த ஆலை வைத்திருப்பது 172 ரூபாய். ஆகவே அரசு தரப்பிலே சொல்லப்படுகிற 175 ரூபாய் என்பதுஅங்கே அமலுக்கு வராமல் இருக்கிறது. அந்தப் பணமும் இதுவரை யாருக்கும் கொடுக்கப் படாமலிருக்கிறது. மூன்றாவதாக ஆலைக்குள் நடக்கிற விவகாரங்கள் தொழிலாளர்களுக்கும், ஆலை நிர்வாகத்திற்கும் இடையிலே இருக்கிற பல்வேறு பிரச்னைகளைத் தொடர்ந்து ஆலை பல நாட்கள் மூடப்படுகிறது. இப்போது சமீபத்திலே கூட நான்கு தினங்கள் நிறுத்தியிருக்கிறார்கள். இப்படி ஆலைக்குள்ளே, தகராறு; ஆலைக்கு வெளியே விவசாயிகள் சப்ளை செய்த கரும்புக்கு பணம் தருவதில்லை. வெட்ட வேண்டிய நேரத்தில் வெட்டாமல் இருக்கிறார்கள். அங்கே யிருக்கிற தனி அதிகாரி அந்த ஆலையை நிர்வகிப்பதற்கு பதிலாக அங்கே ஒரு ஆலயத்தை கட்டிக்கொண்டு அதை நிர்வகிக்கிற பணியிலே தான் இருக்கிறார். ஆலையை நிர்வகிப்பதாகத் தெரியவில்லை. முழுநேரமும் கோவில்பணி என்று சொல்லிக்கொண்டு விவசாயிகளிடமிருந்து பணமும் லாரி உரிமையாளர்களிடமிருந்து பணமும். வேறு பலரிடத்திலே யிருந்து நிதியை வசூலிப்பதுமாக ஆலயத்தை கட்டுகிறபணியிலே தான் ஈடுபட்டிருக்கிறார். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் ஆலையை கவனிக்கிற, நிர்வகிக்கிற

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 இராசு, திரு. ஜெ. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 30 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. ந. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. எ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தளி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 45 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. சே. | கடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ப. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்லூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 கருப்பசாமி பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 குருசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 76 குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 குப்புசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 அமிர்தராஜ், திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |

அல்லது அதுசம்பந்தமாக முழுநேரம் கவனம் செலுத்துகிற ஒரு அதிகாரியை அங்கே அமர்த்த வேண்டும். அல்லது ஆலையை மட்டும் கவனிக்கிற ஒரு அதிகாரியாவது இருக்க வேண்டும். இரண்டும் இல்லாத அதிகாரிகளைப் போட்டு விட்டு இப்போது அந்த ஆலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஊழியர்கள். மற்றவர்கள் பாதிக்கப்படுகிற ஒரு அவலநிலை அங்கேயிருக்கிறது. இதைப் போக்கவேண்டுமென்பதற்காக அந்த ஆலையில்இருக்கிறபல்வேறு விஷயங்களை எடுத்துச் சொல்ல, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க, நியாயம் கிடைக்க. நிச்சயித்த விலையில் உடனே பணம் கிடைக்க, இதுபற்றி மேலும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—40)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு குறித்த காலத்திலே பணம் கொடுக்காத காரணத்தினால் அந்த விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றிஎனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அக்டோபர் மாதத்திலே சப்ளை செய்த கருப்புக்கு அந்தநேரத்தில் ரூ. 110 அட்வான்சாகக் கொடுக்கப்பட்டது. மீதிப்பணம் இன்றைய வரையில் கொடுக்கப்படவில்லை. ஜனவரி மாதத்தில் சப்ளை செய்ததற்குஎந்தப்பணமும் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. இதுவேலூர் சர்க்கரை ஆலைக்கு மட்டுமல்ல. ஆம்பூர் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்குக்கூட, ஜனவரி மாதத்திலிருந்து பணம் கொடுக்கப்படவில்லையென்ற புகார் இருக்கிறது. வேலூர் சர்க்கரை ஆலையிலே இருக்கிற நிலையைச் சொல்லவேண்டுமென்றால், அது மிகச் சீர்கேடாக இருக்கிறது. ஆகவே அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த ஆலையைச் சரியாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கரும்பை காலாகாலத்தில் வெட்டுவதற்கு உத்தரவு கொடுக்காத காரணத்தால் வறட்சி நிலையின் காரணமாக, அதனுடைய ரெக்கவரி குறைந்து போய் விவசாயிகள் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கரும்பை வெட்டுவதற்குக் கூட சிலருக்கு முன்னுரிமை அளிப்பதும் சிலருக்கு அளிக்காமல் இருப்பதும் என்று பாரபட்சமாக நடப்பதாக ஒரு புகாரும் இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்க வேண்டும். புதிய ரக கரும்பை உற்பத்தி செய்கிற காரணத்தாலே, விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்சனவே கூட நான் சேட்ட நேரத்தில் கரும்புக்கு விலை போதவில்லை; அதிக விலை கேட்கிறார்கள் என்ற பிரச்சினையை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த ஆலைக்கு 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சித்தூர் ஆலையிலே ரூ200 வரையிலே கருப்புக்குவிலை கொடுக்கிறார்கள். ஆம்பூர் சர்க்கரை ஆலையிலே கரும்பை உற்பத்தி செய்த



விவசாயிகளுக்கு ஏதோ ஒரு காரணத்தினாலே. பெனால்டி என்று சொல்லி, டன்னுக்கு ரூ. 45 பிடிப்பதாகச் சொல்லி, அதனாலே, விவசாயிகளிடத்திலே பெரிய அதிருப்தி இருக்கிறது. ஒரு நிகழ்ச்சிக்குக்கூட அவர்கள் தடை உத்திரவு பெற்றுவிட்டார்கள். கடந்த காலத்திலே நான் கூட அந்த நிகழ்ச்சிக்குப் போவதாக இருந்தேன். அந்த விவசாயிகளுக்கு ஏதோ பொருள்களை வழங்குவதிலே, தாரதம்மியம் காட்டப்படுகிறது என்று சொல்லி' கோர்ட் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு கரும்பு சர்ககரை ஆலை நிர்வாகிகளுக்கும், கரும்பு உறபத்தி செய்கிற விவசாயிகளுக்கும் நல்ல சூழ்நிலை. இல்லை. அந்த அமைச்சரவர்கள் கவனித்து, அந்தக் கரும்பு உற்பத்தியாளர்களை அழைத்துப்பேசி ஒரு நல்ல நிலையை உண்டாக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட சம்பவத்தைப்பற்றி மேலும் விவாதிப்பதற்கு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் தனியார் சர்க்கரை ஆலை வடபாதி மங்கலம். குருங்குளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதே போன்று வட ஆற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், தென்னாற்காடு மாவட்டம்கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரைஆலையும், விவசாயிகள் வழங்கிய கரும்புக்காகப் பல மாதங்களாகியும், அதற்கான தொகையை கொடுக்காமலிருக் கின்றன. அதே போன்று, ஓராண்டு காலத்திற்கு மேலாக, 13 மாதங்களாகியும், இன்னும் பல விவசாயிகளுக்கு, கரும்புகளை வெட்டுவதற்கான கட்டிங்ஆர்டர் இன்னும் கொடுக்கப்பட வில்லைஅதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இந்த ஆண்டு காவேரி பொய்த்ததன் காரணமாக, விவசாயிகள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் போதுமான அளவு நிவாரண உதவி கூட இல்லாத நிலைமையில் குறிப்பாக, டெல்டா பகுதியில். அரசு தரப்பில்கூட பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் இன்றைய தினம் தாங்கொணாத துயருக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக' வட பாதிமங்கலம் சர்க்கரை ஆலையில் 13 மாத காலத்திற்கு மேலாக சாகுபடி செய்யப்பட்ட கரும்புக்கு இன்று வரை கட்டிங் ஆர்டர் கொடுக்கப்படவில்லை. இதனால், ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம்40 டன் வரவேண்டிய கரும்பு, இன்றையதினம் 20 டன், 25 டன் என்ற அளவுக்குத்தான் எடை வருகிறது அதே நேரத்தில் ஆலையின் நிர்வாகிகள், விவசாயிகளைப் பல்வேறு வகைகளுல் இன்றையதினம் நிர்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஹையீல்டிங் வெரைட்டி

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 84 | கோபால், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 86 | கோவேந்தன், திரு எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ. வ.) |
| 96 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு சீ. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 104 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிபாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 225 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர் திரு கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராஜன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

உயர் ரக விளைச்சல் கரும்பு என்று, 716, 701 ஆகிய ரகங்களைக் கட்டாயம் பயிர் செய்ய வேண்டுமென்று ஆலைகள் வற்புறுத்து கின்றன. அப்படிப்பட்ட கரும்புகள் எட்டு மாதங்களில் வெட்டப் படுமென்று ஆலைகள் சொல்கின்றன. ஆனால் எட்டு மாதங்கள், ஒன்பது மாதங்கள் ஆகியும் அவைகளுக்கான கட்டிங் ஆர்டர் கொடுக்கப்படுவதில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அண்டையிலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலேகூட டன் ஒன்றுக்கு 200 ரூபாய் விலை கொடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திலே கொடுக்கப்படுவது மிகவும் குறைவான விலையாகும். அதே நேரத்தில் ஒவ்வொரு ஆலையும் ஒவ்வொரு விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். தனியார் ஆலைகள் கொடுக்கின்ற அளவிற்குக் கூட கூட்டுறவு ஆலைகள் விலை கொடுப்பது இல்லை இதன் காரணமாக- கூட்டுறவுத் துறையைவிடத் தனியார் துறையை பொதுமக்கள் விரும்புகின்ற நிலைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். எனவே, எல்லா ஆலைகளிலேயும் ஒரே விலையை நிர்ணயித்து அதுவும் குறைந்தபட்சம் டன் ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுக்கின்ற அளவிற்கு விலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு சங்கடங்களுக்கிடையில் பயிர் செய்யப்பட்ட இந்தக் கரும்பை எடுத்துச் செல்வதற்கு டிரான்ஸ் போர்ட் வசதி அவர்களுக்கு சரிவர கிடைப்பதில்லை. போர்ட் கிடைப்பதில்லை. அப்படி கிடைக்கின்ற லாரிகளும் லாரிகள் நடைக்கும் குறைந்த பட்சம் 100 ரூபாய் அல்லது 75 ரூபாய் மாமூல் கொடுத்தால்தான் நாங்கள் வருவோம் என்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். இதனால் விவசாயிகள் பல்வேறு தொல்லை களுக்கு உள்ளாகிறார்கள்.

இன்றைக்கு அரசு நிர்ணயித்திருக்கிற விலை மிகவும் குறைவு இந்த நிலையில் அவர்கள் சப்ளை செய்த கரும்புக்கு உரிய நேரத்தில் பணம் கொடுக்காத காரணத்தினால் விவசாயிகள் பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே, சப்ளை செய்யப்பட்ட கரும்புகளுக்கு உடனடியாக ஆலைகள் தொகையைக் கொடுக்க வேண்டும். இப்படி கொடுக்காத காரணத்தினால் பல்வேறு ஆலைகளுக்குச் சப்ளை செய்த விவசாயிகளிடத்திலிருந்து மிகவும் பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, இருக்கின்ற கரும்புக்கு முறையாக கட்டிங் ஆர்டர் கொடுக்காததால் இன்றைக்குப் பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் குருங்குளம் சர்க்கரை ஆலைக்குத் தஞ்சை மாவட்டத்திற்கு அப்பால் உள்ள மாவட்டங் களிலிருந்தும். உதாரணமாக புதுக்கோட்டை மாவட்டத் திலிருந்துகூட பதிவு செய்யப்படாத கரும்புகள் வந்து கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.



பதிவு செய்யப்பட்ட கரும்புகளை மட்டுமே குருங்குளம் சர்க்கரை ஆலை அரவை செய்ய வேண்டுமே தவிர பதிவு செய்யப்படாத கரும்புகளை அரவை செய்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உரிய நேரத்தில் இந்த கட்டிங் ஆர்டர் கொடுக்கப்படவும் சப்ளை செய்யப்பட்ட கரும்புகளுக்கு பணம் கொடுக்கப்படுவதற் கானவும் இதுபற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, வடபாதி மங்கலம் திரு ஆரூரான் சர்க்கரை ஆலையிலும், அதே போல குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலும் கரும்பு வெட்ட ஆலை களிடமிருந்து உத்தரவு கொடுக்கப்படவில்லை என்பதும் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வெட்டியும், விவசாயப் பெருமக்களுக்கு வெட்டப்பட்டு அரைக்கப்பட்ட கரும்புகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வடபாதி மங்கலம் திரு ஆரூரான் சர்க்கரை ஆலையில் மார்ச்சு மாதம் முடிய வெட்டு உத்திரவு வழங்கப்பட்டு அரவைக்கு கரும்பு வந்து கொண்டிருப்பதாக ஆலை நிர்வாகம் தெரிவிக்கிறது. மேலும் மொத்தம் பதிவு செய்யப் பட்ட 9000 ஏக்கரில் 6500 ஏக்கர்களில் கரும்பு வெட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ள பரப்பளவில் உள்ள கரும்புகள் மே மாதம் இறுதிக்குள் அரவை செய்யப்படும் என்றும் ஆலை நிர்வாகம் தெரிவிக்கிறது.

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில், மொத்தம் பதிவு செய்யப்பட்ட 7671 ஏக்கர் பரப்பில் ஏற்கனவே 5511 ஏக்கர்களுக்கு வெட்டு உத்தரவு வழங்கி கரும்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். மீதமுள்ள பரப்பில் மாதாந்திர நிலுவை விவரம்-

| | | |
|---|---|---|
| மார்ச்சு | 100 | ஏக்கர் |
| ஏப்ரல் | 400 | ஏக்கர் |
| மே | 550 | ஏக்கர் |
| ஜூன் | 430 | ஏக்கர் |
| ஜூலை | 300 | ஏக்கர் |

| எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ. வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லபன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்தியம்) |
| 162 | பக்கீர் முகமது திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவொற்றியூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 118 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பர்லகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 181 | பிச்சை, திரு. எ. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 184 | பூங்காவனம், திரு, என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 180 | பெரிசாமி, திரு. ரா. | தொட்டியம், (செ. வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ. வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம் சென்னை |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறி புத்தன், திரு. பி. | திருச்சி-2 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துச்சாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 202 | முாத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.) |
| 207 | யசோதா, திருமதி பு. | ஸ்ரீபெரும்புத்தூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

ஆகஸ்டு 380 ஏக்கர்

மொத்தம் 2,160 ஏக்கர்

இதில் மார்ச்சுமாதம் உள்ள 100 ஏக்கர் கரும்பிற்கும் கரும்பு வெட்டு உத்தரவு முழுமையாக வழங்கப்பட்டு விட்டதாகவும், இதிலிருந்து கரும்பு அறுவடையாகி ஆலைக்கு வருவதாகவும் ஆலையினர் தெரிவிக்கிறார்கள். மேலும், ஏப்ரல் மாதம் நிலுவையில் உள்ள 400 ஏக்கரில் 200 ஏக்கருக்கு வெட்டு உத்தரவு வழங்கப்பட்டு அறுவடை நடந்து வருவதாகவும் மீதமுள்ள 200 ஏக்கருக்கு கரும்புவெட்டு உத்தரவு வழங்குதலை ஆலையினர் செய்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (தலைமை)

வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையிலும், நடப்பு அரவைப் பருவத்தில் 17-3-83 வரை ரூ. 143.80கரும்பு விலையாகக் குறைந்தபட்ச விலையான டன்னுக்கு அது நாள் வரை கரும்பு விலையாகக் கொடுக்கப்பட்டு வந்தது. பண பாக்கி அந்த விலையில் ஏதும் நிலுவையாகஇருக்கவில்லை

1982-83 ஆம் பருவத்திற்கு மாநில அரசு அறிவித்த கரும்பு விலைக்கான ஆணை ஆலைக்கு கிடைத்ததற்குப் பிறகு 18-3-83—இலேயிருந்து ரூ. 171-40 டன் ஒன்றுக்கு எனப் பட்டுவாடா செய்ய ஆலை ஆரம்பித்துள்ளது.

(முற்பகல் 10–50)

தமிழக அரசுஅறிவித்தவிலையான ரூ. 171.40க்கும், மத்திய அரசுஅறிவித்த விலையான ரூ. 143.80க்கும் உள்ள வித்தியாச தொகை டன் ஒன்றுக்கு ரூ. 27.60 வீதம் ஆலை அரவை துவங்கிய 20-10-82 நாள் முதல் 17-3-83 வரை கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மொத்த பாக்கித் தொகை ரூ.33.25 இலட்சம் ஆகும்.

இந்த நிலுவைத் தொகையில் 14-4-83 வரை ரூ.1 .47 இலட்சம் விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள ரூ. 19.78 இலட்சமும் விவசாயிகளுக்கு ஆலையினரால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பட்டுவாடா இன்னும் 15 தினங்களில் முழுவதும் கொடுத்து முடிக்கப்பட்டு விடும். தற்போது தினமும் 50 முதல் 250 அங்கத்தினர்கள் வரை இந்த வித்தியாசத் தொகையினைப் பெற்று வருகிறார்கள் என்று இது தொடர்புடைய சர்க்கரை ஆலைகள் அரசுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறது.



ஆதலின் இது விஷயமாக விவசாயிகளிடையே எந்தவிதமான பதட்ட நிலையோ, கருத்து வேறுபாடோ ஏதும் இல்லை எனத் தெரிய வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஒத்தி வைப்பு தீர்மானத்தையொட்டி, இன்னும் சில கருத்துக்களை, உணர்வுகளை தெரிவித்திருக்கிறார்கள். அது தொடர்பாக அரசு அந்த ஆலைகளுடைய அலுவலர்களிடத்திலே நிச்சயமாகப் பேசி, அந்தச் சீர்கேடுகளை களைவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எப்படியும் பதிவு செய்யப்பட்ட கரும்புகள் தான் ஆலைக்கு வர வேண்டும். அந்தக் கரும்புகளை நிறுத்திவிட்டு பதிவு செய்யப்படாத கரும்புகளை ஆலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை அரசு நிச்சயமாக அந்த ஆலைகளுக்கு கருத்து தெரிவிக்கும்.

அதைப்போலவே, நம்முடைய மாநிலத்தில் குறித்திருக்கின்ற அந்த விலையில் எந்த வகையிலேயும் குறையே இல்லாமல் அதை முழுமையாக விவசாய பெருமக்களுக்கு கிடைத்திடத் தக்க அளவிற்கு ஆலை நிர்வாகிகள் முயற்சி எடுத்துத் கொள்ள வேண்டும். அதிலே விவசாயிகளுக்கு பாக்கி வைக்கக் கூடாது என்பதிலே அரசு நிச்சயமாக கருத்து கூறும். மற்றைய தவறுகள் அங்கே இருக்குமானால் அவைகளையும் நீக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இதை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை யென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. அறிக்கை அளித்தல்.

விதி 106–ன் கீழ் தொழிலாளர் நலத் துறை
அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினைக்கு இன்றையதினம் சட்டமன்றப் பேரவை விதி 106 (1)–ன் கீழ் ஓர் அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

அறிக்கை.

இன்று (21-4-1983) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றப் பேரவையில்

"சென்னையில், மக்கள்பயன்படுத்துகிற, குடிநீர்த் தொட்டியிலே ஒரு பிணம் இருந்ததாக செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறதே, அது உண்மைதானா? என்று கேட்டார்கள்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1983 ஏப்ரல் 22

இது சம்பந்தமாக நான் சென்னை பெருநகர் குடிநீர் வாரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதில் கீழ்க்கண்ட தகவல் கிடைத்துள்ளது.

புழலேரியிலிருந்து கீழ்ப்பாக்கத்திற்கு சுத்திகரிக்கப்படாத தண்ணீர் கொண்டு வர இரண்டு மூடுகால்வாய்கள் (Closed C nduits) உள்ளன. நகருக்கு 21-2-83 முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்படுவதா இந்த ரண்டு மூடு கால்வாயில் ஒன்றுதான் உபயோகத்தில் உள்ளது. மற்றொன்று உபயோகத்தில் இல்லை, 17-2-83 அன்று வில்லிவாக்கம் காவல் துறை ஆய்வாளரிடமிருந்து (Inspector of Police) ஒரு கொலை சம்பந்தமாக பிணத்தைத் தேடுவதற்கு மூடுகால்வாயில் தண்ணீர் விடுவதை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள், தண்ணீரைக் குறைத்துவிட்டு சோதனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. காவல் துறையின தேடிய பிறகு, 8-3-83 அன்று எந்த பிணமும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்கள், அவர்கள் 8-3-83 அன்று எழுதிய கடிதத்தின் வாசகம் பின்வருமாறு:—

"This is to inform you that the search was c n ucte in the Water Supply Con uit Channel from the place where the body was all g d to have been dropped through manhol upto th M tr Water Works Tank, Kilpauk but the b dy could not b r ced".

பின்னர் 18-4-83 அன்று உபயோகத்தில் இல்லாத மூடு கால்வாயை வழக்கமாக வாரிய ஊழியர் கண்காணிப்பு பராமரிப்பு மேற்கொண்டபோது ஒரு கோணி மூட்டையில் ஒரு பிணம் கிடந்ததை கண்டார். உடனே சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார், உடனே காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் கூறியது போல் குடிநீர் தொட்டியில் எந்த பிணமும் கிடைக்கவில்லை. உபயோகத்தில் இல்லாத மூடு கால்வாயில்தான் ஒரு பிணம் கோணி மூட்டையில் கண்டு பிடிக்கப்பட்டது,

இதனால் நகருக்கு வழங்கும் தண்ணீரின் தரம் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. குடிநீரின் தரம் தினமும் பரிசோதித்துத்தான் வழங்கப்படுகிறது. பொது மக்கள் இது குறித்து பீதி அடைய வேண்டியது இல்லை.

## 6 அறிவிப்புகள்

### (அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை



1983 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்களை 1983-84 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதல் அமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மின்துறை அமைச்சர்
5. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவர்
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
7. திரு. க. அன்பழகன்
8. திரு. கே எஸ், ஜி. ஹாஜா ஷெரீப்
9. திரு. என். எஸ். வி. சித்தன்
10. திரு. என். சங்கரய்யா
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. குமரி அனந்தன்
13. திரு. ஆர். மணிமாறன், அரசு கொறடா
14. திரு. எஸ். ஆண்டித்தேவர்
15. திரு. ப. நெடுமாறன்
16. திரு. பி. முகமது இஸ்மாயில்
17. டாக்டர் கே. சௌரிராஜன்

பேரவையின் விதி 256 (1)-வது விதியின் கீ மாண்புமிகு பேரவைத் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராமகுமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம் திரு. எம்.கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விஜயலட்சுமி செல்வி, வி. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட் திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டாரம்பட்டு |
| 229 | வேலப்பன். திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான்வின்செண்ட். திரு. மு. | நான்குநேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜா ஷெரிப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்

2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்

3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்

5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி,—தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 ஏப்ரல் 22

சித்திரை 9, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மின்வாரியத்தில் குடும்பப் பென்ஷன் பெற்று வருவோர் எண்ணிக்கை.**

* **வினா எண் 727—திரு. கு. ரமணி :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் குடும்பப் பென்ஷன் பெற்று வருகின்ற குடும்பங்கள் தற்போது எவ்வளவு?

(ஆ) எந்த ஆண்டிலிருந்து குடும்பப் பென்ஷன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது?

(இ) குடும்பப் பென்ஷன் குறைந்தபட்ச, அதிகபட்சத் தொகை எவ்வளவு?

(ஈ) விலையேற்றத்தை ஈடுகட்ட ஏதாவது வழிவகை செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) 680 குடும்பங்கள்.

(ஆ) 1-7-1960 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

(இ) தற்போது மாதம் ரூ. 125 குறைந்தபட்சமாகவும் ரூ. 500 அதிகபட்ச தொகையாகவும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப் படுகிறது.

(ஈ) ஆம். வாழ்க்கைச் செலவு, உயர்விலை ஈடு கட்டும் பொருட்டு, வாரியம் 1-4-1964 முதல் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி அளித்து வருகிறது. அரசாங்கம், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவ்வப்போது வழங்கி வரும் அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு மின்சார வாரியமும் வழங்கி வருகிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் உள்ள எண்ணூர், பேசின்பிரிட்ஜ் மின் நிலையத் தொழிலாளர்களுக்குக் கடந்த 5 ஆண்டுக் காலமாக குடும்பப் பென்ஷன் தொகை கொடுக்கவில்லை என்று செய்தி எனக்குத் தரப்பட்டுள்ளது? அது உண்மையா? அப்படியானால் அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எத்தனை குடும்பங்கள் என்று கேட்டார்கள். 680 குடும்பங்கள் என்று விவரங்கள் தந்து இருக்கிறேன். யார் யாருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் தருவார்களானால் அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்களுடைய பிராவிடெண்ட் பண்ட் கணக்கிலேயே பல்லாண்டுக் காலமாக சரியாக இல்லாததால் அவர்கள் கைக்கு அந்தப் பணம் போய்ச் சேராத நிலை இருந்தது. ஏற்கனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது அந்தக் கணக்குகளைக் காலதாமதம் இல்லாமல் ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்த நிலைமையைப் பார்க்கிறபோது இந்தப் பென்ஷன் திட்டத்தில் வரும்படியான அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்குச் சரியான முறையில் ஏற்பாடு செய்தால்தான் அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும். ஆகவே, இதிலே கரெக்டாக அவர்கள் ஈடுபட்டு, அந்தக் கணக்குகளை சரியாக வைத்து இருந்து, ஒவ்வொருவருக்கும் பென்ஷன் கிடைக்கவேண்டிய நேரத்தில் கறாராக கிடைக்கச் செய்ய வேண்டிய ஏற்பாட்டை அரசு பங்கிலிருந்து அல்லது மின்வாரியப் பங்கிலிருந்து செய்ய முடியாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வைப்பு நிதியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது தெரிவித்த தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அப்போதே சொன்னதாக எனக்கு நினைவு. அதை 3 மாதங்களுக்குள் என்று வரையறை வகுத்து அறிவித்து இருப்பதாக எனக்கு நினைவு. குடும்பப் பென்ஷனைப் பொறுத்தவரையில் முறையாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. 680 குடும்பங்களுக்குக்



கொடுக்கப்பட்டு வருகிறது. யாருக்காவது விடுபட்டுப்போய் இருக்கிறது என்று தெரிந்தால், அந்த விவரங்களைக் கொடுத்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்காகக் கேட்டேனே தவிர விவரங்கள் தரவிட்டால் அந்தத் தொழிலாளர்களுக்குப் பென்ஷன் கிடைக்காது என்பது சரியல்ல.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தில் பென்ஷன் பெறுகின்ற அல்லது இறந்துவிட்ட மின்சார ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பணிக்காலத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அவர்களது வீட்டில் யாருக்காவது வேலை செய்யத் தகுதி இருக்குமானால் அவர்களுக்கு வேலை தரப்படுகிறது. ஓய்வு பெற்றவர்களின் வாரிசுகளுக்குத் தருவது என்பது இயலாது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 680 குடும்பங்களுக்குப் பென்ஷன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிற இடத்தில் இவ்வளவு பேர்தான் பென்ஷன் பெறுகிறார்களா? இன்னும் ஓய்வு பெற்று பென்ஷன் கிடைக்காத குடும்பங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மொத்தத் தொழிலாளர்கள் 85,000 பேர் என்று இருந்தாலும் பென்ஷன் திட்டத்தின்கீழ் வருகிறவர்கள் 23,000 பேர்கள்தான். அதிலும் ஓய்வு பெற்ற ஊழியர் குடும்பங்களுக்கு அல்லது பணிக் காலத்தில் இறந்துவிட்டவர்கள் குடும்பங்களுக்கு மட்டும்தான் இந்தக் கேள்வி பொருந்துகிறது. ஆகையால் 680 குடும்பங்கள் என்று சொன்னேன்.

### மின் உற்பத்தியில் ஓர் ஆண்டுக்குத் தேவைப்படும் நிலக்கரியின் அளவு:

* வினா எண் 728—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மின் உற்பத்திக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான நிலக்கரி அளவு எவ்வளவு?

(ஆ) 1981—1982-ல் மைய அரசு வழங்கிய நிலக்கரியின் அளவு எவ்வளவு?

### (ஆ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 291 (1)-ன் கீழ், 1983-84 ஆம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் (Rules Committee உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு திரு. சி. பொன்னையன், கூட்டுறவு சட்ட அமைச்சர்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. திரு. ஆர். மணிமாறன், அரசு கொறடா
6. திரு. மே. அ. இராசகுமார்
7. திரு. கே. குப்புசாமி
8. திரு. துரை ராமசாமி
9. திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்
10. திரு. மா. சின்னராசு
11. திரு. பெ. சு. திருவேங்கடம்
12. திரு. கு. பா. பழனியப்பன்
13. திரு. உ. சுப்பிரமணியன்
14. திரு. இல. பலராமன்
15. திரு. என். பழனிவேல்
16. திரு. செ. சிவசாமி
17. திரு. பி. முகமது இஸ்மாயில்

பேரவையின் 291 (1)-வது விதியின்கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.



### (இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 264 (1)-ன் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1983-84 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. கே. ஆர். கணபதி
3. திரு. பி. ஜி. நாராயணன்
4. திரு. சு. முத்துக்கிருஷ்ணன்
5. திரு. ஆர். ரங்கசாமி
6. திரு. டி. வெங்கட்ட ரெட்டி
7. திரு. சி. கோபால்
8. திரு. வ. சத்தியமூர்த்தி
9. திரு. துரை முருகன்
10. திரு. சு. பாலன்
11. திரு. ரா. கிருஷ்ணன்
12. திரு. எம். ஆறுமுகம்

பேரவையின் 265 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

### (ஈ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 279 (1)-ன் கீழ் பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1983-84 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (Committee on Government Assurances) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. என். விஜயபாலன்
2. திரு. சி. சபாபதி
3. திரு. சி. கணேசன்
4. திரு. எம். எஸ். மாணிக்கம்
5. திரு. சு. பழனிச்சாமி
6. திரு. ச. பாலகிருஷ்ணன்
7. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
8. திரு. எஸ். இராசாராமன்
9. திரு. து. இராசரத்தினம்
10. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
11. திரு. ஏ. டி. கருப்பையா
12. திரு. பி. முகமது இஸ்மாயில்

பேரவையின் 280 (1)-வது விதியின் கீழ் திரு. பி. முகமது இஸ்மாயில் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

[1983 எப்ரல் 22

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) நிலக்கரித் தேவை ஆண்டுக்காண்டு மாறும். 1982-83 ம் ஆண்டுக்கான நிலக்கரித் தேவை 40,02,000 டன்கள் ஆகும்.

(ஆ) 20,24,764 டன்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்ற விபரத்தில் இருந்து இந்த மாநிலத்தின் தேவையில் பாதி நிலக்கரி கூட கிடைக்காத சூழ்நிலை இருப்பது தெரிகிறது. அதனால் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. சிமெண்ட் உற்பத்தி, உரம் உற்பத்தி போன்றவைகளும் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் கூடுதலாக இரசாயனப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் ஏராளமான அளவுக்கு அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. எனவே இந்த மாநிலத்திற்குத் தேவையான நிலக்கரியை 'பஃப்பர் ஸ்டாக்' செய்து கொள்ள தேவையான அளவுக்கு இறக்குமதி செய்ய மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இவ்வாண்டு பல நேரங்களில் அத்தகைய நெருக்கடிக்கு நாம் ஆளானோம். அதையொட்டி ஓரளவுக்குக் கையிருப்பு இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் 5 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். அதற்காக டெண்டர் கோரப்பட்டு, 31-1-1983 அன்று அந்த டெண்டர்கள் பிரிக்கப்பட்டன. நமக்கு அதற்காகத் தேவைப்படுவது 25.6 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி. இது குறித்தும் 8—4-1983 அன்று இந்திய அரசுக்கு அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்சார நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம். கடந்த 4-ந் தேதியிலிருந்து சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் ஸ்டிரைக் நடைபெற்று வருகிறது. ஆகையால் எண்ணூர் அனல் மின்சார நிலையத்திற்கு நிலக்கரி வராத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்போது அங்கே எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது? தொடர்ந்து இப்படி ஸ்டிரைக் நடைபெற்றால், இப்படிப்பட்ட காலத்தில் இக்கட்டான நிலைமை ஏற்படாதா? அதைச் சமாளிக்க மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. சிங்கரேணி பகுதியில் பல்லப்பள்ளி, தண்டமாரி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வரவேண்டும். அங்கே தொழிலாளர்கள் இப்போது





வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆகையால் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மிகக் குறைந்த அளவு நிலக்கரிதான் இருக்கிறது. போதுமான அளவுக்கு நிலக்கரி இல்லாத காரணத் தால் ஒரு இயந்திரத்தை இயக்க முடியவில்லை. இதிலிருந்து இப்போது என்ன ஸ்டாக் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கு ஆண்டு ஒன்றுக்கு 40,02,000 டன் நிலக்கரி தேவை என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுப்பது 20,24,764 டன்தான் என்றும் சொன்னார்கள். இது நம்முடைய தேவையில் 50 சதவீதம்தான். இப்படிக் கொடுத்து வருவதால் தான் முழுமையாக இயந்திரங்கள் இயக்கப்படாமல் நமக்கு இந்த பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதா? அப்படியானால் இதைப் போக்க வேறு எந்த எந்த வழிமுறைகளை மேற்கொள்ளப் போகிறார்கள்? எந்த எந்த வழிகளில் நமக்குக் கிடைக்க முடியாமல் போய் விட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 40 இலட்சம் டன் தேவை என்பது தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் முழு உற்பத்திச் செய்கிறபோது. அது இவ்வாண்டு தான் முழு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. ஏற்கெனவே இரண்டு இயந்திரங்கள் வேலை செய்தன. ஆகையால் அது குறைவாக இருந்தாலும் சமாளிக்க முடிந்தது. இவ்வாண்டு தூத்துக்குடி அனல் மின் நிலையம் முழு உற்பத்திச் செய்ய தொடங்கி விட்டதால் முழுவதும் நமக்குத் தேவை என்று வற்புறுத்துகிறோம். அவர்கள் ஒரு காலாண்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்குகிறார்கள். அதற்கு என்று 'கோல் லிங்கேஜ் கமிட்டி' ஒன்று இருக்கிறது. எவ்வளவு நிலக்கரியை வெட்டி எடுக்க முடியுமோ அந்த அடிப்படையை வைத்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை இந்த லிங்கேஜ் கமிட்டி நமக்குத் தருகிறது. மார்ச் மாதத்தில் நமக்கு 3,31,131 டன் கிடைத்தது. குறிப்பாக தூத்துக்குடிக்கு மட்டும் ஜனவரியில் 1,30,830 டன், அதாவது பிப்ரவரியில் 1,24,465 டன், மார்ச் மாதத்தில் 2,07,469 டன். மார்ச் மாத அளவுக்கு வந்தால் நமக்குப் பிரச்சனை இல்லை.

திரு. வி வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியாவில் எல்லா மாநிலங்களுக்கும் தேவையான நிலக்கரி கிடைக்கவில்லை. கிடைப்பதும் தரம் இல்லை என்று சொல்வதோடு உலகத்தில் தொழில் வளர்ச்சியில் முன்னேறிய ஜப்பான் கூட போதிய அளவுக்கு நிலக்கரி இல்லாமல் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது. சென்னைக்கு ஏதோ தண்ணீர் ஸ்பெஷல் இரயில் விடுவதாகச் சொல்லி பிரமாதப்படுத்திக் கொள்கிறார்கள். அதுபோல நிலக்கரி

[1983 ஏப்ரல் 22

(அ) வேடசந்தூரில் இருந்து வந்த மின்துறை வருவாய்ப் பிரிவு அலுவலகம் திண்டுக்கல்லுக்கு மாற்றப்படுதல்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, ''வேடசந்தூரில் இயங்கி வந்த மின்துறையின் வருவாய்ப் பிரிவு அலுவலகம் திண்டுக்கல்லுக்கு மாற்றப் பெற்றதால் பொதுமக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ் நாடு மின் வாரியத்தில் 157 வருவாய் பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வருவாய்ப் பிரிவும் 30,000 குறைந்த அழுத்த மின் நுகர்வோர்களின் மின் கட்டண விபரம், மின் கட்டண வசூல் மற்றும் மின் கட்டண கணக்கு இவற்றிற்கு பொறுப்பு வகிக்கிறது. இந்த வருவாய்ப் பிரிவுகள் கோட்ட அலுவலகங்களின் (இயக்குதல் மற்றும் பராமரிப்பு) நிர்வாகத்தில் உள்ளன. இந்த வருவாய்ப் பிரிவுகளை நல்ல முறையில் திறமையுடன் செயல்பட வைக்க கோட்ட அலுவலகத்தோடு இணைந்து ஒரே வளாகத்தில் செயல்பட வேண்டுமென வாரியம் 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவெடுத்தது. 24 இடங்களில் கோட்ட அலுவலகங்களும், வருவாய்ப் பிரிவுகளும் வெவ்வேறு ஊர்களில் செயல்பட்டு வந்தன. எனவே, இரண்டு வருவாய்ப் பிரிவுகளை தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டுள்ள கோட்ட அலுவலகத்தை மட்டும் தவிர்த்து, மற்றவை, கோட்ட அலுவலகமும், வருவாய்ப் பிரிவும் ஒரே ஊரில் செயல்பட கோட்ட அலுவலகத்தை அல்லது வருவாய்ப் பிரிவு அலுவலகத்தை. மாற்றி ஒரே ஊரில் அமைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டது.

வேடசந்தூர் வருவாய்ப் பிரிவு திண்டுக்கல்லில் இருக்கும் வடக்கு கோட்ட அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது. 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த வடக்கு கோட்ட அலுவலகத்தை திண்டுக்கல்லிலிருந்து வேடச்சந்தூருக்கு மாற்றுவது என முடிவெடுக்கப்பட்டது. பின்னர், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, வேடசந்தூரிலுள்ள வருவாய்ப் பிரிவினை திண்டுக்கல்லுக்கு மாற்றுவதென 1983 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முடிவெடுக்கப்பட்டது:

அ. திண்டுக்கல்லிலும், திண்டுக்கல் சுற்றிலும் மிக அதிகமாக எண்ணிக்கையிலான மின் இணைப்புகள் உள்ளன.



ஆ. திண்டுக்கல்லில் மிகுந்த உயர் அழுத்த துணை மின் நிலையம் இருக்கிறது.

இ. இந்தக் கோட்டத்தின் மின் அளவி மற்றும் சுழற்சிச் சோதனை செய்யும் மையமும் துணை பண்டக சாலையும் திண்டுக்கல்லில் இருக்கின்றன.

ஈ. திண்டுக்கல்லில் சிறந்த தகவல் தொடர்பு வசதிகள் இருக்கின்றன.

வேடசந்தூர் வருவாய்ப் பிரிவு, திண்டுக்கல்லுக்கு 1-3-83 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுக்கா முழுமையாக கடந்த 10 ஆண்டுகளாக வேடசந்தூர் நகரில் இயங்கி வந்த இந்தமின் துறையின் வருவாய்ப் பிரிவு அலுவலகம் திடீரென திண்டுக்கல் நகரத்திற்கு மாற்றப்பட்டதால், வேடசந்தூர் தாலுக்காவிலே உள்ள பொதுமக்கள் ஏறத்தாழ 70 கிலோ மீட்டரிலிருந்து 90 கிலோ மீட்டர் வரையில் திண்டுக்கல் நகருக்கு செல்லவேண்டிய நிலைமையிருக்கிறது. அதேபோல் வேடசந்தூர் தாலுக்கா முழுமைக்குமான கோட்டப் பொறியாளர் அலுவலகம், திண்டுக்கல் நகரத்திலே டி. இ. (நார்த்) என்ற பெயராலே அங்கே இயங்கி வருகிறது. இந்த தாலுக்கா முழுமைக்குமான இயங்குகின்ற இந்த 2 அலுவலகங்கள் இரண்டும் திண்டுக்கல் நகரிலே இருப்பதால் வேடசந்தூர் தாலுக்கா மக்கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாகிறார்கள். ஆகவே இந்த வருவாய்த் துறை பிரிவு அலுவலகத்தையும், கோட்டப் பொறியாளர் அலுவலகத்தையும் திண்டுக்கல்லிலிருந்து வேடசந்தூர் பகுதிக்கு மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த வடக்குக் கோட்ட அலுவலகத்தை வேடசந்தூருக்கு மாற்றுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. வேடசந்தூரிலே வருவாய்ப் பிரிவு இத்தோடு இணைப்பதாக இருந்தது. ஆனால் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வேடசந்தூரிலிருந்த வருவாய்ப் பிரிவு திண்டுக்கல்லுக்கு வந்துவிட்டது. அரசு அலுவலகங்கள் ஆனாலும், அரசு நடத்துகின்ற பொது நிறுவனங்களின் அலுவலகங்களானாலும், கிராமங்களை நோக்கி செல்லவேண்டுமென்ற இந்த அரசின் கொள்கை. ஆகவே நிச்சயமாக இந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகமும், வருவாய்ப் பிரிவு அலுவலகமும் வேடசந்தூரிலே அமையும்.

(ஆ) வேதாரண்யம் பகுதியில் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள், எம். எஸ். மாணிக்கம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம் பகுதியில் குடிக்காணி உரிமையுடன் அனுபவித்து வந்த நிலங்களிருந்து விவசாயிகள் வெளியேற்றப் பெறுவது குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் 67 கிராமங்கள் உள்ளன. இதில் 66 ரயத்துவாரி கிராமங்கள் ஆகும். ஆகையால் இந்த கிராம மக்களுக்கு குடிவார உரிமை கிடையாது. ஆனால் தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69—ன் கீழ்தான் உரிமை உண்டு. மேற்கண்ட கிராமங்களைத் தவிர மீதமுள்ள ஒரு கிராமம் அண்ணாப்பேட்டை ஆகும். இக்கிராமம் இனாம் கிராமம் ஆக அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டுளது. இக்கிராமத்து மக்கள் இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

மேலும் பயிரிடும் குத்தகைதாரர்கள் 30—6—82—ன் முடிவடையும் பசலி ஆண்டிலோ, அதற்கு முந்தைய பசலி ஆண்டு களுக்கோ குத்தகை செலுத்தாமைக்காக நிலத்திலின்று வெளியேற்றாமல் 15-1-84 வரை பாதுகாக்க தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் நில வெளியேற்றத்திலின்று பாதுகாப்பு சட்ட முன்வடிவு 15/83 சட்டமன்ற இரு அவைகளாலும் நிறைவேற்றப் பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஆகையால் பயிரிடும் குத்தகைதாரர்கள் யாரும் வெளியேற்றப்பட மாட்டார்கள்.

(முற்பகல் 11-00).

திரு, எம். எஸ் மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குடிகாணி நிலம் என்பது கோயிலுக்குக் கிஸ்தியை மட்டுமே செலுத்திவிட்டு, வேறு எந்தவிதமான— குத்தகையோ மற்றவைகளோ அந்த விவசாயிகள் கட்டாமல், அந்த விவசாயிகள் அந்த நிலங்களை தங்களுடைய சொந்த நிலங்களாகவே பாவித்து, விற்று, வாங்கி, ரிஜிஸ்டர் செய்து



அனுபவித்து வருகின்ற நிலம் ஆகும். அந்த நிலங்கள் எல்லாம் இனாம் நிலங்கள் என்று 746-பட்டயத்தின் கீழ் கோயிலுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படுகிறதே தவிர, அதற்கான சான்றிதழ்கள் அவர்களிடத்தில் இல்லையென்றும், அவைகள் தீயில் அழிந்து விட்டன என்றும் கோயில் நிர்வாகம் சொல்லி விட்டது. ஆனால் அந்த நிலங்கள் எல்லாம் சிறிய இனாம் என்று அறிவித்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலங்களையெல்லாம் மேஜர் இனாம் நிலங்கள் என்று 1948-வது இனாம் ஒழிப்புச் சட்டத்தில் அறிவித்து இருக்கவேண்டும். அந்தச் சட்டத்தின் கீழ் இது போன்ற நிலங்களை ஒரு 4-5 கிராமங்களில் உள்ள விவசாயிகள் பட்டா பெற்று இருக்கிறார்கள். சில கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு படிப்பு அறிவு இல்லாதவர்களாக இருந்து விட்ட காரணத்தால் அந்தச் சட்டத்தின் பலனை அனுபவிக்சாமல் விட்டு விட்டதால், 1963 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் சிறிய இனாம் என்று அறிவித்து இருக்கிறார்கள். சில கிராமங்களில் குறிப்பாக, செம்போடை, தோத்தாக்குடி, ஆயக்காரன்புலம் போன்ற கிராமத்தில் உள்ள விவசாயிகள் பட்டா பெற்று அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார்கள். அந்த கிராமத்தில் உள்ள மக்கள் பட்டா பெற்றதைப்போல், வேதாரண்யம், அகத்தியன் பள்ளி, ஆதனூர், கடிநெல்வயல், கருப்பம்புலம், அண்ணாப் பேட்டை போன்ற கிராமத்தில் உள்ள நிலங்களையும் மைனர் இனாம் என்று அறிவித்து இருப்பதை ரத்து செய்து, மேஜர் இனாம் என்று அறிவித்து, மற்ற கிராமத்தில் உள்ள நிலத்தை யுடையவர்கள் பட்டா எப்படி பெற்றார்களோ, அதைப்போல் இந்தக் கிராமங்களில் உள்ள விவசாயிகளும் வைத்திருக்கும் அந்த நிலங்களுக்குப் பட்டா பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை அரசு எடுக்குமா? அது மட்டுமல்லாமல், அவர்களை வெளியேற்று வதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் அந்த கோயில் நிர்வாகம் எடுக்கக்கூடாது, அதிலே தலையிடக்கூடாது என்று அரசு அறிவிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அவருடைய கடைசி கேள்விக்கு முதலில் பதில் சொல்லி விடுகிறேன். கோயில் சொந்தக்காரர்களோ அல்லது நிலச் சொந்தக்காரர்களோ அந்த குத்தகைதாரர்களை 15-1-1984—க்கு முன்னால்— யாரையும் வெளியேற்ற முடியாது என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன். அதற்குப் பிறகு, அவர்கள் சொல்கிறபோது, இன்றைக்கு நிலத்தை அவர்கள் தான் வெள்ளாமை விடுகிறார்கள். வெள்ளாமை விடுவதற்கு நிலத்திற்கு கிஸ்தி மட்டும் செலுத்துகிறார்கள், வெள்ளாமை இடுகிறபோது அதிலே வருகிற மகசூல் பூராவையும் அங்கே யார் விவசாயம் செய்தார்களோ அவர்களே அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். இது சட்டத்திற்கு முரணானதாக இருக்கிறது. கிஸ்தி வாங்கும் உரிமை அரசுக்குத் தான் இருக்கிறதே தவிர கிஸ்தி வாங்கும் உரிமை வேறு யாருக்கும் இல்லை. இது எப்படி நடைபெறுகிறது என்பது தெரியவில்லை.

இல்லாததை முன்னிட்டு நிலக்கரி ஸ்பெஷல் இரயில் விடவும், நிலக்கரியை ஸ்பெஷலாக கப்பல் மூலம் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதற்கும் நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

**மாண்புமிகு** திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிலக்கரி தரமானதாக இல்லை என்பது உண்மை. ஆனால் போதுமான நிலக்கரி, நிலக்கரிச் சுரங்கத்திலே இருக்கிறது. அதைக் கொண்டு வருவதற்கு, ஹால்டியா துறைமுகத்தில் வசதி இல்லை. போதுமான நிலக்கரி, நிலக்கரிச் சுரங்கத்தில் இருந்து கூட, ஹால்டியா துறைமுகம் சரியான திறனில்லாமல் இருப்பதால் அதைத் தமிழகத்திற்குக் கொண்டு வர முடியவில்லை. அந்தத் துறைமுகத்தைச் சீர் செய்வதற்கு ஓராண்டு ஆகும் என்று சொல்கிறார்கள். ஆனால், அதுவரையில் நாம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக தற்காலிக ஏற்பாடாக 5 லட்சம் டன் நிலக்கரி வேண்டும் என்று இந்திய அரசிடம் கேட்டோம். அதற்கான ஒப்பந்தமும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அன்னியச் செலாவணிக்காக, இந்திய அரசின் அனுமதி கேட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது.

தண்ணீர் வருவது பற்றிச் சொன்னார்கள். தண்ணீர் வேண்டுமானால் ரயிலிலே வரலாம். பாதகம் இல்லை. ஆனால் நிலக்கரி ரயிலில் வந்து நமக்குக் கட்டுப்படியாகாது. கப்பல்களில் வேண்டுமானால், ஆஸ்திரேலியாவிலிருந்து விட வேண்டும் என்று இந்திய அரசை நாம் கேட்டுக் கொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரி நமக்குத் தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதே நேரத்தில் தூத்துக்குடி துறைமுகத்தில் தொழிலாளர்கள் பிரச்னை இருப்பதால், அங்கே வந்திறங்கியிருக்கும் நிலக்கரியை இறக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதும், அதனால் உற்பத்தி குறைந்திருப்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? ஆகவே அரசாங்கம் உடனடியாக அந்தத் தொழிலாளர் பிரச்னைக்குக் காரணம் என்ன என்பதைக் கவனித்து அதைச் சரி செய்வதோடு, நிலக்கரியை இறக்கவும் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடக்கிறது. அது இந்திய அரசின்





துறையைச் சார்ந்தது ஆகும். வேலை நிறுத்தம் என்ன காரணத்திற்காகத் தொடங்கப்பட்டது என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், அதே நேரத்தில் அங்கே வந்திருக்கும் நிலக்கரியை இறக்க முடியாமல் கப்பல்கள் நின்று கொண்டிருக்கின்றன என்றுதான் தகவல்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அத்தனை தொழில் வளர்ச்சியும், அத்தனை வளங்களும் இந்த மின்சாரத்தோடு தான் இணைக்கப்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட மின்சாரத்திற்கு அடிப்படை தேவை நிலக்கரி. அந்த நிலக்கரியை தினசரி சேகரித்துக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறதே. இரண்டு மாத கால அளவிற்காவது ஸ்டாக் இருக்கிற வகையிலே மத்திய அரசோடு பேசி வெளி நாட்டிலேயிருந்தாவது அல்லது வெளி மாநிலங்களிலேயிருந்தாவது கொண்டு வருவதற்கு ஏற்பாடும், பண வசதி, போக்குவரத்து வசதி, பற்றிய பிரச்னைகளைக் குறித்தும் மாநில அரசு ஏற்கெனவே விவாதித்து இருக்கிறதா? அல்லது இனி மேலாவது அப்படிப்பட்ட முடிவுக்கு வர முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பல முறை அது பற்றி இந்திய அரசோடும், அங்குள்ள அதிகாரிகளிடத்திலும் பேசியிருக்கிறோம். குறிப்பாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களுடைய அலுவலகத்திலே இதற்கென குழு ஒன்று இருக்கிறது. அவர்களிடத்திலேயும் நிலைமைகளை எடுத்துச் சொல்லி, நிர்பந்தப்படுத்தியதன் காரணமாகத்தான் இப்போது நிலக்கரி ஓரளவிற்கு அதிகமாக— நான் குறிப்பிட்டது போல மார்ச்சு மாதத்தில் அதிகமாக வருவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் பஃபர் ஸ்டாக் என்ற அளவிலே 5 லட்சம் டன் வாங்கி வைத்தால், இப்படிப்பட்ட தடைகள்—அதாவது வேலை நிறுத்தங்கள் ஏற்படுகிற காலத்தில், அல்லது வேறு காரணங்களால் நிலக்கரி கிடைக்காமல் போய் விடுமோ என்ற ஐயத்தில் மோகத்தில் நேரத்தில் இது உதவும் என்ற வகையிலே கேட்டிருக்கிறோம். அதற்காக, எரிபொருள் துறை—எனர்ஜி மினிஸ்ட்ரியைப் பொறுத்தவரையில், 2 லட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்து கொள்ளலாம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நிதித்துறையின் அனுமதி தேவைப்படுகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை மைய அரசு தொடர்ந்து சப்ளை செய்ய மறுத்து வருவதன் காரணமாக, மின் வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை சப்ளை செய்ய, தனிப்பட்ட ஏஜன்சிகள் முன்வருவார்களேயானால் அப்படிப்பட்ட ஏஜென்சிகளிடமிருந்து மின் வாரியம் நிலக்கரியை வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மைய அரசு மறுத்து வருகிறது என்று சொல்வது சரியல்ல. போதுமான அளவுக்கு நமக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் காரணம். அதை தனி ஏஜென்சிகள் தருவது என்பது இயலாத காரியம். ஏனெனில் நிலக்கரியைத் தோண்டுகிற நிறுவனம் மைய அரசின் பொறுப்பிலே இருக்கக்கூடிய நிறுவனம். ஆகவே, நிலக்கரியை மைய அரசின் மூலமாகத்தான் பெறவேண்டும்.

மின் வாரியத்தின் நிதிநிலை குறித்து பணிக்கர் குழு அளித்த அறிக்கை.

* வினா எண் 796—திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தின் நிதிநிலை பற்றி ஆராய்ந்த பணிக்கர் குழு அரசுக்கு அறிக்கை தந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலைமையைப் பற்றி ஆராய்ந்த பணிக்கர் குழு எந்தவிதமான அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலையைப் பொறுத்த வரையில் மிகவும் நெருக்கடிக்கு ஆளாகி இருக்கின்றது. குறிப்பாக 1981-82 ஆம் ஆண்டு 169.67 கோடி ரூபாய் நஷ்டம் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. 1982-83-ல் இது 185.93 கோடி ரூபாயாகும். 1983—84-ல் இது 213.28 கோடி ரூபாயாக ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையை உத்தேசித்து எந்தெந்த இனங்களில் கட்டணங்களை எவ்வாறு அமைத்தால் பயனீட்டாளர்களும் பாதிக்கப்படாமல் அதே நேரத்தில் மின் வாரியமும் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் இருக்கும் என்பதைப் பற்றி ஆராய பணிக்கர் அவர்கள் மூலமாக ஒரு தனி நபர் குழு அமைக்கப்பட்டு அவர்கள் இதுபற்றி விவரமாக ஆராய்ந்து அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார். அவற்றைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.



திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1980-81, 1982-83, 1983-84 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தொடர்ந்து நிதிநிலைப் பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டு வந்திருக்கின்றது என்று சொல்கிறார்கள். இவ்வாறு அதிகரிப்பதற்கு என்ன காரணம்? உற்பத்திச் செலவு அதிகமாக ஆகி இருக்கின்றதா? அல்லது மின்சாரத்தை விநியோகிக்கின்ற போது குறைவான கட்டணத்திற்கு விநியோகிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையின்போதே விவாதிக்கப்பட்டன.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, இந்தியாவில் மற்ற எந்த மாநிலத்தையும் விட விவசாயிகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுகின்ற காரணத்தினால்தான் இவ்வாறு நிதிநிலை மோசமாகி இருக்கின்றது என்று பலர் கூறுகிறார்களே, அது உண்மைதானா? அப்படிப்பட்ட மோசமான நிதிநிலையில் இருந்து மின்சார வாரியத்தைக் காப்பாற்றுவதற்கு சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும் மின்சாரத்தைத் தயாரிப்பதற்குத் தனியார்களுக்கு உரிமம் வழங்குவதன் மூலம் சரிக்கட்ட முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விவசாயத்துறைக்கு மிகக் குறைந்த மின் கட்டணம் என்ற வகையில் இருப்பதும் ஒரு காரணம். ஆனால் அதே நேரத்தில் சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரம் எடுப்பது என்பதைப் பொறுத்த வரையில் இப்போது நாம் மின்சாரம் தயாரிப்பதற்கு ஆகின்ற செலவை விட அதிகமாகும். ஆகவே அவ்வாறு சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் எடுப்பதைப் பொறுத்தவரையில் நாம் இப்போது சோதனை அடிப்படையில்தான் கையாண்டு வருகிறோமே தவிர, பரவலாகக் கையாளுகின்ற அளவுக்கு தொழில்நுட்பத்திலே வளர்ச்சி இல்லை. இவை எல்லாவற்றையும் அரசு கருத்திலே கொண்டு தக்க முடிவினைத் தகுந்த நேரத்தில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம் நடராசர் கோவிலில் நடைபெற்ற சோதனை.

*வினா எண் 838—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம் நடராசர் கோவிலில் 1981 ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெற்ற திடீர் சோதனையில் கணக்கில் வராத ரூ.3 இலட்சம் மதிப்புள்ள தங்கமும், விலை மதிக்கமுடியாத மரகதலிங்கமும் கண்டுபிடிக்கப்பட்டதென்பது உண்மையா?

இரண்டாவதாக, மேஜர் இனாம், மைனர் இனாம்
சந்தேகத்தில், முன்பு மைனர் இனாமாக ஆக்கியதால், கோயில்
சாந்தமாக்கப்பட்டு இருக்கிறது. அதை மைனர் இனாம்
ஆக்கியது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செ
கிறார்கள். அது இப்போது நடந்தது அல்ல. பல ஆண்டுகளு
முன்னால் நடந்து இருக்கிறது. அப்போது மைனர் இனாம் எ
ஆக்கியதை இப்போது மேஜர் இனாம் என்று ஆக்க முடியு
என்பது தெரியாது. ஏனென்றால் பல ஆண்டுகளுக்கு முன்னா
கொண்டு வரப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ்
வருகிறது அந்தச் சட்டத்தின் கீழ் பல இடங்களில் பலவற்
மேஜர் இனாம் என்றும், மைனர் இனாம் என்றும்
அன்றைக்கு அறிவித்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து,
முடிவான முடிவாகியிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிப்
பற்றி நான் இப்போது எதையும் சொல்லமுடியாது.
அதைப்பற்றி நன்றாகப் பரிசீலிக்கும் என்பதை மட்டும்
முடியும், சட்டத்துறையோடு கலந்தாலோசனை செய்
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சட்டத்துறையோ
ஆலோசித்த பிறகு, அரசு இதிலே தலையிட்டு, அதை மே
இனாமா, மைனர் இனாமா என்று பார்த்து. மேஜர் இனாம
மாற்றுவதால் விவசாயிகளுக்கு நன்மை வருகிறது என்ற
அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக அதை மே
இனாமாக ஆக்குவதற்கு அரசு என்றைக்கும் தயங்க
சட்டப்படி அதைச் செய்யமுடியாமல் போய்விட்டால், அ
பற்றி பின்னர் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கெ
கிறேன்.

## 8. தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்
பாலசுப்பிரமணியம் குறிப்பிட்ட கருத்துக்கு, திரு. ரா. உமா
விளக்கம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணை
தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் பேரி
மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியின் பேரிலும்,
தன்னிலை விளக்கத்தை நான் அவைக்கு அறிவிக்கவிரும்புகிறே
நேற்றைக்கு நான் பைனான்ஸ் பில்லில் பேசுகிறபோ
மாண்புமிகு அங்கத்தினர் பாலசுப்பிரமணியம் அவர்
4 முதலமைச்சரின் கூட்டத்தின் முடிவுகளை எங்களுடைய கட
தலைவர் ஜோதிபாசு அவர்கள் எதிர்த்தார்கள் என்று
பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு ஒரு 'இம்ப்ரஷ
கொடுத்து இருக்கிறார். அது அவை ரிக்கார்ட்டில் பே
இருக்கிறது. அதை நேர் செய்யவேண்டும் என்பதற்காக
இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். அவர் பத்தி
களுக்கு அளித்த பேட்டியில் தெளிவாகச் சொல்லியிருக்கிறா
இன்றைய தினமணி பத்திரிகையில் டைட்டியாக வந்திருக்கிற
ஜோதிபாசு என்ன சொல்லியிருக்கிறார்? தென் மா
முதல்வர்களின் கூட்டமும் அதன் பரிந்துரைகளும் அனை
மாநிலங்களுக்கும் மாபெரும் சேவை புரிந்துள்ளதாக



பாராட்டியுள்ளார். மத்திய-மாநில நிதி உறவுகள் குறித்து 4 தென் மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களும் கொள்கை பூர்வமான ஒரு நிலையை மேற்கொள்ள எடுத்த முயற்சி, நாடு முழுவதும் 'மிகப் பெரிய விளைவை' ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜோதபாசு குறிப்பிட்டுள்ளார். இதைப் பிராந்திய மனப்பான்மை என்று மத்திய அரசு வர்ணிக்க நினைத்தது. அது இப்போது தோல்வி அடைந்துவிட்டது.

இந்த போர்ஷன் அன்கண்டிஷனலாக எழுதப்பட்டிருக்கிறது; சப்போர்ட் பண்ணுவதாக இருக்கிறது. அதை இம்ப்ரூவ் செய்வதற்கான நோக்கத்தை, வழியைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட அன்றைக்குப் பேசும்போது ஏன் ஜோதுபாசுவை அழைத்திருக்கக்கூடாது? ஏன் நிர்பன் சக்கரபர்த்தியை அழைத்திருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அது அவர்களுடைய ஒரு யோசனை, யோசனையாகச் சொல்லப்பட்டது. மாண்புமிகு ஹெக்டே அவர்கள் யோசனை கேட்டபோது அவர்கள் ஒரு யோசனையாக இதை பரிமாறியிருக்கிறார்கள். ''மத்திய-மாநில நிதி உறவுகளை மாற்றி அமைப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துவதற்கு மாநில முதல்வர்கள் அவ்வப்போது கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். மாநில முதல்வர்களின் கவுன்சில் அல்லது அமைப்பு என்ற ஒன்றை ஏற்படுத்துவதைவிட இப்படிச் செய்வது நல்லது என்று மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு புதன்று யோசனை கூறியுள்ளார்'' என்று இருக்கிறது. இது எதிர்ப்பு அல்ல, ஒரு யோசனை தான்.

இதே நிகழ்ச்சியை இணைத்து, இதை இன்னும் பெட்டராக எப்படி இம்ப்ரூவ் செய்யலாம் என்று மாண்புமிகு ஹெக்டே அவர்கள் கேட்டதற்கு தன்னுடைய ஒரு ஆலோசனையாக ஜோதிபாசு இதைச் சொல்லியிருக்கிறார். ''மாநில முதல்வர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதானது மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், மத்திய அரசுக்கும் தற்போதைய சூழ்நிலையில் உதவிகரமாக இருக்கும்'' என்று இம்ப்ரூவ் செய்வதற்கான ஒரு யோசனையாகச் சொல்லியிருக்கிறார். முழு சப்போர்ட் கொடுத்துவிட்டு, இப்படி ஒரு யோசனை, அவ்வளவுதான். அது அல்லாமல் கருத்து வேறுபாடு இல்லை. சப்போர்ட் தான் பண்ணுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது. ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் வேறு வகையிலே—தீர்மானத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தான் சொல்ல முடியும். உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பணிக்கர்
குழுவின் அறிக்கையினைச் செயல்படுத்தும்போது விவசாயம்,
மற்றும் வீடுகளுக்குப்பயன்படுத்துகின்ற மின் கட்டணத்தை உயர்த்
தாமல் இருக்கின்ற வகையில் அரசு கருணை காட்டுமா? அல்லது
ஒரு குறிப்பிட்ட யூனிட் வரையில் குறைந்த கட்டணம் என்றும்
அதற்கு மேல் போனால் கட்டணத்தைக் கொஞ்சம் அதிகமாக்கி
யும் அதற்கு மேலே போனால் அதைவிடக் கொஞ்சம் அதிகமாக்கி
யும் இப்படி படிப்படியாக மேலும் மேலும் கட்டணத்தை அதிக
மாக்கி அதன்படி ஒரு ஸ்லாப் சிஸ்டம் என்ற வகையிலே திட்டம்
வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,
கருணை இப்போது தேவைப்படுவது மின்சார வாரியத்
திற்குத்தான். மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள
பேரிழப்பைப் பொறுத்தவரையில் முழு அளவுக்கு
இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது அந்தச் சுமையைப்
பகிர்ந்துக்கொள்ள மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் முன்வர
வேண்டி உள்ளது. குறிப்பாக இந்தியாவின் இதர மாநிலங்களில்
எந்த அளவுக்குப் பயனீட்டாளர்கள் பகிர்ந்து கொள்கிறார்களோ
அந்த அளவுக்காவது தமிழகத்தைப் பொறுத்தவரையில் பயனீட்
டாளர்கள் முன்வரவேண்டும்.

திரு. எம். சின்னசாமி; பேரவைத் தலைவரவர்களே, தற்
போது மின்சார வாரியம் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகி இருப்ப
தாகச் சொல்கிறார்கள். பணிக்கர் குழுவின் அறிக்கையைப்
பொறுத்தவரையில் நிச்சயமாகக் கட்டணத்தை உயர்த்துவதற்
கான பரிந்துரையினை அவர்கள் சொல்லியிருப்பார்கள்
என்று நாம் யூகிக்க முடிகின்றது. அப்படி கட்டணத்தை
உயர்த்துகின்றபோது பெரிய தொழில்களுக்கான கட்டணத்தை
மட்டும் உயர்த்திவிட்டு சிறுதொழில்கள் மற்றும் விவசாயிகளுக்கு
அதிலே சலுகை காட்டப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,
தொழில்களும், விவசாயமும் பெருமளவுக்கு மின்சாரத்தை பயன்
படுத்துகின்றன. இப்போது தொழில்களைப் பொறுத்தவரையில்
கட்டணத்தை உயர்த்திக்கொண்டே வருகிறோம். ஆனால்
அதிகமாக உயர்த்திவிட்டால் அதற்குப் பிறகு தொழில்களே
இல்லாமலே போய்விடக்கூடாது. ஆகவே எந்தெந்த அளவுக்கு
உயர்த்தலாம், எந்தெந்த அளவுக்கு உயர்த்தினால் அந்தந்தக்
துறையினர் தாங்குவார்கள் என்பதைப் பற்றி எல்லாம் அவர்கள்
விவரமாகத் தந்திருக்கிறார்கள். அதுபற்றி பரிசீலித்து, எல்லா
நிலைமைகளையும் ஆராய்ந்து எந்த அளவுக்கு உயர்த்தலாம்
என்பதைப் பற்றி முடிவெடுத்த பிறகு அரசு அறிவிக்கும்.



(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: விவர அறிக்கை * * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9—20.)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 12—6—1981ம் தேதியில் ஆட்சேபனை செய்து ஒரு நோட்டீஸ் 24-6-1981—ல் கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு மாதம் அவகாசம் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் பதில் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அங்கே கணக்கு எடுக்கின்ற சமயத்தில் பொது தீட்சதர்களின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் கணக்குகள் கொண்டுவந்து சமர்ப்பிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆகவே இன்றைய நிலையில் நம்முடைய அரசு கூட அதற்கு டிரஸ்டுகள் அமைக்க வேண்டும் என்று அமைத்தது. அது சம்பந்தமாக கோர்ட் மூலம் ஸ்டே ஆர்டர் வாங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளை எல்லாம் பார்த்தால் தனியாக மசோதா கொண்டு வந்தால் ஒழிய இது சம்பந்தமாக நிலையில் நம் அரசு மூலம் சரியான தகவல்களை சேகரிக்கவோ அல்லது விலையுயர்ந்த பொருட்களை காபந்து செய்யவோ முடியாத நிலை இருக்கிறது. டாக்டர் சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களுடைய அகில இந்திய அறநிலைய பாதுகாப்பு ரிப்போர்ட் பிரகாரம் எடுத்துக்கொண்ட கோவில்களில் தெரிந்தோ தெரியாமலோ இந்த நடராஜர் கோவில் விடப்பட்டிருக்கிறது, அது ஒரு பாவமான செயலாகும். ஆகவே இதையெல்லாம் பார்த்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்குச் சரியான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் ஒழிய நாம் இதை காபந்து செய்ய முடியாது. நம் முன்னோர்கள் கொடுத்த, அரசுகள் கொடுத்த சொத்துக்களை காக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதால் இதற்கு ஆவன செய்ய மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஒரு முடிவு எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சனை நீண்ட காலமாக அவ்வப்போது எழுப்பப்படுவதும் அதற்குப் பொது தீட்சதர்கள் ஆட்சேபனை தெரிவிப்பதும் பிறகு என்ன காரணத்தாலோ கைவிடப்படுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. இப்போது நடைபெற்று

** 117—120ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: [1983 ஏப்ரல் 22
தனிக்கேள்வி போட்டால் தலைவர் அவர்களே,
சேகரித்துத் தர இயலும். அதுபற்றிய விவரங்களைச்

திரு. ந. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே,
திருவண்ணாமலை அருள்மிகு அருணாசல ஈஸ்வரர் ஆலயத்தில்
ஆயிரங்கால் மண்டபத்தில் தற்போது உணவுப்பொருள் வழங்கு
துறை மூலமாக நெல் இருப்பு ஸ்டாக் வைக்கப்பட்டு இருக்கிறது.
அது எப்போதிருந்து அங்கே வைக்கப்பட்டு இருக்கிறது? அதற்கு வாடகை எவ்வளவு?
அந்த ஆயிரங்கால் மண்டபத்தில் பாதாள
லிங்கம் என்ற ஒரு லிங்கம் இருக்கிறது. அதை மூதறிஞர் இராஜாஜி
அவர்கள் திறந்து வைத்தார்கள். அங்கே பலபேர்கள் சுவாமி
கும்பிடவேண்டிய நிலையில் இருக்கிறது. அந்த இடத்தை தடுத்து
நிறுத்தியிருக்கிறார்கள். எனவே அதை நீக்குவதற்கு அரசு முன்
வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:
அதற்கான வினா ய விவரமாக அளித்திருக்கிறேன். அதுதான் மூலக்கேள்வி.
மாண்புமிகு உறுப்பினர் அதையே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும்
ஆகவே முன்னாலே இருக்கிற பதிலையே அளிப்பதாக அவர்கள்
எடுத்துக்கொள்ளவேண்டும்.

மருதூரில் இராமலிங்கசுவாமிகளுக்கு நினைவு மணி மண்டபம்
கட்டும் திட்டம்.

*வினா எண் 841—திரு. வி. வி. சுவாமிநாதன் மற்றும் திரு.
ஏ இராமலிங்கம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமரச சன்மார்க்கத்தைப் பரப்பிய இராமலிங்க சுவாமிகள்
பிறந்த ஊரான மருதூரில் அவருக்கு நினைவு மணி மண்டபம்
கட்டும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சமரச சன்மார்க்கத்தைப்
பரப்பிய இராமலிங்க அடிகளார் பிறந்த ஊரான மருதூரில்
அவர் பிறந்த வீட்டையும் இருந்த இடத்தையும் பிரயத்திற்குப்
பெற்று திரு. வி. ஆர். இராமகிருஷ்ணன் அவர்கள்
தலைமையிலான திருப்பணிக் குழுவால் இராமலிங்க
சுவாமிகளுக்கு நினைவு இல்லம் கட்ட முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கட்டிடம் முடிந்தபிறகு
மீதமுள்ள இடத்தில் தர்மசாலை கட்டிடம் கட்டும் திட்டமும்
திருப்பணிக் குழுவிடம் உள்ளது. அந்தத் திருப்பணிக்
குழுவினரின் செயல்பாடுகள் திருப்தியாக நடைபெறவில்லை
யானால் அறநிலையத் துறை அந்த நினைவு மண்டபம் கட்டும்
முயற்சிகளில் ஈடுபடும்.



1983 ஏப்ரல் 22]

திரு. வி. வி. சுவாமிநாதன்: சட்டப் பேரவைத் தலைவர்
அவர்களே, இராமலிங்க சுவாமிகள் பிறந்த ஊரான மருதூரில்
மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று இந்த அரசு நிதி ஏதாவது
ஒதுக்கி இருக்கிறதா, அப்படி ஒதுக்கியிருக்கிறது என்றால்
எந்த ஆண்டு எவ்வளவு என்று தெரிந்துகொள்ள ஆசைப்படு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே,
1979–80 ஆம் ஆண்டிலே 70 ஆயிரம் ரூபாய் அரசு
மானியமாக அளிக்கலாம் என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
ஆகவே திருப்பணி வேலைகள் ஒழுங்காக நடைபெறாத
காரணத்தினாலேயும் துவக்கப்படாத காரணத்தினாலேயும்
அந்த நிதி வழங்கப்படவில்லை. ஆகவே இப்போது
எப்படி ஆண்டவன் பெயரை வைத்துக்கொண்டு பலர்
பிழைக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ அப்படியே
வள்ளலார் பெயரை வைத்துக்கொண்டும் அங்கே பிழைப்பதற்குச்
சிலர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த
முயற்சியின் விளைவாக நியாயமாக நடைபெற வேண்டிய
காரியங்கள் நடைபெறாமல் தடுக்கப்படுகின்றன. அந்த
முயற்சிகளை அறநிலையத்துறை கவனித்து வருகிறது. அப்படி
முறையாக நடைபெறவில்லையானால் அறநிலையத்துறையே
தன்னுடைய முயற்சியை மேற்கொண்டு ஒரு நினைவு மண்டபம்
எழுப்ப முயற்சிக்கும்.

(முற்பகல் 9–40)

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, ஓராண்டிற்கு முன்பு மருதூருக்கு வந்த
போது, யார் இராமலிங்கசுவாமி பிறந்த இடத்திலே
கட்டிடங்களைக் கட்டுகிறோம் அதற்காக பொது
மக்களிடம் வசூல் பண்ணிய தொகையையும், கருங்
கற்களையும், அந்த இடத்தையும் காட்டுப்போம் என்று
சொன்னார்களோ அவர்கள்—குறிப்பாக கந்தசாமி துறவி
என்பவர்—தற்போது அரசிற்குப் போட்டியாக வடலூரில்
விழா நடத்துவதோடு, இப்போது மருதூரில் அவைகளைத் தர
மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கு மேலே
மதிப்புள்ள நல்ல அரசு நிலம் மருதூரிலே இருக்கிறது. அதைப்
பயன்படுத்தி மிக அருமையான ஒரு சிலையையும், ஒரு நினைவு
மண்டபமும் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, நான் இதைத்தான் முன்னாலேயே தெரிவித்தேன்.
அந்தப் பகுதியிலே சிலர்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பெயரைக்கூடச் சொல்லியிருக்கிறார்கள்—வள்ளலார் பெயரை
வைத்துக் கொண்டு இன்றைக்கு வாணிபம் செய்கிற முயற்சியிலே
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அறநிலையத்
துறை தடுத்து நிறுத்த முடியாமல் சில சட்டச் சிக்கல்கள்
இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்
போல அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் இருக்குமேயானால்
அதைப் பெற்றுத் தருகிற முயற்சியிலே அவர்கள் ஈடுபடுவார்

இரண்டாவதாக, மேஜர் இனாம், மைனர் இனாம் என்ற சந்தேகத்தில், முன்பு மைனர் இனாமாக ஆக்கியதால், கோயிலுக்கு சொந்தமாக்கப்பட்டு இருக்கிறது. அதை மைனர் இனாமாக ஆக்கியது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் கிறார்கள். அது இப்போது நடந்தது அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து இருக்கிறது. அப்போது மைனர் இனாம் என்று ஆக்கியதை இப்போது மேஜர் இனாம் என்று ஆக்க முடியுமா என்பது தெரியாது. ஏனென்றால் பல ஆண்டுகளுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இது வருகிறது அந்தச் சட்டத்தின் கீழ் பல இடங்களில் பலவற்றை மேஜர் இனாம் என்றும், மைனர் இனாம் என்றும் அரசு அன்றைக்கு அறிவித்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து, அது முடிவான முடிவாகியிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிப்பது பற்றி நான் இப்போது எதையும் சொல்லமுடியாது. அரசு அதைப்பற்றி நன்றாகப் பரிசீலிக்கும் என்பதை மட்டும் சொல்ல முடியும், சட்டத்துறையோடு கலந்தாலோசனை செய்யும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சட்டத்துறையோடு ஆலோசித்த பின்பு, அரசு இதிலே தலையிட்டு, அந்த மேஜர் இனாமா, மைனர் இனாமா என்று பார்த்து, மேஜர் இனாமாக மாற்றுவதால் விவசாயிகளுக்கு நன்மை வருகிறது என்றால், அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக அதை மேஜர் இனாமாக ஆக்குவதற்கு அரசு என்றைக்கும் தயங்காது. சட்டப்படி அதைச் செய்யமுடியாமல் போய்விட்டால், அதைப் பற்றி பின்னர் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

## 8. தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் பாலசுப்பிரமணியம் குறிப்பிட்ட கருத்துக்கு, திரு. ரா. உமாநாத் விளக்கம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் பேரிலும், மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியின் பேரிலும், ஒரு தன்னிலை விளக்கத்தை நான் அவைக்கு அறிவிக்கவிரும்புகிறேன். நேற்றைக்கு நான் பைனான்ஸ் பில்லில் பேசுகிறபோது, மாண்புமிகு அங்கத்தினர் பாலசுப்பிரமணியம் அவர்கள், 4 முதலமைச்சரின் கூட்டத்தின் முடிவுகளை எங்களுடைய கட்சித் தலைவர் ஜோதிபாசு அவர்கள் எதிர்த்தார்கள் என்று ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக் காண்டு ஒரு 'இம்ப்ரஷன்' கொடுத்து இருக்கிறார். அது அவை ரிக்கார்ட்டில் போய் இருக்கிறது. அதை நேர் செய்யவேண்டும் என்பதற்காக நான் இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். அவர் பத்திரிகை களுக்கு அளித்த பேட்டியில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இன்றைய தினமணி பத்திரிகையில் மட்டேய்லாக வந்திருக்கிறது. ஜோதிபாசு என்ன சொல்லியிருக்கிறார்? தென் மாநில முதல்வர்களின் கூட்டமும் அதன் பரிந்துரைகளும் அனைத்து மாநிலங்களுக்கும் மாபெரும் சேவை புரிந்துள்ளதாக அவர்



பாராட்டியுள்ளார். மத்திய–மாநில நிதி உறவுகள் குறித்து 4 தென் மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களும் கொள்கை பூர்வமான ஒரு நிலையை மேற்கொள்ள எடுத்த முயற்சி, நாடு முழுவதும் 'மிகப் பெரிய விளைவை' ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜோதபாசு குறிப்பிட்டுள்ளார். இதைப் பிராந்திய மனப்பான்மை என்று மத்திய அரசு வர்ணிக்க நினைத்தது. அது இப்போது தோல்வி அடைந்துவிட்டது.

இந்த போர்ஷன் அன்கண்டிஷனலாக எழுதப்பட்டிருக்கிறது; சப்போர்ட் பண்ணுவதாக இருக்கிறது. அதை இம்ப்ருவ் செய்வதற்கான நோக்கத்தை, வழியைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட அன்றைக்குப் பேசும்போது ஏன் ஜோதுபாசுவை அழைத்திருக்கக்கூடாது? ஏன் நிர்பன் சக்கரபர்த்தியை அழைத்திருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அது அவர்களுடைய ஒரு யோசனை, யோசனையாகச் சொல்லப்பட்டது. மாண்புமிகு ஹெக்டே அவர்கள் யோசனை கேட்டபோது அவர்கள் ஒரு யோசனையாக இதை பரிமாறி யிருக்கிறார்கள். ''மத்திய–மாநில நிதி உறவுகளை மாற்றி அமைப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துவதற்கு மாநில முதல்வர்கள் அவ்வப்போது கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். மாநில முதல்வர்களின் கவுன்சில் அல்லது அமைப்பு என்ற ஒன்றை ஏற்படுத்துவதைவிட இப்படிச் செய்வது நல்லது என்று மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு புதனன்று யோசனை கூறியுள்ளார்'' என்று இருக்கிறது. இது எதிர்ப்பு அல்ல, ஒரு யோசனை தான்.

இதே நிகழ்ச்சியை இணைத்து, இதை இன்னும் பெட்டராக எப்படி இம்ப்ருவ் செய்யலாம் என்று மாண்புமிகு ஹெக்டே அவர்கள் கேட்டதற்கு தன்னுடைய ஒரு ஆலோசனையாக ஜோதிபாசு இதைச் சொல்லியிருக்கிறார். ''மாநில முதல்வர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதானது மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், மத்திய அரசுக்கும் தற்போதைய சூழ்நிலையில் உதவிகரமாக இருக்கும்'' என்று இம்ப்ருவ் செய்வதற்கான ஒரு யோசனையாகச் சொல்லியிருக்கிறார். முழு சப்போர்ட் கொடுத்துவிட்டு, இப்படி ஒரு யோசனை, அவ்வளவுதான். அது அல்லாமல் கருத்து வேறுபாடு இல்லை. சப்போர்ட் தான் பண்ணுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது. ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் வேறு வகையிலே–தீர்மானத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தான் சொல்ல முடியும். உட்காருங்கள்.

[1983 ஏப்ரல் 22

6. அறிவிப்புகள்.—தொடர்ச்சி

(உ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1983 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்.) சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு(திருத்தச்)சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

(முற்பகல் 11-10).

*திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1983–வது ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே அவர்கள் நிதி அறிக்கையை தாக்கல் செய்த போது, இங்கே அறிவித்ததற்கு இணங்க ஒவ்வொரு வரியாக இன்றையதினம் விதிக்கின்ற ஒரு நிலைமை தமிழ்நாட்டிலே ஏற்பட்டு வருகிறது.

---

*1983-ம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன் மோட்டார் வண்டிகளுக்கு வரி விதிப்பு போடுவதில், இன்றைய தினம் பல்வேறு நகரப் பேருந்துகள் என்ற வகையில், லாரிகள், ஸ்கூட்டர்கள், மோட்டார் வண்டிகள், டாக்சிகள், சுற்றுலா வாகனங்கள், ஸ்பேர் பஸ்கள் இப்படி பல்வேறு நிலைகளிலே இன்றையதினம் நம்முடைய அரசு அந்த வண்டிகளுக்கு வரியை உயர்த்தியிருக்கிறது. அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்க வேண்டியதுதான். ஆனால் தமிழ்நாட்டிலே கடுமையான வறட்சி நிலவுகிற இந்தக் கால கட்டத்தில் வரிகளை நாம் லாரிக்கு வைத்தாலும் சரி, நகரப் பேருந்துகளுக்கு வைத்தாலும் சரி, கடைசியிலே பாதிக்கப்படப் போகிறவர்கள் பொது மக்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒரு காலகட்டத்தில், டீசல் விலை உயர்ந்த நேரத்திலும் சரி, பெட்ரோல் விலை உயர்ந்த நேரத்திலும் சரி, நகரப் பேருந்துகளுக்கும், தனியார் பேருந்துகளுக்கும், சுற்றுலா வேன்களுக்கும் விலையை–கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று பல கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்தன. அரசாங்கமும் இருக்கின்ற நிலைமையை உணர்ந்து ஏற்கனவே கட்டணங்களை உயர்த்த அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால் அதன் பிறகு பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான்.

அதேபோல இன்றையதினம் கூட நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் ஏழைகளுக்கா வரி போட்டோம். லாரி அதிபர்களுக்கு, தனி பஸ் முதலாளிகளுக்கல்லவா வரியை உயர்த்தியிருக்கிறோம். நகரப் பேருந்துகளும், தனியார்களின் வண்டிகளும், கார்ப்பரேஷன் வண்டிகளும் தானே ஓடப் போகின்றன என்று சொன்னாலும், கடைசியில் பாதிக்கப்படப் போகிறவர்கள் பொதுமக்கள்தானே என்று நான் கேட்க விரும்புகிறேன். அதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே நான் அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது, நகரப் பேருந்துகளுக்கும் நீங்கள் வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால் எதிர் காலத்திலே இதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, அதனுடைய கட்டணங்களை உயர்த்துகிற முயற்சியை அரசாங்கம் எடுக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில இடங்களிலே தனியார் பேருந்துகளும், சில இடங்களிலே நகரப் பேருந்துகளும் ஓடுகின்றன. இன்றைக்கு நீங்கள் வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால் அவர்களுடைய சங்கங்கள் எல்லாம் சேர்ந்து அரசுக்கு ஒரு கோரிக்கையை வைத்து, அந்தப் பேருந்துகளின் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று கேட்டு, நீங்களும் அதை அனுமதித்து, அந்தக் கட்டணத்தை உயர்த்துவீர்களேயானால், அதனால் நிச்சயமாக பாதிக்கப்படப் போகிறவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள்தான். ஆகவே, அப்படி உயர்த்தமாட்டோம் என்று இந்த அவையிலேயே நீங்கள்

கனாவால் உடனடியாக அங்கே ஒரு நினைவு 
எழுப்புவதற்கும், வள்ளலாருக்கு ஒரு மிகச் சிறந்த நினைவு மண்டபத்தை
யத்தை உருவாக்குவதற்கும் அறநிலையத்துறை முயற்சிகளை
மேற்கொள்ளும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிதம்பரம் நடராஜர்
ஆலயத்திற்குப் புதியதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாகச்
சொன்னார்கள். அதே அடிப்படையிலே வடலூர் வள்ளலா
ருடைய சொத்துக்களைப் பல பேர்கள் ட்ரஸ்ட்டுகள் என்ற
பெயரில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் அப்படிப்பட்டவரின்
பெயரைக் கூட சொன்னார்கள். ஆகவே புதிய சட்டத்தின்
மூலம் வடலூர் சத்தியநாராயண சபைக்கு சொத்துக்களை
ஒப்படைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, வள்ளலாருடைய பெருமையையும், புகழையும்
பரப்புவதற்காகப் பெரியவர்கள் சில கட்டளைகளை உருவாக்கி
யிருக்கிறார்கள். அந்த அறக்கட்டளைகளை நிர்வகித்துக்
கொண்டு வருகிறவர்கள், தாங்கள்தான் பரம்பரை அறங்காவலர்
கள் என்று கூறிக்கொண்டு, வள்ளலாருடைய புகழைப் பரப்பு
வதற்குப் பதிலாக அந்தக் கட்டளைகளிலிருந்து கிடைக்கிற
வருமானத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு, அவர்கள் புகழை
பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். ஆகவேதான் இந்த
மன்றத்திலே முன்னாலேயே தெரிவித்ததைப் போல, பரம்பரை
அறங்காவலர்களை நீக்குவதற்காக ஒரு சட்டத்தை
விரைவிலே அரசு கொண்டு வரவிருக்கிறது. அந்தச் சட்டம்
நிறைவேற்றப்படுமானால் அதற்கு பிறகு இப்படித் தவறு
செய்கிறவர்கள் மிக விரைவில் இந்தச் சட்டத்தின் மூலமாக
நீக்கப்படுவார்கள்.

திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, மருதூர் கிராமத்தில் 1963 ஆம் ஆண்டு காலஞ்
சென்ற திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய
காலத்திலே ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அதற்காக
அடிக்கல் கூட நாட்டப்பட்டது. அங்கே அரசாங்கத்திற்குச்
சொந்தமான இடம் கிடைப்பது மிக கஷ்டம் என்பதால் அவர்
குடியிருந்த வீட்டையும் அதற்குப் பக்கத்திலேயிருந்த வீட்டையும்
அந்தத் திருப்பணிக் குழுவினர் விலைக்கு வாங்கினார்கள். ஆனால்
இப்போது அந்த இடத்திலே வேலை நடக்கவில்லை. தற்போ
திருக்கிற ஞானசபையும், வடலூர் வள்ளலார் அவர்கள் கடைசி
காலத்திலே உட்கார்ந்து தியானம் செய்த இடமும் மிகவும்
சீர்கேடு அடைந்திருக்கிறது. இரண்டு, மூன்று முறைகள் ஈ.ஓ.விற்குக்
கடிதங்கள் வந்தும்கூட, ஆணையாளர் பகுதியிலே அந்தத் தகவல்
போய் சேராமல், வேலை நடக்கவில்லை. மழைக் காலங்களில்
அந்தக் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டு மிகவும் சீர்கேடு அடைந்திருக்
கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக
நடவடிக்கையெடுத்து, ரிப்பேர் செய்வதற்கு உத்தரவிடுவார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, இந்தக் கேள்வி வள்ளலார் பிறந்த மருதூரில்
அவருக்கு நினைவுச் சின்னம் அமைப்பதைப் பற்றியது.
மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் தெரி
வித்ததைப் போல 1963 ஆம் ஆண்டு குழுவெல்லாம் நியமிக்கப்
பெற்று, அவர்கள் 61 ஆயிரத்து 129 ரூபாய்க்கு மேலே வசூல்
செய்து, சிலே சில வேலைகளையெல்லாம நாங்கள் செய்
திருக்கிறோம்; அதற்கு 41 ஆயிரத்து 82 ரூபாய் ஆகியிருக்கிறது
என்றெல்லாம் கணக்கு காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே
கணக்கு வந்திருக்கிறதே தவிர காரியம் இதுவரை நடை
பெற்றதாகத் தெரியவில்லை; ஆகவேதான் மருதூரில்,
வள்ளலார் அவர்களுடைய பிறந்த இடத்தில்
நினைவுச் சின்னம் அமைப்பதைப் பற்றி தெரிவித்துக் கொண்டி
ருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வடலூர்
பகுதியில் அந்தக் கட்டிடம் பழுதடைந்திருக்கிறது என்கிற
செய்தி அதையொட்டி பல திருப்பணிகள் அங்கே மேற்கொள்ளப்
பட இருக்கின்றன. அந்தத் திருப்பணியோடு இந்தப் பணியும்
இணைத்து செயல்படுத்தப்படும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இராமலிங்க சுவாமிகள் மரச சன்மார்க்கத்தை
நிறுவி, நாட்டு மக்களுக்கு நற்பணி செய்துள்ளதோடு, கண்மூடிப்
பழக்கம் எல்லாம் மண்மூடிப் போகும் என்பது போன்ற நல்ல
கருத்துக்களைப் பரப்பி மூடப் பழக்க வழக்கங்களை
ஒழிக்கப் பாடுபட்டுள்ளார்கள். ஆகவே, சுயமரியாதைத்
தந்தை பெரியாருக்கு நினைவுத் தூண் நிறுவி அவருடைய
கருத்துக்களை வெளியிட்டுள்ளதைப் போல் இராமலிங்க சுவாமி
களுடைய நல்ல கருத்துக்களை நாடெங்கும் கல்வெட்டுக்களில்
பொறிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, கடந்த நூற்றாண்டிலே தோன்றிய மிகப் பெரிய
சான்றோர்களில் வள்ளலார் நம்முடைய தமிழகத்திற்குப்
பெருமை தேடித் தருகின்ற சான்றோர் ஆவார். அவர்கள்
அறிவுக்கும் ஆன்மீகத்திற்கும் மிகச் சிறந்த இணைப்பாக
இருந்து மக்களுக்குப் புதிய தத்துவத்தை வழங்கி இருக்கிறவர்கள்.
ஆகவே, அவருடைய அந்த இலட்சியங்களைப் பரப்புகின்ற
வகையிலேதான் அவர் பிறந்து, வாழ்ந்து, சித்தி அடைந்திருக்கிற
அந்தப் பகுதியிலே முதலில் இந்தத் தமிழகம் முழுவதும்
இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மக்கள் பாராட்டுகின்ற
வகையிலே, நினைவுச் சின்னங்களை உருவாக்கியதற்குப் பிறகு,
மற்ற இடங்களிலே அந்தக் கொள்கைகள் மக்களாலே ஏற்றுக்
கொள்ளப்பட்டால்தான் சின்னங்களாகுமே தவிர, வெறும்
கொள்கைகளை கல்லாலோ மண்ணாலோ அமைப்பது என்பது
அது காலத்தாலே மறந்துவிடக் கூடியது. ஆகவே, அவருடைய
கருத்துகளைப் பரப்பி மக்கள் ஏற்றுக்கொண்டால், அதுவே
அவருக்கு நாம் தருகிற நினைவுச் சின்னமாக அமையும்
என்று அரசு கருதுகிறது.

கிராமப்புறங்களில் 'அரசு ஓமியோபதி மருத்துவமனைகள்' திறக்கும் திட்டம்.

*வினா எண் 842— திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தமிழகத்தில் பதிவு பெற்ற ஓமியோபதி மருத்துவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் கிராமப்புறங்களில் 'அரசு ஓமியோபதி மருத்துவமனைகள்' திறக்கும் நோக்கம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இது குறித்து செயற் குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

சங்கராபுரம் தொகுதியிலுள்ள புதுப்பேட்டை சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றும் திட்டம்.

*வினா எண் 843— திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள புதுப்பேட்டை சுகாதார நிலயத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றி அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. கலிதீர்த்தான்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியிலே உள்ள புதுக்கோட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக மாற்றுவார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் மருத்துவ வசதி பெறுவதற்காக சுமார் 30 மைல் தூரம் செல்ல வேண்டி உள்ள காரணத்தால், அதை மருத்துவ மனையாக மாற்ற அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையிலே, நாம் இப்பொழுது மருத்துவமனையாக ஆக்கக்கூடிய திட்டம் இல்லையென்று சொன்னேன். சில ஆரம்பச் சுகாதார நிலையங்களை விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். அம்மாதிரியாக விஸ்தரிக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையமாக அது இருக்க வேண்டுமென்ற செயற் குறிப்புநமக்கு வருமானால், அரசு பரிசீலிக்காலம்.



திரு சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய தொகுதியிலே உள்ள இந்தப் புதுக்கோட்டை ஆரம்பச் சுகாதார நிலையம் கல்ராயன் மலையினுடைய அடிவாரத்திலே இருக்கிற காரணத்தால், அங்குள்ள மலைவாழ் மக்களும், மற்றும் சுற்றுவட்டாரத்திலுள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த பொது மக்களும் தங்கி மருத்துவ வசதி பெறுவதற்காக, அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தை சில இடங்களிலே மாற்றுவதைப்போல் மாற்றி, உடனடியாக மருத்துவ நிலையம் நிறுவினால் மலைவாழ் மக்களும் மருத்துவ வசதிபெற ஏதுவாக இருக்கும், எனவே, மீண்டும் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து மருத்துவமனையாக மாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கு டேனிடா திட்டத்தின் கீழ் நாம் சில நன்மைகளைச் செய்திருக்கிறோம், திட்டம் இட்டிருக்கிறோம், இப்பொழுது செயல்படுத்தி வருகிறோம். ஆனால், அந்த மலைவாழ் மக்கள் இந்த மருத்துவ மனைக்கு வந்து பயன் பெறுவார்களா என்பது சந்தேகத்துக்குரியது. ஆகவே தான் நான் எல்லாவற்றையும் பார்த்து பரிசீலனை செய்து, Merits of the case என்ன, என்ன ஆதாரங்கள் கிடைக்குமோ' அந்த ஆதாரங்களுடைய அடிப்படையிலே நாம் முடிவு செய்யலாம் என்று சொன்னேன்.

சேலம் மாவட்டத்தில் 'டேனிடா' திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி செய்யும் திட்டம்

*வினா எண் 844— திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் 'டேனிடா' திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; (அ) ஆம்.

(ஆ) சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் செயலாக்கப்படும் டேனிடா திட்டத்தின் கீழ் குடிநீர் மற்றும் துப்புரவு சம்பந்தப்பட்ட பணிகளுக்கென்று ஐந்து வருட காலத்திற்கு ரூ 155 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சுகாதார துணை நிலையங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வழங்க செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

உறுதியாகக் கூடச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட முன்மாதிரிகள் தான் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட முறைகளிலே முதலிலே வரிகளை உயர்த்தி, பிறகு அதனுடைய கட்டணத்தை உயர்த்துகின்ற நடவடிக்கையை எடுக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டிலே ரயில்வேக்களை நம்பித்தான் வியாபாரிகள் இல்லை. இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களிலிருந்தும், அல்லது தமிழ்நாட்டிலே இருக்கிற பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பொருள்களின் போக்கு வரத்துக்கள் எல்லாம் பெருமளவில் நடைபெறுகிறது என்று சொன்னால், அதற்கு வியாபாரிகள் தனியார் லாரிகளைத் தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த வரிகளை எல்லாம் உயர்த்தியதற்குப் பிறகு அவர்கள் என்ன செய்வார்கள்? கட்டுப்படியாகவில்லை, ஏற்கனவே டீசல் விலை உயர்ந்திருக் கிறது. அரசாங்கமும் வரியை உயர்த்தியிருக்கிறது. அதனால் எங்களுக்கு கட்டுப்படியாகவில்லை என்று விடுப்பார்கள். ஆகவே அத்தகைய பிரச்னையை அரசாங்கம் சமாளிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

அதேபோல டாக்ஸி கட்டணங்கள், ஆட்டோ கட்டணங்கள் என்று வருகிறபோது, இன்றையதினம் மாநகரங்களினாலும் சரி, நகரங்களிலானாலும் சரி, புற நகர்ப்பகுதிகளாக இருந்தாலும் சரி, நடுத்தர மக்கள் அவைகளை உபயோகப்படுத்த முடியாத அளவுக்கு கட்டணம் உயர்ந்திருக்கிறது. இப்படி அந்தக் கட்டணங்கள் இன்னும் உயர்ந்துகொண்டே போகுமேயானால், டாக்சி, ஆட்டோ ஓட்டிகளின் வருவாய்க்கூட குறையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது மட்டுமல்ல பொதுமக்களும் அதன் காரணமாக பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, எப்படி சுற்றிச் சுற்றி வந்தாலும் பொது மக்கள் தான் பாதிக்கப்படுகிற சூழ்நிலையை இந்த வரி உயர்த்தும் நடவடிக்கை ஏற்படுத்துகிறது.

அடுத்து, இந்த மசோதாவிற்கான குறிப்புகளைப் பார்க்கிற போது, சென்னை நகரைப் பொறுத்தமட்டில், இந்த நகரப் பேருந்து வரி வராது என்று கருதுகிறேன். ஒரு வகையிலே சென்னை நகரத்தையாவது விட்டு வைத்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டியாகவேண்டும். ஆனால் மற்ற நகரங்களிலேயும் கிராமங்களிலேயும் உள்ள மக்களிடமிருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எங்களுக்குத் தருகிற மனுக்களில் எல்லாம் டவுன் பஸ்கள் என்று சொல்லப் படுகிற அந்த பஸ்கள் தான் தங்களுக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். எங்களுக்கு அவர்கள் தருகிற மனுக்களிலே யெல்லாம் 30 கிலோ மீட்டர் வரையில் நகரங்களிலேயிருந்து செல்லக்கூடிய நகரப் பேருந்துகள் தாம் வேண்டும் என்று பொது மக்கள் கேட்கிறார்கள். காரணம் கட்டணம் குறைவாக இருக்கிறது என்பதுதான்.



ஆனால் நீங்கள் இந்த நகரப் பேருந்துகளினுடைய கட்டணத்தை உயர்த்துவது பற்றி நாங்கள் பயப்படுவதற்குக் காரணம் யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே என்பதற்காகத்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல நேரங்களிலே போக்குவரத்து கழகங்களிலே ஓடுகின்ற பேருந்துகள் எல்லாம் நஷ்டத்திலே இயங்குகின்றது என்று சொல்லி இருக்கிறார்கள். பெரியார் போக்குவரத்து, கட்டபொம்மன் போக்குவரத்து போன்ற பல போக்குவரத்து பற்றிய கேள்விகள் எல்லாம் வருகின்றபோது நட்டத்திலே இயங்குகின்றன என்றும் அதுபற்றிப் பரிசீலிக்கவேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். முதலிலே நகரப் பேருந்து களுக்குரிய வரியை உயர்த்தினால் அதனுடைய கட்டணத்தை உயர்த்துவதற்கு ஒரு வாய்ப்பளிப்பது என்ற நிலைமையை கட்டாயமாக அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது என்பதை நான் திட்டவட்டமாக இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்த எண்ணம் இருந்தால் அதை கைவிடவேண்டும். இன்றையதினம் மக்கள் விலைவாசி உயர்வாலும், வறுமையாலும், தண்ணீர் பஞ்சத்தாலும் குடிதண்ணீர் பிரச்சினையாலும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களைக் காப்பாற்றவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. மேலும் ஒரு பிரச்சினையை அவர்களுக்கு ஏற்படுத்திவிடக்கூடாது என்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றத் தலைவர் தலைமை.)

அடுத்து பேருந்துகளின் அதிபர்கள் சிலபேர் ஸ்பேர் பஸ் வைத்திருந்தார்கள். ஆனால் அதற்கு அதிகமான அளவுக்கு வரி வருகின்ற காரணத்தால் பல பஸ் அதிபர்கள் இப்போது அந்த ஸ்பேர் பஸ் வைத்திருப்பதையே விட்டுவிட்டார்கள். அவர்களுக்குக் கட்டுபடியாகவில்லை என்று விட்டுவிட்டார்கள். அப்படி பல மார்க்கங்களில் பேருந்துகளை விட்டதை கூட அவர்கள் நிறுத்திவிட்டார்கள். அப்படிப்பட்ட மார்க்கங்கள் என்னுடைய தொகுதியிலே கூட இருக்கின்றன. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். பேருந்துகளுக்குக் கட்டணம் விதிப்பதிலே கூட அரசாங்கம் ஒரு புதிய முறையைக் கையாள வேண்டும். இப்போது நகரங்களிலே வண்டிகள் விட்டிருக் கிறோம். போக்குவரத்துக்கழகங்களின் வண்டிகளும் விடப்பட்டிருக் கின்றன. தனியார் வண்டிகளும் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் திருவண்ணாமலையிலிருந்து வேலூருக்கு விடுகின்ற பேருந்திலே என்ன கட்டணமோ அதே கட்டணம்தான் மற்ற இடங்களிலும் வசூலிக்கப்படுகின்றது. கிராமப்புறங்களிலே ஓடுகின்ற பேருந்து களுக்கு நல்ல தார் சாலைகள் இருக்காது. அதனால் அவற்றுக்கு அதிகமான வசூல் ஆகாது. ஆனால் கட்டணம் எல்லாம் அதே கட்டணம்தான் அந்த நிலைமை காரணமாக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரிக்கு ஒரு

(முற்பகல் 9–50)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார துணை நிலையங்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதி செய்வதற்கு ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய் டேனிடா திட்டத்தின் கீழ் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். டென்மார்க் அரசாங்கமும், நம்முடைய அரசாங்கமும் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டபொழுது, முக்கியமான திட்டமாக சுகாதாரப் பாதுகாப்பு திட்டத்தைச் செயல்படுத்தும்போது, துணைத் திட்டமாகக் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்வது என்றும் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்படுகிறதா? அப்படிச் செய்யப்பட்டால் இந்தத் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி பெறுகின்ற பயன் பெறுகின்ற கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொத்தமாக A total of about 626 and 4654 habitations are identified in South Arcot and Salem districts இரண்டு மாவட்டங்களில் 4,626 என்றும் 4,654 என்றும் கிராமங்கள் இதிலே பயன்படும் அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்று குறிப்புகள் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மாற்றுத் திட்டமாக டேனிடா திட்டத்தின் கீழே 12 கோடி ரூபாய்க்கு மேல் அதற்காகப் பணம் கிடைக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது என்று ப்ராஜக்ட் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறோம். முதலில் அனுப்பபட்டதை ரொம்ப ஜாஸ்தி என்று சொன்னார்கள். பிறகு அந்த ப்ராஜக்ட் ரிப்போர்ட்டைப் prune செய்து குறைத்து The project report drawn by the TWAD envisages a rural water supply programme in Salem and South Arcot Districts estimated to cost Rs. 8·573 crores and a model low cost sanitation programme in Tindivanam and Tiruchenkode municipalities estimated, to cost Rs. 4.273. crores இப்படி ஒட்டுமொத்தமாக 12.85 கோடி ரூபாய் என்று அந்த மதிப்பீட்டை வைத்து அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலே நாம் இரண்டாவது கோரிக்கையை டென்மார்க் இடத்திலேயும், மத்திய அரசாங்கத்தினிடத்திலேயும் கேட்டிருக்கிறோம். அவர்களும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. செம்மலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டேனிடா திட்டத்தின்கீழ் செலவிடப்படும் தொகை, குறிப்பாக சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்திற்காகச் செலவிடப்படுகிறது. தற்பொழுது தமிழகத்தில் புரட்சித் தலைவரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சத்துணவுத் திட்டமும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் என்ற அடிப்படையில் செயல்பட்டு



வருகிறது. எனவே, சுகாதார துணை நிலையங்களுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி செய்கின்ற அதே நேரத்தில், இந்தத் திட்டத்தின்கீழ் சத்துணவுத் திட்ட மையங்களும் குடிநீர் வசதி பெறும் அளவிற்கு டென்மார்க் அரசாங்கத்திடமிருந்து ஏதாவது நிதி உதவி பெற்று, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நம்முடைய அரசு முன்வருமா அல்லது முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது 2 பிளஸ் என்று அதற்குப் பிறகு தான் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரினுடைய சத்துணவுத் திட்டத்தின் கீழே சத்துணவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் டேனிடா திட்டத்தின் கீழே தாய்மார்களுக்கு அவர்கள் கருவுற்ற நிலையிலே நாம் அவர்களுக்கு சத்துணவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம், அது குழந்தைக்குப் போய்ச் சேரும் என்கிற அடிப்படையிலே. அதுமட்டுமல்லாமல் குழந்தை பிறந்தவுடனே upto two years நாம் அவர்களுக்குச் சத்துணவு கொடுப்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலேயும் மையங்களை உருவாக்கி அங்கே நல்ல வகையிலே விஞ்ஞான ரீதியில் அதற்காக சத்துணவு பவுடர் தயார் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டங்களின் கீழே குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குச சத்துணவு கொடுக்கக்கூடிய ஒரு பகுதிகூட இந்தத் திட்டத்திலே இணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டேனிடா திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் பல்வேறு பணிகள் துவங்கப்பட்டன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது போன்ற டேனிடா திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தி, அங்கேயும் இதுபோன்ற பணிகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டேனிடா திட்டம் என்பது டென்மார்க் நாட்டின் உதவியால் நடத்தப்படும் திட்டம். அகில இந்தியாவிலேயும் இரண்டு மாநிலங்களை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மத்தியப் பிரதேசத்தையும், தமிழகத்தையும் தேர்ந்தெடுத்தார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்த மாவட்டங்களிலே health status என்ற அந்த சுகாதாரத் தன்மை எந்த அளவிற்குச் சரியாக இருக்கிறது என்று பார்த்து இந்த இரண்டு மாவட்டங்களிலே மிகக் குறைவாக இருக்கிறது என்று சில புள்ளி விவரங்களினுடைய அடிப்படையிலே அவர்கள் முடிவுக்கு வந்து, இந்த இரண்டு மாவட்டங்களுக்காக உதவியை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை நாம் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். மற்ற மாவட்டங்களுக்கு வெவ்வேறு திட்டத்தின்

ஸ்டாப்பேஜ் என்று அறிவித்துவிட்டு வண்டியை நிறுத்தி விடுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே போளூரிலே இருந்து நார்த்தாம்பூண்டி பெரியகினாம்பாடி கிராமம் வழியாக செங்கம் செல்கின்ற பேருந்துகள் பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக் கின்றன. இதுபற்றி எத்தனையோ முறை சொல்லியாகி விட்டது, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் சொல்லி, தனியாகவும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளைச் சந்தித்தும் சொல்ல இருக்கிறோம். அவர்கள் அதுபற்றி நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம் என்று தான் சொல்கிறார்களே தவிர வண்டி ஓடவில்லை. ஆனால் அந்த பேருந்து அதிபர்களைக் கேட்டால் அந்த மார்க்கத்திலே பேருந்தை விட்டால் நட்டம் வருகின்றது என்று சொல்கிறார்கள். எனவே இதிலே அரசாங்கம் ஏதோ ஒரு முறையைக் கொண்டிருக்கின்றது. ஆனால் போக்குவரத்துத் துறையிலே எவ்வளவோ நவீனமாக எல்லாம் வண்டிகள் விடப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையில் இதிலே பழமையான முறையை வைத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. புது முறைகளை அரசாங்கம் கொண்டுவரவேண்டும்.

(முற்பகல் 11-20)

அடுத்து இன்றையதினம் பெரும்பாலான ஊர்களுக்குத் தனித்தனியாக பேருந்துகள் வேண்டும் என்று ஒவ்வொருவரும் கேட்கின்ற நிலைமை இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர் களிடம் கூட அப்படிப்பட்ட மனுக்களைத்தான் தருகிறார்கள். அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்றபோதும், இந்த அவையிலே பேசுகின்ற போதும் இதைத்தான் நாங்களும் கோரிக்கையாக வைக்கிறோம்.

ஆனால் நம்முடைய கார்ப்பரேஷன் பஸ்களை கூட நான் அந்த நிர்வாக இயக்குநர்களை சந்திக்கும்போது நீங்கள் சொன்ன மார்க்கத்தில் பஸ் விட்டோம் அது சரியாக வசூல் ஆகவில்லை என்று வண்டியை நிறுத்தி விடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட திருவண்ணா மலையை லாடவரம் சேர்த்து கன்னி வழியாக போளூர் வரை சுற்றி இருக்கிற கிராமங்களை எல்லாம் இணைத்து ஒரு பஸ் பெரியாரில் விட்டார்கள். 8 மாத காலம் அந்த பஸ் போனது. பிறகு என்ன சொல்கிறார்கள்? திருவண்ணாமலை—வேலூரைப் போன்று அதில் வருமானம் வருமா? வராது. உடனே என்ன செய்கிறார்கள் அந்த நிர்வாக இயக்குநர் வண்டியை நிறுத்தி விட்டார். இப்போது அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு பஸ் போவது கிடையாது அவர்கள் எல்லாம் எங்களிடத்திலே கோரிக்கை கொடுக்கிறார்கள் நீங்கள் அந்த பஸ் போவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று ஆனால் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் வருமானம் வரவில்லை நட்டம் வருகிறது எப்படி அந்த மார்க்கத்தில் வண்டியை விடுவது என்று கேட்கிறார்கள். ஆகவே அரசுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளாக சொல்ல விரும்புவதற்கு காரணம் அப்படிப் பட்ட ஒரு நேரத்தில் இதில் மாறுதல் செய்யலாம். அதாவது



ஏ.பி. என்று கூட நம்முடைய பஸ்கள் விடுகின்ற அந்த பகுதிகளை பிரித்து இப்படி வசூல் குறைவாக இருக்கின்ற மார்க்கங்களை பி. என்று அந்த தலைப்பில் கொண்டு வந்து அவர்களுக்கு ஒரு சலுகை கொடுத்து, அந்த ஏ. மார்க்கங்களில் அதிகமான கட்டணத்தை உயர்த்தி இந்த அரசுக்கு நட்டம் வராமல் ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கினால் இன்னும் இந்த மோட்டார் வண்டிகள் நல்ல நிலையில் இயங்குவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று கேட்டுக்கொண்டு இன்றையதினம் மோட்டார் வண்டிகள் சட்டத்தை திருத்தவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒருவர் உரிமம் பெற்று விடுகிறார். பிறகு வண்டியை செலுத்துவது இல்லை. ஆண்டு கணக்காக இருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரிடம் இந்த நேரத்தில் சொல்வதற்கு காரணம் ஆண்டு கணக்காக வண்டிகள் விடுவது இல்லை. ஆனால் அந்த பஸ்களை அவர் தான் வைத்து இருக்கிறார் கேட்டாலும் ஏதாவது தனியார் பர்கள் ஸ்பேர் பஸ்கள் விடவேண்டும் என்றாலும் விடுவது இல்லை. அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் பல ஆண்டு காலம் பஸ் வசதி பெற்று இருந்தவர்கள் கூட அந்த வசதியை இழந்து இன்றயதினம் அவர்கள் ஆண்டுகணக்காக இருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதிகாரிகளும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காக அந்தச் மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு மட்டும் அல்லாமல் அந்தச் சட்டத்தை நீங்கள் இந்த நேரத்தில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் வரியை உயர்த்தினால் கூட அது எந்த விதத்திலேயும் பொதுமக்களைத் தான் பாதிக்கும். அரசு பொதுமக்களுக்கு ஒரு பாதுகாப்பை அளிக்கவேண்டும் என்று கூறி நான் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதப்பு திருத்தச் சட்டத்திலே என்னுடைய கருத்துக்களை சொல்லவிரும்புகிறேன். இப்போது வரி விதிப்பு என்று சொல்வதனால் அது தனியாருக்கு என்று நாம் நினைக்கக் கூடாது. அரசில் இருக்கின்ற பஸ்களுக்கு மட்டும் அல்ல பொதுவாக இன்று இருக்கின்ற கால சூழ்நிலையிலே வறட்சியின் காரணத்தினாலே மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்த நேரத்திலே இது போன்ற நேரத்திலே எந்த வகையிலும் வரி விதிப்பை மறைபொருளாக உயர்த்துவது நிச்சயமாக ஏழை மக்களிடத்தில் ஒரு பளுவை இது உண்டாக்கும். ஆகவே வரி விதிப்பில் நாம் செய்ய வேண்டுவது இது தனிப்பட்ட உரிமங்கள் பெற்றவர்களுக்கு மட்டும் என்று எண்ணாமல் நாம் இந்த வண்டிகளை விடுகின்ற இடத்திலே சரியான முறையில் செல்கிறதா என்றால் செல்லவில்லை. சில சமயங்களில் போக்குவரத்தில் நஷ்டத்தில் ஓடுகிறது என்று கூட நமக்கு கணக்குகள் காட்டப்படுகின்றன. ஆனால் எப்படி இருந்தாலும் வரி விதிப்பை உயர்த்துவதால் அது பொதுமக்களைத்தான்

பாதிக்கிறது. அதேநேரத்தில் நாம் மாற்று வழி என்ன செய்ய
வேண்டும் என்பதை அரசு யோசிக்கவேண்டும்.
வல்லுநர்களைக்கொண்டு இதை யோசிக்கவேண்டும். அரசு,
என்றால் வரி விதிப்பு என்பதால் பொதுமக்களுக்கு ஏன்
பாதிப்பு உண்டாக்காதா இல்லையா என்பதை நாம் இது
வேண்டும். அப்படி கவனிக்கத் தவறி வரி விதிப்பு கவனிக்க
காரணத்தினால் நஷ்ட ஈடு என்ற காரணத்தினால் என்ற
இன்று இருக்கின்ற சூழ்நிலையின் காரணமாக அல்லது
என்று சொன்னால் அது பொது மக்களைத் உயர்த்துகிறோம்
பாதிக்கிறது, என்பதை நான் இந்த தான் நேரடியாக
விரும்புகிறேன். சொகுசு பஸ்களாக சமயத்தில் சொல்ல
ஏர் கண்டிஷன் பஸ்களாக இருந்தால் இருந்தால் அதாவது
விதிப்பை செய்தால் அதிகரித்தால் நான் அவைகளில் இந்த வரி
வில்லை. காரணம் ஏர் கண்டிஷன் சற்றும் கவலைப்பட
தகுதியுள்ளவர்கள், வசதி உள்ளவர்கள், வண்டி என்பதால்
என்று விரும்புகிறவர்கள் அதிலே போக வேண்டும்
வண்டிகளில் நாம் வரி செல்வார்கள். அப்படிப்பட்ட
அது நேரடியாக சாதாரண விதிப்பதிலே கூடுதல் செய்வோமானால்
அதில் விதிப்பதில் மக்களை பாதிக்காது.
பொதுப்படையான எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆகவே
ஊருக்கு செல்வதற்கு மக்கள் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஆனால்
நடக்காமல் சீக்கிரம் இன்றைக்கு மக்கள் ஒரு மைல் தூரம்கூட
மக்கள் மத்தியில் செல்லவேண்டும் என்ற ஒரு எண்ணம்
அளவுக்கு பிரயாணம் பரவலாக வந்துவிட்டதால் அவர்கள் அதிக
இப்படிப்பட்ட சூழ்நிலை செய்கின்ற மக்களாக இருக்கிறார்கள்.
மக்களை பாதிக்காத வழியில் இருக்கிறது. எந்தவகையிலும் பொது
சாலச்சிறந்ததாக இருக்கும் நாம் செய்தோமானால் அது சற்று
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். என்று நான் அரசுக்கு சொல்லிக்

உரிமங்கள் வழங்குவதிலே கூட உரிமங்கள்
சரியான சாலைகளில் அவர்கள் பெற்றவர்கள்
அதற்கு ஸ்பேர் வண்டியும் வண்டிகள் விடுவது இல்லை.
கவனத்தில் எடுத்துக்கொள்ள விடுவது இல்லை. அதை அரசு
திற்காக அந்த உரிமங்கள் வேண்டும். மக்கள் சௌகரியத்
மக்களுக்கு நல்லதைச் வழங்கப்படுகிறது. ஆகவே அவைகள்
நாம் கொடுக்கிறோம். செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு
பயன்படுத்தவில்லை என்றால் ஆனால் அதைச் சரியாக அவர்கள்
வேண்டும் அல்லது ஸ்பேர் ஒன்று அவைகளை ரத்து செய்ய
உருவாக்கவேண்டும். பஸ்கள் விடுவதற்கான நிலையை
செய்யாவிட்டாலும் அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள்
நன்மைகளைக் கருதி, அரசாங்கமே செய்வதற்கு மக்களுடைய
வேண்டுமென்ற வசதியைக் கருதி செய்வதற்கு முன்வர
நேரத்திலே யோசனையை நான் அரசாங்கத்திற்கு இந்த
சொல்லவிரும்புகிறேன், தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக ஒன்றைச்
போது எப்படி நீங்கள் அரையாண்டு, காலாண்டு என்று வருகிற
வகையிலும் பாதிக்காத செய்தாலும் பொதுமக்களை எந்த
யோசனை செய்து வகையில் அரசாங்கம் சற்று கவனமாக
கொண்டு அமர்கிறேன். வரிவிதிப்பு செய்யவேண்டுமென்று கேட்டுக்
வணக்கம்.



திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் திருத்தச்
சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
ஆரம்பிக்கிறேன். இந்த வரிவிதிப்பானது ஸ்கூட்டர், மொபெட் சைக்கிள்
மோட்டார், கார், டாக்சி போன்றவைகளுக்கும் லாரி, டாக்சி
போன்றவைகளுக்கும் போடப்பட்டிருக்கிறது. இந்த
வரிவிதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இனங்கள் எல்லாம்
சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்துகிறவையாகும்.
சாதாரண நடுத்தரமக்கள்தான் இன்றையதினம் ஸ்கூட்டர்களைப்
பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற
வரியே அதிகமாக இருக்கிறது. ஏற்கனவே பலவிதமான
விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்திலே
இதனாலே அவர்களுக்கு மேலும் சிரமம் ஏற்படும். ஆகவே
இத்தகைய வரிவிதிப்பை சர்க்கார் கைவிடவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஸ்கூட்டர், ஆட்டோ, டாக்சி
இவைகளிலே பயணம் செய்கிறவர்கள் சாதாரண மக்கள்தான்,
இந்த வரிவிதிப்பின் மூலமாக, ஓரளவுக்கு—ஏற்கெனவே இந்த
மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதைப்
போல கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய
அரசாங்கம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல
கேள்விகளுக்குப் பதில் சொல்கிற நேரத்திலே கட்டண உயர்வு
செய்யவேண்டுமா என்பதைப் பற்றி ஆலோசனையில் இருக்கிறது
என்பதுபோன்ற பதிலை அளித்திருக்கிறார்கள்—இப்போது
இவைகளுக்குக் கொண்டுவருவதன் காரணமாக மேலும்
அத்தகைய கட்டண உயர்வு வந்துவிடுமோ என்ற அச்ச உணர்வு
இருக்கிற காரணத்தினாலே நான் ஆரம்பத்திலேயே இதைச்
சொல்ல விரும்புகிறேன். ஸ்கூட்டர், ஆட்டோ, டெம்போ,
டாக்சி இவைகளுக்கு வரிவிதிப்பு அதிகரிப்பை கைவிடுமாறு நான்
கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற
நேரத்திலே சொல்வார்கள் என்று நினைக்கிறேன், நாங்கள்
அதிகமாகக் கூட்டவில்லையே, 10 ரூபாய் என்று இருந்ததை
5 ரூபாய் கூட்டி 15 ரூபாயாகத்தான் உயர்த்தி இருக்கிறோம்
என்று கேட்பார்கள். இந்த அளவுக்கு சிறியதாக இருந்தாலும்
அதன்மூலமாக எந்த அளவுக்கு வருவாய் வரும் என்று
எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை. அரசாங்கம் அதிகப்
படியான வருமானம் இதிலே எதிர்பார்க்கிறது, இல்லை
யென்றால் வரிபோடவேண்டிய அவசியம் இல்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். லாரிக்கு வரிப் போடுவதன்
காரணமாக பாதிக்கப்படுகிற லாரி அதிபர்கள் கட்டணத்தை
உயர்த்துவார்கள், மதுரை, மதுரையைச் சுற்றியுள்ள நகர
பஸ்களுக்கு சீட்டுக்கு வரியை உயர்த்துவதன் காரணமாக தனியார்
பஸ் அதிபர்கள் நிச்சயமாக கட்டணத்தை உயர்த்துவதற்கு
அனுமதிக்க வேண்டுமென்று கோருவார்கள். இது மக்களை
வெகுவாகப் பாதிக்கும். பஸ்கள், கார்கள், ஆட்டோக்களைப்
பயன்படுத்துகிறவர்கள் சாதாரண மக்கள்தான், அவர்களுக்கு
பாதகம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே
அதைப் பரிசீலனை செய்து இந்த வரிகளைக் கைவிட

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1983 ஏப்ரல் 22

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதிலே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உபயோகிப்பதற்காக அல்லது வைத்திருக்கிற நிலையில் என்று சொல்கிற முறையிலே சந்தேகம் இருக்கிறது. லாரிகளும், கார்களும் ஏதாவது ரிப்பேர் செய்வதற்காக 3, 4 மாதம் நிறுத்திவைக்கப்படுகின்றன என்றால் அந்த ஸ்டாப்பேஜ் காலத்திற்கு வரிச் சலுகை தருவார்கள். ஆனால் இந்தச் சட்டத்திலே அந்த வரிச்சலுகைகூட பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் அந்தப் பழைய முறையிலேயே ஸ்டாப்பேஜ் காலத்திற்கு அவர்களுக்கு இருந்த சலுகையை எடுத்துவிடாமல் தொடர்ந்து நீட்டிப்பது அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்குச் சொந்தக் கார் லாரி வைத்திருக்கிறவர்கள் பல அதிபர்கள், பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை வட்டிக்கு வாங்கித்தான் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அப்படிப்பட்டவர்கள் டீசல் விலை உயர்வால் ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் போன்றவைகளின் விலைகள் உயர்வால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

ஆகவே இதை பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமப் புறங்களில் பேருந்துகளை விடவேண்டுமென்று நாங்கள் கேட்கிற போது இவைகளை இன்றைக்கு லாபம் தருகிற அளவிற்கு இருக்காது என்ற முறையில் சொல்லி பல்வேறு மார்க்கங்களில் பேருந்துகளை விட வழியில்லாமல் இருக்கிறது. இப்படி மேலும் புதிய வரிவிதிப்பை செய்வதன் மூலம் தனியார்கள் இன்றைக்கு அத்தகைய மார்க்கங்களில் பேருந்துகளை விடுவதற்கு மனு செய்வதற்கு கூட தயங்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே இதை கவனத்திலே கொண்டு அரசாங்கம் இந்த வரிவிதிப்பை கைவிட வேண்டும். வரி விதிப்பின் மூலமாக அரசாங்கத்திற்கு பெரிய தொகை கிடைப்பதாகத் தெரிகிறது. ஆகவே வரி விதித்தோம் என்ற பெயர் அரசாங்கத்திற்கு இல்லாமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிற இந்த வரியை அரசாங்கம் கைவிடவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம், ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே. 1983-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்ட முன் வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கண்டிக்க கடமைப் பட்டிருக்கிறோம். இதிலே சொல்லப் பட்டிருக்கிற வாகனங்கள் ஸ்கூட்டர், டெம்போ, சைக்கிள் மோட்டார், லாரி, நகரப்பேருந்துகள், சுற்றுலா வண்டிகள் போன்றவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்



1983 ஏப்ரல் 22] (திரு. எம். ஆறுமுகம்)

பட்டிருக்கிறது. ஆட்டோ, டெம்போ முதலியவற்றை இன்றைக்கு யார் உபயோகப்படுத்துகிறார்கள் என்றால் சாதாரண தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் உபயோகப்படுத்துகிறார்கள். எனவே இன்றைக்கு நாட்டிலே டீசல் விலை; பெட்ரோல் விலை அதிகமாக ஏறியிருக்கிற ஒரு சூழ்நிலையில் இவைகளை பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. நடுத்தர பிரிவை சேர்ந்தவர்கள் கூட ஸ்கூட்டர் போன்றவைகளை உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறபோது இவைகளுக்கு அதிகப்படியான வரியை போடுவது என்பதுமேலும்பளுவை அதிகப் படுத்துவதாகும். அது மட்டுமல்ல, மோட்டார் வாகனங்களுக்கு இருக்கிற உதிரிபாகங்களுடைய விலையேற்றம் கடந்த காலத்தை விடமூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாக இருக்கிற இந்த நேரத்தில் இந்த வரியை அதிகப்படுத்துவது என்பது சரியல்ல. நகரப்பேருந்துகளுக்கு அதிகமாக வரியைப் போடுவதினால் சாதாரண மக்கள் தான் பாதிக்கப்படுவார்களே தவிர, அந்த பேருந்துகளின் உரிமையாளர்கள் பாதிக்கப் படமாட்டார்கள். நீங்கள் எவ்வளவு வரியை போட்டாலும் அவைகளையெல்லாம் வசூலிக்கிற முறையில் கட்டணத்தை உயர்த்துவார்கள். அதற்கு ஒரு வழிகோலாக இந்த பில் அமையுமே தவிர, சாதாரண மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் பயன்படுவதாக இருக்காது என்பது எங்களுடைய கருத்து. எனவே இன்றைக்கிருக்கிற விலைவாசி உயர்வு, உதிரி பாகங்கள் விலையேற்றம், டீசல் விலையேற்றம், பெட்ரோல் விலையேற்றம் இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இவைகளுக்கு வரியை விதித்து சாதாரண மக்களை மேலும் கஷ்டத்திற்கு ஆளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1983—ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் திருத்தச் சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நகரப்பேருந்துகளுக்கு இன்றைக்கு வரி விதிப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப்பேருந்துகளுக்கு சீட்டுகளின் மீது வரி விதிப்பை ஏற்கனவே கூட்டியிருக்கிறது. இந்த அரசு. கிராம மக்கள் அன்றாடம் பயன் படுத்துகின்ற வாகனங்களாக அமைந்திருக்கிற இந்த பேருந்துகளுக்கு வரியை மேலும் கூட்டக்கூடிய அளவிற்கு இல்லாமல், மக்களுடைய வருவாய்க்குத் தகுந்த அளவிற்கு, அவர்களுடைய வசதிகளைக் கருத்தில் கொண்டு இந்த வரி விதிப்பை குறைத்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் வறட்சி நிலை இருந்து வருகிறது. மோட்டார் வாகனங்களின் ஸ்பேர் பார்ட்ஸ் விலை கூடியிருப்பதன் காரணமாகவும், மோட்டார், ஸ்கூட்டர் போன்ற

(திரு. எஸ். என். இராமசாமி) [1983 ஏப்ரல் 22

வாகனங்கள் வைத்திருக்கிறவர்கள் நலிவுற்ற நடுத்தர வகுப்பைச்
சேர்ந்த மக்களாக இருப்பதன் காரணமாகவும், டாக்சி
வைத்திருப்பவர்கள் பாங்குகளில் கடன் மூலமாக கார்களை
பெற்று, அதற்கு வட்டியை கட்டிக்கொண்டிருப்பதன்
காரணமாகவும் இந்த வரியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், டீசல் விலை, பெட்ரோல் விலை மிகவும்
உயர்ந்திருப்பதன் காரணமாக, கிட்டத்தட்ட மெட்டேடர்,
ஸ்டான்டர்ட்-20 வான்களுக்கு வரியை உயர்த்துவதாக
அறிவிப்பிலே அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கிராம
மக்கள் அன்றாடம் குறைந்த அளவு தேவைப்படுகிற
காய்கறிகள், மற்றும் இது போன்றவைகளைக் கொண்டு போக
இந்த மெட்டேடர், ஸ்டான்டர்ட் 20-வான்களைப் பயன்
படுத்துகிறார்கள். ஆகவே, அதிகமாக வரி விதிப்பதன்
காரணமாக, கிராமங்களுக்குத் தான் அது பாதகமாக அமையும்
என்பதைச் சொல்லி, இந்த நிலை இருப்பதன் காரணமாக,
அரசு பரிசீலனை செய்வதன் மூலம், பொது மக்கள் பயன் பெறும்
வகையில், அமைச்சர் அவர்கள் இந்தப் புது வரி விதிப்பை
நிறுத்திட வேண்டுமென்று நாம் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ்
தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே,
இங்கே அரசாங்கத்தின் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கக்
கூடிய இந்த மசோதாவை நாங்கள் சார்ந்திருக்கிற கட்சியின்
சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம். காரணம், இங்கே
ஸ்கூட்டருக்கு, ஆட்டோவிற்கு, மோட்டார் சைக்கிளுக்கு,
நகர்ப்புற பேருந்துகளுக்கு, சரக்கு லாரிகளுக்கு, சுற்றுலா
டாக்சிகளுக்கு எல்லாம் வரிகள் உயர்த்தப் பட்டிருக்கின்றன.
ஆனால், வரிகளை உயர்த்த வேண்டுமென்பதற்கு என்ன
காரணம் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால்,
அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். ஆனால், ஆளுகின்ற கட்சி எதுவாக இருந்தாலும்
சர்க்கார் நடத்துவதற்கு வருமானம் தேவையாக இருக்கிறது
என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது.
ஆனால், அதே நேரத்தில் வரிகளைப் போடுகிறோம் என்று
சொல்கிறபொழுதுகூட ஒரு வேடிக்கையான காரணத்தை இந்தச்
சர்க்கார் சொல்லியிருக்கிறது. பட்ஜெட் உரையைப் புரட்டிப்
பார்ப்பீர்களானால் அதிலே ஒரு வேடிக்கையான காரணத்தைச்
சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைவிட இங்கே வரி
விகிதம் குறைவாக இருக்கிற காரணத்தாலே நாங்கள் வரி
விகிதத்தைக் கூட்டுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.
மற்ற மாநிலங்களைவிட இங்கே குறைவாக இருக்கிறதாம்.
ஆகவே, வரி விகிதங்களைக் கூட்டுகிறார்களாம். ஆனால், அதே
நேரத்தில் இன்னொன்றை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.
என்டர்டெய்ன்மென்ட் டாக்சிலே ஸ்லைடுகளுக்கு வரி
போடுகிறார்கள். அதைப் போலவே, இன்னும் சில வரிகளை



1983 ஏப்ரல் 22] (திரு. அ. ரகுமான்கான்)

கூட்டியிருக்கிறார்கள். படச்சுருள்களுக்கு வரி
எல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால், அவை மற்ற மாநிலங்களில்
குறைவாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் குறைவாக
இருக்கிறது என்பதற்காக இங்கே என்ன செய்கிறார்கள் என்று
சொன்னால், கூடுதலாக ஆக்குகிறார்களாம். மற்ற மாநிலங்களிலே
ஸ்கூட்டருக்கும், மோட்டாருக்கும் மற்ற கார்களுக்கும் போடப்
படுகின்ற வரிவிகிதங்கள் குறைவாக இருக்கின்றன. ஆகையினாலே
உயர்த்துகிறோம் என்று அதிலே சொல்கிறார்கள். அப்படி,
சினிமாப் படங்களிலே காட்டப்படுகின்ற ஸ்லைடுகளுக்கும்
படச்சுருள்களுக்கும் மற்ற மாநிலங்களிலே வரி குறைவாக
இருக்கிறது. ஆகையினாலே இங்கே கூடுதலாகப் போடுகிறோம்
என்று சொல்வது முரண்பாடு இல்லையா என்று நான்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும்
இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன். பக்கத்திலே பாண்டிச்சேரி
இருக்கிறது. இங்கே கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்த விஸ்வநாதன்
அவர்கள் பேசும் பொழுது, ஒரு சேசிஸ் இங்கே வாங்க
வேண்டுமென்றால், ரூ 30,000 நட்டம் ஏற்படுகிறது ஆனால்,
அதே சேசிஸ் ரூ. 30,000-க்கு குறைவாக, எங்களாலே,
அங்கே வாங்க முடிகிறது. நானே பாதிக்கப்பட்டேன்.
தமிழ்நாட்டிலே வாங்கினால் ரூ 30.000 நட்டம். ஆனால்
பாண்டிச்சேரியிலே வாங்கினால் ரூ. 30,000 இலாபம் பெற்றேன்
என்று இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

மோட்டார் கார்கள், டீசல் வாகனங்கள், ஆகியவற்றின்
தற்போதுள்ள வரி விகிதத்திலே மாற்றம் செய்கிறோம் என்று
சொல்லி ஏற்கனவே 7% ஆக இருந்ததை 9% ஆக ஆக்கியிருக்கிறார்
கள். டீசல் வாகனங்களுக்கு 10% ஆக இருந்ததை 12% ஆக
ஆக்கியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இது நியாயம் தானா?
முறைதானா? காரணம், நம்முடைய சர்க்காருக்கு வரவேண்டிய
வருமானம் இன்றைக்கு ஒரு சேஸ்சிலே ரூ. 30,000 கிடைக்காமல்
போகிறது.

(முற்பகல் 11–40)

அதனால் எவ்வளவு பெரிய சிரமத்தை வாங்குபவர்கள்
அடைகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே
விலை குறைவாக இருக்கிறது என்று
போகிறார்கள். பாண்டிச்சேரி போன்ற இடங்களுக்குத் தான் போகிறார்கள்.
அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இந்த அரசுக்கு வருமானம் வரவேண்டும் தான்.
சேல்ஸ் டாக்சை விட்டால் இந்தச் சர்க்காருக்கு வேறு துறை
இல்லை. புரொஹிபிஷன், அதை விட்டு, எக்சைஸ். அதன் மூலமாக
மது விலக்கைத் தளர்த்துவதன் மூலமாக எங்களுக்கு வருமானம்
வருகிறது, ஆகவே அதைத் தளர்த்தியிருக்கிறோம் அல்லது மது
விலக்கை எடுத்து விட்டோம், என்ற முறையிலே வரி வர
வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்,

(திரு. அ. ரகுமான்கான்) [1983 ஏப்ரல் 22

ஆனால் நான் கேட்கிறேன், ஒரு சமூக நல அரசு என்று சொல்லிவிட்டு, இதுபோன்ற வரி உயர்வுகளைக் கொண்டு வருவது எந்தவிதத்திலேயும் நியாயமாக இருக்க முடியாது. ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சோவியத் நாட்டில் பீட்டர் ஆண்டபொழுது தாடி வைத்திருப்பவனுக்கு எல்லாம் வரி என்று அங்கே போட்டதாக வரலாற்றிலே இருக்கிறது. நல்லவேளையாகக் கடற்கரை காற்று வாங்கப் போனால் அதற்குக் கூட வரி என்று இந்தச் சர்க்கார் போடவில்லையே என்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இன்னொன்றையும் நான் நினைவு படுத்த விரும்புகிறேன். பஸ்களைத் தேசிய மயமாக்கினால் இன்றைக்கு இந்தச் சர்க்காருக்கு எவ்வளவோ இலாபம் வரும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேறொன்றுமில்லை திரு பக்கீர் முகமது அவர்கள் அங்கேயிருந்து பார்க்கிறார்கள். அவருடைய தாடிக்கும் வரி இருக்கிறதா என்று கேட்பது போல் பார்க்கிறார்கள். அவருடைய தாடிக்கு வரி இல்லை என்பதைத் சொல்லிவிட்டேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பீட்டர் தமிழகத்தை ஆளாத காரணத்தினால் அவர்களுடைய தாடி தப்பியது. அவ்வளவு தான். ஆகவே நான் இங்கே இன்னொன்றையும் தெளிவு படுத்த விரும்புகிறேன் சமூக நல அரசு என்று நாம் சொல்லுகிறோம். பஸ்களைத் தேசிய மயமாக்குவதன் மூலம் எவ்வளவோ வருமானம் சர்க்காருக்கு வரும். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கொள்கைக்கு வழிக்கோலப் பெற்றது. அந்தக் காலத்தில் அதேமாதிரி கலைஞர் அவர்கள் பலப்பல பஸ்களைத் தேசிய மயமாக்குகின்ற காரியங்கள் நடைபெற்றன. பஸ் முதலாளிகள் போனார்கள். ஹைகோர்ட்க்குப் உத்தரவு வாங்கினார்கள், இன்றைக்கு இதற்கு எதிராக இன்றைக்குத் தேசிய மயமாக்குகின்ற காரியங்களுக்கு எதிர்ப்பான சூழ்நிலை இருப்பதை நாம் காண்கிறோம்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை):

அதிலும் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது ஆனால் இந்த அரசின் சார்பாக— ஆட்சிப் பொறுப்பக்கு வந்து ஏறத்தாழ நான்காண்டு, ஐந்தாண்டுக் காலம் ஆகிறது. வழக்குகளுக்கோ இந்த சர்க்கார் வேகம் காட்டுகிறது. எந்தெந்த பஸ்களை தேசியமாக்கக் கூடிய புனிதக் கொள்கையின் மீது இந்த அரசுக்கு உண்மையிலே அக்கறை இருக்குமேயானால் எக்ஸ்பிரைட் பெட்டிஷன் போட்டு இன்றைக்கு அந்தக் காரியத்தை மிகத் தெளிவாக நிறைவேற்றலாம். ஆனால் என்ன காரணத்தினாலோ சுப்ரீம் கோர்ட் வழக்கு அப்படியே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. தேசிய மயமாக்குகின்ற கொள்கை ஊனப்படுத்தப்பட்டு, பஸ் முதலாளிகளில் தயவு இந்தச்



1983 ஏப்ரல் 22] [திரு. அ. ரகுமான்கான்]

சர்க்காருக்குத் தேவை இருக்கிறதோ இல்லையோ, பஸ் முதலாளிகளுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற விதத்தில் இன்றைக்கு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் காரியங்கள் முடுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற காரியங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அன்றாடம் ஏழை எளிய மக்கள் பஸ்களில் பயணம் செய்கிறார்கள். அப்படிப் பஸ்களில் பயணம் செய்யக் கூடிய பொது மக்கள் பஸ் கட்டணம் என்ற சுமையில் ஏற்கெனவே தத்தளித்துக் கொண்டிருக்கிறர்கள். ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, சென்னையிலிருந்து மதுரைக்கு உள்ள பஸ் கட்டணம் அன்றைக்கு எவ்வளவு? இன்றைக்கு எவ்வளவு? திருச்சியிலேயிருந்து மதுரைக்கு அப்பொழுது எவ்வளவு? இப்பொழுது எவ்வளவு? இப்படி ஊர் ஊருக்கும் பார்த்தால் அது சாதாரண பஸ்ஸாக இருந்தாலும் அல்லது மப்ஃசல் பஸ் என்று சொல்லுகின்ற பஸ்ஸாக இருந்தாலும் அல்லது சொகுசு பஸ்ஸாக இருந்தாலும் அல்லது வேறு பஸ்ஸாக இருந்தாலும் இன்றைக்கு கட்டணங்கள் கடுமையாக உயர்த்தப்பட்டிக்கின்றன. இந்த பஸ்களிலே பயணம் செய்கிறவர்கள் யார்? டாட்டாவா, பிர்லாவா அல்லது மாளிகைக்காரர்களா? இல்லை, சாதாரண ஏழை எளிய மக்கள் மத்திய தர மக்கள், என்.ஜி. ஓ.க்கள் தான். ஆனால் இன்றைக்கு இந்த வரிச்சுமையைப் பயணிகள் என்ற முறையிலே அவர்களிடத்திலேயிருந்து நீங்கள் கசக்கிப் பிழிகிறீர்கள்.

பஸ் கட்டணம் ஏற்கனவே உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே நண்பர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, டீசல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது, அதைப் போலவே இன்றைக்குப் பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. எமெர்ஜென்சி அமலில் இருந்தபொழுது ஒரு பஸ் சீட்டுக்கு எவ்வளவு தெரியுமா? ரூபாய் 180. நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தொகை ஏறத்தாழ 230 ரூபாய் என்று கருதுகிறேன். சரியாக தொகையை அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. சீட்டுக்குத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ 230 ரூபாய்க்கு மேலே இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு சீட்டுக்குத் தொகை இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால், சாதாரணமாக சரக்கு லாரிகளில் இன்றைக்கு சரக்குகளை ஏற்றிச் செல்கிறார்கள். காய்கறிகளை ஏற்றிச் செல்கிறார்கள். அரிசி ஏற்றிச் செல்கிறார்கள். மக்களுக்குத் தேவையான வெங்காயம், தேங்காய் இவைகளையெல்லாம் ஏற்றிச் செல்லுகிறார்கள்.

பிற இடங்களிலேயிருந்து அவைகள் வரவேண்டும். தக்காளி அங்கிருந்து வரவேண்டும். கத்தரிக்காய் வரவேண்டும். அப்படி யானால் சரக்குகளைக் கொண்டுவருகின்ற லாரிகள் கட்டணங்களை உயர்த்துகிறார்கள். காரணம், நீங்கள் வரி போடுகிறீர்கள். யார் அதனால் பாதிப்பது? அன்றாடம் வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களைத்தான் இது பெரிதும் பாதிக்கக்கூடிய அளவிலே இருக் கிறது. நீங்கள் ஒருபுறம் சரக்கு லாரிகளுக்கு வரி போட்டாலும், அது யார் தலையில் விழுகிறது? அது ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களைத்தான் பாதிக்கிறது.

அடுத்து, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை மற்ற நகராட்சிகளில் இருக்கக் கூடிய பஸ்களில் பிரயாணிகள் பயணம் செய்கிறார்கள். இப்போது வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால் நாளைக்கு இதே வரியை மெட்ராஸிலும் கொண்டு வந்து போடுகின்ற சூழ்நிலையை உருவாக்குவீர்கள். சென்னையிலே போட்டால், கடுமையான எதிர்ப்பிருக்கும் என்ற காரணத்தால், அதைக் கொஞ்சம் மறைத்துக் காலப்போக்கில், சென்னையிலே நீங்கள் சேர்த்து விடுவீர்கள். காரணம், நீங்கள் ரொம்ப கெட்டிக்காரர்கள். முதலிலே அதை விட்டு விட்டு, பிறகு மக்கள் அதை மறந்து விட்டு பழக்கத்திற்கு வந்தபிறகு, அதை அப்படி ''இன்குளுட்'' செய்யும் தந்திரத்தின் அடிப்படையில் சென்னையை விட்டு வைத்தீர்கள். அப்படிச் சென்னையும் பாதிக்கப்படக் கூடிய அபாயம் இருக்கிறது. சென்னைக்குத் தேவையில்லை என்று சொன்னால், மதுரைக்கு மட்டும் ஏன் அந்த நிலைமை? நான் கேட்கிறேன்—மதுரைக்குப் போடுவது போல் சென்னைக்கும் போடுங்கள், அதனால் பஸ் கட்டணம் உயரட்டும் என்று நான் சொல்வதாக அமைச்சரவர்கள் திசை திருப்பக் கூடாது. நான் அதை வரவேற்கவில்லை. அதை நான் சொல்லவில்லை. மதுரைக்கும், மற்ற நகரங்களுக்கும் கூடாது என்பது தான் நான் முன்மொழிந்திருக்கக் கூடிய 'அமெண்ட்மெட்' பிரகாரம் கூட. அந்தத் தீர்மானத்தை நான் வலியுறுத்தி, இந்தப் பொது விவாதத்திலே கலந்து பேசுகிறேன். ஆகவே அதை அமைச்சர வர்கள் பரிசீலிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வி நிலையங்களுக்குச் சொந்தமான பஸ்களுக்குக்கூட நீங்கள் வரி விதிப்பை உயர்த்தியிருப்பது எந்த விதத்தில் நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதுபோலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு சமூகநல அரசு வரி இல்லாமல் நடத்தமுடியாது, ஒத்துக் கொள்கிறேன். தாங்குகின்ற வரியை நடுத்தர, ஏழை எளிய மக்கள் மீது போடவேண்டும். ஆனால் நீங்கள் போடுகின்ற வரி சரி யில்லை. அரசாங்கத்திற்கு வரி வருமானம் வரவேண்டும், பஸ்.





போக்குவரத்துக் கழகத்திற்கும் வரவேண்டும். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். உங்கள் தவறான நிர்வாகத்தின் காரணமாக பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டங்களில் போக்குவரத்துக் கழகங்கள் ஓடுகின்றன. நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்; தமிழ்நாடு குட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மூடப் பட்டிருப்பதாக எனக்கு தகவல்.

குடும்பத்திலே ஒருவருக்கு வேலை. அதற்காக உயிரையும் விடுவேன் என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார். கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் பிரச்சாரங் களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பட்ஜெட்டைப் புரட்டிப் பார்த்தால், விவரங்கள் தயாரிக்கப்படுகிறது என்று இருக்கிறது. உங்களுடைய நிர்வாகத்தில் இந்த குட்ஸ் டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷனில் பல பேர் வேலை பார்த்தார்கள். நான் கேட்கிறேன்—புதிய வேலைகள் கொடுக்காவிட்டாலும் பரவா யில்லை. ஏற்கனவே இருக்கின்ற வேலையை பிடுங்கினீர்கள். ஏற்கனவே இருக்கிற வேலையை பிடுங்குகின்ற காரியத்தை இந்தச் சர்க்கார் செய்யலாமா?

நாடோடி மன்னன் படத்தின் முதல் காட்சியிலே, 'இப்போது சோறு போடு, வேலை கொடு, என்று நமது முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது வேலையை பிடுங்கி விட்டீர்கள். வேறு வேலையும் கொடுக்கவில்லை. இதை எதற்காகச் சொன்னேன் என்றால், நிர்வாகத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

டூரிஸ்ட் பஸ்களை எடுத்துக்கொண்டால், வரி போடுவது என்ன நியாயம்? சுற்றுலா பஸ்களில் எத்தனையோ பேர்கள் பயணம் செய்கிறார்கள். அப்படி போடுகின்ற வரியை அந்தப் பயணி களிடத்திலேதான் வசூலிப்பார்கள். சுற்றுலாத் துறையையும் அது பாதிக்கிறது. அரசிற்கு வரி தேவை. வருமானம் தேவை. ஆனால் சாதாரண மக்கள் பயன்படுத்தக் கூடிய ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் இவைகளுக்கெல்லாம் வரி உயர்த்தினால், அதனால் மத்திய தர மக்கள், ஏழை எளிய மக்கள் பாதிக்கப் படுவார்கள்.

வங்கக் கடலிலே துயில் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஏழைகள் மீது வரி போடக்கூடாது, வசதி படைத்தவர்கள் மீது போடவேண்டு மென்று சொன்னார்கள். அண்ணாவின் பெயரால் நடக்கக்கூடிய இந்த சர்க்கார், இந்த வரி விதிப்பில் அண்ணா காட்டும் வழிக்குப் புறம்பாக நடக்கிறது என்பதை கழகத்தின் சார்பாகக் கண்டித்து அமர்கிறேன்.

[1983 ஏப்ரல் 22

(முற்பகல் 11-50.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, நான் இன்று காலையிலே அவைக்கு வந்த
வுடனே நான் எதிர்பார்த்தது இதை எல்லா உறுப்பினர்களும்
வரவேற்று முழு மனதோடு நிறைவேற்றித்தருவார்கள் என்று
நான் எதிர்பார்த்தேன். ஆனால் இதிலே எனக்குக் கொஞ்சம்
ஏமாற்றம். பேசுகிறபோதுகூட அவர்கள் பாராட்டுவார்கள்,
இவ்வளவு குறைவாக உங்களால் எப்படி வரி போட முடிந்தது
என்று பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால்
ஆளும் கட்சி எதைக் கொண்டு வந்தாலும், இப்படித்தான் பேச
வேண்டும் என்ற ஒரு கொள்கையை, ஒரு வரையறையை நீங்கள்
வைத்துக்கொண்ட காரணத்தாலோ என்னவோ, அவர்கள் இதற்கு
எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள் என்ற வகையிலே நான்
இதை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். ஏன் இப்படி சொல்
கிறேன் என்றால் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்பு
கிறேன். இங்கே பெரிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை
பெருமே நீங்கள் ஸ்கூட்டருக்கு வரி விதிக்கலாமா, மோட்டார்
சைக்கிளுக்கு வரி விதிக்கலாமா, இப்படி எல்லாம் கேட்டுவிட்டு,
லாரிக்கு மட்டும் நீங்கள் எப்படி வரி விதிக்கலாம் என்பதையும்
கேட்டு மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பள்ளி
களிலே பயன்படுத்தக் கூடிய அந்த பஸ்களுக்குக்கூட வரி விதித்து
இருக்கிறார்களே, இது என்ன நியாயம் என்பதைப் போலவும்
ஏதோ சில உதாரணங்களை எல்லாம் சொல்லி, தாடிக்கு எல்லாம்
வரி என்று எல்லாம் இங்கே சொன்னார்கள். எங்களுக்கு அப்படிப்
பட்ட நினைவு எல்லாம் இல்லை. ஆனால் தாடிக்கு வரி போடு
கின்ற இந்த நினைவு மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்
அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. அது ஏன் என்று
எங்களுக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) வரலாறு படித்த
காரணத்தால் இதை நீங்கள் நாளைய தினம் அமுலுக்குக்கொண்டு
வர முயறசி எடுக்கக்கூடாது. எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம்
இல்லை. அதை ஏன் ஞாபகப்படுத்த முயற்சி எடுக்கிறார்கள்
என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும்
சொல்ல விரும்புகிறேன். இந்த ஸ்கூட்டரைப் பற்றிச்
சொன்னார்கள். இந்த ஸ்கூட்டர் ஏறத்தாழ 9 ஆயிரம் ரூபாய்
விலையாகிறது. இந்த ஸ்கூட்டருக்கு நாங்கள் இன்றையதினம்
போட்டிருக்கின்ற அல்லது உயர்த்தியிருக்கின்ற வரி ஒரு நாளைக்கு
5½ காசு. இதை ஒரு பெரிய காரியமாக இதைப் பெரிதுபடுத்து
வதற்கு நீங்கள் விரும்புவது தான் எனக்கு கொஞ்சம் வேதனை
யாகத்தான் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, போட்டு
இருக்கிற வரி மிகமிகச் சாதாரணம், 5½ காசுதானே. இதற்கு ஏன்
எதிர்ப்பு என்று சொல்கிறார். ஆகவே சாதாரண 5½ காசு
எதற்கு? விட்டுவிடலாமே?



1983 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த
நாட்டிலே இருக்கின்ற பிரச்னைகளைப் பற்றி நீங்கள் வலியுறுத்
தாமல் இந்த பொதுமக்களுக்கு செய்யவேண்டுமென்ற நோக்கம்
ஆளும்கட்சிக்கு இல்லாமல் இருக்குமானால் இந்த உயர்வைக்கூட
விட்டுவிடலாம். ஆனால் தேக்கி வைக்கப்பட்டிருக்கிற பல்வேறு
பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய கடமை, பொறுப்பு இந்த
அரசாங்கத்திற்கு இருக்கின்ற காரணத்தால்தான் மற்றவர்கள்
பாதிக்கப்படாத வகையிலே எப்படியாவது ஒரு குறைந்த
வருமானத்தையாவது ஈட்டி அதிலே பல நல்ல காரியங்களைச்
செய்யவேண்டுமென்ற முனைப்போடு இந்த அரசாங்கம் செயல்
படுகிறது என்பதற்கு, இதை ஒரு உதாரணமாகத்தான் சொல்ல
விரும்புகிறேன். எனவே இப்படி இந்த ஸ்கூட்டருக்கு 5½ காசு.
அதேபோல் இங்கே கார்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு
எடுத்தால் 10 காசு, ஒரு நாளைக்கு. அதேபோல்தான் இந்த லாரி
களைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு நாளைக்கு 1 ரூபாய் வரி
உயர்வு. நீங்கள் இப்படி கணக்கு போடவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மொத்தமாக ஏதோ வரியை ஆயிரக்கணக்கான
ரூபாய்களை நாங்கள் உயர்த்திவிட்டதுபோல நீங்கள் கற்பனை
செய்து கொள்வது என்பது, அல்லது நினைத்துக்கொள்வது
என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்பதை நான் இங்கே
எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வெளியிலேகூட நான் பல
பேர்களைச் சந்தித்துப் பேசினேன். இதைப் பத்திரிகைகளிலேகூட
படித்து இருக்கிறார்கள். அப்போதெல்லாம் நான் பேசுகிறபோது
ஸ்கூட்டர் வைத்து இருப்பவர்களோ, அல்லது கார் வைத்து
இருப்பவர்களோ, இதைப் பற்றி பெரிதாக என்னிடத்திலே
அவர்கள் பேசவில்லை. எப்போது சேர்த்து வாங்கப் போகிறீர்கள்
என்றுதான் என்னிடத்திலே கேட்கிறார்கள். எனவே அப்படிப்
பட்ட சூழ்நிலைதான் வெளியிலே இருக்கிறதே தவிர, வெளியிலே
ஒரு மாறுபட்ட சூழ்நிலை ஒரு கொந்தளிப்பான நிலைமை
என்பதைப் போல இல்லை என்பதை நான் தெளிவாகச் சொல்ல
விரும்புகிறேன். இன்னும்கூட இங்கே மிகமிக வசதி குறைவான
வர்கள், ஏழைகள் தான் இந்த ஸ்கூட்டர் வைத்திருக்கிறார்கள்,
மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி
பேசினார்கள். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்,
ஸ்கூட்டர் வைத்து இருப்பவர்களோடு சைக்கிள் வைத்திருப்பவர்
களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். சைக்கிள்கூட வாங்க
முடியாமல் வேலைக்குச் சென்றிருக்கக்கூடிய பல பேர்களை,
ஸ்கூட்டர் வைத்திருப்பவர்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க
வேண்டும். எனவே இப்போது போடுகின்ற வரி அல்லது உயர்த்தப்
படுகின்ற வரி, ஏதோ அந்த ஸ்கூட்டர் வைத்திருப்பவர்
களிடத்திலே வாங்கி, கார் வைத்திருப்பவர்களுக்காக செலவழிக்கக்
கூடியதற்காக இந்த வரி போடப்படவில்லை அல்லது வசதியாக
இருக்கக்கூடியவர்களுக்காக இந்த வரி போடப்பட்டு இந்தப் பணம்
செலவழிக்கப்படுவதற்கான சூழ்நிலை இல்லை. மிகமிக
ஏழ்மையான நிலைமையிலே இருக்கின்ற அந்த மக்களுக்காகத்தான்
அவர்களுக்குச் செலவழிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான்
இப்படிப்பட்டவரிகளை நாம் போடவேண்டிய நிர்பந்தத்திற்கு

என்று நீங்கள் சொல்கிற மாற்று வழியை இப்போது ஏற்றுக் கொள்ளமுடியும் என்று தெ யவில்லை. அரசாங்கம் பணம் வைத்துக் கொண்டு, ஆண்டுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறதே தவிர நாட்டிலே இருக்கின்ற பிரச்னைகளை எல்லாம் தீர்க்கின்ற அளவிற்கு பணம் நம்மிடத்திலே இல்லை.

எவ்வளவு பணம் நம்மிடத்திலே இருக்கிறதோ அந்த அளவுக்கு பிரச்னைகளைத் தீர்க்கத்தான் திட்டங்களை நாம் எடுத்துக் சொண்டு இருக்கிறோம். ஆனால் பிரச்னைகளுக்கேற்ப அவைகளைத் தீர்க்கிற அளவிற்கு நம்மிடத்திலே பணம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று அறிவித்து விட்டு நாடோடி மன்னனைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லி விட்டு நீங்கள் எப்படி கூட்ஸ் டிரான்ஸ்போர்ட்டைக் குளோஸ் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அதிலே இருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா? அதிலே இருக்கின்ற தொழிலாளர் கள் பாதிக்கப்படுவதற்கு நாங்கள் விட்டுவிடவில்லை. சில நேரங்களில் மாற்றியமைக்கவேண்டும் என்ற உணர்வோடு அதைச் செய்திருக்கிறோமே தவிர வேறல்ல. ஒரு பணியைச் செய்வதற்கு வைத்துக் கொண்டிருந்த லாரிகளை வேறு பணி செய்வதற்கு மாற்றிக்கொள்கிறோம். இதுதான் நிலைமை. ஏதோ அங்கே இருக்கும் தொழிலாளர்களை எல்லாம் வெளியே அனுப்பிவிட்டு அங்கே இருந்த லாரிகளை எல்லாம் விற்றுவிட்ட நிலைமை இல்லை. ஒரு தொழிலாளிகூட பாதிக்கப்படவில்லை என்பதை நான் எடுத்துக்கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னொன்றைக் கூட சொன்னார்கள். ''எங்கள் காலத்தில் வரிவிதிப்புக் குறைவாக இருந்தது. உங்களுடைய காலத்தில் வரியை மிகவும் உயர்த்திவிட்டீர்கள்'' என்று சொன்னார்கள்.

**திரு அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய காலத்திலே வரி குறைவு என்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. ''வரியைக் குறைப்போம்; வசதியைப் பெருக்குவோம்'' என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மற்ற ஆட்சிகளைவிட வரி அதிகமாக இருக்கிறது என்று சொல்லி வாதிட்ட நீங்கள் இப்போது இத்தகைய வரிகளை விதிக்கிறீர்களே இந்த மாதிரி ஏழை எளிய மக்களை பாதிக்கும் விதத்தில் வரி போடுவது சரிதானா என்பதுதான் என் கேள்வி,



(நண்பகல் 12.00)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் முதலிலே பதில் சொன்னேன். ஏழை எளிய மக்கள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள். ஏழை எளிய மக்களை இது தொடாது. அந்த அடிப்படையிலேதான் சொல் கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டார்கள். நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் 115 ரூபாயாக இருந்ததை 150 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்; இது அதிகமில்லை என்று கருதுகிறோம். இருக்கின்ற பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டு மென்ற அடிப்படையிலே இதைச் செய்கிறோமே தவிர யாரையும் கஷ்டப்படுத்த வேண்டுமென்று இல்லை. 1974-க்குப் பின்னால் இந்த போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் இந்த இனங்களில் இப்போதுதான் வரி விதிக்கிறோம். 6 மாதத்திற்கு ஒருமுறை, ஆண்டுக்கு ஒருமுறை என்று உயர்த்துவதைப்போல சொல்வது சரியாகத் தோன்றவில்லை என்பது மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று, பக்கத்து மாநிலங்களிலே இருப்பதைவிட இது குறைவாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட காரணம் ஏதோ அந்த அளவுக்கு உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லுகின்ற காரணத்தால் அங்கெல்லாம் இப்படி, இப்படி இருக்கிறது என்று சொன்னேனே தவிர, அந்த அளவுக்கு இங்கேயும் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில் எப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப் பினர்கள் சிரமப்பட்டு, தேடிக்கொண்டிருக்க வேண்டாம், அவர்கள் சுலபமாக, எளிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய நேரம் வீணாகக்கூடாது என்பதற்காக அந்த விவரங்களை இங்கே குறிப்பிட்டேனே தவிர, இதிலே உள்நோக்கம் ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் மன நிறைவு அடைவார்கள், இதை எதிர்க்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாற்றுத் தலைவரவர்களே, ஒரு சந்தேகம். மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இப்போது இந்த ஸ்கூட்டர் வரி விதிப்பின் மூலமாக அரசுக்கு எவ்வளவு தொகை வரும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் வரி விதிப்பின் மூலம் நமக்குக் கூடுதலாக கிடைக்கின்ற வருமானம் 44,22,700 ரூபாய்.

ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இந்த அரசாங்கத்திற்கு ஏதோ வரி போடவேண்டுமென்ற ஆசை இருப்பதாக வெளியிலே நீங்கள் எண்ணிவிடக்கூடாது. நாங்கள் வேண்டாம் என்று நினைத்தாலும் கூட இந்த நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலைகள், இப்போது வறட்சியைப் பற்றி நீங்களே சொன்னீர்கள். சாதாரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற செலவினங்களைவிட இப்போது வறட்சிக் காலத்திலே அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அதை ஈடுகட்டுவதற்காக நாம் பல்வேறு இடங்களிலே முயற்சி செய்தாலும். கிடைக்காத நிலைமையிலே நாமே இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப செய்யவேண்டியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்த்தாக வேண்டும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே எனக்கு இன்னொரு வேதனை கூட இருக்கிறது. பல முறை மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். பெட்ரோலியப் பொருள்களை கொடுக்கும் நாடுகளில் அவற்றின் விலையைக் குறைத்த பின்புகூட நமக்கு அந்தப் பொருள்களின் விலை குறையவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு ஏதாவது கண்டனம் தெரிவிப்பார்கள், எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அண்மையில் ஏற்பட்ட டீசல் விலை உயர்வு காரணமாக நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏறத்தாழ 9 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகிறது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். போக்குவரத்து மானியத்திலே பேசுகிறபோதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பெட்ரோலிய பொருள்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பேசவில்லை. பின்னால் கேள்வி பதில் நேரத்திலேகூட அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இன்றைய தினம் ஒரு ஸ்கூட்டருக்கு ஒரு நாளைக்கு 5½ காசுகள் கொடுக்க வேண்டும் என்று நாம் சொல்லுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் உள்பட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பேசுகிறார்கள் என்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. இங்கே கட்சிகளைப் பிரித்து நான் பேசவில்லை. இந்த மாநில மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை வருகிறபோது அது எப்படி வந்தாலும் எந்த வகையிலே வந்தாலும், எந்த உருவிலே வந்தாலும் அதை தடுத்து நிறுத்தவேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இந்த வேகத்தை கொஞ்சம் மத்திய அரசு பக்கம் நீங்கள் திருப்பியிருக்க வேண்டும் என்பதை தான் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். 5½ காசுக்கு எதிர்ப்புச் சொல்பவர்கள் 9 கோடி ரூபாய் நமக்குக் கூடுதலாகிறபோது இப்படிப் பேசி இருந்தால் நான் மனதார வரவேற்றிருப்பேன். அப்படிப்பட்ட நிலை இல்லை என்பதைத்தான் வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து இன்னொன்றைக்கூடச் சொன்னார்கள். பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்குத்தான் மிகத் திறமையாக இப்படியெல்லாம் செய்கிறீர்களோ என்று சொன்னார்கள். கட்டணத்தை உயர்த்துவதற்காக இந்த வரி விதிப்பு இல்லை. கட்டணம் உயர்த்த வேண்டுமென்று நாம் விரும்பவில்லை. ஆனால், மத்திய அரசு டீசலுக்கு விலை ஏற்றுகிறது. டயர் விலை ஏறுகிறது. மற்ற உதிரி பாகங்களின் விலை ஏறுகிறது. நமக்கு வேறு வழியில்லை என்கிற நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகிறோம். அப்படி இருந்தும் கூட, பல முறைகளில் நாம் நடவடிக்கை எடுத்தும் கூட இப்போது 9 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிற நேரத்தில் கூட கட்டணத்தை உயர்த்தாமல், வேறு வகையில் அதனை ஈடுகட்ட முடியுமா என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிடவில்லை.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தக் கட்டணத்தை உயர்த்தி விடக்கூடாது என்பதில் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும் இருக்கிறதோ அதைவிட அல்லது அந்த அளவுக்கு சரிசமானமாக அந்த எண்ணத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் எங்களுக்கும் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில நேரங்களில் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. நிதியமைச்சர் அவர்கள் இந்த வரியை உயர்த்தவேண்டுமென்று ஆசைப்பட்டுத் தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் அல்லது மிக மன நிம்மதியோடு அல்லது மகிழ்ச்சியோடு இதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று யாரும் எண்ணிடத் தேவையில்லை. நாட்டிலே வளர்ந்திருக்கும் சங்கடமான சூழ்நிலைகளைப் பற்றி இந்த மாமன்றத்திலே சட்டமன்றத்து உறுப்பினர்கள் எடுத்து வைத்து அந்தக் குறைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும் என்று எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியாக வேண்டும். அரசாங்கம் திட்டம் தீட்டவேண்டுமானால் அரசாங்கத்தின் கையிலே பணம் வேண்டும். அதற்கு வழிவகை செய்யவேண்டுமானால் எத்தகைய ஒரு நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படுகிறது. இங்கே கூட சிலபேர் சொன்னார்கள். இதற்கு நாங்கள் ஒரு மாற்று வழி சொல்கிறோம், என்று சொன்னார்கள்.

இதிலே 5½ கோடி ரூபாய் வருகிறது என்று சொன்னால், அதற்கு வேண்டுமானால் மாற்று வழி சொல்லிவிடலாம். நமக்கு மொத்தம் இவ்வளவு வருமானம் வந்தால் போதுமா என்றால் போதாது. நாட்டிலே தேங்கிக் கிடக்கும் பிரச்னைகளுக்கு இப்போது போட்டிருக்கும் வரி மட்டும் போதுமா என்றால் அதற்கு நீங்கள் தருகிற மாற்று யோசனையை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் சொல்கிற மாற்று வழி எதிர்காலத்தில் நமக்கு இருக்கும் தேவை என்ற நிலைமையைச் சமாளிக்க தேவைப்படுகிறது. எனவேதான் இந்த வரி தேவையில்லாத ஒன்று, இதை விட்டுவிட்டு வேறு வழியில் போடலாம்

[1983 ஏப்ரல் 22

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவரவர்களே, இன்னும் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்த 'கூட்ஸ் டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷனில்' இருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு அதே சர்வீஸ் கண்டிஷன் உண்டா? வேலை கொடுக்கப்படாமல் யாரும் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. முத்துசாமி : மாற்றுத் தலைவரவர்களே, இது இதற்கு சம்பந்தமில்லாத பிரச்சனை என்றாலும் அவர்களை வெளியே அனுப்பவில்லை; வேலையில்லாமல் யாரும் இல்லை; அவர்களுக்கு முழு பாதுகாப்பு உண்டு என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30 1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. முத்துசாமி : மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:—

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பொது விற்பனை வ (திருத்தச்) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 2/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

** 1983-ம் ஆண்டு ஜனவரி 27-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



 (எஸ். டி. சோமசுந்தரம்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விற்பனை வரிச் சட்டத்தைப் பற்றி 3 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. மூன்றும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருப்பவை. எனவே பொது விவாதத்திற்கு மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்): மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டால் அப்படி எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொள்வது என்றால் நீங்கள் மற்ற சட்டமுன்வடிவுகளையும் மூவ் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்.)

திரு. துரைமுருகன்: தனித்தனியாக எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா? ஒன்றாக எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? (குறுக்கீடுகள், கூச்சல்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எம். எஸ். மாணிக்கம்); நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் சட்டமுன்வடிவுகளை தனித் தனியாகவே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. துரை முருகன்: * * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்): **

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : **

திரு. துரை முருகன்: **

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : **

திரு. துரைமுருகன்; **

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்); **

திரு. துரை முருகன்: **

(பிற்பகல் 12—10)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எம். எஸ். மாணிக்கம்); சட்டமுன்வடிவுகளை தனித்தனியாக எடுத்துக் கொள்ளலாம் என்று நான் அறிவித்துவிட்டேன். அதுபற்றி பிறகு பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

ஏற்படும் என்று நினைக்கிறீர்கள். அரசாங்கத்திலே எத்தனையோ சிக்கன நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதால் பண விரயம் ஏற்படுகிறது. அவைகளை எல்லாம் விட்டுவிட்டு சாதாரண பொருட்களுக்கு எல்லாம் நீங்கள் போடுவது நியாயமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விதை நீக்குதல், நூல் நூற்றல் அல்லது வேறு வகையில் கிடைக்கும் எல்லா வகைக் கழிவுப் பஞ்சுக்கும் வரி விதிக்கும் பொருட்டு என்று இருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் முன்பு வரி கிடையாது. ஆனால் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக இவைகளுக்கும் வந்து இன்றைக்கு வரி போடக்கூடிய ஒரு கால கட்டத்தில் அரசு வேகமாக போய் கொண்டிருக்கிறது என்றால் இது முறை தானா? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்து கவனிக்கக் கூடாதா என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விற்பனை வரி என்பது நம்முடைய பாரதத்திற்கு கிடைத்து இருக்கின்ற ஒரு கற்பகத்தரு. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இன்னும் எத்தனையோ பொருட்களுக்கு இன்னும் வரி போடலாம். ஆனால் அவைகளுக்கு போடுவது இல்லை. பேட்டப் பொருட்களுக்கே போடுவதில் நீங்கள் அதிக அக்கறை காட்டுகிறீர்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் ஒரு தகவலை கொடுத்து இருக்கிறார்கள். சாதாரணமாக நம்முடைய அரசு அச்சகத்தில் அரசு உபயோகப்படுத்திய அந்த டைப் ரைட்டர்களுக்கு அவைகள் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் ஆன பிறகு அவைகளை ஏலத்தில் போட்டுவிடுகிறார்கள். ஏலத்தில் மொத்தமாக சில பேர் எடுக்கிறார்கள். எடுத்ததற்கு 4 சதவீதம், 5 சதவீதம் 10 சதவீதம் என்று சர் சார்ஜ் வசூல் செய்கிறீர்கள். ஏற்கனவே அரசு அச்சகத்திற்கு வாங்கிய டைப் ரைட்டர் 15 வருடம் ஆன பிறகு மொத்தமாக ஏலம் போடுகிறார்கள். அதற்கு 15 சதவீதம் என்று வரி வசூல் செய்கிறீர்கள். அது அல்லாமல் 4 சதவீதம், 5 சதவீதம் என்று சர் சார்ஜ் போட்டு வாங்குகிறீர்கள். இப்படிப்பட்ட மிஷன்களுக்கு ஏற்கனவே வரி விதிக்கப்பட்டு இருந்தும் மீண்டும் ஒரு முறை அதற்கு சர் சார்ஜ் என்ற பெயராலே வரி வசூலிப்பது நியாயமா என்று நான் கேட்க விழைகிறேன். அதனுடைய அவசியம் என்ன? இதை எதிர்த்து அவர்கள் எல்லாம் மனு கொடுத்து இருக்கிறார்கள். அசோசியேஷன் கூட ரெப்பரசென்ட் செய்து இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் மேலும் 15 சதவீதம் அதற்கு வரி விதிப்பு செய்யவேண்டும் என்று போடுகிறீர்கள் என்றால் இது முறையா? மற்ற மாநிலத்தில் இப்படி அரசு உபயோகத்தில் இருந்த அந்த டைப்ரைட்டர்களை ஏலம் போட்டு விற்றுவிட்டால் அவற்றுக்கு சர் சார்ஜ் வேறு எதுவும் கிடையாது. இந்த இடத்தில் வருவாய் துறை அமைச்சர் அவர்கள் மற்ற மாநிலத்தை பின்பற்ற மாட்டேன் என்று சொல்கிறார் ஏன் ஸ்டீல் ரோலிங் மில்களுக்கு இத்தனை கோடி ரூபாயை நீங்கள் தள்ளுபடி செய்கிறீர்கள் என்றால் ஆந்திராவில் இருக்கிறார்கள், கர்நாடகத்தில் காணவில்லை, கேரளாவில் ஏன் அப்படி போட



வில்லை என்று கேட்கவில்லை என்று எல்லாம் மற்ற மாநிலத்தை முன் உதாரணமாக எடுத்துக் கொள்கிற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த 15 வருடங்களான டைப் ரைட்டர்களை மொத்தமாக உதவாதது என்று சொல்லி ஏலம் போடுகிறார்கள். அதை எடுத்தவன் ரிப்பேர் செய்து கொள்கிறேன் என்றால் அதற்கு 15 சதவீதம் சர்-சார்ஜ் போடுகிறீர்கள். அதற்கு ஆந்திரம் உங்களுக்கு துணையாக வரவில்லையா? கர்நாடகம் வரவில்லையா? இவர்கள் பாவம் ஏழைகள் அந்த 15 வருடம் 20 வருடம் ஆன கயிலாங்கடை ஓட்டை பித்தளை சாமான்களை வாங்கி அதை ரிப்பேர் செய்து விற்கிறார்கள் இவர்களிடம் என்ன நடக்கும். ஆனால் கோடி கோடியாக தள்ளுபடி செய்கிறீர்கள். யாருக்கு? ஸ்டீல் ரோலிங் மில்காரர்களுக்கு. ஆகையால் அவர்களுடைய புகழ் திருவண்ணாமலை தீபம் மாதிரி எரிகிறது. எனவே அவர்களுக்கு நீங்கள் தள்ளுபடி செய்கிறீர்கள். இப்படிப்பட்ட ஏழைகளுக்கு தள்ளுபடி செய்ய மாட்டேன் என்று சொல்கிறீர்கள். இது முறையா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதில் இன்னும் ஒன்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பல பொருள்களுக்கு வரி போடுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. வரி இல்லாமல் ஒரு சர்க்கார் நடக்காது. ஆனால் அவைகளுக்கு வரி போடுவதிலே கூட ஒரு முறையை வகுத்துக் கொள்ளவேண்டும். எதற்கு வரி போடுவது என்று தெரியாமல் போடுகிறீர்கள். சிலபேர் கண்ணாடிகளுக்கு வர்ணம் தீட்டி விற்கிறார்கள். சின்ன சின்ன கண்ணாடியை நாம் எங்கே பார்த்தாலும் வைக்கலாம். அதற்கு வர்ணம் தீட்டி பொம்மை, போட்டு விற்கிறார்கள். குருவி உட்காருகிற மாதிரி, பழம் கொத்துகிற மாதிரி. அதற்கு கூட வரி போடுகிறேன் என்று சொன்னால் அப்படி என்ன இந்த அரசு பஞ்சத்திலே ஆண்டியாக இருக்கிறது. எங்குமே இல்லாத அளவுக்கு மது விலக்கை திறந்துவிட்டீர்கள். 150 கோடி ரூபாய்க்கு வரும் என்று எதிர்பார்த்தீர்கள். 155—160 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வந்து இருக்கிறது என்று சொல்கிறீர்கள். இந்த ஆண்டு 160 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறீர்கள். இன்னும் உரிமங்கள் வழங்கப்படாத இடங்களில் எல்லாம் வழங்கப்பட்டால் இன்னும் நிறைய வரும், மெட்ராஸ்க்கு 3 பேருக்கு லைசன்ஸ் கொடுத்து ஆகிவிட்டது. அவர்களுக்கு கொடுத்தால் இன்னும் நிறைய பணம் வரும். அதேபோன்று பல்வேறு உரிமங்கள் இருக்கின்றன. அந்த சாராய கலவை தொழிற்சாலைகளுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுத்து கொண்டே நீட்டிக்கொண்டே போகிறீர்கள். அதனுடைய விளைவு என்ன என்று கேட்டால் எக்ஸ்பைரரி ஆனவன், சரண்டர் பண்ணவன் அவர்களுக்கு எல்லாம் காலபோக்கில் நீட்டிக்கொண்டே போகிறீர்கள்......

[1983 ஏப்ரல் 22

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று அவர்கள் பேசியதை எல்லாம் நீக்கவேண்டுமென்று சொன்னேன். ஆகவே நேற்று அவர்கள் நீக்கியிருக்கிறார்கள். நீக்கியது சரியா இல்லையா என்று நீங்கள் சொல்ல இருக்கிறீர்கள். இன்றைக்கு அப்படி வளைவாக வந்து நாசூக்காக உள்ளேவந்து கொண்டிருக்கிறார்கள், வந்து வாருங்கள், ஏன் சுற்றிச் சுற்றி வரவேண்டும், நேராக பதில் சொல்கிறேன், நேராக வந்தால் சுற்றிச் சுற்றி வரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம் இப்படி சிறிய பொருட்களுக்கு எல்லாம் வரியை இன்ன இன்ன என்று இனம் பிரித்து காட்டுவதைவிட ஒட்டுமொத்தமாக இந்த வரிகளைத் தள்ளிவிட்டால் உங்களை நாடு வாழ்த்தும் என்றுகூறி நன்றிகூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு எஸ் டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் விற்பனை வரி பற்றி பேசியது எல்லாம் அவைக்குறிப்பிலே இருப்பது நியாயம். சாராயத்திற்கும் இந்த விற்பனை வரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, அவர்கள் சாராயம் என்று சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பேசினீர்கள்?

திரு. துரைமுருகன்: கண்ணாடிப் பொருட்களுக்கு எல்லாம் வரிப் போடுகிறீர்களே, நமக்கு 1150 கோடிக்கு மேலே வருகிறது. இந்த பொம்மை எழுதுகிற கண்ணாடிகளுக்கு எல்லாம் போடுவது நியாயந்தானா? சிமினி விளக்குக்கு எல்லாம் எடுத்துவிடலாம் என்று சொன்னேன். அதுகூட தப்பா சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உதாரணம் தான்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரித் திருத்தச் சட்ட முன்வடிவில் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்ததற்காக நான் நன்றிகூறி இந்த மசோதாவை வரவேற்றுச் சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த பொதுவிற்பனை வரித் துறையிலே பல நல்ல காரியங்களை ஆற்றி வருகிறார்கள். அந்தச் சீரிய பணிகளின் காரணமாக தேவைப்படுகிற நிதியாதாரங்களைப் பெறவேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சட்ட முன்வடிவை அவர்கள் இங்கே இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள அந்தக் கருத்துகளை வரவேற்று அந்த விற்பனை வரிச் சட்டத்திலே சில திருத்தங்களைச் செய்தால் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்



தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பொது விற்பனை வரிச் சட்டத்தில் ரிஜிட்ரேஷனுக்கு என்று சொல்லி விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளில் பணம் கட்டினால் ஒருவர் ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட் வாங்கிக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. அதனால் பலர் இங்கே வியாபாரத்தை நடத்திவிட்டு வெளியே சென்றுவிடுகிற சூழ்நிலை இருப்பதன் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரி ஏய்ப்புச் செய்யப்படுகிறது. அந்த வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்காக அந்த பார்ட்னர்ஸ் அல்லது முதலாளிகள் அடங்கிய முழுவிவரங்களை அந்தத்துறை பெற்றுக் கொண்டு அதற்குப் பிறகு ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட் வழங்கினால் நலமாக இருக்கும், அதோடு மட்டுமல்லாமல் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பார்ட்னர்கள் அனைவருடைய போட்டோக்களையும் சர்டிபிகேட்டில் இணைத்துவிட்டால் அவர் தவறு செய்தால் கண்டுபிடிப்பதற்கு உதவக்கூடிய அளவுக்கு அந்த மாற்றங்களை ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். அதேபோன்று இந்தத் துறையில் வரி ஏய்ப்பினைச் செய்கிறவர்கள்மீது கடமையாக நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே அதிகாரிகளுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கி வரி ஏய்ப்பினைக் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து Simplification of procedure, assessment, collection and appeal and to reduce the hardship to assessee and to improve collections என்று சொல்கிறார்களே அந்தத் துறையில் கூடுமான வரையில் சுலபமான முறையில் அவைகளை நிறைவேற்றுவதற்கும் நடைமுறையில் கொண்டுவருவதற்கும் வழிவகைகளைச் செய்யவேண்டும். இருக்கின்ற மல்டிபாயின்ட் டாக்சை சிங்கிள் பாயின்ட் டாக்சாக மாற்றியமைத்தால் வரி ஏய்ப்பைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ரிஜிட்ரேஷன் சர்டிபிகேட்டிற்காக மனுச் செய்தவுடனே அவர்களுக்கு குறைந்த பட்சம் 30 நாட்களுக்குள்ளே அந்த சர்டிபிகேட்டுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தால் நலமாக இருக்கும். மொத்தத்தில் எதிர்பார்க்கிற லேவாதேவிக்கு அவர்கள் வரி செலுத்தவும் அல்லது அவர்களிடம் டெபாசிட்டாக வசூலிப்பதற்கும் நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும். விற்பனை வரிக்கு இன்கம்டாக்ஸில் (Income Tax Department)ல் இருப்பதைப்போல் வட்டி வழங்குகிற ஏற்பாட்டைச் செய்தால் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் நலமாக இருக்கும். அதைப்போல சில வியாபாரிகள் வசூலிக்கிற உரிமையற்றவர்கள், வசூலிக்கக் கூடாத காலங்களில் விற்பனை வரியை வசூல் செய்து அவர்களே எடுத்துக்கொள்கிற சூழ்நிலை தற்போது இருக்கிறது. அவர்கள் அரசாங்கத்திற்கும் செலுத்துவதில்லை. வரி செலுத்திய பொது மக்களுக்கும் திருப்பி தராமல் இருக்கிறார்கள். இந்தமாதிரி

[1983 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டியதில்லை. இந்தச் சட்டமுன்வடிவுகள் ஒரே மாதிரியானவை என்பதனால் விவாதத்திற்கு இந்த மூன்றையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாமா என்பதற்குக் கேட்டேன். ஆனால் இதில் கேளிக்கை வரிச் சட்டமும், விற்பனை வரிச் சட்டமும் வருகின்றது. எனவே கேளிக்கை வரிச் சட்டத்தைத் தனியாகவும். விற்பனை வரிச் சட்டத்தைத் தனியாகவும் எடுக்க வேண்டும் என்றார்கள். ** பொதுவாக விவாதித்தாலும் சட்ட முன்வடிவுகளைத் தனித் தனியாகத்தான் பரிசீலித்தாக வேண்டும். எனவே இதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்காமல் தனித் தனியாகவே எடுத்துக் கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இங்கே பேசியதில் **வருவதெல்லாம் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் யார் அறிவித்தாலும் அது சபாநாயகர் அறிவித்ததாகத்தான் பொருளே தவிர வேறு யாருக்கும் இங்கே அறிவிப்பதற்கு அதிகாரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் கேட்டுக் கொண்டு தான் வந்தேன். அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப் படுகின்றது. மாண்புமிகு அமைச்சர் முன்மொழிந்துள்ள மசோதா மீது பேச விரும்பினால் திரு. துரைமுருகன் பேசலாம்,

திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, இந்த பில்லிலே தாங்கள் சொன்னது மாதிரி அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. வரி போட்டிருக்கிறார்கள். எது எதற்குப் போடப் பட்டது என்பதில் ஒரு பெரிய குழப்பம் இருக்கின்றது, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் இது சின்ன பில், ஒரு சோட்டா பில். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் கருத்து சொல்வதற்கு அதிக நேரம் தேவையில்லை என்று சொன்னார்கள். ஆகவே மூன்றையும் சேர்த்துப் பேசினால் அவர்களும் பேசியது மாதிரி இருக்கும், நமக்கும் பதில் சொன்னது மாதிரி இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். அதாவது சாப்பிட்டும் பட்டினி, சாப்பிடாமலும் பட்டினி, பேசியும் சரியில்லை, பேசாமலும் சரியில்லை என்ற நிலைமை வந்துவிடக்கூடாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பில்லை விட்டுவிட்டு மற்றவற்றைத்தான் பேசிக்கொண்டிருக் கிறார்கள். ஒருவேளை அவர்கள் பில்லைப் படிக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பில்லைப் பற்றி சீரியசாகப் பேச ஆரம்பித்துவிட்டால் எந்தப் பிரச்சினையும் வராது என்று அமைச்சர் சொல்கிறார். ஒருவருக்கொருவர் தமாஷாகப் பேசுகிறீர்கள் ஆகவே அதை எல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஃபைலைப் படிக்கிறதை விட நான் அதிகமாக பில்லைப் படிக்கிறேன். இந்த விற்பனை வரிச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே சாதாரணப் பொருட்களுக்கு எல்லாம் வரி போட்டிருக்கிறார்களே, அந்தப் பொருட்களுக்கு எல்லாம் வரி தேவையா என்பதுதான் என்னுடைய முக்கியமான கேள்வி. பூசணிக்காய் போகின்ற இடம் தெரியவில்லை, ஆனால் கடுகு போகின்ற இடம் தெரிகின்றது. கண்ணிலே விளக் கெண்ணெய் விட்டுப் பார்ப்பது என்று சொல்வார்களே, அப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள் இதை எல்லாம். ஆனால் பெரிய ஸ்டீல் ரோலிங் மில்களுக்கு எல்லாம் கோடிக் கணக்கிலே வரியை தள்ளுபடி செய்கிறார்கள். கண்ணாடி, விதை எடுக்கப்பட்ட பருத்தி, கம்மிக் கண்ணாடி, ஓவியம் தீட்டப்பட்ட கண்ணாடி, சிம்னி விளக்கு, அரிக்கன் லேம்ப் இப்படி பட்ட பொருட்களுக்கு எல்லாம் வரியைப் போட்டுக் கொண் டிருக்கிறீர்கள், இது நியாயமா? நம்முடைய நாவலர் அவர்கள் சொல்கிறார்கள் சிம்னி விளக்குத் திரிக்கு வரியை எடுத்தேன் என்று. ஆனால் வருவாய்த்துறை அமைச்சர் என்ன சொல் கிறார்? அந்தச் சிம்னி விளக்குக்குப் போடுகின்ற ஒரு சின்ன க்ளாஸ் அதற்கு வரி என்கிறார்.

அவர் திரிக்கு எடுக்கிறார். இவர் கிளாஸ்க்கு போடுகிறார். ஆக இப்படிப்பட்ட ஒரு சின்ன பொருள்களுக்கு எல்லாம் வரி தேவை தானா? இதை எங்கே மறந்து போய்விடுவார்களோ என்று அதற்கு ஒரு கோனார் நோட்ஸ் எழுதியிருக்கிறார்கள். சமதளக் கண்ணாடி (தட்டைக் கண்ணாடி) முகம் பார்க்கும் கண்ணாடிகள், ஆய்வுக் கூடங்களில் பயன்படுத்துவதற்கான கண்ணாடிச் சாமான்கள், விளக்குகள், லாந்தர்களுக்குப் பயன் படுத்தப்படுகின்ற கண்ணாடிக் கூடுகள், குமிழ்கள், சிம்னிகள், உண் கலங்கள், ஏனைய வகைக் கண்ணாடிச் சாமான்கள், கண்ணாடி என்றால் என்ன என்று டெபினிஷன் கொடுத்து இருக்கிறார்கள். இப்படிபட்ட ஒரு டெபினிஷன் கொடுத்து ஒரு வரி போடுவது தேவைதானா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். ஏழைகள் பயன்படுத்தும் திரிக்கு வரி எடுத்தோம் என்று சொல் கிறீர்களே அப்படிப்பட்டவைகளில் எல்லாம் தள்ளி விடுவதால் உங்களுக்கு எத்தனை கோடி ரூபாய் இழப்பு

ஏய்ப்புகளை நம்முடைய அரசு தடுக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த டிபார்ட்
மென்ட்டிலே இருக்கிறவர்களுக்கு போதுமான அளவிற்கு வசதி
களைச் செய்து தந்து, கமர்ஷியல் டாக்ஸ் ட்ரெயினிங்
சென்டர் (Commercial Tax Training Institute) என்று ஒன்றை
ஆரம்பித்து அதன்மூலமாக அவர்கள் அசெஸ்மென்ட் மற்ற
விவகாரங்களில் தேர்ந்து, நல்லமுறையில் நடவடிக்கை யடுத்து
இந்த துறை மேலும் வளர ஆவன செய்யவேண்டுமென்று
கேட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தற்காலிகத் தலைவர்
அவர்களே, பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும்
திருத்துவதற்கான ஒரு பில்லிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே நான் ஒரு சில கருத்துகளை சொல்ல
விழைகிறேன். இந்த பில்லிலே சாதாரண ஏழை, எளிய மக்கள்
உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களை எல்லாம் சேர்த்திருக்
கிறீர்கள். ஏற்கெனவே அபரிமிதமான வரி விதிப்பாலும்
விலைவாசி ஏற்றத்தாலும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
இந்த சூழ்நிலையில் சாதாரண மாவரைக்கும் இயந்திரத்திற்கும்
12 சதவீதம் வரி என்று இதிலே போட்டிருக்கிறீர்கள். முகம்
பார்க்கும் கண்ணாடி, ஆய்வுக் கூடத்திலிருக்கும் கண்ணாடி,
விளக்குகள், இன்னும் அதையொட்டிய பொருள்களுக்கும் வரி
என்று இதிலே சொல்லப்படுகிறது. கடந்த காலத்தில் போடப்
பட்ட வரிகளாலே மக்கள் மிகப்பெரிய அளவிற்கு பாதிக்கப்
பட்டிருக்கிற நேரத்திலே இப்போது இம்மாதிரி வரி விதிப்பது
சாதாரண ஏழை, எளிய மக்களை மேலும் தாக்கும். இந்த
வரிவிதிப்பு வர்த்தகர்களோடு நின்று விடுவதல்ல, சாதாரண
மக்களையும் பாதிக்கக்கூடிய வரியாக இருப்பதால் இந்த வரி
விதிப்பை அரசு திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது என்று
நான் கருதுகிறேன். ஆகவே பொது விற்பனை வரிமூலம்
கொண்டு வந்திருக்கிற இந்த புதிய வரி விதிப்பு முயற்சியை
கைவிட வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிற பொது விற்பனை வரிச்
சட்ட திருத்தத்தை நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக
எதிர்க்கிறேன். இந்த ஆண்டு வறட்சி மிகுந்த ஒரு ஆண்டாக
இருப்பதால், புரட்சித் தலைவருடைய அரசு ஒட்டுமொத்தமாக
இந்த ஆண்டு வரி விதிக்காமல் இருந்தால், தமிழ் நாட்டு
மக்கள் இந்த அரசிற்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
கொண்டு வருகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்திலே பல
வரிகளைப் போட்டு வியாபாரிகளுக்கு தொந்தரவு கொடுக்கிற
ஒரு அரசாக இந்த அரசு இருக்கிறதோ என்ற ஐயப்பாடு
எல்லா தரப்பினருக்கும் இருக்கிறது. இந்த சட்ட திருத்தத்தின்
மூலம் ஏழை, எளியவர்கள் உபயோகப்படுத்துகிற பொருள்களுக்கு



எல்லாம் வரி விதித்திருப்பது தேவை தானா என்பதை சற்று
உணர்ந்து பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன். இதில் வரி விதிப்பிற்கு ஆளாகியிருக்கும்
மாவரைக்கும் இயந்திரம் முதல் கண்ணாடி பொருள்களை
வரையில் பெரும்பாலும் அவை சாதாரண ஏழை, எளிய
மக்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். ஆகவே ஒட்டுமொத்தமாக இந்த வரிகளை
எடுத்து விடவேண்டுமென்று தான் எங்களைப் போன்றவர்
களுக்கு ஆசையிருந்தாலும் கூட, இங்கே அதைச் சொல்வதினால்
பயன் இருக்குமா என்று பார்க்கிற போது, இருக்காது என்று
தான் நினைக்கத் தோன்றுகிறது. இந்த பொது விற்பனை வரி
சட்டத்தின் மூலமாக, நுழைவு வரியின் மூலமாக வரிகள்
வருகிறபோது மக்களுக்கு இன்னும் தொந்தரவு வருகிற நிலையில்
தான் இவைகள் அமைகின்றன.

(பிற்பகல் 12—30)

சிறிய வியாபாரிகளுக்கு, இதனுடைய வரவு செலவு கணக்கு
களை வைத்துக்கொள்வதில் சிரமம் என்பது ஒருபுறமிருக்க,
அதிகாரிகளுடைய தொந்தரவு இன்னும் அதிகமாக இருக்கும்.
மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும், நான்
அவரிடத்திலே தனியாக விவரங்களைத் தெரிவித்திருக்கிறேன்.
வியாபாரிகள் இந்தப் பொது விற்பனை வரிச் சட்டத்தின்
மூலமாக வரி போடக் கூடாது என்று சொல்லியுள்ளார்கள்.
இந்தச் சட்டத்தின் கீழ் வரி போடுவதன் மூலமாக, சிறிய
வியாபாரிகள், கிராமத்திலே இருப்பவர்கள் எந்த அளவு
அதிகாரிகள் தொந்தரவினால் கஷ்டப்படுகிறார்கல் என்பது
மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். வியாபாரி
களுக்கு அதிகாரிகளுடைய தொந்தரவு அதிகம் என்று சொல்லக்
கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட
வரி விதிப்பின் மூலமாக, அரசு தானாக ஒரு அவப்பெயரையும்,
கெட்ட பெயரையும் எடுத்துக்கொள்ளும் என்பதை நன்றாக
உணர்ந்து, இந்தப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் மூலமாக,
சில பொருள்களுக்கு வரி போடுவதை நீக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நுழைவு வரிச் சட்டம் வர இருக்கிறது. எல்லா
கட்சியைச் சேர்ந்தவர்களும் அது வேண்டாமென்று சொல்லி
யிருக்கிறோம். மாண்புமிகு முதல்வரிடமும் நான் சொல்லி
யிருக்கிறேன். ஆகவே, அமென்ட்மென்ட் கொண்டு வந்தால்
கூட, இப்பொழுதே நிறுத்துங்கள். இந்த நுழைவு வரிச் சட்டம்
ஆரம்பத்தில் நுழைந்து விட்டால், எந்த அரசும் அதை எடுக்க
முடியாது. ஆகவே, பொது மக்களுடைய கருத்துக்கள்,
வியாபாரிகளுடைய அன்பு வேண்டுகோள்கள்,—எதிர்க்கிறேன்

என்று சொல்லவில்லை—இந்த ஆண்டு எடுத்து விடுங்கள்; அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம். இது வறட்சி மிகுந்த காலமாக இருக்கிறது. அதனால் பொதுமக்கள், வியாபாரிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள். ஆகவே, அன்பு வேண்டுகோளாக இதை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பாக இக் கருத்தைத் தெரிவித்து, அமைகிறேன், வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே; 1983–ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கழிவுப் பஞ்சுக்கு, அதாவது, கொட்டையை நீக்கிய கழிவுப் பஞ்சுக்கு போடக் கூடிய வரி இதில் வருகிறது. ஏற்கனவே, கைத்தறியால் நெய்யக் கூடிய துணி தேக்கம் அடைந்திருக்கிற காரணத்தாலும், மேலும் கைத்தறி நெசவாளர்கள், அத்தொழிலிலே முறையாக ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்திலும் கடந்த தமிழ்ப் புத்தாண்டு அன்று முதல் நாள் ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர் களுக்கு நாம் கைத்தறி ஆடைகளை வழங்கினோம். ஒரு புறத்திலே தொழில் மந்தமாக இருக்கிறது என்று கைத்தறி ஆடைகளை வழங்கிவிட்டு, மறுபுறத்திலே உற்பத்தியாகக்கூடிய நூலுக்கு, கழிவுப் பஞ்சுக்கு, அதிகமான வரி போட்டோ மானால், அந்தத் தொழில் எப்படி இருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவது, செல்லுலோஸ் நூலுக்கு வரி போடுவதைப் பொறுத்த வரையில், கைத்தறியினாலே நூல் நெய்யக் கூடிய அந்தத் கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த வருமானம் வருகின்றது என்ற நோக்கத்தோடு, பாலியிஸ்டர் துணியை நாம் கைத்தறியிலே உற்பத்தி செய்வோமானால், கைத்தறி நெசவாளர் களுக்கு அதிகமான வருமானம் வரும் என்ற நோக்கத்தோடு, இந்தத் தொழிலை முன்னேற்ற, இந்தத் துறையினை அதிகப் படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு புறம் கைத்தறி நெசவாளர்களுக்கு மிகப்பெரும் வசதி செய்து தர வேண்டுமென்று சொல்லும் நாம், வேறு ஒரு புறம் வரி போடுவது சரியாக இருக்குமா என்பதைச் சற்று சிந்திக்க வேண்டுகிறேன்.

மூன்றாவதாக, மாவரைக்கும் இயந்திரங்களை இன்றைய தினம் ஏதோ, கோடீஸ்வரர்கள் மட்டுமே வாங்கி வைத்துக் கொண்டு, அவர்கள் ஆடம்பரமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது. சாதாரணமானவர்கள், ரூ. 1,000, ரூ. 500 வருமானம் பெறக்கூடியவர்கள் கூட அந்த மாவரைக்கும் இயந்திரம் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். ஒருபுறம் மாவரைக்கும் இயந்திரத்திற்கு வரி போடுகிறோம். அடுத்ததாக, அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் போடத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



நான்காவதாக, ஓவியக் கண்ணாடிகள். கண்ணாடிகளைப் பொறுத்தவரையிலும், வியாபாரத்திற்கு ஏதோ வாங்கி, இருப்பு வைக்கக்கூடிய பொருள் அல்ல. குறிப்பாக, பார்பர் ஷாப்பிலே இருக்கிறவர்கள், தங்கள் வேலையை முடிக்க நேரம் அதிகமாகும், வருபவர்கள் சோர்வடையக் கூடாது என்பதற்காக 4 புறம் கண்ணாடியை வைத்து, அவர்கள் பார்த்து ரசிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதை வாங்கி வைக் கிறார்கள். ஒருபுறத்திலே நாம் இந்தத் தொழிலில் இருப்பவர்கள் நசிந்து போகக் கூடாது என்ற முறையிலே மானியம் கொடுக்கிறோம். மறுபுறத்திலே இம்மாதிரி கண்ணாடி களுக்கு வரி போடும் நிலையும் இருக்கிறது. இது சாதாரணமான ஒரு பிரச்சனை, இதற்கும் வரி போடப்படுகிறது. இதற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எவர்சில்வர் பாத்திரங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக கோவை மாவட்டத்தில் ஈரோடு இன்னும் பல்வேறு இடங்களில் மிகவும் சாதாரணமானவர்கள் மத்தியில் ஒரு குடிசைத் தொழிலாக இது நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே பேனா நிப்பிற்கு வரி விலக்கு அளித்திருந்தோம். ஆனால் இன்றைக்கு எவர்சில்வரில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருள்களுக்கும் வரி போடுவதாகத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒருபுறத்தில் ரோலிங் மில் போன்ற மில் களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை வரி விலக்கு கொடுத்து விட்டு இம்மாதிரி சிறு சிறு தொழில்களுக்கு வரி விதிப்பது குறித்து மறுபரிசிலனை செய்து இந்த வரியை வாபஸ் பெற வேண்டுமென்று சொல்லி, இந்த வரி விதிப்பை எதிர்த்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விற்பனை வரி சட்ட முன்வடிவு எண் 2 இல் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். ஆனால் இதைப்பற்றி மட்டும் சொல்லாமல் மற்றவைகளைப் பற்றியும் சொல்லியிருக் கிறார்கள். பொதுவாக ஒன்றே ஒன்றைச் சொல்ல வேண்டு மென்றால், புதிதாக எந்தவிதமான வரியையும் இதில் போட வில்லை என்பதை முதலில் நான் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த மாற்றத்தினால் அரசுக்குப் புதிதாக வருமானம் இல்லை; அரசுக்கு வருமானம் குறையவும் இல்லை. அதிலிருந்து, தெளிவாக என்ன தெரிகிறது என்றால், புதிதாக எந்த வரியையும் போடவில்லை; ஏழை மக்கள் மீது புதிதாக வரி போடப்பட வில்லை; எந்த வரியையும் நாங்கள் எடுக்கவில்லை என்பதுதான்.

ஆனால் இந்த வரியை வசூலிக்கும் பொழுது சில சிக்கல்கள் இருந்தன, அந்தச் சிக்கல்களை இது போக்கடிக்கிறது என்பது தான் இதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

பஞ்சு இருக்கிறதே, அந்தப் பஞ்சு, கொட்டையை நீக்கும் பொழுது கழிவுப் பஞ்சு வருகிறது; அந்தப் பஞ்சிலிருந்து நீக்கும் பொழுது சில கழிவுப் பஞ்சு வருகிறது. முதலில் இருக்கும் பொழுது விளக்கமாக இல்லாமல் இருந்தது. பஞ்சு எதுவாக இருந்தாலும் கொட்டையை நீக்கும் பொழுது வருகின்ற கழிவுப் பஞ்சாக இருந்தாலும், அல்லது நூற்கும் பொழுது கிடைக்கின்ற கழிவுப் பஞ்சாக இருந்தாலும் 4 பர்சென்ட் போடப்பட்டிருக்கிறது; புதிதாக எந்த வரியும் இல்லை.

நூல் வரியைப் பொறுத்தவரையில், கலப்பு நூலுக்கும், பஞ்சு நூலுக்கும் 3 சதவீதம் இருந்தது. அதைக் கண்டுபிடிப்பதில் சில சங்கடங்கள் இருந்ததால், கலப்பு நூலாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் 3 சதவீதம் என்று போடப்பட்டிருக்கிறது.

மாவு அரைக்கும் எந்திரங்களுக்கு, எந்திரங்களைத் தனித் தனியாக வாங்கி வாங்கிச் சேர்ப்போம் என்று சொல்லித் தவறு நடக்காமல் இருக்கத்தான் உறுதி செய்யப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான புது வரிகளும் போடப்படவில்லை; இருக்கின்ற வரிகளைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்பொழுது சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் கூறும் பொழுது இதில் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக இரண்டு விஷயங்களைச் சொன்னார்கள். டைப்ரைட்டரைப் பற்றிச் சொன்னார்கள். டைப்ரைட்டர், அதற்கெல்லாம், பழைய டைப்ரைட்டர்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்று சொல்ல வருகிறபொழுது அவர்களின்மேல் ஆசையில் சொல்லியிருந்தாலும் பாதகமில்லை அவரையும் சேர்க்க வேண்டுமென்று சொன்னது மாதிரி தெரிகிறது. அவருடைய கோரிக்கையை, டைப்ரைட்டர் பற்றிய கோரிக்கையை இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

மற்ற மாநிலங்களையெல்லாம், ஸ்டீல்ரோலிங்கிற்குக் காட்டும் இந்த அரசு ஏன் இந்த டைப்ரைட்டருக்குக் காட்டவில்லை என்று கேட்டதிலிருந்து, அவருடைய முக்கிய நோக்கம் டைப்ரைட்டரைப் பற்றிக்கூட அல்ல; ஸ்டீல் ரோலிங் மில்லைப் பற்றித்தான் என்று தெரிகிறது. அடுத்து 'ஸ்டீல் ரோலிங் மில்ஸ்' பற்றி அன்றைக்கே நான் விளக்கமாக பதில் தெரிவித்திருக்கிறேன். பி.ஏ.சி.-யில் கேட்ட கேள்விகளுக்குப் பதில்கள் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். கேட்டதற்கு பதில் கொடுக்க வேண்டியது இல்லை என்ற சட்டத்தைப் படித்துக் காண்பித்துவிட்டேன். அப்படியிருந்தும், கேட்ட கேள்விகளில், எட்டுக்கு பதில் கொடுத்திருக்கிறேன் என்று தெரிவித்தேன்.

அது மட்டுமல்ல ஸ்டீல் ரோலிங் மில்ஸ்க்கு போகும்போது. வாங்கப்பட்ட மூலப்பொருள்களுக்கு ஒரு முறை வரி போடப்பட்டு இருந்தால் அதற்கு மட்டும் தான் வரி இல்லை என்பதை தெரிவித்து இருக்கிறேன்.



அதுமட்டுமல்ல. வாங்கப்பட்ட பொருள்களுக்கு ஒரு முறை வரி கொடுத்துவிட்டால், அது நம்முடைய மாநிலத்திலே வாங்கப் பட்டு, நம்முடைய மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தால், மட்டும் தான் உண்டு. வேறு மாநிலத்திலிருந்து வாங்கப் பட்டிருந்தால், அதற்கு வரி உண்டு.

அது மட்டுமல்ல. அந்தக் கணக்குகளை எழுதுகிறபோது, வருமான வரியாக கொடுக்கிறோம் என்று கணக்கு கொடுத்தால் கூட, வரி தள்ளுபடி இல்லை என்பதையெல்லாம் அன்றே விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். என்றாலும் அவருக்கு ஸ்டீல் ரோலிங் மில்ஸ்—பற்றி என்றைக்கு வந்தாலும் சொல்வோம் என்று மீண்டும் மீண்டும் ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஸ்டீல் ரோலிங் மில்ஸ்-பற்றி முக்கியமாய பதில் தெரிவித்தாகிவிட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல், மாவரைக்கும் ஆலையைப் பற்றி சொன்னார்கள். முதலிலே எடுத்த எடுப்பிலே பதில் சொல்லியிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நுழைவு வரியைப் பற்றி சொல்லியிருக்கிறார். நாளை மறுநாள் நான் அதைப்பற்றி பேச இருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே' மற்ற மாநிலங்களிலே வாங்கக்கூடிய பொருள் களுக்கு அங்கே வரி கொடுக்கிறார்கள். அப்படி வாங்கக்கூடிய பொருள்கள் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்ற பொழுது வரி வருகிறது. அது மல்டி பாயிண்ட் ஆகிறது. அது தான் வியாபாரி களுக்குத் தொந்தரவாக இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை தயவு செய்து எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபோது, புதிதாக வரி விதிக்க வேண்டுமென்கிற நோக்கம் இல்லை என்று கூறினார்கள். அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது—அனைத்து வகை கண்ணாடி, கண்ணாடிப் பொருள்களுக்கும் வரி விதிக்கும் பொருட்டு 1—1—1983 லிருந்து—என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது அதனுடைய அர்த்தம் என்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் : வரி முதலில் இருக்கிறது. அந்தச் கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. கண்ணாடி என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, விளக்கமாக கொடுத்திருக்கிறோம். தட்டைக் கண்ணாடி, கண்ணாடி, பலகைக் கண்ணாடி, அதிலுள்ள கண் போட்டக் கண்ணாடி, என்பதை விளக்கமாக கொடுத்திருக்கிறோம். உயர் நீதிமன்றத்தில், சரியாக விளக்கம் இல்லைஎன்ற காரணத்தால்

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1983 ஏப்ரல் 22

ஒரு வழக்கில் அரசிற்குப் பாதகமான தீர்ப்பு வந்துவிட்டது. அதை நான் இங்கே சொல்லவேண்டாம் என்று நினைத்தேன். உயர்நீதிமன்றத்திலே நாம் போடுகின்ற சட்டம் நீதித்துறைக்குப் போகின்றபோதுகூட அவர்களுக்கு விளக்கமாக இருக்கவேண்டும், நீதித் துறையில் இருப்பவர்கள் சட்டத்தை மட்டும் படித்து வந்திருப்பார்கள். கமர்ஷியல் டாக்சிஸ்-லே அவர்கள் வேலை செய்துவிட்டு, அதற்கு மேலே சட்டம் படித்துவிட்டு, அதற்கு மேலே நீதிபதி ஆவதில்லை. அவர்களுக்கு சங்கடம் வருகிற போது அரசிற்கு பாதகமாக சில தீர்ப்புக்களைக் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுக்கும் விளக்கமாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் அங்கே விளக்கமாகப் போடப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலே கழிவுப் பஞ்சு என்பதற்கு விளக்கமாக, அனைத்து நூற்பதன் மூலம் பெறப்பட்டது என்று போடப்பட்டிருக்கிறது. நூற்பதன் மூலம் பெறப்பட்டது என்று சொன்னால், இன்றைக்குப் பெரிய நூற்பாலைகளை எடுத்துக் கொண்டால், அதிலே கழிவுப் பஞ்சு வரலாம். அதற்கு வரி போடுவதில் நமக்கு கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் காந்தியக் கொள்கையின் அடிப்படையில், ராட்டையின் மூலமாக அம்பர்சர்க்கா மூலமாக நூற்கின்ற வேலை நடைபெறுகின்றது. அப்படி நூற்கின்றபோது அதிலிருந்து வருகின்ற கழிவுப் பஞ்சுக்கும் அரசு வரி போட விரும்புகிறதா? அப்படி விருப்பம் இருந்தால் அதற்கு வரி விலக்கு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அனைத்து என்கிற போது அதிலே ராட்டையிலே எப்போதும் கழிவுப்பொருள் அதிகமாக வருவதில்லை. ராட்டையிலே வந்தால் அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எம். எஸ். மாணிக்கம்) பேரவை முன்னுள்ள கேள்வி :—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



[1983 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1983) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மான பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி சட்டத்தில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கேளிக்கை வரி ஒரு பொன் முட்டையிடும் வாத்தைப் போன்றது. ஆனால் இன்றையதினம் இதிலே பல ஊர்களை அப்-கிரேட் செய்திருக்கிறார்கள். ஏறத்தாழ பல்வேறு மாவட்டங்களில் 51 ஊர்கள் இதிலே அப்-கிரேட் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இது மொத்த கிராஸ் கலெக்சனிலே 20 சதவீதம் என்றும், 16 காட்சிகள் என்றும் இப்போது திருத்தப்பட்டு இந்த வரி விதிப்பில் 22 சதவீதம், 2 சதவீதம் இந்த கேளிக்கை வரி உயர்த்தப்படுகிறது. 17 காட்சிகளாக ஆக்கப்படுகிறது. ஆனால் இன்றையதினம் தமிழ்நாட்டில் இருக்கிற சினிமாக்களுடைய நிலைமைகளைப் பார்க்கின்றபோது இப்படி பல இடங்களிலே வரி விதிப்பதினால் அவர்கள் பாதிக்கப்பட்டு சினிமாக் கொட்டகைகளையே விற்கின்ற நிலைமை பல இடங்களிலே இருக்கிறது. இதனால் அந்த உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே 51 ஊர்கள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலே செங்கம் என்று எடுத்துக் கொண்டால் அதிலே இன்றையதினம் இப்படி காம்பவுன்ட் டாக்ஸ் என்று வந்தபிறகு தமிழ்நாடு பூராவும் இது ஒரு போட்டி காம்பெட்டிசன் பிசினசாக ஆகிவிட்டது. ஒட்டு மொத்தமாக வரி கட்ட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டிலே இன்றைய தினம் மைல் கற்களுக்கு மைல்கள் சினிமாக் கொட்டகைகள் அதிகமாகிவிட்டன. இந்த நிலைமையிலே அந்த

**1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

என்டர்டெயி மென்ட் டாக்சிலே ஒரு 2 சதவீதத்தை உயர்த்துவது
பல இடங்களிலே பாதிக்கப்பட்டு இருக்கின்ற பிரச்னை. சினிமாக்
கொட்டகைகளைப் பொறுத்தவரையிலும் அதனுடைய தொழில்
நிலைமைகளைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்வது என்னுடைய
கடமை என்று நான் கருதுகிறேன். செங்கத்திலே ஒரு பெர்ம
னென்ட் தியேட்டர் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு
அடுத்து ஒரு மைலுக்குள்ளாக ஒரு டூரிங் செட் இருக்கிறது.
இப்படி பர்மெனென்ட் தியேட்டர்கள் இருக்கின்ற இடங்களைச்
சுற்றி ஒரு மைலுக்குபல டூரிங்செட்டுகள் வந்து விட்டகாரணத்தால்
அவர்கள் போட்டியை தவிர்க்க முடியவில்லை. அதுமட்டுமல்ல.
பிரின்ட் காஸ்ட், ஓயிட் அன்ட் ப்ளாக், அதனுடைய படச்
சுருள்களின் விலை அதிகமாகி விட்டது. அதேபோல் கலர் பிரின்ட்
காஸ்டும், அதிகமாகிவிட்டது. உதாரணத்திற்கு நான் சொல்ல
விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், இன்றையதினம்
வந்திருக்கின்ற ஆட்சி பீடத்திலே அமர்ந்து இருக்கின்றவர்கள்
முதல் அமைச்சர் அவர்களுடைய படத்தைப் பார்த்து வாக்களித்த
வர்கள், கொள்கையைப் பார்த்து வாக்களித்தவர்கள் என்ற
நிலைமையைவிட, பாமர மக்கள் முதல்வர் அவர்கள் நல்லவராக
நடிக்கிறார்கள் என்ற அளவிலே நாட்டிலே அவருக்கு வாக்களித்து
ஆட்சி பீடத்திலே அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய
தினம் ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய படங்கள் நல்லமுறையிலே வசூல் கின்ற காரணத்
திற்காக செங்கத்திலே அந்தப் படம் போடவேண்டுமென்று
சொன்னால் ஒரு தியேட்டரிலே கலர் பிரின்ட்டுக்கு பிக்ஸட்
ஹையர் 3 ஆயிரம் ரூபாய் என்று வாங்குகிறார்கள். பிளாக்
அன்ட் ஓயிட்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்கள்.
இப்போது உயர்த்தப்படுகின்ற காம்ப்பவுண்ட் டாக்ஸ் ஒரு
தியேட்டருக்கு 750 என்று சொன்னால் இந்த 2 சதவீதம்
அதிகமாகச் சேர்த்து ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் வரத்திருக்கு
என்று அவர்கள் கட்டவேண்டும். ஒரு கொட்டகையில் எம்.ஜி.ஆர்
நடித்த கலர் படம் போடவேண்டும் என்று சொன்னால் 3,000
ரூபாய் அந்த பிரின்ட்க்குக்கு கொடுத்து வாங்கி வருகிறார்கள்.
அதற்குப் பிறகு 1000 ரூபாய் காம்பவுன்ட் டாக்ஸ் கட்ட
வேண்டும் என்று சொன்னால், அவனுக்கு கிராஸ் கலெக்ஷன்
அவ்வளவு ஆகாது. இதன் காரணமாக பலர் சினிமாக்
கொட்டகையை விற்றுவிடக்கூடிய நிலைக்கு வந்துவிட்டார்கள்
என்பதை ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் எண்ணிப்பார்க்க
வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இங்கே இன்னொரு காரணத்தையும் நான் சொல்ல விரும்பு
கிறேன். ஏற்கனவே கலர் பிலிம்கள்-பாசிடிவ், நெகடிவ்-பிரின்ட்
விலை ஏறியிருப்பதால் அவற்றைத் திரையிடமுடியாத நிலைமை
இருக்கிறது. தமிழகத்தில் இப்போது 30 சதவீதம் பிரின்ட்
காஸ்ட் ஏறியிருப்பதால் தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள்
படத்தைப் போடுவதற்கு முடியவில்லை. வசூல் அதிகம் ஆகிறது
என்று சொன்னாலும், அவர்கள் செலவழித்த கிராஸ் அமௌன்



டிற்கு தான் கலெக்ஷன் ஆகிறது. அதற்கு மேல் ஆவது இல்லை. அதனால் முதலமைச்சர் படத்தைக் கூட திரையிட சினிமாச் கொட்டகைக்காரர்கள் அஞ்சுகிறார்கள். அந்த அளவிற்கு வரி உயர்வு செய்து இருக்கிறீர்கள். பல இடங்களில் சினிமா தியேட்டர் காரர்கள் விற்றுவிட்டு ஓடிவிடலாமா என்று நினைக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் தியேட்டர் வேண்டும் என்று சொன்னால் நானேகூட விலைக்கு வாங்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த அளவிற்கு சினிமா கொட்டகைதாரர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் மறைமுகமாக இதிலே 51 ஊர்களுக்கு 2 சதவீதம் வரி உயர்த்தியிருக்கிறீர்கள். சில நகராட்சிகளை சேர்த்து உயர்த்தியிருக்கிறீர்கள். சில ஊராட்சி களை அப்கிரேட் செய்து வரி போட்டிருக்கிறீர்கள். இதன் காரணமாக பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த மறைமுக வரிகளால் மக்கள் பாதிக்கப்படு வார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

சிலைடுக்கெல்லாம் கூட வரி போட்டிருக்கிறீர்கள். அதுபற்றி அடுத்த பில்லில் பேசுகிறேன். சில ஊர்களை அப்கிரேட் செய்து வரி உயர்த்தியிருப்பதன் காரணமாக இன்றைய தினம் சினிமா காட்சிகளை நடத்துகின்ற தியேட்டர்காரர்கள் மிகுந்த கஷ்டமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்து இந்த வரிவிதிப்பை வன்மையாகக்கண்டிக்கிறோம், திராவிடமுன்னேற்றக் கழக சார்பில், என்று கூறி முடிக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரி சட்டம் என்பது சினிமா கொட்டகைகளுக்கு இன்றைக்கு பொருந்தக் கூடிய அளவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சுருள் பிலிமுக்கும் வரி ரூ. 1.50, ஒவ்வொரு காட்சிக்கும் என்று கொண்டு வந்திருக் கிறீர்கள். சிலைடுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எம். எஸ். மாணிக்கம்) : அந்த பில் அடுத்து வருகிறது. அப்பொழுது பேசிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1983) மீது மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லுகிறபோது முதலமைச்சரின் படமெல்லாம் இன்றைக்கு இந்த வரி போட்டதாலே ஓடாது என்கிற வருத்தத்தையும் அவர்கள் மறைமுகமாகத் தெரிவித்தார்கள். இந்த வரி போட்டதால் அந்தப் படங்கள் பாதிக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே புதிதாக ஒன்றும் இல்லை என்பதால் யாரும் பேச வில்லை என்று கருதுகிறேன். சில கிராமங்கள் இன்றைக்கு நகரப் பஞ்சாயத்தாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சில நகரப் பஞ்சாயத் துகள் இன்றைக்கு செலக்ஷன் கிரேடு நிலைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே மூன்று நிலை இருக்கிறது. முதலில் கிராமம், அடுத்து நகரப் பஞ்சாயத்து, அடுத்து செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்து என்று மூன்று நிலைகள் இருக்கின்றன. இவற்றிற்கு இணக்கமான முறையில் மூன்று இணக்கமான வரி இருக்கிறது. ஆகையால் அந்த நகரப் பஞ்சாயத்து தரம் உயர்த்தப் பட்ட பின்னால் அதற்கு முன்பு இருக்கிற தேர்வு நிலை நகரப் பஞ்சாயத்துக்கு என்ன வரி போடுகிறோமோ அதே அளவுக்கு இப்போது தரம் உயர்த்தப்பட்ட நகரப் பஞ்சாயத்துக்கு போடுகிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எம். எஸ். மாணிக்கம்): பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கைவரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவர வர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) விளம்பர வரிச் சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர வர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —



136045



''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்ட முன் வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதா மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய அரசாங்கம் இதை ஒரு புது வருமானமாக இந்த பட்ஜெட்டிலே கண்டுபிடித்து, இப்போது பில் வடிவம் கொடுத்து ஆய்வுக்கு வைத்திருக்கிறீர்கள். இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், To introduce a levy of tax on advertisments by slides or films in theatres within the limits of Municipal Corporations, Special Grade, Selection Grade and first Grade Municipalities in the State. இப்படிபட்ட இடங்களில், ஃபஸ்ட் கிரேடு முனிசிபாலிட்டியிலே, கார்ப்பரேஷனிலே மற்றும் செலக்ஷன் கிரேடிலே உள்ள தியேட்டர்களில் ஓடுகிற ஸ்லைடு களுக்கு, அங்கே காட்டுகிற ஃபிலிமுக்கு ஒரு வரி போட்டிருக் கிறார்கள். இது ஒரு புது வசூல். அதாவது, அரசாங்கத்திற்கு சேரவேண்டிய பணத்தை கொஞ்சம் இன்கிரீஸ் பண்ணுவதற்கு புதிதாக இந்த வரியைப் போட்டிருக்கிறார்கள், பட்ஜெட்டிலே அனவுன்ஸ் பண்ணியமாதிரி.

நான் மாண்புமிகு அமைச்சரிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒருவகையிலே இதை நான் விரும்புகிறவன் தான். சினிமா தியேட்டருக்கு மனிதன் பொழுது போக்கிற்காக போகிறான். அங்கே போய் பெரிய நீதி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு போகவில்லை. திருக்குறளிலே உள்ளதையா சினிமாவிலே சொல்லப்போகிறார்கள் ? இல்லை. சும்மா போர் அடிக்கிறது, கொஞ்சநேரம் ஜாலியா பொழுதை போக்கிவிட்டு வரலாமே என்று போகிறார்கள், அங்கே போய் உட்கார்ந்த வுடனே—தலைவலி. ஆம். ராமுவுக்கு ரொம்ப தலைவலி தலைவலியால் துடிக்கிறான். லீலாவுக்குத் தெரியும் இந்த ரகசியம். மார்பிலும் முதுகிலும் தேய்க்கிறாள். (கிசுகிசுசுசுசு) ஆம். ராமு அயர்ந்து தூங்குகிறான். இது ஒரு 15 நிமிஷம்.

அப்புறம் அடுத்த ஸ்லைடு. விஜயாவுக்கு எவ்வளவு வலிவு. ஆம். புரோட்டக்ஸ், புரோட்டக்ஸ. இது முடிந்தவுடனே அடுத்த ஸ்லைடு. என்ன? நீடித்த உழைப்புக்கும் நிரந்தர சேவைக்கும் கொள்ளேகால், பனாரஸ், ஆரணி பட்டுச் சேலைகள் விவரங்களுக்கு கருப்பண்ணா சில்க் ஹவுஸ். இது ஒரு பக்கம்.

அடுத்த ஸ்லைடு, உயிருள்ள பத்திரிகை தினத்தந்தி படியுங்கள் அப்புறம் ஒன்று. மணம். குணம் நிறைந்தது மொகைதீன் புகை யிலை. சினிமாவுக்குப் போய் உட்கார்ந்தால் இப்படி புகையிலை, பீடி, சிகரெட்டு, வெற்றிலைப்பாக்கு, சோடா, சுண்ணாம்பு— இதையே காட்டி, ஆட்டம் எப்போது விடுவார்கள் என்று கேட்க

** 1983-ம் ஆண்டு மார்ச் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

V211,31 N83
N83.51.192

ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆட்டமே ஆரம்பிக்கவில்லை. அதற்குள்ளே விளையாட்டுக்காட்டி. இந்த சோப்பு, சீப்பு, சோடா, பீடி எல்லாம் காட்டி முடிந்ததும் சினிமா முடிந்துவிட்டது என்று போய்விடுகிறார்கள். அதற்குள்ளே நம்ம வீட்டு பசங்கள் தூங்கி விடுகிறார்கள். இதற்குமேலே சென்ட்ரல் ஃபிலிம் வேறு. அதற்குப் பின்னாலே தமிழ்நாடு ஃபிலிம் வேறு இருக்கிறது. மத்திய அரசு ஃபிலிம்—'வறட்சி' ஆம். ஒரு பக்கம் வறட்சி, மறுபக்கம் மாரி. வெள்ளமும், வறட்சியும் மாறி மாறி இந்தியாவில் வருகிற காட்சி.

இவ்வளவு போட்டு முடிவதற்குள்ளே ஏண்டா வந்தோம் சினிமாவுக்கு என்று ஆகிவிடுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட ஸ்லைடுகளுக்கு, ஃபிலிம்களுக்கு வரி விதிப்பதால் இந்த தலைவலி கொஞ்சம் குறையும் என்பதால் நீங்கள் எடுக்கிற முடிவை நான் அப்ரிஷியேட் பண்ணுகிறேன். அதிலே ஒன்றும் எனக்கு ஆட்சேபம் இல்லை— இன்னு சொல்லப்போனால் நான் இருந்தால் ஸ்லைடு காட்டக்கூடாது என்று சொல்லிவிடுவேன். ஃபிலிம், ஹிலிம் ஒன்றும் கிடையாது.

ஆனால் இவ்வளவு நாளாக என்ன பண்ணிக்கொண்டிருந்தீர்கள்? இதற்கு முன்னாலே இமயம் பீடி குடியுங்கள், நல்லா இருக்கும் என்று ஒன்று. அன்றைக்கு கடைக்காரர்கள் என்ன செய்வார்கள் என்றால் ஒரு சிலைடுக்கு 5 ரூபாய் கொடுக்கிறோம் என்பார்கள். தியேட்டர்காரர்களும் சரி என்று வாங்கி கையிலே போட்டுக் கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும் எங்களுக்குத்தான் வரியாகக் கொடுங்கள் என்று நீங்கள் கேட்கிறீர்கள். சரிதான் ஆனாலும் அதைப்போட ஒரு வரையறை வேண்டும். நிறையப் போட்டீர்கள் என்றால் எப்படி இருக்கும்.

(பிற்பகல் 1-00)

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எதற்கெடுத்தாலும் நம்முடைய மாநிலத்தோடு விட்டுவிட மாட்டார். அண்டை மாநிலத்தை ஒப்பிட்டுத்தான் பேசுவார். ஏனென்றால் அவர் தேசப்பற்று உடையவர். தேசிய நீரோட்டத்தை ஒட்டித் தான் பேசுவார். அப்படி அவர் சொல்கிற மாதிரியே பக்கத்து மாநிலங்களிலே என்ன நிலைமை? நம்முடைய மாநிலத்திலே என்ன நிலைமை? பக்கத்து மாநிலங்களிலேயும் சிலைடு காட்டுவதற்கு, பிலிம் போடுவதற்கெல்லாம் வரி போடுகிறார்கள். எப்படி போடுகிறார்கள்.

பஞ்சாபிலே பார்த்தால், ஒரு மாதத்திற்கு ஒரு சிலைடுக்கு ரூ. 12½. அதே மாதிரி பிலிமுக்கு ரூ. 10. டெல்லியிலே சிலைடுக்கு ஒரு மாதத்திற்கு 12 ரூபாய், பிலிமுக்கு 8½ ரூபாய். கர்நாடகத்திலே அதாவது பெங்களூரிலே சிலைடுக்கு 11 ரூபாய். பிலிமுக்கு ரூ. 7.13 காசு. உத்தரப் பிரதேசத்தில் சிலைடுக்கு ரூ. 10— பிலிமுக்கு ரூ. 5. ஆந்திராவிலே—ஹைதராபாத்திலே—அட உன்னாரு ராமாராவ் காரு—எவ்வளவு? ஒரு சிலைடுக்கு ரூ. 6.75



காசு. கர்நாடகா—அதாவது மைசூரிலே சிலைடுக்கு ரூ. 4 பிலிம் சுருளுக்கு 93 காசு. ஆந்திராவிலே. ராஜமுந்திரி— கதாநாயகிகள் அங்கேதான் இறக்குமதி—சிலடுக்கு ரூ. 4.50 காசு, விளம்பர பிலிம் சுருளுக்கு ரூ. 3.0 . கேரளா ஆலப்புழையிலே சிலைடுக்கு ரூ. 3.69 காசு, பிலிம் சுருளுக்கு ரூ. 12. ஆந்திராவிலே—நெல்லூர் பக்கத்திலே நமக்குப் பக்கத்திலே உன்னாரு — சிலைடுக்கு ரூ. 2.00 பிலிமுக்கு ரூ. 3.00. கேரளாவில் திருவனந்தபுரத்தில் — அங்கே பிரேம்நசீர்— சிலைடுக்கு 1.20 காசு பிலிம் சுருளுக்கு ரூ. 10; மகாராஷ்டிராவிலே அவர்கள் நம்மைப் போல அதிகமாக சினிமாக்கள் வைத்திருப்பவர்கள்—அங்கே சிலைடுக்கு மாதத்திற்கு 17 ரூபாய், பிலிம் விளம்பரத்திற்கு 75 ரூபாய்—ஏ கிளாஸ் தியேட்டர்களுக்கு, பி. கிளாஸ் தியேட்டர்களுக்கு 35 ரூபாய். பீகாரிலே சிலைடுக்கு ஒரு மாதத்திற்கு 17 ரூபாய். விளம்பர பிலிம் சுருளுக்கு 8 ரூபாய். நம்ப ஊரிலே ஒரு காட்சிக்கு ஒரு சிலைடுக்கு 30 காசு. விளம்பர பிலிம் சுருளுக்கு 90 காசு. வாரம் 28 காட்சி என்றால் ரூ. 8 40 பைச என்ற அளவில் மாதம் 36 ரூபாய் சிலைடுக்கும். விளம்பரச் சுருளுக்கு 108 ரூபாயும் வருகிறது.

ஆக மகாராஷ்டிராதான் சினிமா சம்பந்தப்பட்ட வகையில் நம்மோடு ஒத்து வரக்கூடிய ஒரு மாநிலம். அங்கே இந்திப் படங்களை நிறைய வெளிபிடுகிறார்கள். அங்கேயும் கூட பிலிமுக்கு 75 ரூபாய். நம்ப ஊரிலே 108 ரூபாய். ஆகவே, டபிளாக போட்டிருக்கிறீர்கள். இது முறைதானா. ஆகையினால் என்ன சொல்கிறேன் என்றால் விளம்பரப் படத்தை அதிகமாகக் காட்டுவதும் தப்பு. அவர்களுக்கு இந்த மாதிரி அதிக வரி போடுவதும் தப்பு. இரண்டையும் மீடியம் செய்கிற வகையில் வரிகளையும் குறைக்க வேண்டும்—இத்தனை சிலைடுகள் தான் போடவேண்டும் என்று வரையறை வைக்க வேண்டும். ஊரிலே இருக்கிற பெட்டிக் கடைகளிலேயிருந்து, குளிர்பான வசதிகள் வரையில் அரை மணி நேரம் சிலைடுகள் போடக்கூடாது. 12 சிலைடுகள் தான் போடவேண்டும். இத்தனை நேரம் பிலிம் ஓட்டலாம் என்று ஒரு மினிமம் வையுங்கள் இப்படிப் போட்டால் சின்ன சின்ன வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். பெரிய வியாபாரிகள், உதாரணமாக மொகிதீன் புகையிலைக்காரன் சினிமா பிலிம் எடுக்கக்கூடிய அளவுக்கே பெரிய பணக்காரனாகி விடுவான். இதிலே சின்ன வியாபாரி மாதத்திற்கு 108 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றால், எப்படிக் கொடுப்பான். என்னுடைய மேனியின் பளப்பளப்புக்கு காரணம், நான் தினமும் லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகிக்கிறேன் என்று பெரிய சினிமா கதாநாயகிகளை வைத்து, பெரிய சோப் கம்பெனிக்காரன் விளம்பரம் செய்வான். சின்ன சோப் கம்பெனிக்காரன் ரொம்பக் கஷ்டப்படுவான்.

நம்முடைய அவை உறுப்பினர் மாண்புமிகு சித்தன் அவர்கள் கதர் கிராம வாரியத்தில் விற்கப்படும் காந்தி சோப் பற்றிச் சொன்னார்கள். அது சின்ன கைத்தொழில், காந்தி சோப் விளம்பரத்திற்கு அதிகமாக பணம் செலவழிக்க முடியுமா?

முடியாது. காந்தியார் கஷ்டப்படலாமா? கஷ்டப்படக்கூடாது. காந்தியார் கூட படமாக வந்துவிட்டார். பாடமாக இல்லை என்றாலும் படமாக வந்திருக்கிறார். அவர் மனதிலே தான் சிலைடுகளின் எண்ணிக்கையையும் குறைக்கவேண்டும். அதனால் வரிகளையும் குறைக்க வேண்டும். இருக்கும் என்று சொல்கிறேன். அப்போதுதான் நன்றாக

சில நேரங்களில் உத்தரவு பேசுகிறீர்கள். ஆனால் அதிகாரிகள் மதிப்பதே இல்லை. உதாரணமாக, காம்பவுண்டிங் போட்டிருக்கிறீர்கள். அதை குறைக்க வேண்டும் டேக்ஸ் விரும்பினால், ஒரு குறிப்பிட்ட காலம் சொல்லி, உதாரணமாக 15 ஆம் தேதிக்குள் மனு கொடுத்தால் குறைக்கப்படும் என்று சொல்கிறீர்கள். அதே போல 7 சீட்டுகள் இருக்கும் ஒரு தியேட்டர் நிர்வாகி என்னால் அவ்வளவு கட்ட முடியாது ஆகவே 500 சீட்டுகளுக்கு கட்டுகிறேன், 250 சீட்டுகளை எடுத்து விடுகிறேன் என்று கேட்கிறார். அதற்கான மனு வை கலெக்டரிடம் கொடுத்துவிட்டு, அவர் 250 சீட்டுகளை எடுத்து விடுகிறார். ஆனால் என்ன நடக்கிறது. 20 ஆம் தேதியன்று காம்பவுண்டிங் டேக்ஸுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிடுகிறது. கலெக்டரிடம் 15 ஆம் தேதி மனு வந்திருக்கும், ஆனால் 16 ஆம் தேதி மனுநீதி கேட்க கலெக்டர் போய்விடுவார், மற்றொரு நாள் வறட்சி நிவாரணப் பணியைப் பார்க்க போய்விடுவார், 3 வது நாள் அவருடைய தலைமை ஹெட்குவார்ட்டர்ஸுக்கு போய்விடுவார் இப்படியே நாட்கள் போகும். ஆக, 15 ஆம் தேதியிலிருந்து 20 ஆம் தேதி வரையில் அவர் கொடுத்த மனு கலெக்டர் ஆபிசில் தூங்குகிறது. ஆனால் அதற்கும் சேர்த்து வரி வாங்குகிறீர்கள். கலெக்டர் அந்தச் சமயத்தில் இல்லாத தியேட்டர்காரரின் தப்பா? இல்லை. ஆனால் பல இடங்களில் என்ன செய்கிறார்கள் என்றால்; நாகர்கோவில் போன்ற இடங்களில் இருக்கிற கலெக்டர்கள், மனு செய்தால், குறைக்கவேண்டும் என்று கொடுக்கப்பட்ட ஆர்டரை ஓபே பண்ணுவதே இல்லை. நாங்கள் 750 சீட்டுகளுக்கும் பே பண்ண மாட்டோம், அதனால் கொஞ்சம் சீட்டுகளை குறைத்துக் கொள்கிறோம் என்று மனு கொடுத்தாலும் அவர்களுக்கு சீட்டைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதேயில்லை. அந்த கலெக்டர் இதுவரையிலும் யாருக்கும் சீட்டைக் குறைப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் சட்டம் போட்டதற்குப் பிறகும் கூட ஒரு தியேட்டர்காரன் நான் சீட்டைக் குறைத்துக் கொள்கிறேன் என்று சொல்லி மனு கொடுத்தாலும் அதை ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர் எடுக்கவில்லையே ஏன்? ஊட்டியிலே குறைத்துவிட்டனர். அது மலை மேலே இருக்கின்றது. ஆனால் நாகர்கோயில் கோட்டையிலே இருக்கின்றது. இரண்டு கலெக்டர்களிலே ஒரு கலெக்டர் மட்டும் எடுக்கிறார், இன்னொரு கலெக்டருக்கு அந்தச் சட்டம் பாயவில்லையே ஏன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று நான் அவரிடத்திலே கேட்டுக் கொள்கிறேன் ஆகவே சீட்டை குறைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இவ்வளவு அதிகமான வரியைப்



போட்டால் சினிமாக்காரர்களுக்குக் கூட கொஞ்சம் வருத்தத்தை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், அவர்களுக்கு வரி போடுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அதற்கு ஒரு வரைமுறை தேவை. 108 ரூபாய் போட்டிருக்கிறீர்களே விளம்பரத்திற்கு, அவன் என்ன செய்வான்? பெரிய பணக்காரன், வசதி உள்ளவன், இன்கம் டாக்ஸ் அதிகமாகக் கொடுக்கிறவன் எப்படியாவது கணக்குக் காட்டவேண்டும் என்பதற்காக இந்த மாதிரி படமாக எடுத்து அவன் கட்டுவானே தவிர சிறு தொழில்களிலே இருப்பவர்கள் கஷ்டப்படுவார்கள். ஆனால் விளம்பரம் இல்லாமல் இந்த நாட்டிலே எதுவும் நடக்காது, எல்லாவற்றுக்கும் விளம்பரம் தேவை. பொதுக் கூட்டத்திலே இன்னார் 6 மணிக்குப் பேசுவார் என்று நோட்டீஸ் போட்டுக் கொடுத்தால் தான் ஜனங்கள் வருகிறார்கள். அதுவும் ஒரு விளம்பரம்தான். இங்கே பேசிய உடனே பத்திரிக்கைகாரர்கள் போடுகிறார்களா என்று பார்க்கிறோம் அதுவும் ஒரு விளம்பரம்தான். எனவே விளம்பரம் இல்லாதது எதுவும் கிடையாது. ஆண்டவனுக்குக் கூட விளம்பரம் தேவை. கலியுக அவதாரம் முருகன். இருக்கின்ற குறைகளை எல்லாம் தீர்த்துவிடுவான், திருத்தணிக்கு நீங்கள் வந்தால் சகலவிதமான நோய்களையும் தீர்ப்பான் என்று விளம்பரம் பண்ணுகிறோம். ஆகவே ஆண்டவனுக்கே விளம்பரம் தேவைப்படுகின்றது. எனவே விளம்பரத்தை விரும்பாதவர்கள் யாரும் கிடையாது. விளம்பரம் செய்தால்தான் உருப்படும். ஆனால் அதற்காக அதிகமான வரி போட்டு நசுக்கக்கூடாது. எனவே இத்தனை சிலைடுகள் இத்தனைப் படச் சுருள்கள் என்று ஒரு வரைமுறையை ஏற்படுத்திவிட்டு இந்த வரியையும் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய கருத்தைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான வரி என்று நான் கூறுகிறேன். சினிமா தியேட்டரிலே விளம்பரச் சுருள்களையும், சிலைடுகளையும் போடுவதற்கு வரி போடுகின்ற வகையில் அரசங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சினிமா தியேட்டரிலே அதிகமான சிலைடுகளையும் விளம்பரச் சுருள்களையும் போடுகிறார்கள். அதைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் அதே நேரத்திலே வரியைக் குறைக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். ஆனால் பெரிய சினிமாத் தியேட்டர்களுக்கு வேண்டுமானால் வேறு வகையிலே வருமானம் கிடைக்கும். ஆனால் சினிமா தியேட்டர்களுக்குக் குறிப்பாக [illegible] நகரங்களில் இருக்கக்கூடிய சினிமா தியேட்டர்களில் [illegible] சிலைடு மூலமும் விளம்பரச் சுருள் மூலமும் [illegible] வருமானம் என்பதுதான் அவர்களைப் பொறுத்த [illegible] பெருத்த வருமானம். அதையும் அவர்கள் இழந்து [illegible] விட்டால் அவர்களுக்கு பெரிய நஷ்டம் வரும். [illegible]

அரசாங்கம் போட்டிருக்கின்ற வரி என்பது சிறிய தியேட்டர்களைப் பெருமளவுக்குப் பாதிக்கக்கூடியது என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒவ்வொரு சிலைடுக்கும், ஒவ்வொரு காட்சிக்கும் 30 பைசா வரி, விளம்பரச் சுருள்களுக்கு 90 பைசா என்று நீங்கள் வரிவிதித்திருக்கிறீர்கள். இதன் மூலம் தமிழ்நாட்டிலே ஒவ்வொரு தியேட்டரும் ஒவ்வொரு மாதமும் 36 ரூபாய் வரி கட்ட வேண்டும். ஆனால் அவர்கள் சிலைடுக்காக வசூலிப்பது 20 ரூபாய்க்கு மேலே இல்லை. அப்படி 20 ரூபாய் வருமானம் வருகின்ற சிலைடுக்கு 36 ரூபாய் வரி கட்ட வேண்டும். மற்ற மாநிலங்களிலே எப்படி இருக்கின்றது என்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கின்ற காரணத்தால் நான் அந்த விவரங்களுக்குப் போக விரும்பவில்லை.

இன்னொன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். சென்னை, மதுரை போன்ற கார்ப்பரேஷன்களில் அவர்கள் தனியாக வரி போடுகிறார்கள். ஒரு சிலைடுக்கு ஒரு மாதத்திற்கு 15 ரூபாய் அப்படி முனிசிபல் கார்ப்பரேஷன்களில் வரி போட்டு அதற்கும் மேலே நீங்களும் வரி போடுகிறீர்கள். அதனால் சிறிய சினிமா தியேட்டர்களின் நிலைமை என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை என்னாலே ஏற்க முடியவில்லை. தியேட்டர்களில் போடுகின்ற விளம்பரங்களைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். சாதாரணமாக நம்முடைய பத்திரிக்கைகள் எல்லாம் பாதிக்கு மேலே ஏறத்தாழ 60,70 சதவீதம் விளம்பரங்கள் வருகின்றன. இன்றைக்குப் பத்திரிக்கைக் காகிதம் இருக்கக்கூடிய விலையிலே அப்படி செலவு மற்றவைகளை எல்லாம் பார்க்கின்றபோது விளம்பரம் இல்லாமல் எந்தப் பத்திரிக்கையையும் நடத்த முடியாது. ஆகவே விளம்பரம் என்பது பத்திரிக்கைகளுக்கு எவ்வளவு முக்கியமான வருமானமோ அதைப்போல் சினிமா தியேட்டர்களைப் பொறுத்த வரையில் சிறு தியேட்டர்களுக்கு இந்த சிலேடுகள் மூலமும், விளம்பரச் சுருள்கள் மூலமும் வருகின்ற வருமானம் என்பது முக்கியமானது. இன்றியமையாதது.

(பிற்பகல் 1–10)

பல [illegible]ண்டுகளுக்கு முன்னாலே ஒன்றுபட்ட சென்னை மாநிலத்திலே நிதி அமைச்சராக இருந்த மாண்புமிகு கோபால் ரெட்டி அவர்கள் பத்திரிக்கைகளில் வழங்கப்பட்ட விளம்பரங்களுக்கு அவர் இது போன்ற வரியை விதித்து இருந்தார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது அன்றைக்கு பத்திரிகைகள் பூராவும் ஒன்று சேர்ந்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. எல்லா பத்திரிக்கைகளும் [illegible] தலையங்கங்களை எழுதாமல் வெறும் வெற்று [illegible] நாளிலே [illegible]





விளம்பரத்திற்கு போடப்படுகின்ற இந்த வரி என்பதை சுட்டிக்காட்டின. பின்னால் மாண்புமிகு கோபால் ரெட்டி அவர்கள் அந்த வரியை திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். ரத்து செய்தார்கள் என்பதை நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதைப போலவே சிறு தியேட்டர்களை பாதிக்கக்கூடியது இந்த வரி என்பதையும் இன்றைய நிலையில் இது அதிகமான வருமானத்தை அளிக்கப் போவது இல்லை. இதன் மூலம் சிறிய தியேட்டர்களின் உரிமையாளர்கள் பெரும் அளவுக்கு பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தாலும் அதே நேரத்தில் சிலைடு செய்பவர்கள் எல்லாம் சாதாரண தொழிலாளிகள். சிலைடு செய்து கொடுப்பதன் மூலம் ஆங்காங்கே அவர்கள் வீடுகளில் சின்ன கடைகள் மாதிரி வைத்துக்கொண்டு சிலைடு செய்யும் தொழிலாளிகள் தமிழ்நாடு பூராவும் எல்லா நகரங்களிலும் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையை இது பெரும் அளவுக்குப் பாதித்து விடும் நீங்கள் வரி போட்டால் சிலைடு போடுவது குறையும், சிலைடு போடுவது குறைந்தால் இந்த சிலைடு தயாரிக்கும் தொழிலாளர்களின் எதிர்காலம் பாதிக்கும். ஆக இப்படி பல அம்சங்களினால் இந்த வரியின் மூலம் எல்லோரும் பாதிக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் இந்த வரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்தி கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவையின் தற்காலிக தலைவர் அவர்களே, இந்த விளம்பர வணிகர்களுக்கு என்று இங்கே இந்த வரி விதிக்கப்படுகிறது. இன்றைக்கு ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னது போல் இன்றைக்கு கிராம பஞ்சாயத்துகள் அல்லது சாதாரண முனிசிபாலிடிகள் போன்ற இடங்களில் எல்லாம் அந்த தியேட்டர்களுக்கு இப்படி இந்த சிலைடுகாரர்கள் நேரடியாக கொடுக்கக் கூடியவர்களுக்கு இது ஒரு வருமானமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நீங்கள் இன்றைக்கு ஒவ்வொரு காட்சிக்கும் வரி என்று போடுவதன் மூலம் இந்த விளம்பரங்களை ஒழித்துக் கட்டுவதற்குத்தான் [illegible] கொண்டு போய் இது விடும். இது நல்ல ஒரு வழி காட்டியாக இருக்காது. அதோடு இன்றைக்கு சினிமா தியேட்டர்களில் இவர்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய பல்வேறு வரியின் காரணமாக அவர்கள் தியேட்டரில் [illegible] அக்கிரமங்கள் நடந்தாலும் அதை கவனிப்பது இல்லை. உதாரணமாக சொல்கிறேன். ஒவ்வொரு தியேட்டரிலும் [illegible] சோடா, கலர் மற்ற சில்லறைப்பொருட்கள் [illegible] கடைகள் இருக்கின்றன. அந்த கடைகளிலே ஒரு 14 [illegible] கிடைக்கக்கூடிய பொருட்களை 1½ ரூபாய்க்கு [illegible] விற்கிறார்கள். நானே [illegible] 2 நாட்களுக்கு முன்னால் ஒரு சினிமா தியேட்டருக்கு போயிருந்தேன். அங்கே [illegible] ரூபாய் [illegible] [illegible] ஒரு [illegible] கேட்கும்போது [illegible] என்று சொல்கிறார்கள். இது [illegible]

போன்ற முனிசிபாலிடிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இதுபோன்ற வரிவிதிப்பை விதித்து அதன்மூலம் அரசுக்கு கூடுதல் வருமானம் வரும் என்ற முறையிலே எடுத்து உள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அனைத்து மாற்றுக்கட்சி பெருமக்களும் இந்த மாநிலத்தின் வரிவிதிப்பை மற்ற மாநிலங்களில் இருக்கிற வரிவிதிப்போடு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்குமானால் நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து—மற்ற மாநிலங்களில் இருக்கிற வரிவிதிப்பை விட நம்முடைய மாநிலத்திலேயும் அதுபோன்ற நிலையை ஏற்படுத்த வேண்டுகிறேன். குறிப்பாக எங்கள் பகுதியில் உள்ள காஞ்சிபுரம் போன்ற நகரங்களிலும் சென்னையிலே விதிக்கப்படுகிற 108 ரூபாய் போன்று வரி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற நிலைமை இருக்குமானால் அந்தத் தொழில்களின் வருமானம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அந்தத் தொழில்களால் நகராட்சிகளுக்குக் கிடைக்கிற வருமானமும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே வருமானத்தின் அடிப்படையில் இந்த வரிவிதிப்பை போடுவதற்கும் கார்ப்பரேஷன், ஸ்பெஷல் கிரேடு, செலக்ஷன் கிரேடு, முதல் கிரேடு, முனிசிபல் நகரங்களுக்கு முறையான வித்தியாசம் வரிவிகிதத்தில் செய்து தரவும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி இந்த மசோதாவை நான்வரவேற்கிறேன். நன்றி வணக்கம்.

(பிற்பகல் 1–20)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சினிமா கொட்டகைகளில் விளம்பர சிலைடுகளுக்கு போட்டிருக்கிற வரி சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக மக்களுக்கு என்னென்ன வழிவகைகளில் வரியை போடமுடியுமோ அந்த அளவிற்கு வரிகள் போடப்படுகிறது. சிலைடுகளுக்கு போடுகிற இந்த வரி கூட, அந்த சிலைடுகளால் என்னென்ன பொருள்களை விளம்பரப்படுத்துகிறார்களோ—துணியின் பெயரால் விளம்பரப்படுத்துவார்கள், இன்னும் மற்ற மற்ற பொருள்கள் சம்பந்தப்பட்ட விளம்பரங்களைச் செய்கிறபோது—அந்த விளம்பரத்திற்கு போடுகிற வரிகள், பொருள்களை வாங்குகிற மக்கள் தலையிலேதான் போய் விழும் சிலைடுகளை சாதாரணமக்கள் தான் தயார் செய்கிறார்கள். அதற்கு வரி போடுகிறபோது அந்த வரியை சினிமாக் கொட்டகைகாரர்கள் வசூலித்துக் கட்டினாலும், சம்பந்தப்பட்டவர்கள்தான் இந்த வரியை கொடுக்கிற நெருக்கடி ஏற்படுகிறது. இன்றைக்கு சின்ன, சின்ன விளம்பரங்கள் எல்லாம் வருகின்றன. ஜவுளிக்கடை விளம்பரங்கள் மற்ற பொருள்கள் என்று விளம்பரங்கள் செய்கிறபோது, இந்த வரிவிதிப்பின் மூலமாக அரசாங்கத்திற்கு என்ன வருமானம் கிடைக்கப் போகிறது? சினிமாக் கொட்டகைகளில் [illegible] இந்த விளம்பரங்கள் வெகுவாக [illegible] விளம்பரங்களுக்கு ஒரு மாதத்திற்கு [illegible]



ஒரு சுருள் விளம்பரம் செய்யவேண்டுமென்றால் 12 ரூபாய் என்றும் வரிபோட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் சேர்த்துக் கட்டக்கூடியவர்கள் சினிமா கொட்டகைக்காரர்கள். அதைப்போல சினிமா கொட்டகைகளில் சின்ன, சின்ன சாமான்கள் விற்பனைக்கு வருகின்றன. ஆனால் 10 பைசாவிற்கு வாங்கக்கூடிய பொருள் அங்கே 50 காசு என்று விற்கப்படுகிறது. காரணம் கேட்டால் சினிமா கொட்டகைகளில் அதிகமாக கட்டணம் பெறுகிறார்கள். ஆகவே அதிகமாக விலை வைத்து விற்க வேண்டிய கட்டாயம் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நான் சொல்லிக் கொள்வது அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் இதன் மூலம் கிடைக்கப் போவதில்லை. விளம்பரங்கள் அதிகமான அளவிற்கு குறைந்துவிடும் விளம்பரங்களை கொடுக்காமல் சிறு வியாபாரிகள் நிறுத்தி விடுவார்கள் ஆகவே இந்த விளம்பர வரியை உடனடியாக அமைச்சரவர்கள் திரும்பப்பெற்று, இதனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பாபு. ஜனார்த்தனன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பு விஷயமாக இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட்டாலும் நலமாக இருக்குமென்று கருதுகிறேன். சிலைடு போன்றவைகளுக்கும், மற்ற படச் சுருள் போன்றவைகளுக்கும் வரிகள் போடப்படுவதை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட்டாலும் நலமாக இருக்கும் இந்த நேரத்தில் நான் ஒன்றை மனம்விட்டு வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். அதிகாரிகள் அமைச்சர் அவர்களை தவறான வழியில் கொண்டுபோயிருக்கிறார்கள். காம்பவுண்ட் டாக்ஸ் கொட்டகைகளுக்குப் போடுகிறார்கள். அதற்கு பிறகு அவர்கள் மாமூல் வாங்குகிறார்கள். கீழே டி.சி.டி.ஓ விலிருந்து. மேலேயிருக்கிற அதிகாரிகள் வரை இந்த மாமூல் போகிறது. காம்பவுண்ட் டாக்ஸ் போட்ட பிறகு, ஒரு கொட்டகைக்கு 500 ரூபாய், 1,000 என்று விதித்த பிறகு டி.சி.டி.ஓ. ஏன் அங்கே செல்ல வேண்டும்? சி.டி.ஓ. ஏன் அங்கே செல்லவேண்டும்? காரணம் அங்கே சென்று அக்காமடேஷன் பார்ப்பது, அக்காமடேஷன் என்று சொல்லி அவர்களை மிரட்டுவது; மிரட்டி சின்ன கொட்டகையிலிருந்து, பெரிய கொட்டகை வரை மாமூல் வாங்குவது இருக்கிறது. இந்த பழக்கம் கீழே இருந்து மேலே வரை இருக்கிறது அதை நிரூபிக்க வேண்டுமென்றால் நான் இதை சவாலாக கூட ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே சிலைடுகளுக்கு வரியாக 30 நாட்களுக்கு 36 ரூபாய்விதிக்கப்படுகிறது. ஆனால் சிலைடுகளிலே வருகிற வருமானம் ஒரு கொட்டகைக்கு 20 ரூபாய்தான், மற்ற இடங்களிலே, ரூபாயில் 17 சதவீதம் என்று சொன்னால் ரூ. 3.40 தான் வரி விதிக்கப்படுகிறது. நான் வரி விதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை கடைசியாக வருமானத்தின் அடிப்படையில் இதைப் போடவேண்டும். கார்ப்பரேஷன், ஸ்பெஷல் கிரேடு, முதல் கிரேடு, செலக்ஷன் கிரேடு என்று [illegible] வகையிலே வரிகளை விதிக்கப்பட வேண்டும். [illegible] இருக்கிற பேரூராட்சியில் பஞ்சாயத்துகளில் [illegible] கொட்டகைகளில் [illegible] நகரங்களில் [illegible]

அநியாயம் என்று கேட்டால் அது அப்படிதான் சார், என்ன
செய்வது எவ்வளவு வரி நாங்கள் செலுத்த வேண்டியிருக்கிறது
என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே இந்த மாதிரியான
சாதாரண சிலைடுகளுக்கு எல்லாம் வரி போடுவது கூடாது.
ஒரு பெரிய ஜவுளி வியாபாரி 15 நிமிடம் ஓடக்கூடிய
படத்தை எடுத்துக் காட்டுகிறார்கள் என்று சென்னால்
அதற்கு வரி போடுங்கள் அதைப்பற்றி நாங்கள் ஆட்சேபணை
செய்யவில்லை. சிலைடுக்கு வரி என்று சென்னால் சாதாரணமாக
இன்றைக்கு விளம்பரம்தான் நம் நாட்டில் மிக முக்கியமாக
இருக்கிறது. அந்த விளம்பரத்தை ஒடுக்கக்கூடிய இந்த வரி
விதிப்பு இருக்கக் கூடாது, அதுவும் வினாடிக்கு வினாடி வரி
என்று சொல்கிறீர்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பின்வாங்கிக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இதை எதிர்த்து கோர்ட்டுக்கு கூட போக
முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இது தேவையில்லை.
ஆகவே சிலைடுக்கு போடக்கூடிய இந்த வரியை வாபஸ் வாங்கிக்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை
முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த விளம்பர வரி சட்டமுன்
வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்பு
கிறேன். சில நாட்களுக்கு முன்னால் நம்முடைய வணிக வரியின்
மீது கொடுத்து இருந்த வெட்டு தீர்மானத்தின் மீது
பேசுகின்ற நேரத்தில் நான் இதை கண்டித்து சொல்லி
யிருந்தேன். இந்த அரசு இன்றைக்கு இரண்டு புதிய வரி
விதிப்புகளை போட்டிருக்கிறது. ஒன்று நுழைவு வரி என்று
சொல்லியும், இன்னும் ஒன்று இந்த விளம்பரங்களின் வரியினை
புதிதாக இந்த ஆண்டு கொண்டு வந்திருக்கிறது. நுழைவு
வரியைப்பற்றி அப்புறம் பேசுவோம். எனக்கு முன்னாலே பேசிய
மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் இந்த வரி
விதிப்பினால் அரசாங்கம் எதிர்பார்க்கிற அளவுக்கு அதிகமான
வருமானம் வருமா என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. வருமானம்
வரவேண்டிய பல்வேறுத் துறைகளை அரசாங்கம் விட்டுவிட்டு
இந்த சிறிய தொழில்களை நடத்துகிறவர்களுக்குத் தொல்லை
தரக்கூடிய முறையிலே சிலைடுக்கும் படச்சுருளுக்கும்
விளம்பரத்திற்கான வரி அவசியமா என்பதை நான் கேட்க
விரும்புகிறேன். இதிலே இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற
வரிவிதிப்பின் மூலமாக பார்ப்பதற்கு எளிதாக இருக்கிற காட்சி
ஒன்றுக்கு 60 காசும் [illegible] படச்சுருளுக்கு ரூ. 1.50
காசும் என்று போட்டிருந்தா [illegible]
தியேட்டர் உரிமையாளர்கள் [illegible]
சிறிய தொழில்க [illegible]
[illegible]யும் என [illegible]
[illegible]ர்களிலே இ [illegible]





எவ்வளவு போடப்படுகிறதோ அந்த அளவுத் தொகையே சிறிய
திரையரங்குச் சொந்தக்காரர்களும் கொடுக்க வேண்டியிருக்
கிறது என்று நான் அறிகிறேன். சென்னையிலே வருடத்திற்கு
சிலைடு ஒன்றுக்கு வரி 432 ரூபாய் என்று சொன்னால்
தாம்பரத்திலும் பழனியிலும் அதே போல் 432 ரூபாய் என்பது
முறையாகாது, நியாயமாகாது. அதேபோல் விளம்பரத்திற்கு
சென்னையிலே இருக்கிற திரையரங்கிற்கு 108 ரூபாய [illegible]
சொன்னால் திருவண்ணாமலையிலேயும் அதே தொகை என்று
சென்னால் எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டு
மென்ற கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகன் அவர்கள் சொன்னதைப்போல் நுழைவு வரியைப்
பற்றி நம்முடைய அமைச்சர் இங்கே சொல்லுகிறபோது
காங்கிரஸ் கட்சி [illegible]ளுகின்ற மாநிலங்களிலே அப்படி
எல்லாம் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், அதற்கு
அந்த நேரத்திலே நாங்கள் பதில் சொல்கிறோம், [illegible]
ஏனைய மாநிலங்களையெல்லாம் உதாரணமாக எடுத்துக்
கொள்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த சிலைடு
விளம்பரத்தைப் பொறுத்தவரையிலும் பிற மாநிலங்களில் இருக்கிற
வரிவிதிப்பை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு சிலைடுக்கும் படச்
சுருளுக்கும் போட்டிருக்கும் வரியானது எந்தவிதத்திலேயும்
நியாயமானதல்ல, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும்
கூட இந்த அளவுக்கு உயர்த்தப்படவில்லை என்பதைத் தெரிவித்து
கொள்கிறேன். மகாராட்டிரம், பீகார் ஆகிய மாநிலங்களிலே
வருமானத்தின் அடிப்படையிலே 17 சதவீதம் என்று போடப்பட்டு
இருக்கிறது. அதை கொஞ்சம் எண்ணிப்பார்த்து 17 சதவீதம்
அதற்குக் குறைவாக போட்டால் ஓரளவுக்குத் தாங்கிக்கொள்ள
முடியும். அன்றைக்கே அமைச்சர் அவர்களிடம் நான்
சொன்னேன். இது டபுள் டாக்ஸிற்கு வழிவகுக்காதா, சென்னை
போன்ற மதுரை போன்ற நகரங்களிலே உள்ளாட்சி மன்றங்களிலே
சிலைடுக்கு 15 ரூபாயும் படச்சுருளுக்கு 7 ரூபாயும் காட்சி
ஒன்றுக்கு வசூலிப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படிச் சொல்கிற
நேரத்திலே நாமும் வரிப் போட்டுவிட்டால் இரட்டிப்பு
வரியாகாதா? நீதிமன்றத்திலே இது நிற்குமா? என்ற ஐயம்
எனக்கு இருக்கிறது. ஆகவே எந்த விதத்திலேயும் இது
நியாயமில்லாத வரிவிதிப்பு அமைச்சர் அவர்கள் இதைத் திரும்ப
பெற்றுக்கொள்ள வேண்டும், திரும்பப்பெற்றுக் கொள்வதிலே
அவருக்குச் சிரமம் இருக்குமானால் அந்தக் கட்டணத்தை
வருமானத்தின் அடிப்படையில் அமைக்கவேண்டுமென்று கேட்டு
கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. [illegible] வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கொட்டகைகளிலும். மிக கஷ்டமான நிலையில் கொட்டகைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பட்ட வரிகளை விதிப்பதை விட்டு, அந்த தொழில் நாசமாவதை தவிர்த்து அதிகாரிகள் பேச்சைக் கேட்டு இப்படி வரி விதிப்பதை விட்டு அமைச்சர் அவர்கள் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த வரி விதிப்பை நான் வன்மையாக கண்டிக்கிறேன் என்பதை கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் பேசுகின்றபொழுது பல்வேறுபட்ட உறுப்பினர்கள், கருத்தை சொல்கிறபோது இருவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள். சில உறுப்பினர்கள் இதைத் திரும்பப்பெற்றுக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள் கடைசியாக பேசிய திரு. பாபு ஜனார்த்தனம் அவர்கள் இதைச் சீரமைக்க வேண்டும். சீரமைப்பதற்காக பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று சொன்னார்கள். அதனால், இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. ஆனால், வரி போடுவது நியாயம்தான். அதைச்சீரமைப்புச் செய்யவேண்டும்........

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையிலே, குடும்பக் கட்டுப்பாடு விளம்பரங்கள், பொதுக் கூட்ட விளம்பரங்கள், எல்லாம் ஸ்லைடாகப் போடப்படுகிறது. மற்றவைகள் அவைகளுக்கெல்லாம் வரி உண்டா? அரசாங்கத்தால், அல்லது, ஏதாவது விதி விலக்கு உண்டா?

திரு. பாபு ஜனார்த்தனன்: ஃப்ரீயாகத் தான் போடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் இதைச் சீரமைக்க வேண்டும், பொறுக்கு குழுவுக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள். சில உறுப்பினர்கள் பேசுகிறபொழுது திரும்பப் பெற வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகிறபொழுது, எங்கே நான் திருப்பிப்பெற்று விடுவேனோ என்ற பயத்தில், திருப்பிப் பெறவேண்டாம். நீங்கள் குறைத்தால் போதும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொல்கிற பொழுதுகூடக் குறைத்தால் போதும் என்று சொன்னார்கள். இன்னொன்று அவர்கள் சொன்னார்கள், சீட்டுக்களை குறைக்க வேண்டுமென்று. சட்டத்திலே எப்படி இருக்கிறதென்றால், குறைக்க வேண்டுமென்றால், குறைந்து விடலாம். குறைத்த பிறகு அதிகாரிகள் போகாதபொழுது, மூவிங் சேர்—வேண்டும் போது எடுத்துக் கொண்டு போய் போடலாம் என்று—அதைக் கொண்டுபோய் போடுவார்கள். அதற்காக சீட்டைக் குறைக்க வேண்டுமென்றால், குறைத்த பிறகு அந்த இடத்திலே பதிலாக இருக்கைகள் போட்டு அமர முடியாத அளவுக்கு,



பர்மனென்ட்டாக மாற்றி அமைக்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. இதை நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, தெரிவிக்கிறேன். எங்கெங்கே சீட்டுகளைக் குறைக்க வேண்டுமோ அங்கே எல்லாம் குறைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று தெரிவிக்கிறேன்.

இன்னொன்று, மணி 1.30 மணியை நெருங்குகிறதே என்பதற்காக வேடிக்கையாகச் சொன்னார்கள், மாண்புமிகு அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள். விளம்பரம் என்று சொல்லும்போது அங்கே தேவையில்லாமல் அதிகமாக விளம்பரம் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு விளம்பரங்கள் நிச்சயமாக எல்லவற்றுக்கும் வேண்டும் என்று சொன்னார்கள். பொதுக் கூட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். பொதுக் கூட்டத்திற்குப் போகிறபொழுது, நல்ல கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்பதற்காக, கூட்டம் இல்லாவிட்டால், என்ன செய்வது என்பதற்காக, விளம்பரம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், விளம்பரமே விரும்பாதவர்கள், விளம்பரம் விரும்புவதாகச் சொன்னார்கள். ஆனால், உலகத்திலே விளம்பரத்தை விரும்பாதவர் யார் என்று சொன்னால்.....

திரு. துரைமுருகன் : நீங்கள்தான். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆண்டவன்தான். ஆண்டவனைக் கற்பித்தவர்கள் விளம்பரத்தைச் செய்கிறார்களே ஒழிய......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆண்டவனுக்குப் பாமாலையும் கீர்த்தனையும் ரொம்பத் தேவைப்படுகிறதே, பாடுகிறார்களே.....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறுகிறபொழுது அங்கே கூட்டம் வராவிட்டால் ஏன் தனியாக விளம்பரம் செய்யவில்லையென்று கேட்பார்கள் என்றார்கள். கேட்பது நியாயம். ஆனால், ஆண்டவன் சுற்றுப் பயணம் வருகிறபொழுது, கூட்டம் வராவிட்டால் ஏன் இதைச் சரியாக விளம்பரம் செய்யவில்லையென்று யாரும் கேட்பதில்லை. ஆண்டவனைக் கற்பித்தவர்கள்தான் விளம்பரம் செய்கிறார்கள். துரைமுருகன் ஏன் இங்கே உண்மைக்கு மாறானதைச் சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. எப்பொழுதும் உண்மைக்கு மாறானதைப் பேசிப் பேசி பழக்கப்பட்டுவிட்டு. இதையும் சொல்லிவிட்டார்களோ, என்னவோ....

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் விளம்பரத்தை விரும்பாதவன் என்று அமைச்சர் சொல்கிறார். ஆண்டவன் விளம்பரத்தை விரும்புகிறானா இல்லையா என்பது அவருக்கே தெரியும். ஏன் என்று கேட்டால் ஆண்டவனே தன்னுடைய பெருமைகளைச் சொல்லுகின்ற கீதை. பரமாத்மாவும் நானே ஜீவாத்மாவும் நானே, ஜீவாத்மாவும் நானே என்று சொல்வதுதான் கீதை....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவர்களைப்பற்றி பேசக் கூடாது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆண்டவன் எங்கேயும் இருக்கிறார் என்று இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: நாட்டை ஆண்டவர்கள் சபையில் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாட்டை ஆண்டவர் களும் இருக்கிறார்கள், ஆண்டவனும் இருக்கிறான்.

திரு. துரைமுருகன் : ஆகவே, ஆண்டவன் தன்னைப் பற்றி விளம்பரம் செய்து கொள்ளவில்லை என்று பொருள் அல்ல.

எந்தப் புராண இதிகாசங்களைப்பார்த்தாலும் தாங்கள் செய்த போர்கள். பெருமைகள், லீலைகள் இவைகளைத்தான் சொல்லி யிருக்கிறார். ஒன்று மட்டும் ஒத்துக் கொள்கிறேன். அவர் சொன்னதற்கு அவருடைய ஏஜண்டுக்கு இன்றைக்கு அவரை விடப் பெரிய படம் போட்டு, சாமியாரைச் சின்னதாகப்போட்டு இவரைப் பெரிதாகப் போட்டு ஒட்டிக்கொள்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதி யுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சபையில் இல்லாத ஆண்டவனைப் பற்றி பேசக் கூடாது என்று சொன் னார்கள். அவையிலே இல்லாத ஆண்டவனைப் பற்றிப் பேசலாம்; ஆண்டவனைப் பற்றிக் குற்றச்சாட்டு சொன்னால் தான் அவர் வந்து பதில் சொல்ல முடியாத சூழ்நிலை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப்பற்றி நான் ண்ட நேரம் சொல்ல வேண்டியதில்லை. ஆஸ்தீகப்படி சொல்ல வேண்டுமென்றால் அவர் எங்கேயும் நிறைந்திருக் கிறார்; ஆகையினால் இங்கேயும் இருக்கிறார், ஆகையினால் பேசலாம். நாஸ்தீகப்படி என்றால் அவர் இல்லை; அவர் இங்கேயும் இல்லை; ஆகவே, இல்லாததைப்பற்றிப் பேசலாம். பேசுவதற்கு எல்லாவிதத்திலும் உரிமை இருக்கிற . ஆண்டவன் இல்லை என்று சொன்னால் எங்கேயும் இல்லை; இ லாதவரைப் பற்றிப் பேசுகிறோம். ஆண்டவன் இருக்கிறார் என்றால் எங்கும் நிறைந்திருக்கிறார்; அவரைப்பற்றிப் பேசலாம். கையினால் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவை யில்லை என்று கருதுகிறேன்.



இங்கே பேசுகின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொல்கின்றபொழுது, இந்த விளம்பர வரி யினால் விளம்பரங்கள் செய்வதில் தடை ஏற்படும் என்று சொன்னார்கள். அதைத் தடை ஏற்படாத அளவிற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு கவனிக்கும்.

சிறிய திரையரங்குகளெல்லாம் இதனாலே பாதிக்கப்படும் என்று சொன்னார்கள். சிறிய திரையரங்குகள் நிச்சயமாகப் பாதிக்கப்படாது. ஏனென்றால் இது பெரிய நகரங்களுக்குத் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். கார்ப்பரேஷனுக்குக் கொண்டு வந்திருக் கிறோம்: ஃபர்ஸ்ட் க்ளாஸ் முனிசிபாலிட்டி, செலக்ஷன் க்ரேட் அன்ட் ஸ்பெஷல் க்ரேட் முனிசிபாலிட்டிகளுக்குத்தான் கொண்டு வருகிறோம். ஆகவே, இது பாதிக்கப்படாது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவரவர்களே, சென்னையைப் போன்ற நகரத்திற்கும், தாம்பரம் போன்ற ஊர்களுக்கும் ஒரே அளவாக இருக்கின்ற காரணத்தினாலே அது எப்படி ஒன்றாக இருக்கும்?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர வர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி, இப்பொழுது உதாரணத்திற்காக எடுத்துக் கொண்டால், மெட்ராஸில் தேவி தியேட்டர் இருக்கிறது. அந்தத் தேவி தியேட்டருக்கு ஸ்லைடுகள் ரீல்கள் ஆகியவற்றிற்கு நீங்கள் பிக்ஸ் செய்திருக்கின்ற ரேட்டும், அதேபோல பழனி, திருவண்ணாமலை போன்ற இடங்களுக்கு நீங்கள் பிக்ஸ் செய்திருக்கின்ற ரேட்டும் ஒன்றாக இருக்கிறது. அது எப்படிச் சரியாக இருக்க முடியும்? இது மெட்ராஸ் சிட்டி; சிட்டியிலே இருக்கின்ற ஜனங்கள் போய்ப் பார்ப்பது வேறு அல்லது அதனுடைய காஸ்ட்லி அஃபேர் வேறு. ஆனால் அது ஒரு சாதாரண டவுன். இரண்டுக்கும் ஒரே வரி விதத்தை நிர்ணயிப்பது எப்படிச் சரியாகும்? அணுகுமுறை சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அன்புச் சகோதரர் துரைமுருகனுக்கும், ரகுமான்கானுக்கும் திருவண்ணாமலை தியம் என்றால் அதிகமாகப் பிடிக்கும்போல் இருக்கிறது. ஏனென்றால் எப்பொழுதும் திருவண்ணாமலைக்கே போய்க்கொண்டிருக் கிறார்கள். இதைப்பற்றி நீங்கள் சொல்வது என்றால், அண்ணா பாலத்திற்கு அடுத்த பக்கம் இருக்கின்ற ஒரு சிறிய சாதாரண தியேட்டர், அண்ணா பாலத்திற்கு இந்தப் பக்கத்தில் இருக்கின்ற தியேட்டர்; இப்படி இந்த இரண்டு தியேட்டர்களுக்கும் எவ்வளவு மாறுபாடு இருக்கிறது, இது எப்படிச் சரியாகும் என்று நேராகக் கூட நீங்கள் கேட்டிருக்க முடியும். ஏன் நீங்கள் எப்பொழுதுமே திருவண்ணாமலைக்குப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது.

[1983 ஏப்ரல் 22

தங்க சாமான்களும் ஆவுடையார் பாகத்தில் உடைந்துள்ள பச்சை நிற லிங்கமும் இருந்தது காணப்பட்டது. மேற்படி பொருட்களின் விவரம் பின்வருமாறு :—

1. பொன்கட்டி 1 சுமார் 4 அங்குல நீளமும் ஒரு பக்கம் வெட்டப்பட்டது.

எடை கிராம் 186-500 (தங்கம் 21 காரட் தன்மையுள்ளது) கிராம் 1-க்கு ரூ 160/- வீதம் மதிப்பு. ரூ. 29,840-00

2. பொன்கட்டி 1 சுமார் 7 அங்குல நீளமுள்ளது ஒரே உருக்குப் பாளம்.

எடை கிராம் 339-500 (தங்கம் 21 காரட் தன்மையுள்ளது) கிராம் 1-க்கு ரூ. 160/- வீதம் மதிப்பு. ரூ. 54,320-00

3. மட்டப்பொன் கட்டி சுமார் 3 அங்குல நீளமும் ஒரு பக்கம் வெட்டப்பட்ட கட்டி.

எடை கிராம் 303-000 (தங்கம் சுமார் 17 காரட் தன்மை உள்ளது) கிராம் 1க்கு ரூ 135/- வீதம் மதிப்பு. ரூ. 40,905.00

4. தங்க குந்தன சுருள் தகடுகள்:

(24 காரட் தன்மை உள்ளது) எடை கிராம் 68.000 கிராம் 1க்கு ரூ 165/- வீதம் மதிப்பு. ரூ. 11,220.00

5. பொன் முழுப்பவுன் காசுகள் 23 (ஒரு காசில் மட்டும் ஓட்டை உள்ளது.)

அரைப்பவுன் காசு 1.

மொத்த எடை கிராம் 188-000 கிராம் 1-க்கு ரூ 160/- வீதம் மதிப்பு. ரூ. 30,080.00

6. லோகல் மேடு கால் பவுன் காசு 1

எடை கிராம் 1.900 கிராம் 1-க்கு ரூ 160/— வீதம் மதிப்பு ரூ. 304.00



1983 ஏப்ரல் 22]

7. பொன் கம்பி 1 (22 காரட் தன்மை உள்ளது).

எடை கிராம் 2.000 கிராம் 1-க்கு ரூ. 160/— வீதம் மதிப்பு ரூ. 320.00

8. தங்கத் தாம்பாளம் 1 அடியில் 3 பாதம் வைத்தது.

(22 காரட் தன்மை உள்ளது) எடை கிராம் 422.000 கிராம் 1க்கு ரூ 160/— வீதம் மதிப்பு ரூ. 67,520.00

குறிப்பு : பின்புறம் கே வி. என்ற எழுத்து பொறிக்கப்பட்டு முன்புறம் நடராசர் உருவச்சிலை செதுக்கப்பட்டுள்ளது.)

9. பொன் மற்றும் வெள்ளி கலந்த தூள்கள் பொன் சங்கிலி துண்டுகள், கம்பிகள், துண்டுகள், வெள்ளி கம்பிகள், துண்டுகள் சிறிய உத்திராட்சங்கள், பவளம் 1, பலச்சை வைரம் 1, நல்முத்து 1 உட்பட

மொத்த எடை கிராம் 55.000

| | |
|---|---|
| 1. சிறிய குச்சை சிகப்பு | ரூ. 1.00 |
| 1. பலச்சை வைரம் மதிப்பு | ரூ. 100.00 |
| 1. நல்முத்து மதிப்பு | ரூ. 10.00 |
| 1. பவளம் மதிப்பு | ரூ. 1.00 |

உருத்திராட்சங்கள் மதிப்பிடப்படவில்லை.

1. படிகம், மதிப்பிடப்படவில்லை மற்றும் சிறிய முத்துக்கள் மதிப்பிடப்படவில்லை.

சுமார் பொன் எடை கிராம் 25.000 கிராம் 1க்கு ரூ. 120/— வீதம் மதிப்பு. ரூ. 3,000.00

சுமார் வெள்ளி எடை கிராம் 20.000 கிராம் 1க்கு ரூ. 2/- வீதம் மதிப்பு. ரூ. 40.00

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1983 ஏப்ரல் 22

சிறு திரையரங்குகளுக்கு எந்தவிதமான சங்கடங்களும்
இல்லாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்
இதனால், இந்த விளம்பர வரியைப் போடுவதால் என்பதையும்,
பாதிக்காத வகையில் நான் பார்த்துக் கொள்கிறேன் விளம்பரங்கள்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்பதையும்

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொல்கின்ற
பொழுது இரண்டுவிதமான வரிகள் போடும்பொழுது அது சட்டத்
திற்கு விரோதமாகாதா என்று கேட்டார்கள். இப்படி இரண்டு
விதமாக வருகிறபொழுது, அரசியல் சட்டத்திற்கு விரோதமாக
இல்லை என்பதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன்.
இவ்விதமான ஒரே பொருளில் இரண்டு சட்டங்கள்; இரண்டு
விதமான வரிகள், எத்தனையோ பொருள்களுக்குப் போடு
கிறோம். மாநில அரசு போடுகிறது; மத்திய அரசு போடுகிறது.
எனவே, அதில் எந்தவிதமான சட்டச் சிக்கலும் இல்லை என்பதை
நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒன்றை சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு
அரசுக்கு இருக்கின்ற அதிகாரம், விளம்பர வில்லை ஒன்றுககு 60
காசுகளுக்கு மேல் போடக் கூடாது. அதேபோல சில வினாடி
களுக்கு நடைபெறும் திரைப்படச் சுருள் விளம்பரத்திற்கு ஒரு
ரூபாய் ஐம்பது காசுகளுக்கு மேலே போடக்கூடாது.
சட்டத்திற்கு மட்டும்தான் நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அந்தச்
இருக்கின்ற பல சங்கடங்களையும் நான் யோசித்து, எனவே,
விளம்பரம் பாதிக்காத அளவிற்கு, சிறிய திரையரங்குகள் இதில்
காத அளவிற்கு, விளம்பரமும் எப்பொழுதும்போல் பாதிக்
வேண்டும்; சிறிய திரையரங்குகளுக்கும் வருவாய் வர நடக்க
அதற்கு வரியும் போட வேண்டும். எல்லாவற்றையும் வேண்டும்;
யோசித்து இந்த அரசு மேற்கொள்ளும் என்ற ஒன்றாக
உங்களுக்குச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். உறுதியை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1983)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு
விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை
பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



1983 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 23—4—1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

261. தமிழ்நாடு 1972—ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை
மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது
குறித்து வீட்டு-வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13—5—1981
ஆம் தேதியிடப்பெற்ற 333-ஆம் எண் அரசாணையில் வெளி
யான அறிவிக்கை [தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு குடிசைப்
பகுதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிவிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—

## இணைப்பு

(11ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 838க்
கான விடையைக் காண்க.)

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் உதவி ஆட்சியாளரிடம் நடராஜ
குஞ்சித தீட்சிதர் என்பவர் அளித்த புகார் மனுவின் பேரில்
4—6—81 அன்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
கடலூர் உதவி ஆணையர், சிதம்பரம் உதவி ஆட்சியாளர்
மற்றும் காவல்துறைத் அணைக் கண்காணிப்பாளர் ஆகியோரது
முன்னிலையில் சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலில்
உள்ள [illegible] இருந்த நகைகள் மற்றும் வெள்ளி உயர்த்த
[illegible] வராக ரூ. 2,37,[illegible] மதிப்புள்ள
பொருட்களும் [illegible]

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS
IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-11
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-12

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

2725

வெளியீடு 28-11-1983 [Issued 28-11-1983

31 மார்ச் 1984
தமிழ்நாடு ... சென்னை-600 009

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 23, 1983—தொகுதி LI எண் 2
Saturday the 23rd April 1983 Volume LI No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
...e Assembly Department Fort St. George
Madras-600 009.

...காசுகள்] [Price Rs. 3-50 Paise

[1983 ஏப்ரல் 22

10. ஆவுடையார் பாகத்தில் உடைந்துள்ள பச்சை நிற லிங்கம் மதிப்பிடப்பட வில்லை.

| | |
|---|---|
| மொத்தம் மதிப்பு | ரூ. 2,37.661.00 |

(இ) மேல்குறிப்பிடப்பட்ட பொருள் சம்பந்தமாக இந்து
சமய அறநிலைய ஆட்சித்துறை திருச்சி நகைகள் சரிபார்க்கும்
அலுவலருக்கு உடன் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு
மேற்படி கணக்கில் வராத தங்கம் மற்றும் விலை உயர்ந்த
பொருட்களை, மேற்படி திருக்கோவில் புனர் மதிப்பீட்டு
அறிக்கையில் சேர்க்கும்படி பணிக்கப்பட்டது. திருக்கோவில்
தீட்சிதர்கள் வகை செயலாளர் மேற்படி இனங்கள் திருக்கோவில்
நகைகள் அல்ல அவை ளை பொது தீட்சிதர்களின் ஏகோபித்த
ஒப்புதல் இல்லாமல் திருக்கோவில் கணக்கில் கொண்டு வர
இயலாது என 12—6—1981-ல் ஆட்சேபித்தனர். அதற்கு
மேல் துணை ஆணையர் கொடுத்த 24—6—81 நோட்டீசின்
பேரில் பதில் கொடுக்க 18—6—81-ல் செயலாளர் ஒரு மாத
கால அவகாசம் கேட்டார். அதற்கு மேல் பதில் இல்லை.
திருச்சி நகைகள் சரிபார்க்கும் அலுவலர் அறிக்கை எண். 37/81
நாள் 30—6—81—தேதிய புனர் மதிப்பீட்டு அறிக்கையில்
பொன் மற்றும் கல்லி ழைத்த நகைகள் பட்டியலில் வரிசை
எண். 424 முதல் 433 முடிய மேலே சொன்ன இனங்கள்
அனைத்தும் சேர்க்கப்பட்டு விட்டன.

## உள்ளடக்கம்

*23—4—1983*


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்களு—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 121—150 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) கைதாகி சிறையில் இருக்கும் உறுப்பினர் அவை கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது | 150—151 |
| (ஆ) கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் பற்றி அறிக்கை வைப்பது | 151—152, 195—198 |
| (இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 152 |
| (ஈ) பேரவை நடவடிக்கைகளை வானொலியில் ஒலிபரப்புவதில் ஏற்படும் தவறுகள் | 152—153 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்: வறட்சி நேரத்தில் மின் கட்டண பாக்கிக்காக மின் இணைப்பைத் துண்டித்தல் | 153—161 |
| 4. அரசினர் தீர்மானம்: | |
| அவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களை நியமித்தல் | 161 |
| 5 கவன ஈர்ப்புகள்: | |
| (அ) பட்டுச் சேலைகள் விற்பனையாகாமல் தேங்கியிருப்பது | 162—164 |
| (ஆ) வாகன ஓட்டுநர் உரிமங்கள் பெறுவதற்கான கால வரையறையை நீட்டித்தல் | 164—166 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்: | |
| (அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு 1983 | 166—195 198—208 |
| (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவு 1983 | 208—243 |
| 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள். | 244—245 |


128—89—i

## சனிக்கிழமை, 1983 ஏப்ரல் 23

### சித்திரை 10, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*''இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு''*

*ஊற்றும், மழையுமாகிய இருவகை நீர் வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாம்.*

### 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**எவர்சில்வர் தகட்டால் பாத்திரங்கள் செய்யும் தொழில்கள்.**

* வினா எண் 848—திரு. செ. செம்மலை: *மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எவர்சில்வர் தகட்டால் பாத்திரங்கள் செய்கின்ற தொழில்களை குடிசைத் தொழில்களாக அறிவித்து, அதற்குண்டான சலுகைகளை அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : *(அ) இல்லை.*

*(ஆ) வினாவிற்கு இடமில்லை.*

திரு. செ. செம்மலை : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவர்சில்வர் தகடுகளை மூலப்பொருளாகக் கொண்டு செய்கின்ற தொழில்கள் பெரும்பாலும் மின் விசையைப் பயன்படுத்தி செய்யப்படுவதால் அவைகளை குடிசைத் தொழில்களாக ஆக்க முடியாது என்று சொன்னாலும், இந்தத் துறையிலே இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கு, அதாவது சிறு தொழில்களுக்கு உண்டான சலுகைகளை, குறிப்பாக வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[1983 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைத் தொழிலின் கீழ் உற்சாகப்படுத்த முடியவில்லை என்றாலும், சிறு தொழில் அமைப்பின் கீழ் தமிழக அரசு உற்சாகப்படுத்தி வருகிறது. மூன்றுவித சலுகைகளை இன்றையதினம், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மூலமாக பாத்திரங்கள் செய்கின்ற சிறு தொழில் முனைவோர்களுக்கு உதவி செய்து வருகிறது. முதல் சலுகை, 15 சதவீதம் பிரைஸ் பிரபெரன்ஸ். அரசுத் துறை நிறுவனங்கள், சுயாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் வெளியிடும் டெண்டரில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் பங்கு கொள்ளும்போது குறைந்த பட்சம் 15 சதவீதம் விலைச் சலுகை அளிக்கப்படுகிறது. இரண்டாவது சலுகை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் அல்லது தேசிய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய வற்றில் பதிவு செய்திருந்தாலும், பதிவு செய்யப்படாமல் இருந் தாலும் அரசுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் டெண்டரில் செலுத்துகின்ற ஈட்டு வைப்புத் தொகை இ.எம்.டி டெபாசிட்டிலேயிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மூன்றாவது சலுகை, சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அல்லது தேசிய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய வற்றில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கு டெண்டர் படிவங்கள் மற்றும் அதைச் சேர்ந்த அத்தனை ஆவணங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நடைமுறைப்படி சிறுதொழில் நடத்துகின்றவர்கள் தங்களுடைய மூலப்பொருளை மத்திய அரசு நிறுவனமாக. எம்.எம்.டி.சி. மூலமாக வாங்கி வருகிறார்கள். அப்படி வாங்குகிறபோது 10 சதவீதம் முன்பணம் கட்டவேண்டிய தாக இருக்கிறது. அப்படிக் கட்டினாலும், ஒரு ஆண்டுக்குத் தேவையான அவ்வளவு மூலப்பொருளையும் ஒரே தடவையாக வாங்க முடியாமல் சிறு தொழில் செய்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அந்த முறையை மாற்றி சிட்கோ மூலமோ அந்த மூலப்பொருளை அவர்களுக்கு அளிப்பதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செம்மலை குறிப் பிட்ட அந்த சிரமத்தைப் போக்குகின்ற வகையிலே சேலத்திலே இருக்கின்ற உருக்காலையை அணுகியதன் காரணமாக சேலத்தில் உள்ள உருக்காலை நிறுவனம் இன்றைக்கு சென்னை, கோயம் புத்தூர், திருச்சி போன்ற இடங்களிலே அவர்களுடைய விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த விற்பனை நிலையங்களின் வாயிலாக நம்முடைய சிறு தொழில் முனைவோர்கள் அந்த மூலப் பொருள்களை பெற்றுக்கொள்ள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எவர்சில்வர் தகட்டில் இருந்து பாத்திரங்கள் செய்கின்ற சிறுதொழில் செய்பவர்களுக்கு எவர்சில்வர் தகடுகள் கோட்டா



1983 ஏப்ரல் 23]

முறையிலே வழங்கப்படுகிறதா? அப்படி கோட்டா முறையிலே வழங்கப் படுகிறபோது இந்தத் தொழிலில் ஈடுபட்டி ருக்கிற சிறுதொழில் செய்பவர்களுக்கு கிடைக்காமல் வேறு பலர் கோட்டா வாங்கி அதை அதிகமான விலைக்கு இவர்களுக்கு விற்றுவிடுவதன் காரணமாக அந்தப் பாத்திரங்களின் விலைகள் உயருகின்றனவே, இதைத் தவிர்ப்பதற்கும், அப்படி வாங்கி பாத்திரம் செய்யாமல் மற்றவர்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் உண்மையாகவே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அந்தத் தகடுகள் கிடைப்பதற்கும் சீரான முறையிலே என்ன நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல்கள் வந்திருக்கின்றன. இது தொடர்பாக அதைச் சீரமைப்பதற்கு தகுந்த நடவடிக்கை களை அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உருக்காலை ஏற்படுத்துவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைக்குத் தரிசாக, பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு 500 ஏக்கர் நிலத்தை எவர்சில்வர் தகடு கொண்டு சிறுதொழில் செய்வதற்கான ஒரு சிறுதொழில் தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா? அதற்கான நிதியை இந்த ஆண்டே ஒதுக்கி, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சொன்னதுபோல் சிறுதொழில் அலகுகள்—ஆன்சிலேஷன் யூனிட்— என்று சேலம் உருக்காலைக்குத் தேவையான துணைப்பொருள் களைத் தயார் செய்வதற்கான ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்காக 200 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, அந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. விரைவில் சேலம் ஸ்டீல் பிளான்ட் ஆன்சிலேஷன் யூனிட் தொடங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அண்மையில் ஒரு கருத்தரங்கு கூட 'எஸ்.ஏ.ஐ.எல். (செயில்)' நிறுவனத்தோடு நடத்தி, அதற்கான ஆக்கவேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவர்சில்வர் தகடு கொண்டு பாத்திரம் செய்வதில் அதிக மூலதனம் போட்டு செய்யக்கூடியவர்களும் இருக்கி றார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் சிறு அளவில் செய்கி றார்கள். மதுரைக்கு அருகில் ஒத்தக்கடை என்ற இடத்தில் சிறுசிறு குடிசைத் தொழிலாக இந்தப் பணியைச் செய்து வருகி றார்கள். அவர்களுக்கு எவர்சில்வர் கோட்டா கிடைக்கவில்லை,

தொழில் நிதி உதவி கிடைக்கவில்லை என்று சொல்லி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக இவர்களைப் பற்றி ஒரு கணக்கு எடுத்து, இப்படிப்பட்ட சிறுதொழில் செய்பவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனை நல்ல ஆலோசனை. நிச்சயமாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. எஸ். துரைசாமி: தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் அமைப்புகளில் மலைஜாதி மக்களுக்கும், மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும் அரசே பொறுப்பேற்றுக் கொண்டு, அந்த அமைப்புகளில் வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**சலவாதி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம்.**

* வினா எண் 849—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் சலவாதி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இது பால்வளத் துறையின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும்.

திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, சலவாதி கிராமத்தில் இருக்கும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அங்கே மிக விரைவாக அந்தக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கனவே சொல்லியுள்ளதுபோல், அங்கேயிருக்கின்ற திரு. தட்சிணாமூர்த்தி என்கிறவரும் அவரது நண்பர்களும் அதற்காக விண்ணப்பித்து இருக்கிறார்கள். அதை அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து இருக்கிறோம். விரைவில் அதை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒருவரின் பெயரைச் சொன்னார்கள். ஆனால் டி. ஆர். ஓ. அவர்களிடத்தில் அதை அனுப்பியும், அவர் அமைக்கலாம் என்று சொன்னதற்குப் பிறகும், அதை அமைக்காமல் இருப்பதற்கு தவறான காரணங்களைச் சொல்லி காலதாமதம் செய்கின்ற காரணத்தால், அந்த சலவாதி மக்களுக்கு அங்கே சொசைட்டி ஆரம்பிக்க முடியாமல் இருக்கிறது என்பது உண்மையா? அந்த சொசைட்டியை அங்கே விரைவாகக்கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அத்தகவல்களை என்னிடத்தில் எழுதிக்கொடுத்தால் நிச்சயமாக, நீதி வழங்கப்படும், நியாயம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**1983 மார்ச் முடிய அரசின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சீட்டுக் கம்பெனிகள்.**

* வினா எண் 850— திரு. ஏ. கோபால்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் சார்பில் சீட்டுக் கம்பெனிகள் 1983 மார்ச் முடிய மாநிலத்தில் எத்தனை இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தமிழ்நாடு சீட்டு நிதிக்கழகத்தை கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பதிவு செய்தபின்னர் சீட்டு நிதிக்கழகமும் அதன் கிளைகளும் ஆரம்பிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சார்பில் சீட்டுக்கம்பெனி ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் சொல்லி ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இதை ஆரம்பிப்பதில் ஏன் இந்தச் சுணக்கம்? தனியார் நடத்தும் சீட்டுக் கம்பெனிகளில் மக்கள் பணத்தைப் போட்டு, அங்கே

நடைபெறும் மோசடிகளின் காரணமாக மக்கள் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கின்ற காரணத்தால், அரசு உடனடியாக அந்தச்
சீட்டுக் கம்பெனியை ஆரம்பித்து நடத்த முன்வருமா? எந்தத்
தேதியில் அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்பு
கிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,
கொள்கை அளவில் சென்ற ஆண்டு அறிவித்தோம். கொள்கை
அறிவிப்பிற்குப் பிறகு நடைமுறையில் அதைக் கொண்டு வருவ
தற்காக தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து
அவர்கள் இன்று சட்ட திட்டத்தை உருவாக்கி வருகிறார்கள்.
அநேகமாக மே அல்லது ஜூன் மாதத்திலே அருமையான செய்தி
சகோதரர் திரு. சித்தன் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரசு இந்தச் சீட்டுக் கம்பெனியை ஆரம்பிப்பதற்குக்
காலதாமதம் ஆனாலும் இடைக்காலத்திலே தனியார் இந்த
சீட்டுக் கம்பெனிகளை நடத்தி பொதுமக்களை ஏமாற்றி
மோசடி செய்து அதனால் சிலபேர் தற்கொலை கூட செய்து
கொள்ளக்கூடிய அளவுக்கு போகக்கூடிய நிலைமை இருப்பதை
மாற்றுவதற்கு, தனியார் சீட்டுக் கம்பெனிகளுக்கு அளிக்கப்பட்ட
உரிமத்தை உடனடியாக ரத்து செய்து திரும்பப் பெற அரசு
முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,
நான் இரண்டு கருத்துக்களை மாமன்றத்திற்கு வைக்க விரும்பு
கிறேன். ஒன்று அரசு சார்பாக இன்னும் இரண்டு திங்கள்களுக்
குள்ளாக சீட்டுக்கம்பெனி ஆரம்பிக்கப்படும் என்பது. இரண்
டாவது கருத்து: ஏற்கெனவே தனியார் நடத்துகின்ற சீட்டு நிதி
நிறுவனங்களிலே இருக்கின்ற மோசடிகளைப் போக்குவதற்கு
விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக
1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தை மத்திய அரசு
அண்மையிலே நாடாளுமன்றத்திலே நிறைவேற்றி இருக்கின்றது.
இந்திய ரிசர்வ் வங்கியுடன் நாம் கலந்தாலோசித்துக் கொண்டி
ருக்கிறோம். சீட்டு நிதி நிறுவனங்களை முறைப்படுத்துவதற்குரிய
பயன் உள்ள விதிகளைக் கொண்ட அந்த மத்திய சட்டத்தினை
விரைவிலே நாம் நிறைவேற்ற இருக்கிறோம். அப்போது
தனியார் சார்பாக நடத்தப்படுகின்ற சீட்டு நிதி நிறுவனங்களில்
இருக்கின்ற மோசடிகள் களையப்படும் 1982 ஆம் ஆண்டு
மத்திய அரசின் சட்டத்தின் விதிகளை ஒட்டி ஆர்.பி.ஐ.யின்
கைட்லைன்ஸையும் வைத்துக் கொண்டு ரூல்ஸ் ஃப்ரேம் செய்து
இங்கே நிறைவேற்ற இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள்
சொன்ன குறைபாடுகள், மோசடிகள் ஆகியவற்றை எல்லாம்
அப்போது போக்குவதற்குரிய உத்தரவாதம் ஏற்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த அரசின் சீட்டு நிறுவனக் கழகம்
இரண்டு மாதத்திலே தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கப்படும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி
ஆரம்பிக்கின்றபோது எந்தெந்த மாவட்டத்திலே அதனுடைய
கிளைகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,
முதல் கட்டமாக 10 இடங்களில் ஆரம்பிக்கப்படும். அதாவது
சென்னை (வடக்கு). சென்னை (தெற்கு), வேலூர், சேலம்,
கோயம்புத்தூர், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி,
மதுரை, நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் முதல் கட்டமாகத்
தொடங்க இருக்கிறோம். பிறகு பரவலாக தமிழ்நாடு முழுவதும்
விரிவாக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. ஏ. பாலுச்சாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே,
தனியார் சீட்டுக் கம்பெனி நடத்தி பொது மக்களிடம் மோசடி
செய்யப்பட்டதாக அரசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதா?
அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர்
அவர்களே, தனியாருடைய நிறுவனங்களில் பல இடங்களில்
அண்மையிலே கருடா நிறுவனம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள
மோசடிகள் பற்றி எல்லாம் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள்.
அப்படி 1981-82 ஆம் ஆண்டில் அனுமதியின்றி 107 சீட்டுக்
கம்பெனிகள் நடத்தப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.
இதில் 89 இடங்களில் சீட்டு நடத்தியவர்கள் குற்றவாளிகள்
என்று தீர்ப்பளிக்கப்பட்டு அபராதங்கள் விதிக்கப்பட்டிருக்
கின்றன. ஏனைய குற்றங்கள் தொடர்பாக நடப்பாண்டில்
அதாவது இந்த ஆண்டு 2263 வழக்குகள் நீதிமன்றத்தில்
தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் முந்தைய ஆண்டு
தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட 2187 வழக்குகளில்
குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்
பட்டு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள். வசூலிக்கப்பட்ட
மொத்த அபராதத் தொகை 55 ஆயிரம் ரூபாய். ஆனால்
இதிலே உள்ள குறை என்னவென்றால் இன்றைக்கு அந்தக்
குற்றம் செய்வது என்பது கடுமையாக இருக்கின்றது. ஆனால்
சட்டத்திலே தண்டனை கொடுப்பது என்பது மிகக் குறைவாக
இருப்பதால் அந்தத் தண்டனைக்கான புரவிஷனைக் கூட கடுமை
யாக ஆக்குவதற்கு தமிழக அரசு ஆராய்ந்து கொண்டி
ருக்கின்றது.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 10 இடங்களிலே முதலிலே சீட்டுக் கம்பெனி
ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
ஆனால் அந்தச் சீட்டிலே ஏலம் எடுப்பது போன்றவற்றைப்

பொறுத்த வரையிலே நகரத்திலே உள்ளவர்கள் மட்டும்தான் சேரலாமா? அல்லது மாவட்டம் பூராவிலும் உள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா? இப்போதுள்ள சீட்டுக் கம்பெனிகளைப் பொறுத்தவரையிலே 5 சதவீதம், 3 சதவீதம் என்று கமிஷன் வாங்குகிறார்கள் ப்ரைவேட்டாக இருப்பவர்கள். ஆனால் அரசு தொடங்க இருக்கும் சீட்டுக் கம்பெனியிலே மினிமம் இவ்வளவுதான் கமிஷன் வைக்க வேண்டும் என்று விதிமுறைகளை ஏற்படுத்தி இருக்கிறீர்களா? அல்லது ஏற்படுத்துவதற்கு உத்தேசம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று அந்தக் கமிஷன் பிரச்சினை. சட்டப்பூர்வமாக நாம் வெளியிடுகின்றபோது தான் அந்தத் தகவல் கிடைக்கும்.

இரண்டாவதாக யார் யார் இந்தச் சீட்டுக் கம்பெனிகளிலே சேர்ந்து பயன் பெறக்கூடியவர்கள் என்ற விவரத்தைக் கேட்டி ருக்கிறார்கள். முதல் கட்டமாக சேலரீட் பீப்பிள் என்ற வகையிலே அரசாங்கத்திலே இருக்கின்ற கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ், க்வாசி கவர்ன்மென்ட்டிலே இருக்கின்றவர்கள் இப்படிப்பட்டவர்களை சீட்டுநிதிக் கழகத்திலே சேர்க்க வேண்டும். ஏனென்றால் ஆதாரம் உள்ள நிலைமையில், செக்யூரிட்டி இருக்கக்கூடிய நிலைமையில் ஆரம்பிப்பதன் நோக்கம் அது. ஆரம்பிக்கின்றபோது தோல்வியை அடையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அப்படிப்பட்ட பாதுகாப்பு, எச்சரிக்கை உணர்ச்சியோடு சேலரீட் பீப்பிள் என்பவர்களை முதலிலே சேர்த்து பிறகு பொதுமக்களுக்கு அடுத்த கட்டமாக விரிவுபடுத்துவதற்கு அரசு ஆலோசனை செய்து வருகின்றது.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு சார்பிலே ஆரம்பிக்கப் படும் சீட்டுக் கம்பெனிகள் மாநிலத்தின் 10 இடங்களில் ஆரம் பிக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். பிறகு பரவலாக்கப் படும் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். அப்போது வட்டார வாரியாக தமிழகம் முழுவதும் விரிவுபடுத்துவதற்கு அரசிடம் திட்டம் உண்டா? இந்தக் கழகத்திலே விவசாயிகள் போன்ற வர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களும் அந்த வாருமானத்தைக் கொண்டு பொருளை ஈட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, முதல் கட்டமாக 10 இடங்களில் தொடங்கப்படும், பிறகு அது தமிழகம் எங்கும் விரிவுபடுத்தப்படும். முதல் கட்டமாக சேலரீட் பீப்பிள் என்பவர்களைச் சேர்த்து ஆரம்பிக்கப்படும். பிறகு பாதுகாப்பானவர்களுக்கு அது கொடுக்கப்படும்.



திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, அரசு சீட்டுக் கம்பெனிகளை ஆரம்பிக்கின்றபோது தனியார் சீட்டுக் கம்பெனி களை மூடி விடுகின்ற நிலைமை வந்துவிடும். அப்போது தனியார் சீட்டுக் கம்பெனிகளில் வேலை செய்கின்ற அனுபவம் உள்ள தொழிலாளர்களை அரசு சீட்டுக் கம்பெனிகளிலே சேர்த்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதற்கு நான் உறுதி கூற முடியாது. ஆனால் அனுதாபத்தோடு கவனிக்கப்படும்.

### புலவர் பி.லிட். தகுதி பெற்றவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் திட்டம்.

* வினா எண் 851—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலவர் பி.லிட். தகுதி பெற்றவருக்கு பி.எட். தகுதி பெற்ற வருக்கு வழங்குவது போல் ஊக்க ஊதியம் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இது சம்பந்தமாக மீண்டும் பரிசீலனை பண்ணுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் தமிழ் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் களாக வரவேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதுவும் இதோடு சேர்த்து நிறைவேற்றப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பல துறைகளில் பல பணிகளுக்கும் வெவ்வேறு அளவில் உயர் கல்விக்கு ஊக்க ஊதியங்கள் வழங்கப் பட்டு வருவதை ஒரே சீராக வழங்குவதற்கு அரசு ஆலோசித்துக் கொண்டு வருகின்றது. இதிலே ஒரு முடிவு எடுக்கும் வரை எந்த புதிய பிரிவுகளுக்கும் உயர் கல்வித் தகுதியின் அடிப்படையில் புதிதாக ஊக்க ஊதியம் இப்போதைக்கு வழங்குவதில்லை என அரசு முடிவு செய்துள்ளது. இனிமேல் ஊக்க ஊதியங்கள் வழங்குவது அரசால் எடுக்கப்படப்போகும் புதிய பொதுவான முடிவுக்கேற்ப இருக்கும். தலைமை ஆசிரியர்களாகத் தமிழ் ஆசிரியர்களைப் போட வேண்டும் என்ற பிரச்சினை இப்போது கோர்ட் வரை போய் இருக்கின்றது. கோர்ட்டிலே ஒரு தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சட்டத்துறையோடு நாம் பரிசீலிக்க வேண்டிய பிரச்சினையாக அது இப்போது இருக்கின்றது.

[1983 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது அவருடைய குடும்பச் சொத்தாக இருக்கிறது. அவருடைய வாரிசுதாரர்கள் அதை முறைப்படி அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஆஸ்தான கவிஞர், அரசு கவிஞர், கலைஞர் இது போன்ற பதவிகளை நம் முடைய அரசு உண்டாக்கியிருக்கிறது. அது இராஜாக்கள் காலத்தில் இருக்கக் கூடிய முறை ஃபியூடல் முறை. அதனால் அந்த அடிப்படையில் ஆந்திர முதலமைச்சர் அந்த போஸ்டு களை அபாலிஷ் பண்ணியிருக்கிறார். ஆனால் அவர் கலை ஊக்குவிக்க எதுவும் செய்யலாம். இந்த ஆஸ்தான பதவி, ஃபியூடல் பதவி என்பதால் அபாலிஷ் செய்திருக்கிறார். அதைப்போல அபாலிஷ் செய்ய இந்த அரசும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவரவர்களே, நாம் அதை அப்படிக் கருதவில்லை. அவர்களுக்கு ஒரு மரியாதை தருவதற்காக இதைச் செய்கிறோமே தவிர வேறல்ல. அப்படிப் பார்த்தால் கர்நாடக இசையே கூட நிலச் சுவாந்தார்கள் அனுபவித்த இசையாகச் சொல்லலாம். ஆகையால் அந்த இசைக்கே கூட ஆதரவு தர முடியாத நிலை வந்து விடும்.

பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கும் திட்டம்

*வினா எண் 853—திரு. ரா. கிருஷ்ணன், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளி ஆசிரியர் களுக்கு நேரடியாக சம்பளம் பட்டுவாடா செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்திலுள்ள அனைத்து உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதற்கு முன்னோடியாக இந்தத் திட்டத்தை செங்கை மாவட்டத்திலே 1-12-1982 முதல் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் செங்கை மாவட்ட உதவி பெறும் பள்ளிகள் மேலாண்மைச் சங்கத் தலைவர் இந்தத் திட்டத்தை உயர்நீதி மன்றத்தில் நீதி பராணை மனுவின் மூலம் எதிர்த்து, இதற்கு தடை ஆணை பெற்றுள்ளதால் இந்தத் திட்டம் தற்போது தற்காலிகமாக செயல்படுத்தப்படாமல் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தனியார் பள்ளி களில் பணியாற்றுகிற ஆசிரியர்களின் சம்பளத்தில் கட்டாயப் பிடித்தம் என்கிற ஊழலைத் தடுப்பதற்காகத் தான் இப்படி வங்கிகள் மூலம் சம்பளம் பட்டுவாடா செய்யக்கூடிய ஒரு



1983 ஏப்ரல் 23]

நிலையை உருவாக்க வேண்டுமென்று அரசாங்கப் கருதியது. ஏற்கனவே ஒரு மாவட்டத்தில் இந்தத் தடை உத்தரவு இருந்தாலும் அந்தத் தடை உத்தரவிற்கான காரணம் என்ன வென்று சொல்லப்படுகிறது? அதை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்தத் தடையை எடுப்பதற்காக விரைவான நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என்ற முயற்சியை நாம் மேற்கொண் டிருக்கிறோம். தடை இருக்கிறபோது நாம் வேறு ஒரு மாவட்டத் தில் கொண்டு வந்தாலும் அதே அடிப்படையில் தவறாகத் தானிருக்கும். ஆகவே இந்த வழக்கில் தடையை ரத்து செய்வது அல்லது இந்த வழக்கில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவோம். இதைத் தான் நாம் செய்ய வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு ரீஜனல் டைரக்டர்ஸ் மூலம் சம்பளம் பட்டுவாடா செய்யக் கூடிய ஒரு நிலையை இந்த அரசு எடுத்தது. அதன் எக்ஸ்பீரியன்ஸ் என்ன? அது அமல்படுத்தப்படுகிறதா? அதே எக்ஸ்பிரியன்ஸ்யைக் கொண்டு பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான அடிப் படையில் கேள்வி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். கல்லூரி ஆசிரியர்களுக்கு நாம்தான் அதைக் கொண்டு வந்தோம். அது நல்லமுறையில் நடக்கிறது. சிரியர்களுக்கு நாம் தான் கொண்டு வந்தோம். அது நல்லமுறையில் நடக்கும் என்று தான் கொண்டு வந்தோம். இப்போதும் நாம் அதை நிறுத்தவில்லை. மானேஜ்மென்ட் ஸ்கூல்ஸ் அசோஸியேஷன் அந்தத் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வழக்குமன்றத்திற்குப் போய் இப்போது நீதிபதி அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே நாம் அதை நிறுத்த வில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்களோ அதே கருத்தைத்தான் அரசாங்கமும் கொண்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் நாம் கொடுக்கக்கூடிய அந்தச் சம்பளம் முழுமையாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் போய் சேருவதில்லை என்ற காரணத்தால் பாங்குகள் மூலம் அவர்களுக்குச் சம்பளப் பட்டு வாடா செய்வதற்கு முயற்சி செய்கிறபோது தனியார்கள் நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். அப்படி அவர்கள் நீதி மன்றம் சென்று தீர்ப்பு வருகிற வரையில் நாம் கொடுக்கக் கூடிய மானியத் தொகையை தாற்காலிகமாக நிறுத்தி வைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

[1983 ஏப்ரல் 23

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, புலவர் படிப்பு படித்தவர்கள் வேலையில்லாமல் அதிகம் பேர் சும்மா இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு இல்லாமல் பல்வேறு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களை நாம் மனதிலே வைத்துக் கொண்டு முயற்சிகளை மேற்கொள்வதில்லை. சமூகத்தில் என்னென்ன தேவை என்பதை வைத்துக் கொண்டு சில காரியங்களைச் செய்கின்றபோது அதற்குத் தகுதியானவர்கள் அந்தந்தப் பிரிவிலே இருந்தால் நாம் எடுத்துக் கொள்கிறோம்.

## 'அரசுக் கவிஞர்', 'அரசுப் புலவர்' போன்ற சிறப்புப் பதவிகள்

* வினா எண் 852—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு 'அரசுக் கவிஞர்', 'அரசுப் புலவர்' போன்ற சிறப்பு பதவிகளை ஏற்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) மொத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு பதவிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விவர அறிக்கை* பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக் கவிஞர் என்ற இந்தப் பொறுப்பு தற்சமயம் காலியாக உள்ளது. அப்படியானால் அதை நிரப்ப அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்கின்றதா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே அப்படி ஒரு பதவியை நாம் வைத்திருக்கவில்லை. கவிஞர் கண்ணதாசன் அவர்களை அரசுக் கவிஞராக நாம் நியமித்தோம். இப்போது அவருக்குப் பின்னால் நாம் யாரையும் நியமிக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, கவிஞர் கண்ணதாசன் அவர்களை அரசுக் கவிஞராக நம்முடைய அரசு நியமித்தது. அவர் மறைவுக்குப் பிறகு அந்த இடத்தை நிரப்பாமல் இருப்பதற்கு காரணம் என்ன? அவரைப் போன்ற தகுதி வாய்ந்த கவிஞர்கள் தற்போது தமிழ்நாட்டில் இல்லையா அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?

*126—127ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தகுதியை வைத்து மட்டும் நியமிப்பதில்லை. வேறு பல காரணங்களையும் வைத்து செய்கிறோம். அரசுக் கவிஞராக இருப்பதற்கு தகுதி படைத்தவர் யார் என்று கருதுகிறோமோ அவரை நியமிக்கிறோம்.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, அரசுக் கலைஞர்களாக நியமிக்கப்பட்டு, மதிப்பு ஊதியம் அளிக்கப்படுகின்ற கலைஞர்கள் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது ஊதியம் பெறுகின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசுக் கலைஞர் என்ற கௌரவத்தைத் தந்து, ஆயிரம் ரூபாய் மதிப்பு ஊதியம் தருகிறோம். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய அரசு நிகழ்ச்சிகளில் கண்டிப்பாக வந்து இலவசமாக பாடவேண்டுமென்றோ நிகழ்ச்சிகளை நடத்தவேண்டுமென்றோ இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, கவியரசு கண்ணதாசன் அவர்களை அரசு கவிஞராக நியமித்தது குறித்து மகிழ்ச்சி. அவர் மறைந்தது வருந்தத்தக்கது. அதே நேரத்தில் இந்த ஆயிரம் ரூபாய் மதிப்பு ஊதியத்தை வழங்குவது பற்றிய விவரம் இதில் இருக்கிறது. இதிலே திருமதி வைஜயந்திமாலா பாலியும் இடம் பெற்றிருக்கிறார். வறுமையில் உழன்று, பசியால், பட்டினியால் வாடுகின்ற கலைஞர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை பரிசீலித்து, ஆயிரம் ரூபாய் மதிப்பு ஊதியம் கொடுத்தால் மகிழ்ச்சியாக இருக்கும். வைஜயந்திமாலா பாலி இன்கம்டாக்ஸ் கட்டக் கூடியவர். அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசுக் கலைஞர்கள் என்ற அளவில் அவர்கள் இடம் பெறுகிறார்களே தவிர வறுமையால் வாடும் கலைஞர்கள் பட்டியல் இதில் வரவில்லை. அவர்களுக்குத் தனியாக ஓய்வூதியம் தந்து கொண்டிருக்கிறோம். ஆகையால் வறுமையால் வாடுகிறவர்கள் இந்த பட்டியலில் வரமாட்டார்கள். அந்தந்தத் துறையில் திறமை பெற்றவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். அவர்கள் நிறைய வருமானம் உள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆற்றல் உள்ளவர்கள், திறமை உள்ளவர்கள் எப்போதும் சம்பாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். சம்பாதிக்கின்ற அளவுக்கு வருமான வரி கட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள். திறமை உள்ளவர்களை அரசு கௌரவிக்கிறது. ஆற்றல் உள்ளவர்கள், சம்பாதிக்கிறவர்கள் வருமானவரி கட்டிக்கொண்டுதான் இருப்பார்கள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்; தலைவரவர்களே, நம்முடைய தமிழ அரசு கவிஞர் கண்ணதாசன் அவர்களுடைய பாடல்களை மலிவு விலையில் வெளியிட ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதில் ஒன்றும் சிரமமில்லை. இப்போது பிரச்னை அவர்கள் மூலமாகத் தரக் கூடாது என்று சொல்லி நாம்தான் நேரடியாக தரவேண்டும் என்ற அடிப்படையில் இந்த உத்தரவு போட்டு அது கோர்ட்டுக்குப் போய் இருக்கிறது. இப்போது உறுப்பினர் அவர்கள் சொல்கிற யோசனை சம்பளம் கிடைக்காமலிருப்பதற்கான யோசனையாகும். நாம் நிதி தராவிட்டால் ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைக்காது. அது இதை விட பெரிய பிரச்னையைக் கிளப்பி விடும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் ஸ்டே ஆர்டர் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு நல்ல திட்டத்தை எதிர்த்திருக்கிறார்கள். இருந்தாலும் இந்த ஸ்டே கோர்ட் மூலம் வாங்கும்போது, நாம் வக்கீல்களை வைக்கும் போது திறமையான, கெட்டிக்காரத்தனமான வக்கீல்களை கொஞ்சம் மெதுவாக வைப்பதால் கேஸ்கள் கொஞ்சம் மெதுவாக, காலம் கடந்து, நாள்படப்போகிறது. இரண்டாவதாக, நாம் உறுதியுடன் வெற்றிபெறும் வாய்ப்பினை இழக்கும் ஒரு கஷ்டம் அரசுக்கு வருகிறது. ஆகவே இதை உடனடியாக துரிதமாக பைசல் செய்வதோடு மட்டுமல்லாமல் கெட்டிக்காரத்தனமான வக்கீல்களை அரசாங்கத்தில் இருக்கிறவர்களை விட வெளியில் இருக்கிற கெட்டிக்காரர்களாக இருக்கிற வழக்கறிஞர்களை வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்க வக்கீல்கள் கெட்டிக்கார வக்கீல்கள் அல்ல என்பது ஒரு தவறான அபிப்பிராயம். கெட்டிக்கார வக்கீல் என்று போர்டா போட்டிருக்கிறது? நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

**1981-82—ம் கல்வியாண்டில் மருத்துவ பொறியியல், விவசாயக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள்.**

வினா எண்—854 திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82-ம் கல்வியாண்டிற்கான மருத்துவ, பொறியியல், விவசாயக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தாழ்த்தப்பட்டோர் பழங்குடிமக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் பழங்குடி மக்கள் பிரிவினரில் கொண்டா ரெட்டி என்ற பிரிவில் மட்டும் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விவர அறிக்கை** சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 23]

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள், கொண்டாரெட்டி என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பொறியியல், மருத்துவம், வேளாண்மைக் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி இவற்றில் சேர்க்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதில் இந்த சதவிகிதம் சரியாக இருக்கிறதா? இரண்டாவதாக, இந்த தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள். கொண்டா ரெட்டி இவர்களில் எவ்வளவு பேர்கள் அப்ளிகேஷன் கொடுத்தார்கள்? மேலும் குறிப்பாக உத்திரமேரூர் தாலுகா, உத்திர மேரூர் நகரம், ரங்கமணி ரெட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சகோதரர்—செங்கல்பட்டு மாவட்டம்—முதலில் ஓ.ஸி. சர்டிபிகேட் வாங்கிச் சேர்ந்தார். பிறகு எஸ்.டி. என்று வாங்கி யிருக்கிறார். பிறகு பி.ஸி. என்று வாங்கியிருக்கிறார். இது சம்பந்தமாக செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்களா? அப்படி வந்திருப்பது உண்மைதானா? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்,

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 2, 3 கேள்விகளைச் சேர்த்து கேட்டிருக்கிறார்கள். இதிலே மொத்த மாணவர்கள் 18.6% பேர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதைக் கூட்டி, அதை 5 அல்லது 6 மடங்காக்கினால், மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1,300 அல்லது 1400 என்ற அளவிற்கு வரும். அதிலே. 19 சதவீதம், 20 சதவீதம் என்றெல்லாம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது மொத்த மாணவர்களின் எண்ணிக்கை கணக்கு இல்லை. 235, அதோடு 26, 15 ஆகியவைக் கூட்டினால் 18.6 சதவீதம் என்றால் 100 சதவிகிதத்திற்கு எவ்வளவு என்பதை அதோடு கணக்கிட்டால் மொத்தம் எவ்வளவு பேர்கள் என்பது தெரியும். இதிலே கொண்டா ரெட்டி மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைத் தந்திருக்கிறார்கள். இதிலே தவறான சான்றிதழ் கொடுத்து சில பேர்கள் கல்லூரியிலே சேர்ந்திருக்கிறார்கள் என்ற விவரம் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு தெரிய வந்து, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சமூக நலத் துறையோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மாணவனின் பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது இதிலே இருக்கிறதா என்பது தெரியாது. அதனால், அதைப் பற்றி எழுதி கொடுத்தால். விசாரித்து தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இதிலே, குறிப்பிட்டு நான் சொல்ல விரும்புவது, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 18%-க்கு மேலே வந்திருக்கிறார்கள். 18 சதவிதத்திற்குக்கு மேல் 6

**....ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்றிருந்தாலும் அல்லது 1,3 சதவிகிதம் என்றிருந்தாலும் அல்லது 1 சதவிகிதம் என்றிருந்தாலும், இவர்கள் எல்லாம் குறைந்த பட்சம் 80 சதவிகிதம்அல்லது 90 சதவிகிதம் மார்க்குகள் வாங்கி சேர்ந்திருக்கிறார்களே தவிர, அதற்குக் குறைந்த மார்க்குகள் வாங்கி சேர முடியாது. எனவே, இது தாழ்த்தப் பட்ட மாணவர்கள் நன்கு படித்து, அதிக மார்க்குகள் வாங்கி சேர்ந்திருக்கிறார்கள் என்ற அறிகுறியைத் தான் காட்டுகிறது. அந்த அளவிலே தான் 18 சதவிகிதத்திற்கு மேலே சேர்ந்திருப்பதை காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை வேறு மாநிலங்களிலே இல்லை என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் பொறியியற் கல்லூரியில் சேர்ந்த மொத்த பழங்குடி மாணவர்களின் எண்ணிக்கை 26 பேர்கள் என்றிருக்கிறது. அதேபோல், கொண்டா ரெட்டி மாணவர்கள் 15 பேர்கள் பொறியற் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தத்தில் கொண்டா ரெட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள் ஜனத்தொகை 1961-71 சென்சஸ்படி 800 பேர்கள் தான் இருந்திருக்கிறார்கள். பழங்குடி மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் கூட இவர்கள் ஏறக்குறைய 65 சதவிகிதம் இடத்தை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்ப்பதற்காக, ஏற்கனவே நான் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருப்பதைப் போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கிவிட்டு, அதேபோல் எஸ்.சி-க்கு இவ்வளவு சதவிகிதம் என்று ஒதுக்கி விட்டால் நல்லது. ஆகவே ஷெடியூல் டிரைப்பிற்கு 1 சதவிகிதம் என்றும், ஷெடியூல் காஸ்டுக்கு 17 சதவிகிதம் என்றும் ஒதுக்கிவிடலாம். இப்படி 17:1 என்ற முறையில் அதை மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் என்று நிர்ணயிப்பதை மத்திய அரசினுடைய வரைமுறைக்கு உட்பட்டு நாம் செய்கிறோம். இதை நாமாகச் செய்வதில்லை. அப்படிப் பார்க்கின்றபோது தாழ்த்தப்பட்ட வகுப்பிலே நிறைய பிரிவுகள் இருக்கின்றன. அதாவது அருந்ததியினர், ஆதித் திராவிடர், மற்றும் தேவேந்திரர் என்று இப்படிப் பல பிரிவுகள் இருக்கின்றது. சில பிரிவுகளிலே ஒருவர்கூட வர முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நாம் 50 சதவிகிதம் ஒதுக்குகிறோம். அதிலே கூட இத்தகைய வேறுபாடுகள் இருக்கிறது இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்பது, சிந்திக்க வேண்டிய ஒன்றுதான். இப்போது இருக்கிற நிலைமையில், நாம் அதிகபட்சம் எவ்வளவு உதவி





செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறோம்; இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 18 சதவிகிதம் பெற்றிருக்கிறார்கள். 18 சதவிகதத்திற்குக்கு மேல் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஏ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1961 மக்கள் தொகை கணக்குப்படி, கொண்டா ரெட்டி இனத்தவர் 800 பேர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய நிலையில், பொறியியல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும், வேளாண்மைக் கல்லூரியிலும் கொண்டா ரெட்டி வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 34 பேர்கள் சேர்ந்துள்ளார்கள். இவர்கள் உண்மையிலேயே சலுகை பெறக் கூடிய முறையிலே வந்தார்களா, எந்த முறையில் வந்தார்கள். அவர்கள் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்களா, அவர்கள் உண்மையிலேயே மலை ஜாதி வகுப்பைச் சேர்ந்தவர்களா அல்லது தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்களா என்பதை அறிய விரும்புகிறேன் அவர்கள் பழங்குடி பிரிவைச் சார்ந்தவர்களா என்பதை அரசு ஆராய முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, இது மத்திய அரசின் தொடர்புடைய ஒன்றாகும். இந்தப் பிரச்னை கோர்ட்டுக்குப் போய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி இப்போது பேசுவதற்கு ஒன்றும் இல்லை.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சதவிகிதம் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கின்றது என்று சொன்னார்கள். அதை ஒத்துக் கொள்கிறேன். இதிலே தாழ்த்தப்பட்ட பிரிவுகள் பல்வேறு இருக்கின்றது. அதிலே சில பிரிவுகளுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த ஜாதியின் பெயராலே தவறான சர்ட்டிபிகேட் பெறுவது என்பது 3, 4 இனத்திலேதான் இருக்கின்றது. கொண்டா ரெட்டி, குருமார், காட்டுநாயக்கன் ஆகியோர் செட்யூல்ட் ட்ரைபிலே வருகிறார்கள். ஆனால் மத்திய அரசின் உத்தரவின் அடிப்படையில் தான் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதிலே எத்தனை என்று பிரித்துக் கொடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்குத்தான் இருக்கின்றது என்று கருதுகிறேன் ஆகவே ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தில் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு மட்டும் என்று ஒதுக்கினால் குறிப்பாக 1300 சீட் இருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஷெட்யூல்ட் ட்ரைபிற்கு 13 சீட் தான் வரும். ஆகவே அதிலே நுழைந்து பெற வேண்டும் என்ற

[1983 ஏப்ரல் 23

**காரிமங்கலம், மாரண்டஹள்ளி பகுதி மாணவிகளுக்கென்று தனியாக மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.**

வினா எண் 857—திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு வட்டம், காரிமங்கலம், மாரண்டஹள்ளி
ஆகிய இடங்களில் மாணவிகள் அதிகமாக படிப்பதால் அவர்
களுக்கென்று தனிமாக மேல்நிலைப்பள்ளி அமைக்க அரசு முன்
வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை

(முற்பகல் 9–40)

திரு. மு. ப. முனுச்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காரிமங்கலம், மாரண்டஹள்ளி ஆகிய இடங்களில்
மாரண்டஹள்ளியில் உள்ள மேல்நிலைப் பள்ளியிலும் 1,500
மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டு வருகிறார்கள். அதே
போல காரிமங்கலம் பகுதியில் இருக்கும் மேல்நிலைப் பள்ளியிலும்
1500 மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டு வருகிறார்கள்.
ஒவ்வொரு பள்ளியிலும் 8 கட்டிடங்கள் இருக்கின்றன. 24
அறைகள் மாத்திரம் இருக்கின்றன. தற்போது அந்தப் பள்ளி
களில் ஷிப்ட் முறையில்தான் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது.
அதைத் தவிர்ப்பதற்கு, ஒரு மேல்நிலைப் பள்ளியை பெண்
களுக்கென்று தனியாக ஏற்படுத்துவோமேயானால், நலமாக
இருக்கும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியையே நான்
எழுப்பினேன். இந்த ஆண்டு 30 மேல்நிலைப் பள்ளிகளை
துவக்க அரசு உத்தேசித்திருப்பதால் அதிலே இந்தப்பகுதிகளில்
ஏதாவது ஒரு இடத்திற்கு அந்தப் பள்ளியைக் கொண்டு வர
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,
அரசு முடிவெடுத்திருப்பது மேல்நிலைப் பள்ளிகளை அதிகப்
படுத்துவதற்காக அல்ல நடுத்தரப் பள்ளிகளை உயர்நிலைப்
பள்ளிகளாக மாற்றத்தான் முடிவு எடுத்திருக்கிறோம்.
ஆனால் அந்தப்பகுதியில் மேல்நிலைப் பள்ளியை தனியாக
பெண்களுக்கென்று ஆரம்பிக்க தற்போது உத்தேசம் இல்லை.
காரணம் இதுவரையில் ஆரம்பித்து நடத்திவந்த பள்ளிகளை
முறைப்படுத்தி, செய்ய வேண்டிய சில வசதிகளை செய்து
தரவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால். நிதி ஆதாரங்
களும் சரியாக இல்லாத காரணத்தால், அது சரியான பிறகு,
மேற்கொண்டு கூடுதலாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க
லாம் என்று அரசு கருத்துக் கொண்டிருக்கிறது.



1983 ஏப்ரல் 23]

திரு. மு. ப. முனுசாமி; பேரவைத் தலைவர் அவர்களே,
அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள், கட்டிட குழு
ஒன்றை நிறுவி பெற்றோர்கள் ஆசிரியர்கள்குழு ஒன்றை நிறுவி,
அவற்றின் மூலமாக சென்ற ஆண்டு, மேல்நிலைப்பள்ளிக்கு
அரசுக்கு முன்னதாக செலுத்த வேண்டிய 25 ஆயிரம் ரூபாயை
செலுத்தியிருக்கிறார்கள் அப்படி மிகுந்த அக்கறை கொண்டு
பணம் செலுத்திய அந்தப் பொது மக்களின் எண்ணம் கருதி,
அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், இந்த மேல்
நிலைப் பள்ளிகளை கட்ட ஆரம்பிக்கும் போது, அந்தப்
பகுதிகளில் ஏதாவது ஒரு இடத்திலாவது அந்த மேல்நிலைப்
பள்ளியை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொது மக்களாகவே ஒரு கட்டிட குழு
அமைத்து பணம் வசூல் செய்து கட்டியிருப்பதை நான்
பாராட்டுகிறேன். அத்தகைய மனப்போக்கையும் நான்
வரவேற்கிறேன். இப்போது இருக்கிற பிரச்னை, நான் மாரண்ட
அள்ளியில் மட்டும் மேல்நிலைப் பள்ளியை அமைக்க அனுமதி
தரவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இப்படி வற்புறுத்தி கேட்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால்
எந்தப் பகுதிக்குமே புதியதாக மேல்நிலைப் பள்ளி தற்போது
தேவையில்லை என்ற ஒரு முடிவை எடுத்திருப்பதனால்;
தற்போது அதை அமைப்பதிற்கில்லை. ஏனெனில் தற்போது
இருக்கிற நிலைமை புதியதாக மேல்நிலைப் பள்ளிகளை
துவக்குவதற்கு சரியாக இல்லை என்பதுதான்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே,
பாலக்கோடு, காரிமங்கலம், மாரண்டஅள்ளி போன்ற
இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்களும்
பெண்களும் சேர்ந்து படிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.
அங்கே மாணவர்கள் கூடுதலாக இருப்பதினால், பெண்களுக்
கென்று தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளியையாவது எற்படுத்திக்
கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே
பெண்களுக்கு தனியாக உயர்நிலைப் பள்ளிகளை கட்டுவதற்கு
துரிதமாக நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.
ஆனால் அதற்காக ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதே
தவறு போன்ற கருத்தோடு கேள்வி கேட்கப்படுவதும், பதில்
சொல்லப்படுவதும் அவ்வளவு நல்லது அல்ல. தயவு செய்து
ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆண்களும்
பெண்களும், கீழ் வகுப்பிலேயிருந்து மேல் வகுப்பு வரை ஒன்றாக
சேர்ந்து படிக்கக் கூடிய நிலைமை என்றைக்கு வருமோ
அன்றைக்கு தான், நாகரிகமான சமுதாயத்தை நாம் காண
முடியும்.

ஒரு தவறான போக்கு இருக்காது. எண்ணிக்கை குறைவாக இருப்பதால் மக்கள் அதற்கு வரமாட்டார்கள். ஆகவே தமிழக அரசு தனக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இதைப் பிரிப்பதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது சொல்வதற்கு எளிதாக இருக்கும். ஆனால் நடைமுறைப் படுத்த முடியாது. இப்போது நானே உங்களிடம் தாழ்த்தப்பட்ட ஜாதிகளில எந்தப் பிரிவினருக்கு எவ்வளவு சதவிகிதம் ஒதுக்க வேண்டும் சொல்லுங்கள் என்று கேட்டால் உங்களால் சொல்ல முடியாது. மேலும் அதுபற்றிச் சொல்வதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினால் கூட அதிலே ஒரு முடிவு எடுக்க முடியாது. ஆகவே அது ஒரு பெரிய பிரச்சினைக்குரிய ஒன்று. மேலும் அரசுக்குச் சட்டபூர்வமான அதிகாரம் அதிலே இருக்கின்றதா என்பதே ஐயத்திற்கு உரிய ஒன்று தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு பிரிவினை வைத்து அதிலே விண்ணப்பிக்கின்றவர்களுக்கு அந்த சதவிகிதத்தின்படி தரப்படுமே தவிர, இன்னின்னாருக்கு இவ்வளவு என்று தர முடியாது. ஜில்லாவிற்கு இவ்வளவு என்றும் தரமுடியாது. அது கோர்ட்டுக்குப் போய் செல்லாது என்று வந்த செய்தி.

1981-82-ல் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள்

வினா எண் 855—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் அமுல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் கடந்த ஆண்டு நியமனம் பெற்ற தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1981-82ல் அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை 53 ஆகும்.

திரு. பி. துரைராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆசிரியர்களின் நியமனத்தைப் பொறுத்த வரையிலே ஒட்டு மொத்தமாக எல்லா பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கும் என்ற வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்று ஒதுக்கு கிறார்களா அல்லது பாடவாரியாக நியமிக்கப்படக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கையில் 18 சதவிகிதம் என்று ஒதுக்கு கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அப்படி நாம் ஒதுக்க முடியாது. சில பாடங்களில் இருப்பார்கள், சில பாடங்களில் இருக்க மாட்டார்கள். ஆனால் ஆங்கிலப் பாடத்தைப் பொறுத்த வரை ஒருவருக்கு கிடைத்திருக்கின்றது. விலங்கியல் பாடத்தில் 12 பேர். தாவரவியல் பாடத்தில் 11 பேர். தான்ஜியாக்ரஃபி பாடத்தில் ஒருவர் என்ற நிலைமையி கிடைத்திருக்கின்றது. ஆகவே மொத்தத்திலே 18 சதவிகிதம் என்பதை பார்க்க வேண்டுமே தவிர பாடவாரியாகப் பார்ப்ப தில்லை. இது இவர்களுக்கு மட்டுமல்ல, பிற்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகையிலும் அப்படிப் பார்ப்பதில்லை.

பாரதியார் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களுக்கு செனட் மற்றும் சிண்டிகேட குழுக்கள் அமைக்கும் திட்டம.

வினா எண் 856—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை பாரதியார், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும், செனட் சிண்டிகேட் குழு இன்னும் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்தக் குழு அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம்:(அ) ஆம்.

(ஆ) கோவை பாரதியார் பல்கலைக் கழகம், மற்றும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகிய இரு பல்கலைக் கழகங்களிலும் ஆட்சிக்குழு, ஆலோசனைக்குழு ஆகிய குழுக்களை அமைப்பதற்கு 6—7—1983 வரை அவகாசம் தந்து அரசு அனுமதி யளித்துள்ளது. இக்கால கட்டத்திற்குள் இரு பல்கலைக் கழகங் களிலும் குழுக்கள் அமைக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—7—1983 ஆம் தேதிக்குள்ளாக குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற கேள்வியில் நான் துணைக் கேள்வி கேட்கின்ற போது தனியார் கல்வி ஸ்தாபனங்களுக்கு கிடைக்கும் நிதி என்று சொன்னேன். அதனை மானியத் தொகை என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

[1983 ஏப்ரல் 23

சிவகாசி நகரில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள்.

வினா எண் 860— திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகரில் திட்ட ஒழுங்கு ஒப்புதல் (Lay out) இல்லாமல் தொழிற்சாலைகளும், வீடுகளும் கட்டி உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சிவகாசி நகரில், சோலைகாலனி, பராசக்தி காலனி, காந்திரோடு ஆகிய இடங்களில் அனுமதி இல்லாமல் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு விட்டதெனவும், அவற்றைத் திட்ட ஒழுங்குபடி நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரில் தொழிற்சாலைகளுக்காகவும், வீடுகள் கட்டுவதற்காகவும் லே அவுட் கொடுத்தும் நீண்ட காலமாக * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்று சொல்லக் கூடாது. ஆகவே அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கான லே அவுட்-களைப் பொறுத்தவரையில் இருக்கின்ற விதிகளை எல்லாம் சில அதிகாரிகள் வளைத்து விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே சரியான வரைபடம், சரியான லே அவுட் போன்றவற்றை எதிர்பார்த்து அதிகாரிகள், இருக்கக் கூடிய காலனிகளில் யார் யார் இன்றைக்கு விரும்புகிறார்களோ அவர்களிடமிருந்து மனுக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் வரப் பெற்றால் கண்டிப்பாக அவற்றுக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

** (மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 ஏப்ரல் 23]

திரு. என். வரதராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லே அவுட் பிரச்சினையிலே அரசு பரிசீலிக்க வேண்டிய மிக முக்கியமான ஒன்று இருக்கின்றது. சாதாரணமாக மக்கள் 20 ஆண்டு காலத்திற்கு மேல் குடியிருந்து அது லே அவுட் ஆகாமல் அந்த மக்கள் சாக்கடை வசதி தண்ணீர் வசதி போன்றவை எல்லாம் இல்லாமல் அவதி பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நகர் புறத்திலேயே அப்படி கஷ்டப்படவேண்டிய நிலைமை இருக்கின்றது. லே அவுட்டிலே வசதி படைத்தவர்கள் மற்றும் ஏமாற்றுகின்றவர்களுடைய லே அவுட் என்றும், சாதாரண மக்கள் குடியிருக்கும்படியான லே அவுட் என்றும் இருக்கின்றது. இது பற்றிப் பரிசீலனை செய்து சாதாரண மக்களின் லே அவுட்டை அங்கீகரிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வீடுகளைக் கட்டுகின்ற நேரத்தில் சாதாரண மக்கள் கட்டுகின்ற லே அவுட் என்றும், வசதி படைத்தவர்கள் வீடு கட்டுகின்ற லே அவுட் என்றும் வித்தியாசம் பார்ப்பதில்லை. ஏனென்றால் வீட்டிற்கு எவ்வளவு செலவாகின்றதோ அதே முறையில்தான் வரிகளும் போடப் படுகின்றன. சாதாரண வீட்டைக் கட்டி இருந்தால் அதற்கேற்ற வரி, வசதி படைத்தவர்கள் பெரிய வீட்டை கட்டியிருந்தால் அதற்கேற்றவரி' என்ற முறையில்தான் நாம் இப்போது அனுசரித்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் கூட கழிவுநீர் அகற்றுவதற்கும், குடிநீர் பெறுவதற்கும் அதே நேரத்தில் மின்சாரம் போன்றவற்றைப் பெறுவதற்கும் உரிய நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு இம்ப்ருவ்மெண்ட் டாக்ஸ், பெட்டர்மெண்ட் டாக்ஸ் என்ற முறையில் லே அவுட்டிற்குக் கொடுக்க வேண்டும். அதற்காகக் கூட விதி முறைகளை எல்லாம் நாம் தயாரித்திருக்கிறோம். முதலிலே இதற்கு 50 சதவீதம் முன் பணமாகச் செலுத்த வேண்டும் என்ற நிலைமை முன்பு இருந்தது. இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அதனை 25 சதவீதமாகக் குறைத்திருக்கிறோம். ஆகவேதான் எவ்வளவு செலவாகின்றதோ அதிலே கால் பங்குத் தொகையை முன்கூட்டியே கட்டி விட்டால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும், வாய்ப்புக்களையும், அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் நாம் முன் வர முடியும். அப்படிப்பட்ட நிலைமைகளை உண்டு பண்ணினால் கண்டிப்பாக லே அவுட் நல்ல முறையில் கிடைக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சிவகாசி நகரில் மனைப்பிரிவு போடக்கூடியவர்கள் முறைப்படி நகராட்சிக்கு விண்ணப்பித்து துணை நகரமைப்பு இயக்குநருடைய அனுமதியைப் பெறாமலே மனைப்பிரிவு போட்டு விற்பதன் மூலமாக அந்த மனைகளில் வீடு கட்டக் கூடியவர்கள் சட்ட விரோதமான கட்டுமானங்களைக் கட்டக் கூடியவர்கள்

இன்றைக்கு எந்த விதமான, நகராட்சியின் அனுமதிகளையும் பெற முடியாமலும், அதற்கு லைசன்ஸ் பெறாத நிலைமையில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன்களைப் பெற முடியாமலும் இருப்பதன் காரணத்தால் அவர்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். அப்படி அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிற காரணத்தால அனுமதி பெறாத லே அவுட்களை அங்கீகரிக்க அரசு முன் வருமா? இந்த பெட்டர்மெண்டு டாக்ஸ் என்று சொல்லக் கூடியதை 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனுமதி பெறாமல் லே அவுட் போடுவது என்பது இப்போது சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கே வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் வரைப்படங்கள் கூட கொடுக்காமல் நகர இயக்குநருக்கு எதுவும் தெரிவிக்காமல் வீடுகளை கட்டிக் கொள்ளலாம் என்ற நிலை வளர்ந்துக் கொண்டிருக்கிறது. அவை தெரிவிக்கப்பட வேண்டும். ஏன் என்றால் எங்கே வேண்டுமானாலும் வீடுகளை கட்டிக் கொண்டு அதற்கு பின்னால் எங்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கவில்லை, எங்களுடைய வேண்டிய அடிப்படை தேவைகளை கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளை அரசின் மீது சுமத்தப்படுகிறது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஆதாரம் இல்லாதது மட்டும் அல்ல, அனுமதி இல்லாமல் கட்டுகின்ற வீடுகளை இடிக்கின்ற அந்த நிலைசள் கூட இன்று இருக்கக் கூடிய நகர அமைப்பு சட்டத்தில் இருக்கிறது. ஆகவே நான் இந்த மாமன்றத்தின் மூலம் லே-அவுட்களை போடுகின்றவர்கள் அனுமதி பெற்றுத்தான் போட வேண்டும் என்ற நிலையை உருவாக்கித்தர வேண்டும். சிலயிடங்களில் நாம் பார்க்கிறோம் லே அவுட் என்று போட்டுவிடுகிறார்கள். அதற்குக் கீழே அரசு அங்கீகாரம் பெற்றது என்று போடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளை நாம் உண்மையில் அவைகளை எல்லாம் பார்த்தால் அங்கீகாரம் பெறாமல் போட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது மட்டும் அல்ல வீடுகளை கட்டுகின்ற நேரத்தில் சரியான வரைப்படங்களை கொடுத்துத்தான் கட்ட வேண்டும் என்ற நிலை வர வேண்டும். பெட்டர்மெண்டைப் பொறுத்தவரையில் 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைக்கின்ற அளவுக்கு எந்த விதமான குறிப்புகளும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரு நகரங்களிலே ஏறக்குறை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சிவகாசியைப் பற்றியது.



அரசம்பட்டிற்கும் பண்ணந்தூருக்கும் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண் 861— டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் அரசம்பட்டிக்கும் பண்ணந்தூருக்கும் இடையே தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதில் தற்போதைய நிலை என்ன?

(ஆ) இதனை துரிதப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; (அ). மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தில் அரசம்பட்டிற்கும் பண்ணந்தூருக்கும் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி அரசால் அங்கீசரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இது வரை இடம் பெறவில்லை. இனி வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலையைப் பொறுத்தும் பணியின் முன்னுரிமையைப் பொறுத்தும் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்..

டாக்டர் கே. சமரசம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரசம்பட்டிக்கும் பண்ணந்தூருக்கும் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட எவ்வளவு தொகை செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது? எப்போது நிதிநிலை சீரடையும்? பொது மக்களின் தேவையை அறிந்து அத்தியாவசிய தேவையின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையில் குறுக்கிடும் தென் பெண்ணை ஆற்றின் நீர் வழி பாதை மட்டும் 160 மீட்டர் அகலத்திற்கு இருக்கிறது. இந்த இடத்தில் எந்தவிதமான பாலமும் இல்லை. பாலம் கட்ட வேண்டும் என்று சொன்னால் ஏறத்தாழ 80 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கக் கூடிய நிதிநிலைக்கு ஏற்பத்தான் நாம் பல்வேறு திட்டங்களை எடுத்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறோம். ஆகவேதான். நிதிநிலை எப்போது சரியாகிறதோ அந்த நேரத்தில் இந்தப் பாலம் எடுத்துக் கொள்ளப்படும்.

டாக்டர் கே சமரசம; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டப்பட்டால் 12 மைல் முதல் 32 மைல் அளவுக்கு நீளம் 3 வழி தடங்களிலும் குறைகிறது. 20 பேருந்துகள் புதிய வழி தடத்தினால் கூடுதல் வருவாயை பெறவும் மேலும் 10 வழித் தடங்கள் உருவாகவும் போத்தம்பள்ளி சந்தை, காரிமங்கலம் சந்தை, காவேரிபட்டிணம்

[1983 ஏப்ரல் 23

தஞ்சை நகரின் மத்தியில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம்.

வினா எண். 858— திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரின் மத்தியில் அமைந்துள்ள குறுகலான பழுதடைந்த இரயில்வே மேம்பாலத்தை அகலப் படுத்துவதற்கான திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளதால்' இதற்கான நிதி ஒதுக்கீடு இன்னும் செய்யப்பட வில்லை.

திரு. மு. அம்பிகாபதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நகரத்தின் மத்தியிலே உள்ள இந்த பாலம் மிக முக்கியமான பாலம். பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்வதற்கும், பேருந்து நிலையத்திலிருந்து மகளிர் இல்லத்திற்குச் செல்லவும், பேருந்து நிலையத்திலிருந்து சூப்பிரண்டென்டென்ட் ஆப் போலீஸ் அலுவலகத்திற்கும், பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும், இந்த பாலத்தின் வழியாகச் செல்ல வசதியாக இருக்கும். இந்தப்பாலம் இல்லாவிட்டால், சுற்றிக் கொண்டு வரவேண்டியிருக்கும். ஆகவே இதில் சற்று அதிக கவனம் செலுத்தி, இந்தப் பாலத்தை விரைவாக கட்டுவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பாலம் தற்போது கட்டப்பட வேண்டும் என்று சொன்னால், ஏறத்தாழ 95 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்போதுள்ள நிலையிலே அந்தப் பாலம் 2 டன் சுமை உள்ள வாகனங்களை மட்டும் தாங்கக் கூடிய சக்தியை பெற்றிருக்கிறது. ரெயில்வே இலாகாவிடம் இந்தப் பாலத் தை பு ப்பிக்க . பண ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நகராட்சி மூலமாக கேட்டோம். ஆனால் அவர்கள் ஒதுக்குவதாக தெரியவில்லை. நகராட்சியிலும் போதிய பண வசதி இல்லை. பண வசதியில் ஓரளவு நல்ல சூழ்நிலை ஏற்படுகிற காலத்தில் இந்தப் பாலத்தை பழுது பார்த்து புதுப்பிக்க எடுத்துக் கொள்ளலாம் என்ற அளவில் தான் தற்போது நிலைமை உள்ளது.



1983 ஏப்ரல் 23]

கரூர் அமராவதி தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்படும் புதிய பாலம் மற்றும் பைபாஸ் ரோடுக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள்.

வினா எண் 859—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்—அமராவதி தேசிய நெடுஞ்சாலையில் ஆற்றுக்குக் குறுக்கே கட்டப்படும் புதிய பாலம் மற்றும் பைபாஸ் ரோடுக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு தொகை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) கரூர்—அமராவதி தேசிய நெடுஞ்சாலையில் ஆற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டும் புதிய பாலம் மற்றும் பைபாஸ் ரோடுக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் 38 பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவற்றில் இது வரை 4 பகுதிகளில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. மற்ற 34 பகுதிகளின் நிலச் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு தொகை கொடுக்க எடுத்த நடவடிக்கை பல்வேறு கட்டங்களில் உள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கும் அதை ஒட்டியுள்ள பை-பாஸ் ரோட்டிற்கும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எவ்வளவு? எவ்வளவு தொகை வழங்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்ஜிதம் செய்ய வேண்டிய மொத்த நிலத்தின் பரப்பு 97 ஏக்கர் 47 செண்ட். அதற்காக மொத்தம் செலவிடப்படும் தொகை 10 இலட்சம் ரூபாய். இதுவரையிலும் 6 ஏக்கர் 10 செண்ட், அதற்காக உண்டான தொகைகள் மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பாக்கி இருக்கக் கூடிய 34 பகுதிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கும் அதை ஒட்டியுள்ள பைபாஸ்—ரோட்டிற்காகவும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் மதிப்பீடு அதிகமாக இருக்கின்றது. இருந்தாலும் பாலம் வேண்டியும், பை பாஸ் ரோடு வேண்டியும் குறைந்த விலைக்கு அதாவது அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் அதற்கான நஷ்ட ஈட்டுத் தொகை வராமல் நீண்டகாலம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தத் தொகையினை உடனடியாக வழங்குவதற்கும் அந்த வேலையினை விரைவாக செய்து முடிப்பதற்கும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே' சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சந்தையிலிருந்து பொருள் போக்குவரத்துவசதிகள் மேலும் வசதியாகவும், சீரோடும் அமைய வழி இருக்கிறது. ஆகவே இதனை விரைவாக கட்டி முடிக்க தனி கவனம் செலுத்தி அரசு இதை எடுத்துக் கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய முக்கியத்துவத்தை எல்லாம் உணர்ந்து எவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. க. இரா. சின்னராசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசம்பட்டிக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்ட இருக்கிற இந்தப் பாலம் இதற்கு முன்னால் இருக்கிற பாலங்களிலிருந்து இத்தனை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தால்தான் பாலம் கட்ட வேண்டும் என்று அரசுக்கு ஏதாவது விதி இருக்கிறதா? இல்லை இந்த பகுதியில் இருக்கின்ற மக்கள் 20 மைல் சுற்றிக் கொண்டு வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாதக்கணக்கில் ஆற்றில் தண்ணீர் வருகிறது. மக்களுடைய அந்த பிரச்சனையை முன் வைத்து பெரிய அளவுக்கு இல்லை என்றாலும் சாதாரண நிலையில் அந்தப் பாலத்தை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, விதியைப் பற்றிக் கேட்டார்கள். நிதியைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். நிதி சரியாக இருந்தால் விதி சரியாகி விடும் என்ற நிலையிலேதான் அரசாங்க பட்ஜெட் எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. நிதி வசதி சரியாக இருக்கிற நேரத்திலே இது போன்ற பாலங்கள் எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்களும் சொல்கிற முக்கியத்துவத்தை உணர்ந்து அடுத்த ஆண்டு இதை எடுத்துக் கொள்ளப்படுமா என்பதைப் பற்றி இந்த ஆண்டே பரிசீலனை செய்யப்படும்.

### 1982 டிசம்பர் முடிய மதுரை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள்.

*வினா எண் 862 திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1982 டிசம்பர் முடிய எத்தனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.?

(ஆ) அவைகள் மூலம் எத்தனை உறுப்பினர்கள் பண்ணைகள் அமைத்துள்ளனர்?



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; (அ) பத்து சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) உறுப்பினர்கள் எவரும் பண்ணைகள் அமைக்கவில்லை.

திரு. என். வரதராஜன்; தலைவர் அவர்களே, இந்த கோழி வளர்ப்புத் திட்டம் அதன் கீழ் அமைக்கப்படுகிற பண்ணைகள் எல்லாம் போதுமான அளவுக்கு வளர்ச்சியடையவில்லையே—இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே என்று நான் சொல்லவரவில்லை, தமிழ்நாட்டிலே கடந்த 10 ஆண்டுக் காலமாகவே வளர்ச்சி பெறவில்லையே—அதற்கான காரணங்கள் என்ன என்பதை அரசு ஆய்ந்ததா? இனிமேல் இந்தத் துறையில் சிரமம் என்ன என்பதை ஆராய்ந்து அவை நல்ல முறையிலே செயல் படுவதற்கு திட்டமிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சங்கங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே கடன பெற இயலாமை இருக்கிற காரணத்தினால் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. இருந்தாலும் அப்படி சங்கங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. அந்தச் சங்கங்களைப் பற்றி ஆராய்ந்து மீண்டும் செயல் படுத்த இயலுமா என்பதைப் பற்றி ஆராய்வதற்காக இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்காக தனியாக கூட்டுறவு சார்பதிவாளர் கோவாப்ரேடிவ் சப் ரிஜிஸ்திரார் நியமிக்கப்பட்டிருக்கிறார். கால்நடைத் துறை மூலமாக சிறப்பு கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தனியார் துறையில் 74 பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் கீழ் ஒரு நபருக்கு 100 கோழி குஞ்சுகள் வீதம் 5865 ரூபாய் வங்கிகளின் மூலமாக கடனாகக் கொடுத்து அதன் மூலமாக சிறு விவசாயிகளுக்கு 1466 ரூபாய் மானியமாகவும் குறுநில விவசாயிகளுக்கு 1955 ரூபாய் மானியமாகவும் மீதத் தொகையை தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலமாக கடனாகப் பெற்று அந்தப் பண்ணைகளை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆலோசித்து வருகிறது. சரியான முறையிலே இயங்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். கால்நடை சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்—அது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டமாகும்—இந்த தீவனத்தினுடைய மதிப்பீட்டைக் கூட மத்திய அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. வங்கிகளில் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள். அதனால் தான் இந்தத் திட்டம் மேலும் விருத்தி செய்ய முடியாத அளவுக்குக் காரணமாக இருந்தது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பல பேர்களுக்கு கோழி வளர்ப்புச் சங்கங்கள் உருவாகியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களுக்குத் தவிர தனிப்பட்ட

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சமையல் ஆகிற வரையில் சாப்பிட வேண்டியவர்கள் காத்துக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

**திரு. ரா. உமாநாத்:** அது என்ன சமையல்? நீங்கள் சமையல் செய்யவில்லை, வேறு ஏதோ செய்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அந்த அறிக்கை தயாரானவுடன் அவையில் வைக்கப்படும்.

**திரு. ரா உமாநாத்:** தலைவர் அவர்களே, இட் இஸ் வெரி அன்பார்ச்சுனேட் டு தி ஹவுஸ். அதை விரைவில் வைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவில் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எப்படியும் செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டுவிடும்.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

**திரு. சு. பாலன்:** தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த அம்பத்தூர் பகுதியிலே கடந்த ஒரு வார காலமாக இரவு நேரங்களில் ஒரு திருட்டுக் கும்பல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். நானும் அதைப் படித்துப் பார்த்தேன். அதை அவையில் எடுத்துக் கொள்கிறபோது பேசலாம். ஏதோ ஒரு சம்பவம் நடந்ததென்றால் தொகுதி பூராவும் நடக்கிறது என்று சொல்வது சரியாக இருக்காது உட்காருங்கள்.

(ஈ) பேரவை நடவடிக்கைகளை வானொலியில் ஒளிபரப்புவதில் ஏற்படும் தவறுகள்.

**திரு. என். வரதராஜன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் நடவடிக்கைகள் பற்றி வானொலியில் சரியாக ஒலிபரப்ப வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். ஏனென்றால் அதற்கும், நமக்கும் உறவுகள் பலமடையாமல் இருக்கின்றன. நேற்றையதினம் கரும்பு விவசாயிகளுடைய பாக்கிகள் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதன் மீது விவாதம் நடந்து நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். ஆனால் வானொலியில் நம்முடைய தொழிலமைச்சர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் பதிலளித்தார்கள் என்று சொல்கிறார்கள். மோட்டார் வாகனங்களின்மீது வரி விதிப்பு குறித்த சட்டமுன்வடிவில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். அதிலே மாண்புமிகு கே. ஆர் சுந்தரம் அவர்களும் பேசினார்கள். அவர்களுடைய பெயர் சொல்லப்படவில்லை. முன்பெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், அந்த தீர்மானம் கொடுத்தவர்



களின் பெயர் பட்டியலை சொல்லி, அவர்கள் கூறிய கருத்துக்களைச் சொல்வார்கள். ஆகவே தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்பதற்காக இதனை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு நன்றி. வானொலியில் இப்படிப்பட்ட சிறு சிறு தவறுகள் நடந்து கொண்டிருப்பதாக எனக்கு அவ்வப்போது தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே வானொலியில் சம்பந்தப்பட்டவர்களோடு இதுகுறித்து தொடர்பு கொண்டோ அல்லது அவர்களோடு நேரில் பேசியோ பரிகாரங்களைக் காண முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வறட்சி நேரத்தில் மின் கட்டண பாக்கிக்காக மின் இணைப்புத் துண்டித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், மு. அம்பிகாபதி, பெ. சு. திருவேங்கடம், என். வரதராஜன், என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள் ஆகியோர் "தமிழ்நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையிலும் பல இடங்களில் பழைய மின் கட்டண பாக்கிக்காக மின் இணைப்பு துண்டிக்கப்படுவதால் விவசாயிகள், பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழ்நாடு பூராவும் உள்ள விவசாயிகளின் கோரிக்கை, கடந்த காலங்களில், சில மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்பதாகும். அதைச் செய்கின்ற வரையில் மின் கட்டணங்களைக் கட்டாமல் சில போராட்ட நடவடிக்கைகளில்கூட ஈடுபட்டு, அதற்குப் பின்னால் அது குறித்து சில ஒப்பந்தங்கள் ஏற்பட்டு, அந்த மின்சார கட்டணங்களின் சில சீர்திருத்தங்களைச் செய்து, மாற்றி அமைத்தார்கள். அது என்ன ஒப்பந்தம் என்றால் 1 பிளஸ் 1—அதாவது ஒரு மாத பழைய பாக்கி, ஒரு மாத நடப்பு பாக்கி—ஆக இரண்டையும் சேர்த்துக் கட்டவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதன் அடிப்படையில் பல இடங்களில் கட்டிவிட்டார்கள். ஆனால் சில இடங்களில், ஆங்காங்குள்ள வறட்சி நிலை காரணமாக,

நபர்கள் அப்படி கோழி வளர்ப்புத் தொழிலை நடத்துகிறேன் என்று சொல்லி முன்வந்தால் அவர்களுக்கு சலுகை அளிக்கப் படுமா? மதுரை மாவட்டத்திலே அந்த மானியம் தரப்பட வில்லை என்று சொல்லப்படுகிறதே அது எந்த அளவிற்கு உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்: தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியார்களுக்கு 74 பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்திலே பண்ணைகள் அமைத்து இருக்கிறார்கள் அவைகள் இன்றைக்கு செயலாக்கத்தில் இருந்து கொண்டு வருகின்றன:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு; ஓர் உரையின் தொடக்கததில் (*)உடுகுறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிப் பார்க்கப் பெற்றது. என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-00)

## 2. தகவல் கோரல்

### (அ) கைதாசி சிறையில் இருக்கும் உறுப்பினர் அவைகூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற கூட்டத்தொடர் அநேகமாக நிறைவுபெறுகின்ற நிலையில் இருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் வேண்டுமானால் நீட்டிக்கப்படலாம் என்று கருதுகிறேன். இந்த சட்டமன்றத்திலே இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியினுடைய உறுப்பினராக ருக்கிற மாண்புமிகு இராஜசேகரன் அவர்கள் இன்றைக்கு சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவருக்கு ரிமாண்ட் மே மாதம் 5-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இந்த அளவைக்கு வந்து அவர்கள் கடமைகளை ஆற்றவேண்டிய நிலை இருக்கிற காரணத்தாலே, தாங்கள் ஒரு ஏற்பாடு செய்து, இந்த சபைக் கூட்டத்திலே அவர்கள் கலந்து கொள்வதற்கு முயற்சி செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். வேண்டுமானால் காவல் துறையினரின் பாதுகாவலோடு அவர் இங்கே சபைக்கு வருவது கூட பொருத்தமாக இருக்கும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் கூடச் சிறைச் சாலையில் இருந்திருக்கிறேன். அப்படிப்பட்ட நேரத்தில் நான் சபைக்கு வந்ததில்லை. சிறைச்சாலையில் உறுப்பினர் உட்கார்ந்து கொண்டு அவைக்கு எப்படி வருவது என்றால் என்ன செய்யமுடியும். (குறுக்கீடு) நான் பார்லிமெண்டில் இருந்திருக்கிறேன். உங்களுடைய கட்சிதான் அங்கே ஆளுங்கட்சி. சிறைச்சாலையிலிருந்து வந்து பேச யாரையும் அங்கே அனுமதித்ததில்லை. நான் ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல, இரண்டு மாதங்கள் சிறைச்சாலையில் இருந்தேன். இப்போது என்னைப்பற்றி சொல்லிக்கொள்வதற்கு நேரம் கொடுக்காதீர்கள். உறுப்பினர் வருவதாக இருந்தால் ஜாமீனில் வரலாம். சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவ்வப்போது ஏற்படுகிற கிளர்ச்சிகளின்போது சிறைச்சாலைக்கு போவது சகஜம். வெளியே வருவதென்றால் அவருடைய வக்கீலை கலந்துகொண்டு வரலாம்.

### (ஆ) கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை வைப்பது.

*திரு ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் சம்பந்தமாக விவர அறிக்கை ஓரிரு நாட்களில் இங்கே அவையில் வைப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அந்தக்கெடு இப்போது தாண்டி விட்டது. பத்திரிகைகளில் இது சம்பந்தமாக பல டீடெய்ல்ஸ் வந்து கொண்டிருக்கின்றன. இட் இஸ் எ வெரி அன்பார்ச்சுனேட் பொசிஷன். பத்திரிகைகளில் பல விவரங்கள் வந்து கொண்டிருக்கிறபோது, நம்முடைய முதலமைச்சர் அஷ்யூர் பண்ணிய விவர அறிக்கை வைக்காமல் இருப்பது சரியல்ல. இரண்டு மாநிலங்களிலும் பவுன்டேஷன்—ஸ்டோன்ஸ் போடப் போகிறார்கள். நமக்கு இன்னும் எந்த அறிக்கையும் வைக்கப் படவில்லை. I want to know from the Government, when they are going to lay the Statement on the table of the House? ஆகவே இன்றைக்கே அந்த அறிக்கையை தாங்கள் வைக்கச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசிடம் ஏதாவது தகவல் இருந்தால் அவைக்குத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா ஆற்று நீர் உடன்பாடு சம்பந்தமாக விவரமான அறிக்கையை விரைவில் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: இன்னுமா தயாராகிக் கொண்டிருக்கிறது? பேப்பர்களில் டீடெய்ல்ஸ் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது என்று சொல்வது 'இட் இஸ் நாட் ஃபேர் டு தி ஹவுஸ்'.

கட்டமுடியாமல் அந்த பாக்கி அப்படியே இருக்கிறது. ஆனால், அவர்கள் நடப்பு பாக்கிகளை ஒழுங்காகக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். வர்கள் அந்த பழைய பாக்கிகளைக் கட்டாமல் இருப்பதற்கு மற்றொரு காரணம், அவர்கள் எவ்வளவு கட்டவேண்டும், எந்த தேதியில் இருந்து அந்த பழைய பாக்கிகளைக் கட்டவேண்டும் என்பதற்கான பில் வரவில்லை என்பதாகும். ஆனால் இப்போது எப்படி பில் அனுப்புகிறார்கள் என்றால் 1,000 ரூ. 2,000 ரூ. 5,000 ரூ. என்று பில் அனுப்புகிறார்கள். தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கும் கடுமையான வறட்சியின் காரணமாகவும், பொதுவாக பருவ மழை தவறியிருப்பதன் காரணமாகவும், கிணறுகளில் தண்ணீர் இல்லை. அதனால் விவசாயம் செய்யமுடியவில்லை. விவசாயம் செய்யாததால் வருமானம் இல்லை. வருமானம் இல்லாததால் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை. குடும்பம் நடத்துவதற்குக் கூட வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பழைய பாக்கிகளைக் கட்டமுடியவில்லை. ஆனால் தற்போதுள்ள பில்களைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் சேலம், நாமக்கல் வட்டாரத்தில் பெட்டிஷன் கூட கொடுத்து இருக்கிறார்கள். அதைப்போலவே, திருச்சியில் கரூரில், நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவில், கோவில்பட்டி பகுதிகளில், வடஆற்காடு மாவட்டத்தில் இப்படி தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் கடந்த காலத்தில் உள்ள பாக்கிகளைக் கட்ட முடியாத காரணத்தால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கிறது. அது குறித்து பெட்டிஷன்கள் எல்லாம் அரசுக்கு கொடுத்து இருக்கின்றனர்.

தற்போது மின்சாரக் கட்டணம் குறித்து எந்தவிதமான தாவாவும் இல்லை. பழைய பாக்கியை இருப்பதை மட்டும் நிலுவையில் வைத்துக்கொள்ள, கட்டமுடியாமல் வறட்சி நிலை நீங்கும்வரை நிலுவையில் இந்த அவர்கள் கேட்கின்றனர். தற்போது வைத்துக்கொள்ள கொஞ்ச நஞ்ச தண்ணீரை வைத்துக்கொண்டு, கிணறுகளில் உள்ள ஏக்கரில் சாகுபடி வைத்துக்கொண்டுள்ளவர்கள் ½ ஏக்கர், ஒரு செய்வதற்கு—சோளம், கேப்பை போன்றவைகளைச் சாகுபடி செய்வதற்கு இந்த மின்சாரம் தேவைப்படுகிறது. அந்த மின்சாரத்தையும் துண்டித்துவிட்டால் அவர்களுக்கு கொஞ்சம் நஞ்சம் எஞ்சி குடிப்பதற்கு சாகுபடி செய்வதுகூட தடுக்கப் பட்டு, அவர்கள் கழுத்தை நெறிப்பதற்கு ஒப்பானதாகிவிடும். ஆகவே, தயவுசெய்து இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எல்லாம் இந்த வறட்சி நிலை முடியும் வரையில் அந்த பழைய பாக்கிகளைக் கட்டாமல் இருப்பதற்கு உத்தரவுகளைப் போடவேண்டும். நான் அறிந்த வரையில் 50 ஆண்டுக்காலம், 60 ஆண்டுக்காலம் வாழ்ந்தவர்களிடத்தில் கேட்டபோது சொல்கிறார்கள், இப்படிப்பட்ட வறட்சி இந்த 60 ஆண்டுக்காலத்தில் பார்த்ததில்லை என்று. ஆகவே, இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் கொஞ்சம்



கருணையோடு இருக்கவேண்டும். அந்தக் கிணற்றில் இருக்கின்ற தண்ணீரைக் கவலை வைத்து கூட இறைத்து பயிரிட முடியாது. இந்த விவசாயம் செய்ய குறிப்பாக இந்த மின்சாரம் தேவை. ஆகவே, நடப்புக் கட்டணத்தை மட்டும் செலுத்திவிட்டு, பழைய பாக்கிகளை பின்னர் காஞ்சம் கொஞ்சமாகக் கட்ட அனுமதிக்க வேண்டும். ஆகவே இந்த விஷயத்தில் எந்தவிதமான யோசனையும் செய்யாமல், வறட்சி நிலை முடியும் வரையில், அந்த பழைய பாக்கிகளைச் செலுத்தவேண்டாம், நடப்பு பாக்கிகளை, நடப்புக்கட்டணங்களைக் கட்டினால் போதுமென்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதோடு, பல்வேறு இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, அதன் காரணமாக விவசாயிகள் கஷ்டப் படுவதால், அவர்களுக்கு எந்த விதத்தில் அரசாங்கம் உதவிகளைச் செய்யவேண்டும் என்கிற நிலைமைகளைக் குறித்து விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலேயும் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிற நேரம் ஆகும். இப்படிப்பட்ட ஒரு கடுமையான நேரத்தில் விவசாயிகள் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை இருந்தும், இறைவைக் கிணற்றில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தும் அவர்களால் முடிந்த அளவிற்குப் பயிரிட்டு உணவை உற்பத்தி செய்கிறார்கள் என்றால் நிச்சயமாக நம்முடைய அரசு அப்படிப்பட்ட விவசாயிகளைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது; பாராட்டு வதோடு மட்டுமல்லாமல் பரிசளிக்கக்கூடக் கடமைப் பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே விவசாயிகள் போராட்டத்தின்பொழுது தமிழகத்திலே உள்ள திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம், வடஆர்க்காடு மாவட்டம் இன்னும் மற்ற மாவட்டங்களிலே விவசாயிகள் இந்த மின்சாரத்திற்குண்டான கட்டணத்தைக் கட்டாமல் ஒரு காலகட்டத்தில் நிறுத்திவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பல நேரங்களில் இங்கே சொன்னதற்கிணங்க, எங்களைப் போன்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்கூடப் பல்வேறு நேரங்களில் சொன்னதற்கிணங்க, விவசாய சங்கத்திலே சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சங்கத்திலே சேராதவர்களாக இருந்தாலும் சரி, மின்சாரக் கட்டணத்தைப் பரவலாக தமிழ்நாட்டிலே எல்லோருமே கட்டுகின்ற நிலைமையை அடைந்திருக்கிறது. அப்படிக் கட்டி வந்தாலும், வறட்சியின் காரணமாக

ஏற்பட்டிருக்கின்ற கஷ்டத்தின் அடிப்படையிலே பல விவசாயிகள் இப்பொழுது இருக்கின்ற நடைமுறைப் பில்லைக்கூடக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கே அது நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட நேரத்தில் ஏற்கனவே இருக்கின்ற பழைய பாக்கியையும் கட்ட வேண்டுமென்று சொல்வது தவறு என்று கூட நான் சொல்ல மாட்டேன்; ஆனால் கட்டவில்லை என்று ஆங்காங்கு இருக்கின்ற மின்சாரத் துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கையை எடுத்து அவர்களுடைய மின்னிணைப்பைத் துண்டிக்கின்ற காரியங்களைச் செய்வது கண்டிக்கத்தக்க ஒரு செயல் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக ஏற்கனவே அமைச்சரவர்கள் இந்தப் பேரவையிலே அறிவிக்கின்றபொழுது பாக்கியிருக்கின்ற மின்சாரக் கட்டணத் தத் தவணை முறையிலே கட்டினால்கூட நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக்கூட ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். வட ஆர்க்காடு மாவட்டத்தில் கலசப்பாக்கம், போளூர், கேளூர் விவசாயிகளுக்கு சர்சார்ஜ் என்றும் பில்லிலே போட்டுத் தருகிறார்கள். ஒரு விவசாயியின் பில்லைக்கூட நான் காண்பித்தேன். அவர்கள் கட்ட வேண்டிய பணம் 1,200 ரூபாய் என்றால், சர்சார்ஜ் என்று 1 400 ரூபாய் என்று போட்டு, மேற்கொண்டு 400 ரூபாய் போட்டு, ஏறத்தாழ அந்த விவசாயி ஏறக்குறைய 3,000 ரூபாய் அளவிற்கு உடனடியாக, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் கட்ட வேண்டும்; அப்படிக் கட்டவில்லை என்றால் மின்னிணைப்பைத் துண்டிப்பது அல்லது ரெவின்யூ ஆக்டின் கீழே வசூலிக்கப்படும் என்ற நிலைமைகளை ஏற்படுத்தி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், பணத்தைக் கொடுத்தால் வாங்கிக் கொள்வோம் என்று. போளூர் பகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையி சொல்ல வேண்டுமென்றால், 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசாங்கம் ஒரு உத்தரவு இட்டிருப்பதாகவும் அங்குள்ள அதிகாரிகள் சொன்னார்கள். அந்த உத்தரவின்படி, வட்டி என்ற பெயரில் இல்லாமல் சர்சார்ஜ் என்ற பெயரில் இப்படிப்போட்டு அரசாங்கத்தின் உத்தரவே, மின்சாரத் துறையின் உத்தரவே இருக்கிறது, நாங்கள் அந்த ஆணையின்படிதான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம், வேறு தவறான முறையில் கொடுக்க வில்லை, விதிப்படிதான் இருக்கிறது, நீங்கள் வேண்டுமானால் அரசாங்கத்திடம் சொல்லி நடவடிக்கை எடுக்கலாமே தவிர, நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது என்று அதிகாரிகள் சொல்லி விட்டார்கள். எனவே, நான் உங்கள் மூலமாக அமைச்சரவர் களிடத்திலே கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஏற்கனவே நீங்கள் இந்த அவையிலே சொன்ன உறுதிமொழியைக்கூட மீறுகின்ற அளவிற்கு நடப்பதாக இந்த உத்தரவு அமைந்திருக் கிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.



மின்சாரப் பற்றாக்குறை நிலவுகின்ற நேரம்; கிணற்றில் தண்ணீர் இல்லை; ஏற்கனவே திருவண்ணாமலைக்கு வருகின்ற பொழுது போளூருக்கு ஒரு உறுதியைக் கூடக் கொடுத்தார்கள், மார்ச் மாதம் 31-ஆம் தேதிவரையில் விவசாயிகளுக்குத் தவறாமல் மின்சாரம் தருகிறோம் என்று. ஆனால் அதுவும் தவறிவிட்டது. இப்படிப்பட்ட நேரத்தில் பாக்கியைக் கேட்பதோடு மட்டுமல்லாமல் சர்சார்ஜ் என்று வட்டியும் போடுகிறீர்களே, இது நியாயம்தானா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பழைய பாக்கியைத் தவணை முறையில் வசூலிக்கவேண்டும். வசதி படைத்தவர்கள் கட்டினால் வாங்கிக்கொள்ளுங்கள். நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, இந்த சர்சார்ஜை உடனடியாக நீக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, எல்லா விவசாயி களுக்கும் நோட்டீஸ் கொடுப்பதைத் தடுக்கவேண்டும். இன்னும் இதைப்பற்றி விரிவாகப் பேச, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணப் பழைய பாக்கியை விவசாயிகள் செலுத்தாததால், தமிழ்நாடு முழுவதும், இன்றைக்கு சேலம், வடாற்காடு, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களில், பொதுவாக சொல்லப்போனால், தமிழகம் முழுவதும் மின்சார இணைப்புகள், பம்ப் செட்டுகளுக்குக் கொடுத்திருக்கக்கூடிய மின் இணைப்புகள் துண்டிக்கப்படுவது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி துண்டிக்கப்படுவது மட்டுமல்ல. பல செய்திகளைக் கேட்டால், ஆச்சரியமாக இருக்கிறது. அந்த இணைப்பைக் கொடுக்கக்கூடிய பெட்டிகளைக் கூட மின்சாரத்துறை அகற்றிக் கொண்டுபோகிறார்கள். எங்கள்மீது மின்சாரத்துறைக்கு அதிகமாக கோபம் இருக்கிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். உண்மையிலேயே தமிழ்நாட்டிலே நமக்கு மிகுந்த கஷ்டம் இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். மாநில அரசிற்கு அல்லது மின்சாரத் துறைக்கு பல்வேறு நெருக்கடி இருக்கிறது என்பதை உணர்கிறோம். அமைச்சர் இதைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே வறட்சி என்ற காரணத்தினாலே பல நிவாரண நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அந்த நிவாரண நடவடிக்கைளின் ஒரு பகுதியாக இந்த மின்சாரக் கட்டணத்தை வசூலித்து, பாக்கியை 4, 5 மாதங்களாக, விவசாய நிலைமை ஓரளவு சீரடைந்த பிறகு, வரியை வசூலிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மின் இணைப்பை உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இதுசம்பந்தமாக அத்துமீறல்கள் அரசிற்குத் தெரியாமல் நடந்திருக்கலாம். அவைகளையெல்லாம் ஒருமனதாக சிந்தித்து, இதில் இருக்கக்கூடிய சில சிக்கல்களைத் தவிர்க்க வேண்டுமென்று

வற்புறுத்த விரும்புகிறேன். அதன் அடிப்படையிலே இதைப்பற்றி விரிவாக விவாதிப்பதற்காகவும், விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதற்காகவும், பேரவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையிலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல், இன்றைக்குக் கடும் வறட்சியால், மின்சாரப் பற்றாக்குறையால், விவசாயப் பெருமக்கள் பெரிதும் அல்லல்படுகின்ற நிலையில், 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிற மாதிரி' மின்சார இணைப்பைத் துண்டிப்பது ஒரு கடுமையான நடவடிக்கை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு அவர்கள் கடுமையான வறட்சியால், விவசாயம் சரிவர நடைபெறாமல், அவர்கள் அன்றாடம் சாப்பிடுவதற்கே வழி இல்லாமல், இருக்கின்ற நிலையிலே, பழைய பாக்கியை வசூலிப்பது எப்படி பொருத்தமாகும் என்பதை நான் கேட்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் பணம் வைத்துக்கொண்டு, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இப்படி கடுமையான வறட்சி தொடர்ந்திருக்கின்ற காரணத்தால், கட்ட முடியவில்லை. விவசாயம் தொடர்ந்து இருக்கும், விவசாயப் பொருள் நன்றாக விளையும், நல்ல விலை கிடைக்கும் என்ற நினைப்பில் பழைய பாக்கியில் ஒன்றையும், நடப்பு பாக்கியையும் கட்டுவதற்கு ஒத்துக்கொண்டார்கள்.

வாழ்வதற்கே பிரச்சினை என்று இருக்கின்ற நேரத்திலே, அரசாங்கம் மின் இணைப்பைத் துண்டிப்பது கடுமையான செயலாகும். இதை மறுபரிசீலனை செய்து மின இணைப்பைத் துண்டித்து இருக்கின்றதை மீண்டும் இணைப்பு அளித்து, வருண பகவான் கருணை காட்டியதற்கு பின்னால், வருண பின்னால், பழைய பாக்கியை வசூலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய சொத்துக் கணக்கைப் பார்த்தேன். அதிலிருந்து அவர் ஒரு விவசாயி என்று தெரிகிறது. விவசாயி என்ற முறையிலே பிரச்சினையை நன்கு உணர்ந்திருப்பார். தமிழகம் பூராவும் இருக்கிற மக்கள் பெரிதும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்காலம் இருட்டாக இருக்கிறது. மின்சார இருட்டைச் சொல்லவில்லை. வாழ்க்கை இருட்டைத்தான் சொல்கிறேன். அவர்கள் வயிற்றில் பால் வார்க்கிற ஒரு நல்ல செய்தியைச் சொல்லி, வளம் வந்ததற்குப் பின்னால், பழைய பாக்கியை வசூலிப்பது முறையாக இருக்கும். ஆக இது முக்கிய



மான பிரச்சினையாக தமிழகத்திலே இருக்கிற காரணத்தாலும், இதைவிட முக்கியமான ஒரு பிரச்சினை தமிழகத்திலே இல்லை என்கிற காரணத்தினாலும், அதை விரிவாக விவாதிப்பதற்காக, இந்தப் பேரவையினுடைய இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிக்கப்படுகின்ற வரிக்கும் வாங்குகின்ற, பொருளுக்கு தரும் விலைக்கும் வேறுபாடு உண்டு. வறட்சிக் காலத்தில் வரியைத் தள்ளி வையுங்கள் அல்லது வாங்கிய கடனை தள்ளி வையுங்கள் என்று சொல்வது வேறு. ஆனால் வாங்கிய பொருளுக்கு தருகின்ற விலை என்பது வேறு. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இது விவசாயிகள் வாங்கிய பண்டமே தவிர, அரசினால் விதிக்கப்பட்ட வரி அல்ல என்பதை தெளிவாக்குவது என்னுடைய கடமை. ஆகவே இது வறட்சிக் காலமானாலும் வளம் உள்ள காலமானாலும் பொருளை வாங்குபவர்கள் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும். அதுதான் நல்ல சிறந்த பண்பு என்பதை இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசிய அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள். சரி, வறட்சிக் காலத்திலேதான் இந்தக் கஷ்டம் வளமாகயிருந்த காலத்திலே யாவது தந்தார்களா என்றால், இப்போது யார் தராமல் இருக்கிறார்களோ அவர்கள் அந்தக் காலத்திலேயும் தரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளின் சங்கங்களை வரவழைத்துப் பேசி நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக சேர்ந்து எடுத்த முடிவு ஒவ்வொரு மாதத்திற்கு உரிய நிலுவைத் தொகையை அந்தந்த மாதத்திற்குரிய கட்டணத்தோடு சேர்த்துக் கட்டவேண்டும் என்பது. அதன்படி பல விவசாயிகள் கட்டினார்கள். கட்டி வருகிறார்கள். ஆனால் ஒருசில விவசாயிகள் அன்றும் கட்டவில்லை. இன்றும் கட்டவில்லை. அன்று அவர்களுக்கு கிடைத்தது பல காரணங்கள். அவற்றை எல்லாம் நான் மீண்டும் விளக்க விரும்பவில்லை. ஆனால் இன்று அவர்களுக்கு கிடைத்திருக்கின்ற காரணம் வறட்சி. நான் மாண்புமிகு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் பால் வார்க்கவேண்டியதுதான். ஆனாலும் யாருக்குப் பால் வார்க்கவேண்டும் என்பதையும், அவர்கள் பார்த்து பால் வார்க்கவேண்டும். ஏன் என்றால், ''நன்றாற்ற லுள்ளும், தவறுண்டு அவரவர், பண்பறிந்து ஆற்றாக் கடை'' என்று திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். 37.59 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இன்றுவரை 16.38 கோடி ரூபாய் வசூலாகிவிட்டது. 21.21 கோடி ரூபாய் இன்னும் நிலுவையில் உள்ளது. பெரும்பாலான விவசாயிகள் அதைக் கட்டிக்கொண்டு தான் வருகிறார்கள். ஆசையினாலே ஒருசிலர் அன்றும் கட்டாமல்,

இன்றும் கட்டமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்றால் அதை ஊக்கப்படுத்துவது உண்மையிலே விவசாயிகளை ஊக்கப்படுத்துவ தாகாது, ஏன் என்றால் நாம் அனைவரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒழுங்காக கட்டிவருகிறவர்கள் ஒருபுறம் இருக்க, கட்டாதவர்களுக்கு நாம் மேலும் மேலும் ஊக்கம் அளித்துக் கொண்டே போவோமானால் நிச்சயமாக நான் சொல்ல விரும்பு கிறேன், நல்ல விளைநிலத்திலே பயிரைத்தான் வளர்க்கவேண்டுமே தவிர, களையை வளர்க்கக் கூடாது என்பதை மாண்புமிகு உறுப் பினர் சித்தன் அவர்கள் என்னை விவசாயி என்று ஏற்றுக் கொண்டதால் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இந்த கட்டணம் பெரும் சுமையாக இல்லை என்பது மற்ற மாநிலங்களை எல்லாம் கருதுகிறபோது மாண்புமிகு உறுப் பினர்கள் நன்றாக அறிவார்கள். உதாரணத்திற்கு மேற்கு வங்கத்தை எடுத்துக்கொண்டால் யூனிட்டுக்கு 35 காசு தருகிறார்கள். உத்தர பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் ஒரு யூனிட்டுக்கு 41.36 காசு தருகிறார்கள். நாம் நிர்ணயித்திருப்பது சிறு விவசாயியாக இருந்தால் 12 காசு, பெரிய விவசாயியாக இருந்தால் 15 காசு. அந்த அளவிற்கு இந்தப் பேரவையும் பேரவையின் ஒப்பிலே இந்த அரசும் அவர்கள் கட்டவேண்டிய கட்டணத்தின் சுமையைக் குறைத்திருக்கிறபோது, இதனாலே அவர்கள் நொந்து போவார்கள் என்றோ, நொடிந்து போவார்கள் என்றோ நிச்சயமாக நான் கருதவில்லை.

அதுமட்டுமல்ல, பழைய பாக்கி பெருமளவிற்கு இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள், அதிலே கூடுதலாக அந்த மேல் வரி விதிக்கின்றார்கள் என்று ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். நான் அதுபற்றி நிச்சயமாக என்ன என்று கேட்டு அதற்கான தக்க முடிவை எடுப்பேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்வது என்னுடைய கடமை. உரிய காலத்திலே கட்டணத்தைச் செலுத்த வேண்டியவர்கள் கட்டணத்தை செலுத்தத் தவறினால் அந்த நிதிநிலையைச் சரிகட்டுவதற்கு வங்கிகளிடமிருந்து அதிகமான வட்டிக்கு கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே கட்டணத்தை கட்டத் தவறிய காரணத்தால் பெறுகின்ற கடனுக்கு செலுத்தவேண்டிய வட்டியைக் கணக்கிட்டு, இதுபோல் ஒரு மேல் வரியை விதிக்கின்ற முறை மின் வாரியத்திலே இருக் கிறது. ஆனால் நாம் கட்டண விகிதங்களை மாற்றி அமைத்தபோது இந்த மேல் வரி விதிப்பு வேண்டாம் என்று முடிவு எடுத்து விட்டோம். இது பழைய பாக்கி என்பதால் அந்த சட்டப்படி மேல் வரி கட்டவேண்டியிருக்குமோ என்று ஐயப்படுகிறேன். ஆகவே, அதைப் பற்றி மின்வாரியத்தோடு கலந்து பேசி என்ன நிலை என்பதை ஆராய்ந்து தக்க முடிவு எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், வரவேண்டிய கட்டணத்தை முறையாக வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை— எத்தகையவர்கள் மீது மின் வாரியம் எடுத்தாலும்—நாம் ஊக்கப் படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். உற்சாகப்படுத்த



வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் உண்மையிலே பாதிக்கப்படுகின்றவர்கள் இதைச் சொன்னால் அது வேறு விஷயம். (குறுக்கீடு) உண்மையிலே யார் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னால், கூலி வேலை கூட கிடைக்காதவர்கள், நிலம் இல்லாதவர்கள் தான். (குறுக்கீடு) சாதாரணமாக கூரை குடிசையில் இருப்பவர்களுக்கு—சுமார் 5 லட்சம் குடிசைகளுக்கு $2\frac{1}{2}$ ரூ. மாதம் என்ற அடிப்படையில் ஒரு மின் விளக்கு தந்து கொண்டு இருக்கிறோம். அவர்கள் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அவர்கள் இப்படி கோரிக்கையைக் கொடுப்பதில் நியாயமிருக்கலாம், காரணம், அத்தகைய மக்கள் தரம் உயர வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. ஆனால் விவசாயிகள் என்று சொல்கிறபோது, அவர்கள் விவசாயம் செய்கிற மொத்தச் செலவைக் கணக்கில் பாக்கிறபோது, மின் கட்டணச்செலவு மிகக் குறைவாகத்தான் இருக்கும்.

மின்வாரியம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கின்ற காலத்தில் உள்ளபடியே கஷ்டத்திற்கு ஆளாகியிருக் கின்றவர்கள், உண்மையிலேயே கஷ்டப்படுகிறவர்கள் யாராக இருந்தாலும், அத்தகையவர்கள் தவணைகளில் கட்டுவதற்கு மின் வாரியத்திற்கு மனு போட்டு, நிலைமைகளை விளக்குவார் களானால், நிச்சயமாக மின்வாரியம் அத்தகையவர்களுக்கு உதவி செய்வதில் தயக்கம் காட்டாது. ஆனால், இதிலே வேறு காரணங் களுக்காக கட்டாமல் பாசாங்கு செய்பவர்கள்—மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்—இதை வைத்துக் கொண்டு அதன் உள்ளே நுழைந்து விட வழிவகுத்து விடக்கூடாது. ஆகவே, ஜெனுயின் கேசஸ்—என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அப்படி இருக்குமானால் நிச்சயமாக அதை மின் வாரியம் பரிவோடு பரிசீலிக்கும் என்று எடுத்துச்சொல்லி, இவ்வளவு விவரங்களை நான் சொல்லிவிட்ட காரணத்தால், இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு மின் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 4. அரசினர் தீர்மானம்.

### அவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களை நியமித்தல்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 288, உள் விதி (1)-தளர்த்தப்பெற்று, 1983–84 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவில் இரு வெற்றிடங் களை நிரப்புவதற்கு, திருவாளர்கள் இரா. அருணகிரி, ப. தீர்த்த ராமன் ஆகியோர் நியமிக்கப்பெறலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) பட்டுச் சேலைகள் விற்பனையாகாமல் தேங்கியிருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஏ.சி. சண்முகம், வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ''ஆரணி பகுதியில் நெசவாளர் பட்டு கூட்டுறவுச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்பெற்ற பட்டுச் சேலைகள் விற்கப்படாமல் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

ஆரணிப் பகுதியில் 26 பட்டுநெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 4,720 தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலம் உற்பத்தியாகும் பட்டுத் துணியின் மதிப்பு மாதத்திற்கு ரூ. 28.45 இலட்சம் ஆகும். 31—3—83 அன்று இச்சங்கங் களிடையே ரூ. 158.70 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணிகள் இருப்பில் இருந்தன. இது 5½ மாத சராசரி உற்பத்தியின் அளவாகும். சென்ற ஆண்டில் (1981-82) இப்பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 295.78 இலட்சம் மதிப் புள்ள பட்டுத் துணிகளை விற்பனைச் செய்துள்ளன. இவற்றில் 70 சதவீதம் பட்டுத் துணிகளை கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது. ஏனைய சரக்குகளை சங்கங்கள் தங்களது சொந்த விற்பனை நிலையங்கள் மூலமாகவும் தமிழ கத்தின் பல்வேறு பகுதிகளிலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் உள்ள கிளைகளின் மூலமாகவும் விற்பனைச் செய்துள்ளன. இதேப்போன்று நடப்பு ஆண்டிலும் (1982-83) அதாவது 1—7—82 முதல் 31—3—83 வரை இச்சங்கங்கள் ரூ. 253.93 இலட்சம் மதிப்புள்ள பட்டுத்துணிகளை விற்பனைச் செய்துள்ளது. இதில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ. 170.91 இலட்சம் மதிப் புள்ள பட்டுத் துணிகளை இப்பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்துள்ளது. தற்போதுள்ள பட்டு துணிகள் இருப்பு சென்ற தீபாவளிக்குப் பிறகு உற்பத்தி செய்யப்பட்ட சரக்காகும். இது பெரும்பாலும் வரும் தீபாவளி பண்டிகை காலத்தில் தான் விற்பனை செய்ய முடியும்.





2. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வரும் தீபாவளிப் பண்டிகை விற்பனையை ஒட்டி 2—4—83 முதல் தீபாவளி வரை ரூ. 36.00 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணிகளை இப்பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்ய திட்ட மிட்டுள்ளது. சென்னையில் வருகிற ஏப்ரல், மே திங்கள்களில் நடைபெற இருக்கும் 29-வது அனைத்து இந்திய கைத்தறி இரு வார விழாவின் போது வழக்கம் போல் அளிக்கப்பட்டுவரும். கழிவு மான்யத்தை பயன்படுத்தி பெருமளவில் தம்மிடமுள்ள தீர்ந்த சரக்குகளை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் கணிசமான அளவு பட்டுத் துணிகள் விற்பனை செய்யப் படும். மேலும் இப்பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்திலும், வெளி மாநிலங்களிலும் உள்ள முக்கிய கைத்தறி வியாபார நிலையங்களிலும், கிளை விற்பனை நிலையங்களை திறக்க அப்பகுதிச் சங்கங்கள் கோரும்பொழுது அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட நடவடிக்கையினால் ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தேக்க நிலையை குறைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10—30.)

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 1981--82 ஆம் ஆண்டில் 295 இலட்சம் ரூபாய் மதிப் புள்ள சேலைகள் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கொள் முதல் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் போன்று 1982—83 ஆம் ஆண்டில் 253 இலட்சம் ரூபாய் அளவுக்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தீபாவளி பண்டிகைக்குப் பின்னால் கொள்முதல் செய்யப்படுவது நிறுத்தப் பட்டிருக்கிறது. தற்போது சுமார் ஒரு கோடி ரூபாய்க்குமேல் மதிப்புள்ள பட்டுச்சேலைகள் ஆரணிப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக்கிடக்கின்றன. ஆகவே, கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் அவற்றைக் கொள்முதல் செய்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களையும் சங்க உறுப்பினர்களையும் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வரும் தீபாவளிப் பண்டிகை விற்பனையை ஒட்டி 2—4—83 முதல் தீபாவளி வரை 36 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டுத் துணிகளை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. அதைச் செயல் படுத்த கோவாப்டெக்ஸ் நிறுவனம் முயற்சி செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்கிறது, அதைப்பாராட்டுகிறேன். கோவாப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யவில்லை என்றால் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை மேலும் சரியாகிவிடும். இந்த கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்கின்ற

9—2—83 அன்று, பதிவு செய்யப்பட்டு 15 ஆண்டுகள் முடிவுற்ற மோட்டார் வண்டிகளுக்கு பதிவு செய்தலை புதுப்பிப் பதற்கு 9—8—1983 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. 9—2—1983-க்குப் பிறகு 15 ஆண்டுகள் முடிவுறும் வண்டிகளுக்கு அவ்வாறே ஆறு மாதம் அவகாசம் அளித்து புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு.பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தனியார் இடத்தில் பலவேறு காலகட்டங்களில் கடன் பெற்றிருந்தால் அப்படி பெற்றிருக்கின்ற விவசாயிகள் வருமானம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு குறைவாக இருக்குமானால் அவர்கள் வாங்கிய கடன் தொகை அசல், வட்டி எல்லாம் தள்ளுபடி செய்வதற்கான இந்த மசோதாவானது ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்தாலும் அதனுடைய ஆயுள் காலத்தை இது நீட்டிக்கின்றது என்பதால் நான் இந்த நேரத்தில் இதை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் இதே பேரவையிலே கூட பல நேரங்களில் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் பல்வேறு குறைபாடுகளை. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும். இன்றையதினம் இருக்கிற ஒரு நிலைமை கடன் பெற்றவர்கள் எத்தனை பேர்களும் தாங்கள் சிறு விவசாயிகள் அல்லது தங்களுக்கு குறைவான வருமானமே வருகிறது, எங்களுடைய கடனை தள்ளுபடி செய்யுங்கள் என்று கடன் பெற்றவர்கள் எல்லாம் மனு போடுவதில்லை. பலர் இந்த நியாயமான அடிப்

*1983-ம் ஆண்டு பிப்ரவரி 15-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





படையிலே கூட கடன் தள்ளுபடி செய்யப்படுவதற்கான தகுதி
கள் எல்லாம் இருந்தாலும் கூட அவர்கள் வாங்கிய கடனைக்
கொடுத்து விடுகிறார்கள். அதில் பிரச்சனை இல்லை.
ஆனால் சிலர்தான் இப்படிப்பட்ட விண்ணப்பங்களை அதிகாரி
களுக்கு அனுப்புகிறார்கள், விண்ணப்பம் போடும்போது சில
பெரிய விவசாயிகள், இந்தச் சட்டத்திற்கு முரண்பாடு உள்ளவர்
கள் கூட இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரி
களுக்கு விண்ணப்பித்துவிடுகிறார்கள். அப்படி விண்ணப்பிக்கும்
போது கடன் பெற்றவர்கள், கடன் கொடுத்தவர்களுக்கிடையே
பிரச்சனை எழுந்து நீண்டகாலம் அது தீர்த்து வைக்கப்படாத
ஒரு சூழ்நிலை இருந்துவருகிறது.

இதிலே இன்னொரு விஷயம். கடன் பெற்றிருப்பவர்
விவசாயியா? அவர் சிறிய விவசாயியா, பெரிய விவசாயியா
என்று நிர்ணயிக்கும் அதிகாரம் அப்படி சர்டிபிக்கேட் செய்ய
வேண்டிய பொறுப்பு ரெவின்யூ அதிகாரிகளிடம் தான் இருக்
கிறது. அவர்கள் சரியாகச் செய்யவில்லை என்றால், அதற்கு
மேல் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளிடத்தில் விண்ணப்பிக்க
லாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட பல சந்தர்ப்
பங்களிலே இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் நான் அமைச்சருடைய கவனத்திற்கு உங்கள் மூலமாக
ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றையதினம் கடன் வாங்கியவர் ஏழையாக இருந்தால்,
அல்லது அவருடைய ஆண்டு வருமானம் 4,800-க்கு குறைவாக
இருந்தால், அவருக்கு கடனை தள்ளுபடி செய்யவேண்டும்
என்று சட்டத்தில் விதியிருக்கிறது. அதேநேரத்தில் கடன்
கொடுத்தவர்கள், குறிப்பாக அவர்கள் விதவைகளாக இருப்
பார்களேயானால் அப்படி கடன் வாங்கியவர்களுக்கு இந்தச்
சலுகை இல்லை என்பதும் விதியிலே இருக்கிறது என்றும் நாம்
அனைவரும் அறிவோம். ஆனால் நான் இந்த விஷயத்தில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது, ஒரு
விளக்கத்தை பெற விரும்புகிறேன்.

அதாவது கடன் பெற்றிருப்பவர்கள் சிறு விவசாயியாக
இருந்தால் அவருடைய ஆண்டு வருமானம் குறிப்பிட்ட
தொகைக்கு குறைவாக இருந்தால் அவர் கடனை திருப்பிக்
கொடுக்கத் தேவையில்லை என்று சலுகை இருப்பது போல்,
கடன் கொடுத்திருப்பவர்கள் ஒரு சிறு விவசாயியாக இருந்தால்,
அவர் கடன் வாங்கியவரை விட ஏழையாக இருந்தால், அவர்
களுக்கு இந்தச் சட்டத்திலே என்ன பாதுகாப்புச் செய்திருக்
கிறீர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

உதாரணத்திற்கு ஒருவர், முத்து என்பவர் கடன் கொடுத்தி
ருக்கிறார்கள், என்றால் அவரும் ஒரு சிறு விவசாயி
என்று எடுத்துக்கொண்டால், அவருக்கு நிலமும் கிடையாது.
வேறு விதமான வருவாயும் கிடையாது. அவர் உண்மையாகவே

போது உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறது, காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்த்து, உடனடியாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது இருக்கிற பிரத்தியேக கஷ்டங்களுக்குக் காரணம் இந்த வறட்சி நிலைமையாகும். ஆகவே, கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் ஏற்கெனவே கொள்முதல் செய்திருக்கிற சரக்குகள் விற்பனை ஆகாத நிலைமையால்தான் இந்த சிரமங்கள் இருக்கின்றன. அதைத் தீர்ப்பதற்கு விசேஷ முயற்சிகளை அரசும் கோவாப்டெக்ஸ் நிறுவனமும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வாகன ஓட்டுநர் உரிமங்கள் பெறுவதற்கான காலவரையறையை நீட்டித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் இருக்கையில் இல்லாததால் அவருக்குப் பதிலாக திரு. எஸ். என். இராமசாமி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, ''கார், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் தங்கள் உரிமங்களை புகைப்படத்தோடு புதுப்பிப்பதற்கும் 15 ஆண்டுகள் கடந்த கார்கள் புதிய உரிமங்கள் பெறப்படுதல் வேண்டும் என்பதற்குமான காலவரையறையை நீட்டிக்கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் :

மோட்டார் வண்டிகள் சட்டத்தின் அடிப்படையில் பயணிகள் போக்குவரத்திற்கான வண்டிகளான பேருந்து, சரக்கு வண்டி, டாக்சி, ஆட்டோ போன்ற வண்டிகளை ஓட்டும் உரிமம் பெற்றவர் மட்டும் தங்களது புகைப்படங்களை உரிமத்தில் ஒட்டவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது 1—1—82 முதல் மத்திய அரசால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின் மூலம், சொந்த கார், ஸ்கூட்டர் போன்ற மோட்டார் வண்டிகளை ஓட்டுபவர்களும் 31—3—1983 ஆம் தேதிக்குள் புகைப்படங்களை தங்களது ஓட்டுநர் உரிமங்களில் ஒட்டுவதற்காக



R.T.O. அலுவலங்களில் கொடுத்து புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இச்சட்டத்திருத்தத்தினை பத்திரிகைச் செய்திகள் மூலம் பொதுமக்களுக்கு போக்குவரத்து ஆணையரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் இவ்வாறு சொந்த வண்டிகளை ஓட்டுவதற்கான 1,56,689 ஓட்டுநர் உரிமம் பெற்றவர்களில் 31—3—1983 முடிய 31,651 நபர்கள் மட்டுமே இக்கால கெடுவுக்குள் தங்களது ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பித்துள்ளனர். 1—4—1983 முதல் 31—5—83 முடிய இரண்டு மாத காலத்திற்கு புகைப்படம் ஒட்டி உரிமத்தினை புதுப்பிக்கும் திட்டத்தினை நீட்டித்துத்தர வேண்டும் என்று தமிழக அரசு, மத்திய அரசுக்கு தந்தி அனுப்பி விட்டு அதைத் தொடர்ந்து மைய அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதனடிப் படையில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் 1—4—83 முதல் 31—5—83 முடிய இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வரும்படி 16—4—83 அன்று போக்குவரத்து ஆணையருக்கு உத்தரவு வழங்கியுள்ளது. இதனை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வரும்படியும், அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

15 ஆண்டுகள் கடந்துள்ள கார்கள் புதிய உரிமைகளை பெறுதல் :

16—1—79 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய அரசின் மோட்டார் வண்டிகள் (திருத்த) சட்டம் 24 ஆம் பிரிவின்படி, சொந்த முறையில் ஓட்டப்படும் மோட்டார் கார், ஸ்கூட்டர் போன்ற வண்டிகள் முதன் முறை பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். இவ்வாறான வண்டிகள் மீண்டும் பதிவு செய்யப்பட வேண்டும். இதற்கு ஆறுமாத கால அவகாசம் அளிக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டத்தின் அடிப் படையில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்துவதற்காக 22—5—82 அன்று அரசு நடவடிக்கை மேற்கொண்டு, பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் எதிர்ப்புகள் அகிய வற்றைத் தெரிவிக்கும்படி இத்திருத்தம் 23—6—82 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

சொந்த முறையில் பயன்படுத்தப்படும் கார், ஸ்கூட்டர் போன்ற மோட்டார் வண்டிகள் பதிவு செய்யப்பட்ட 15 ஆண்டுகள் கடந்த பின்னர் ஒரு முறையும். அதற்குப் பின்னர் 10 ஆண்டு களுக்கு ஒரு முறையும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று இவ்விதியில் வகை செய்யப்பட்டிருந்தது. இந்தத் திருத்தத்தினை எதிர்த்தோ அல்லது ஆலோசனை கூறியோ எவ்வித விண்ணப்பமும் குறிப்பிடப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆகவே, இவ்விதியினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு 9—2—1983 அரசிதழில் வெளியிட்டுள்ளது.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 ஏப்ரல் 23

சாதாரணமான நடுத்தரக் குடும்பங்களிலே இருப்பவர்களுக்கு பக்கத்து வீட்டுக்காரனும், எதிர் வீட்டுக்காரனும் உள்ளூரிலேயே இருப்பவனும் கடன் தர முன்வரமாட்டேன் என்கிறான். தருவதற்கு அவன் பயப்படுகிறான். லைசன்ஸ் பெற்றவர்கள் என்பவர்கள் மட்டுமல்ல. சாதாரணமானவர்கள் கூட கடன் கொடுக்கப் பயப்படுகிறார்கள். அதனால் கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பொருளாதாரத்திலே ஒரு சிக்கல் ஏற்படுகின்றது. சிலபேர் பணம் வைத்திருந்தாலும் அதை அவர்களுக்குக் கொடுக்காமல் வங்கிகளிலே கொண்டுபோய் போட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் விவசாயிகள் கடன் வாங்குவதற்கு யாரைத் தேடவேண்டும். அடகுக் கடைக் காரனைத்தான் தேடவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள் 1 சதவீதத்திற்கு மேல் வட்டி வாங்கக்கூடாது என்று. ஆனால் அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம், இன்றைக்கு யாருமே 1 சதவீத வட்டிக்கு தமிழ்நாட்டிலே கடன் கொடுப்பதில்லை. எல்லோரும் 3 சதவீதம் 4 சதவீதம் என்றுதான்வட்டி வாங்குகிறார்கள். ஆனால் எழுதுகின்றபோது 1 சதவீதம் என்று எழுதிக்கொள்வார்கள். இதுதான் உண்மையான நிலைமை.

ஆகவே அப்படிப்பட்டவர்களிடம் சென்று தன்னுடைய வீட்டிலே உள்ள நகை, பண்டபாத்திரங்களை எல்லாம் கொடுத்து கடன் வாங்குகிறார்கள் பிறகு அவற்றை மீட்கக்கூட முடியாத நிலைமையில் அவர்களுடைய பொருட்களை எல்லாம் இழக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆனால் அவனுக்கு அந்த நேரத்தில் பணம் தேவை என்ற ஒரே காரணத்தினால் கடன் கொடுப்பவன் 3 சதவீதம் 4 சதவீதம் என்று வாங்கிக் கொண்டாலும் 1 சதவீதம் வாங்குவதாக எழுதி வைத்துக் கொண்டாலும் அந்தத் தவறைப்பற்றிக் கேட்பது இல்லை. கேட்டால் கடன் கிடைக்காமல் போய்விடும். இப்படிப்பட்ட நிலைமையிலே இருந்து அவர்கள் மீளமுடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து அவர்கள் கடன் வாங்குவதற்காக எதிர்பார்ப்பது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள் அது பற்றி. ஆனால் என்ன நிலைமை? தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடத்திலே கடன் வேண்டும் என்று விண்ணப்பித்தால் அவர்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். சைக்கிள் கடை என்றால் கடன் கிடைக்கும், மளிகைக் கடை என்றால் கடன்கிடைக்கும், வேறு வியாபாரங்கள் என்றால் கடன் கிடைக்கும். ஆனால் விவசாயிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கூட கடன் கொடுப்பதில்லை. அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஆனால் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம், ஆனால் நடைமுறையிலே அதற்கு சாத்தியக்கூறு இல்லை. என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று நீங்கள் கடன் கொடுங்கள், அவர்கள் நாணயமாகத் திருப்பிக் கட்டிவிடுவார்கள், வேண்டுமானால் நான் உறுதியளிக்கிறேன்



1983 ஏப்ரல் 23] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

என்று தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடத்திலே சொன்னாலும் கூட அவர்கள் இப்போது முடியாது, சம்பந்தப் பட்ட அதிகாரம் தேவைப்படுகிறது, பிறகு பார்க்கலாம் என்று தான் சொல்கிறார்கள். அதனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அவர்களுக்குக் கடன் கிடைப்பது இல்லை.

அடுத்து கூட்டுறவு வங்கிகளுக்கு வந்தால் அங்கே என்ன நிலைமை? கேட்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் அரசாங்கம் கடன் கொடுக்கின்றதா என்றால் இல்லை. ஆயிரம் காரணங்களைச் சொன்னாலும் கூட கடன் வேண்டும் என்றால் சொத்து இருக்கவேண்டும், அல்லது குத்தகைக்காவது ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும் மேலும் ஏற்கெனவே வாங்கிய பணத்தைக் கட்டி இருக்கவேண்டும், தவணைக் கடன் பாக்கிதாரர்கள் கடன் வாங்கமுடியாது. இதுதான் இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கக்கூடிய நிலைமை.

அடுத்து பாண்டு மூலமாகக் கடன் வாங்குகின்ற நிலைமையே இப்போது இல்லை. அப்படியே பாண்டு கொடுத்தால் கூட ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினால் அதனை இரண்டாயிரம் ரூபாய் என்று எழுதுகிறார்கள். என்னதான் சட்டத்தின்மூலம் தடுத்துவிடலாம் என்று சொல்லி சட்டங்களைப் போட்டாலும் கூட நடைமுறையில் இப்படிப்பட்ட நிலைமைதான் ஆண்டுக் கணக்காக இருந்துவருகின்றது. ஆகவே அரசாங்கம் இது குறித்து ஏழை எளியவர்களும், நடுத்தரக் குடும்பங்களும், சிறு விவசாயிகளும் பாதிக்கப்படாத வகையில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தை நீட்டித்துக்கொண்டே போவதால் சிக்கல்கள்தான் வளர்ந்து கொண்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்து இருக்கக்கூடிய மசோதாவனாது கடன் நிவாரண சட்டம். நலிந்த பிரிவினர்கள் கடன் தொல்லையிலிருந்து ஒரு நிவாரணம் அளிப்பதற்கு ஒரு சட்டத்தை கொண்டு வந்து இருக்கிறோம். இதை நீட்டிக்க வேண்டும் என்பதற்கு உங்களுடைய அனுமதியை கோரி இந்த மசோதா வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சை நாம் பார்க்கிறபோது இந்தகடன் நிவாரணச் சட்டம் நீட்டிப்பதை எதிர்ப்பது போல் இருக்கிறது. அதை அவர்கள் தெளிவாக கூறுவார்களானால் அது எல்லோருக்கும் நல்லதாக இருக்கும். நலிந்த பிரிவினருக்கு இந்தச் சட்டத்தை நீட்டிப்பதன் மூலமாக இந்த அரசு செய்ய விரும்புகிற உதவியை தேவை இல்லை என்று சொல்கிறாரா அல்லது இப்படிப்பட்ட சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் கடன் கிடைப்பது இல்லை என்ற ஒரு காரணத்தை காட்டி அந்த அடிப்படையில் இந்தச் சட்டம்

கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். ஆனாலும்
எப்படியோ கஷ்டப்பட்டு, சேமிக்க வேண்டும் என்ற எண்ணத்
திலே ஏதோ ஓரளவு தொகையை சேமித்து, தன்னைப் போன்ற
அல்லது தன்னை விட வசதியாக இருக்கும் ஒருவருக்கு கடன்
கொடுத்து. பாண்ட் எழுதி வாங்கிக் கொள்கிறார். அப்படி
பாண்ட் எழுதி கடன் கொடுத்திருந்தபோதிலும், அந்தக்
கடனை வாங்கியவர்கள், ஏற்கெனவே நான் சொன்னதைப்
போல அவரை விட வசதிக் குறைவாக கடன் கொடுத்தவர்
இருந்தபோதிலும், அவரை ஏமாற்ற வேண்டும் என்கிற
எண்ணத்தில், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு,
அதிகாரிகளுக்கு, ரத்து செய்யகோரி விண்ணப்பிக்கிறார்கள்.

ஏற்கெனவே அவருக்கு வட்டியும் தருவதில்லை; அசலைக்
கேட்கப் போனால் சரியான பதிலும் சொல்வதில்லை என்ற
நிலைமையில் கடன் கொடுத்த அந்த சிறு விவசாயிக்கு பாது
காப்பு இல்லை கடன் வாங்கியவர், அதனை ரத்து செய்க்
கோரி, தாசில்தாரிடத்தில் விண்ணப்பிக்கிறார்கள். நியாயமான
முறையில் தாசில்தாரும் அவரை சிறு விவசாயி என்று
சர்டிபிகேட் கொடுக்கிறார்—உண்மையில் அவரும் சிறு விவசாயி
தானே—ஆனால், கடன் கொடுத்தவர், அவரை விட வசதி
குறைந்தவராக இருக்கிற காரணத்தால், இப்போது ஒரு சிக்கல்
ஏற்படுவதாக நான் நினைக்கிறேன். ஏனெனில். கடன்
வாங்கியவரை விட கொடுத்தவர் ஏழையாக இருப்பதால்,
இந்தச் சலுகையை கடன் வாங்கியவருக்கு கொடுப்பது
நியாயமாகும என்ற சிக்கல் எழுகிறது. ஆகவே, நடைமுறை
யில் எப்படி இதை சரிசெய்வது என்பதை மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பதிலுரைக்கும்போது எனக்கு விளக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்த பலர், சிறு விவசாயிகளாக நிலமில்லாமல்
இருப்பவர்கள் சொத்து எதுவும் இல்லாமல் இருப்பவர்கள்,
கஷ்டப்பட்டு உழைத்து கூலி வேலை செய்து, அதிலே கிடைத்த
சிறு தொகையை சேமித்து, அதை தனியார்களுக்கு கடன்
கொடுத்துவிட்டு ஏமாறுறவர்கள் சிலபேர் இருக்கிறார்களே,
அது நியாயம் அல்ல அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க
வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.
ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு சட்டத்திலே வழி இல்லை
என்றால் என்ன செய்வது? என்னுடைய கிராமத்திலே கூட
ஒன்றிரண்டு பேர்கள் என்னிடத்திலே வந்து கேட்டார்கள்.
எனக்கே அவர்களுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை,
காரணம் வாங்கியவர்களை விட கொடுத்தவர்கள் ஏழைகளாக
இருக்கிறார்கள்.



அப்படி சட்டத்திலே இடம் இல்லை என்றாலும், எப்படி
விதவைகளாக இருக்கிற தாய்மார்கள் கடன் கொடுத்திருந்தால்
இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு தனி சலுகை அளிக்கப்
பட்டிருப்பதைப் போல, கடன் கொடுத்திருப்பவர்கள்.
வாங்கியவர்களை விட சிறு விவசாயியாக, அவர்களை விட
ஏழைகளாக இவர்கள் இருக்கிறார்கள் என்கிற நிலைமை
வருமேயானால், அவர்களையும் கவனத்திலே கொண்டு, அவர்
கள் பாதிக்காத வண்ணம் இந்தத் தனிச் சலுகையை அவர்
களுக்கும் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த அரிசன தொழிலாளர் கூட சிறுக சிறுக
சேமித்து கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆயிரம் இரண்டாயிரம்
ரூபாய் அளவில் என்று. ஆனால் வாங்கியவர்கள் இந்தச்
சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அவரை ஏமாற்ற நினைக்
கிறார்கள். அல்லது அவர்களுக்கு கொடுக்க முடியாத
சூழ்நிலை கூட ஏற்பட்டதினால் இந்தச் சட்டத்தைப் பயன்
படுத்த நினைக்கலாம். அப்போது என்ன செய்வது என்பது
தான் என்னுடைய கேள்வி. நிறைய ஊர்களில்
இப்படி 4, 5 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்பது, கடன் கொடுத்தவர்கள்
சொத்துக்கள் இல்லாதவர்களாக, கஷ்டப்பட்டு உழைத்து
சேமித்த பணத்தை கடன் கொடுத்திருந்தால், அது அவர்
களுக்கு திரும்ப வரத்தக்க அளவுக்கு கவனத்தை செலுத்தி,
இந்தச் சட்டத்திலே தற்போது இடம் இல்லை என்றாலும் கூட
எதிர்காலத்திலாவது அதற்கு வழி வைத்து, ஒரு சட்டத்திருத்தத்
தையாவது கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன்.

அதேபோல இப்படி அதை நீட்டித்துக் கொண்டே செல்வது
முறையல்ல. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மதிப்பிற்குரிய
ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்
திலே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.
ஒரு கால கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற ஒரு
பரிகாரத்தை தேடவேண்டும். வேண்டாம் என்று சொல்ல
வில்லை. ஆனால் இன்றையதினம் இருக்கிற உண்மையான
நிலைமை என்ன? இந்த நிலைமையை நாம் ஆண்டாண்டு கால
மாக நீட்டித்துக் கொண்டே போகிறோம்.

(முற்பகல் 10–40)

இந்த ஆட்சியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியிலும் சரி, இந்தப் பாதுகாப்புச் சட்டத்தை நீட்டித்துக்
கொண்டே வருகிறோம். அப்படி நீட்டித்துக் கொண்டே
வருவதன் காரணத்தால் இன்றையதினம் கிராமங்களிலே என்ன
நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்,

வேண்டாம் என்று சொல்கிறாரா அல்லது இந்த சட்டத்தை
நீட்டிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை
பார்க்கவேண்டும். அவர்கள் பேச்சை பார்க்கிறபோது அவர்
களுடைய கருத்து அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின்
கருத்தை நாம் சரியாக புரிந்து கொள்ளக்கூடியதாக இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே,
நான் முதலிலே பேசுகிறபோது சொன்னேன் இந்தச் சட்டத்தை
நாங்கள் வரவேற்கிறோம் என்று. தி. மு. க. ஆட்சி
காலத்திலே இருந்து இந்த சட்டம் 6 மாதம் 1 ஆண்டு காலம்
என்று நீட்டித்துக்கொண்டு இருந்தோம். நீங்கள் வந்த பிறகு
தான் நீட்டிக்கிறீர்கள் என்று இல்லை ஏற்கனவே தி. மு. க.
ஆட்சிக்காலத்தில் இப்படி ஒரு கடன் நிவாரணச் சட்டம் 6
மாதத்திற்கு ஒரு முறை ஒரு ஆண்டுக்கு ஒரு முறை என்று
நீட்டிக்கிற ஒரு முறை இருந்து வந்தது. இதனால் ஏழைகளை
காப்பாற்றுவதையும், வசதி வாய்ப்புகளை அவர்களுக்கு
ஏற்படுத்துவதையும் நானோ அல்லது தனிப்பட்ட முறையில்
தி. மு. க. வோ எதிர்க்கவில்லை. இந்த சட்டத்தினால் ஏழை
களை காப்பாற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்
போதே இந்தச் சட்டத்தினால் எப்படி ஏழைகள், கீழ்மட்டத்தில்
உள்ளவர்கள், கிராமங்களில் உள்ளவர்கள், நகரங்களில்
உள்ளவர்கள் அவதிப்படுகிறார்கள் என்ற ஒரு நியாயமான
உண்மையான பிரச்சனைகளை இந்த அவையில் எடுத்துச்
சொல்கிறேனே தவிர, ஏதோ இந்த சட்டத்தை நீட்டிக்க
வேண்டாம்? என்று சொல்வதாக நினைக்கவேண்டாம். 6
மாதம் நீட்டிகிறோம், பிறகு 6 மாதம் நீட்டிக்கிறோம்.
இப்படியே எத்தனை ஆண்டு காலம் நீட்டிக்கப்போகிறோம்
என்று தெரியவில்லை. ஏதாவது ஒரு கால கட்டத்தில் பாண்டு
இருக்குமானால் இந்த தேதியில் எழுதப்பட்ட பாண்டுகள்
அல்லது இந்த தேதிக்குள் எழுதப்பட்ட பத்திரங்கள் இவைகள்
எல்லாம் செல்லாது என்ற ஒரு சட்டத்தை துணிந்து கொண்டுவர
வேண்டாமா? மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்கு இன்னும் ஒன்றை கொண்டு வர விரும்பு
கிறேன். இதிலே பல பேர் அதிகாரிகளிடத்திலே போவது
இல்லை. நியாயமானவர்கள் பணக்காரர்களிடத்திலும், வசதிப்
படைத்தவர்களிடத்திலும் கடன் வாங்கியிருக்கிறார்கள்.
அவர்கள் எந்த வட்டி வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறார்
கள். அவர்களை இந்தச் சட்டம் காப்பாற்றுவது இல்லை.
யாரை காப்பாற்றுகிறது? அதிகாரிகளிடத்திலே போய் நான்
வாங்கிய கடனை தர மாட்டேன், நான் சிறிய விவசாயி, எனக்கு
நீங்கள் சலுகை தருவதற்கு ஒரு சர்ட்டிபிகேட் தாருங்கள்
என்று போகிறவர்களுக்குத்தான் சட்டம் பாதுகாப்பு தருகிறதே
தவிர மற்றவர்களுக்கு பாதுகாப்பு தரவில்லை. ஆகவே நீங்கள்
துணிந்து ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும். இந்த தேதி
யிலிருந்து இந்த தேதிக்குள் ப்ரோநோட் மூலமாகவோ அல்லது
அடமான பத்திரங்கள் மூலமாகவோ கடன் பெற்று இருப்பார்





களானால் கொடுத்தவன் வசதியுள்ளவன் என்று நிர்ணயித்து
அந்த ரெக்கார்டுகள் அறவே செல்லாது என்று ஒரு சட்டம்
இன்றையதினம் இல்லை. ஆனால் யார் போகிறாரோ அவர்
பலன் பெறுகிறார். போகிறவர்கள் தான் பலன் பெறுகிறார்
கள், போகாதவர்கள் பலன் பெறமுடியவில்லை. அதைத்தான்
நான் சொல்கிறேனே தவிர மற்றப்படி இந்த சட்டத்தை
வேண்டாம் என்றோ அல்லது கடன் கொடுப்பவர்களுக்கு, அடகு
கடைக்காரர்களுக்கு ஆதரவாகவோ நானோ, எங்களுடைய
கட்சியோ இல்லை. இது ஏற்கனவே அந்த அரசு செய்து
வந்ததை இந்த அரசு நடைமுறையில் பின்பற்றி வருகிறார்கள்.
அதைத்தான் நான் சொல்கிறேன். ஆகவே இதில் ஒரு முடிவுக்கு
வரவேண்டும். ஏற்கனவே திரு. இராஜாஜி அவர்கள் காலத்தில்
நான் கேள்விப்பட்டேன், அப்போது அதை புரிந்துகொள்ளக்
கூடிய வயது எனக்கு இல்லை. அப்போது என்ன சட்டம்.
வட்டி அசலை ஒரு முறை சட்டத்தினால் தள்ளி பல லட்சக்கணக்
கான குடும்பங்களை காப்பாற்றினார்கள். பிறகு லேவாதேவி
நடைபெற்றது. ஆனால் இன்றையதினம் அரசு ஒரு முடிவுக்கும்
வருவது இல்லை. ஏதாவது ஒரு தொடர் சட்டமாக நடை
முறையில் தொடர்ந்து இருந்து வருகிறதே தவிர இதற்கு முடிவு
கட்டுகிற வகையில் அந்த ரெக்கார்டுகளை எல்லாம் செல்லாது
என்று ஒரு சட்டத்தை போடவேண்டும். இன்னும் ஒன்றை
சொல்ல வேண்டும் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்
களுக்கு எல்லாம் தெரியாமல் எனக்கு மட்டும் தெரிந்தது என்று
நான் சொல்லவில்லை. இதில் ஏராளமான ஊழல்கள் எல்லாம்
நடக்கின்றன. பலபேர் வசதியானவர்கள் வாய்ப்பு உள்ளவர்
கள் கூட தங்களுடைய ஒரு பகுதி சொத்தைக் கூடமறைத்து
விட்டு அதிகாரியிடத்திலே ஏராளமான பணத்தைக் கொடுத்து
தான் சிறு விவசாயி என்று சர்ட்டிபிகேட் பெற்று விடுகிறார்
கள். ஆனால் நியாயமான விவசாயிகள் தான் சிறு விவசாயி
என்று சான்றிதழ் பெறமுடியவில்லை. இப்படி பல்வேறு நடை
முறை ஊழல்கள் செயல்கள் இந்த சட்டத்தினால் நடந்து
கொண்டு இருக்கின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்கும்
அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வரவிரும்புகிறேன்.
காரணம் இந்த குறை சொல்லவேண்டும் என்ற அந்த எண்ணத்தில்
இல்லை. அந்தப் பிரச்சனைகளை எப்படி தீர்க்கவேண்டும்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களோ அரசாங்கமோ
எங்களைப்போன்ற இந்த அவையில் உள்ள விவரம் தெரிந்த
பல்வேறு உறுப்பினர்களை சேர்த்து கலந்து ஒரு முடிவுக்கு
வரவேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணமே தவிர
வேறு ஒன்றும் இல்லை. கடைசியாக இன்னும் ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

கூட்டுறவுக் கடன்கள், கூட்டுறவு விவசாயக் கடன் சங்கக்
கடன்களாக இருந்தாலும்சரி, நிலவள வங்கிக் கடன்களாக
இருந்தாலும்சரி சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். ஒரு கால
கட்டத்திலே அரசாங்கம் அறிவித்தது. குறிப்பிட்ட காலத்திற்

குள்ளாக கடன் கட்டியவர்களுக்குச் சலுகை என்று சொன்னீர்கள்.
அதைத்தான் நான் ஏற்கெனவே பேசுகின்றபோது சொன்னேன்.
பக்கத்து மாநிலமான சிறு மாநிலமான புதுச்சேரி மாநிலத்திலே
ஒரு சட்டத்தைப் போட்டதாக பத்திரிகையிலே நான்
பார்த்தேன், அங்கே சிறு விவசாயிகள் நியாய வட்டிகள், அபராத
வட்டிகள் இவைகளைத் தள்ளிவிட்டு, அசலைக கட்டினால்
போதும் என்ற நடவடிக்கையைக்கூட பக்கத்து மாநிலத்திலே
கொண்டுவந்தார்கள். அதைப்போல நீங்கள் தீர்வு காண
வேண்டும், 4,800 ரூபாய் வருமானம் இருந்தால் அவன் சிறு சிறு
விவசாயி அதிலே சலுகை பெறலாம் என்று சொல்லிவிட்டு அதே
நேரத்திலே அரசாங்கம் ஒரு வட்டிக்கடைக்காரனைவிட, ஒரு
அடகுக்கடைக்காரனைவிட மோசமான ஒரு வட்டிக்கடைக்கார
னாக மாறி சிறு விவசாயிக்கு என்ன செய்கிறது? ஆயிரம் ரூபாய்
கடன் 74 அல்லது 75 அல்லது 76-இல் பெற்றிருந்தால்
இன்றைய தினம் அந்தச்சிறு விவசாயிக்கு வருகிற நோட்டீஸ்
என்ன 2 ஆயிரம், 3 ஆயிரம் வட்டி வருகிறது, அசல் தனியாக
ஆயிரம் ரூபாய் நிற்கிறது. எனவே இந்த நேரத்திலே நான்
அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதற்கெல்லாம்,
ஒரு முடிவுக்கு வரவேண்டும். நம்முடைய முதலமைச்சர் தேர்தல்
நேரத்திலே எல்லாக் கடன்களையும் தள்ளுவதாகச் சொன்னார்
கள், அதை ஜனங்களும் நம்பினார்கள், நீங்கள் ஓரளவுக்கு
சலுகைகூட செய்தீர்கள், இல்லையென்று சொல்லவில்லை,
ஆனால் இப்போது நிலைமை என்ன? நிதியமைச்சர் அவர்கள்
முடியாது என்று சொன்னார்கள், பேரவையிலே வெளியிலே
முதலமைச்சர் சொன்னார், அரசு அறிவித்தது நிறைவேற்றப்
படும் என்ற உறுதியைச் சொன்னார். அப்போது என்ன நினைப்
பார்கள் சரி அசல்களைக்கூட தள்ளுபடிசெய்யலாம், பார்க்க
லாம் என்று அவர்கள் எண்ணுகிற நிலையிலே இருக்கிறார்கள்.
ஆகவே அரசாங்கம் இதில் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.
நான் சென்ற முறை பேசுகிறபோதுகூட சொன்னேன், இந்த
கடுமையான வறட்சி வந்திருக்கிற நேரத்திலே போளூர்
தாலுகாவிலே முடையூர் என்ற கூட்டுறவு சங்கத்திலே குழயூர்
என்ற கிராமத்திலே ஜப்தி செய்திருக்கிறார்கள், நடைபெறுவதை
யெல்லாம் சொல்லித்தான் ஆகவேண்டும், அப்படிப்பட்ட
நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் களைந்
தெறிவதற்காக இந்த சட்டத்தை நிறைவேற்றவேண்டும்;
வேண்டாமென்று சொல்லவில்லை, கடன் கொடுத்தவர்கள்
ஏழையாக இருந்தால் அவருக்கு என்ன நிலை அதையும்
சொல்லியாகவேண்டும். கூட்டுறவுக் கடன்களிலே இப்படி
நலிந்த பிரிவினருக்கு சலுகை அளிக்கவேண்டும். அதைப்போன்று
அடகுக் கடைக்காரர்கள் அல்லது வட்டிக்கடைக்காரர்கள்
அதிகமான வட்டியை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.
கண்டுபிடிக்கவேண்டும், கண்டிக்கவேண்டும் ஒரு பக்கம் 1
சதவீதம் வட்டி என்று சொல்லிக்கொண்டு 5 சதவீதம் வாங்கு
கிறார்கள். அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்களில் நகைக்
கடன்கள் மிகக் குறைவாகத் தருகிறார்கள். அப்படிப்பட்ட
நிலைமையை ஏற்கெனவே திரு. வேணுகோபால் அவர்கள்



அன்றைக்கு திருவண்ணாமலையிலே உள்ள நிலைமையைப்பற்றி
கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்தார்கள் ஆகவே
இதற்கு நீங்கள் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். நாம் ஒரு பக்கம் சட்டத்தை நீட்டித்துக்
கொண்டே இருப்போம்; ஏழை எளிய மக்கள் ஒரு பக்கத்தில்
அவதிப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். இது தொடர்கதையாக
இருக்கிறது, ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று
இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே,
1983-ஆம்ஆண்டுகடன்நிவாரணத்திருத்தச் சட்டமுன்வடிவின்மீது
சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன். எனக்கு
முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம்
அவர்கள் இந்தக் கடன் சட்டத்திற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம்
காணவேண்டுமென்று கூறினார்கள். ஆனால் ஒரு உண்மையை
ஒத்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே
இதுபோன்ற சட்டங்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நீட்டிக்கப்
பட்டது என்ற உண்மையை ஒப்புக்கொண்டார்கள். அந்த
அளவுக்கு இந்தச் சட்டத்திலே நடைமுறைச் சிக்கல்கள் இருக்கிற
காரணத்தினால் அந்தச் சங்கடங்களுக்கு ஏற்ப இந்தச் சட்ட
நீட்டிப்பு நியாயம் என்று நான் கருதுகிறேன். அதோடு ஏழை
களுக்கு உதவிட இதுபோன்ற நல்ல சட்டங்களை அல்லது
நடவடிக்கைகளை செய்தால் ஏழை எளிய நலிந்த பிரிவினருக்கு
உதவியாக இருக்கும். ஆனாலும் இந்தச் சட்டத்திலே சில
நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன என்பதை வழக்கறிஞன்
என்ற அனுபவத்தின் மூலமாக நான் பார்த்திருக்கிற காரணத்
தினால் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கெனவே இந்தச் சட்டத்திலே கடன்
கொடுப்பவரும் ஏழையாக இருந்து கடன் வாங்கியவரும் ஏழை
யாக இருப்பாரானால் ஒருவருக் கொருவர் காப்பாற்றிக்கொள்ளக்
கூடிய நிலை இருக்கிறது. கடன் வாங்கிக்கொண்டவர் கடன்
கொடுத்தவரை ஏமாற்றுகிற ஒரு சூழ்நிலை இங்கே இருக்கிற
காரணத்தினாலே அந்த ஏழை எளியவர்கள் என்ற நியாயத்தை
கடன் கொடுப்பவருக்கும் கடன் வாங்கியவருக்கும் இந்தச்
சட்டத்திலே முறையாக நிர்ணயம் செய்யவேண்டுமென்று நான்
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த சட்டத்திலே கொடுக்கப்படுகிற விதிவிலக்குகள்
சொத்துக்களின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.
சென்னையில் இருக்கிற காலி மனைகளின் மதிப்பு அதிகம்.
ஆனால் மற்ற பகுதிகளில் இருக்கிற கட்டப்பட்ட வீடுகளின்
மதிப்பு குறைவு. இருந்தாலும் சொத்துக்களின் அடிப்படையில்

இந்த விதிவிலக்கு கொடுக்கப்படுகிறதால் பல நேரங்களில் சொத்துக்களின் மதிப்பு, அந்த சொத்துக்கள் இருக்கிற இடங்களை பொறுத்து அதிகமாக இருக்கலாம் அல்லது குறைவாக இருக்கலாம். எனவே வசதி படைத்தவர்கள் பலர் இந்த சட்டத்தில் அடைக்கலம் பெற்று, கடன் நிவாரணச் சட்டத்தின் அனுகூலங்களை பெற வாய்ப்பு இருக்கிறதால், அதுபோன்ற நிலைமைகளை மாற்றி, நடைமுறையில் இருக்கிற சங்கடங்களை தீர்ப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த சட்டத்திலே 'ஆனுவல் இன்கம் ஆப் புரொபஷனல் டாக்ஸ் அசெஸிஸ்' Annual Income of Professional Tax assessee 2,400 ரூபாயும் நான் புரொபஷனல் டாக்ஸ் அசெஸிஸ் Non-Professional Tax assessee 4,800 ரூபாய் என்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது எந்தவிதத்தில் நியாயம் என்பது எனக்கு தெரியவில்லை. அந்த வருமானத்தை ஒரே நிலைக்கு இரண்டு தரப்பார்களுக்கும் கொண்டு வந்தால் நடைமுறையில் இருக்கிற சங்கடங்களைப் போக்குவதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்து இதில் பேமிலிக்கு 'Fam ly Definition Clause' ல் கொடுத்திருக்கிறார்கள். Family means, individual his wife and unmarried minor children என்று இந்த சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. திருமணமான மைனர்களைப் பற்றி இந்த சட்டவிதிகளில் சொல்லப்படவில்லை. ஜாயின்ட்பேமிலி முறைக்கு Joint Family Theory இருப்பதாக இருக்கிறதால், அந்த ஜாயின்ட் பேமிலியினுடைய மானேஜராக இருப்பவர் அவருடைய மகன் அதிகமாக சம்பாதித்தாலும்கூட, இந்த சட்டத்தினுடைய பலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே இந்தச் சட்டத்திலே பேமிலி என்பதற்கு Family must include all members of the joint family என்று திருத்தம் செய்தால் அந்த நிலை வசதியாக இருக்கும். அதன் மூலம் இது போன்று ஏமாற்றுகிறவர்களை தடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து ஆக்ட் 13/1980 என்று ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே 15-6-79 வரையில் தான் அதனுடைய அனுகூலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 15.6-79 முதல் அந்த ஆக்ட் 3/1980-ல் மாரட்டோரியம் there is no morotorium for the sale of pawned articles. But there is only confidential letter to the R.D.O. not to permit for auction of the pawned articles. Since there is no extension of morotorium law as substantial provision of law. அந்த காலத்தில் அவர்கள் பொருள்களை அடமானம் வைத்திருந்தால், அதை மீட்கிறவர்களுக்கு இந்த சட்டத்தினுடைய பலன் கிடைக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இந்த சட்டத்தினுடைய பலனை பாதிக்கப்பட்டவர்கள் பெறுவதற்கு இந்த சட்டவிதிகளில் ஏற்பாட்டை செய்து கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கடன் கொடுத்தவரும் அவர்களுடைய சங்கடங்களைத் தெரியப்படுத்துகிற



அளவிற்கு இந்தச் சட்டத்திலே வாய்ப்பளித்து, நலிந்த பிரிவினருக்கும் உதவுகிற இந்தச் சட்டம், அனைவருக்கும் உதவுகிற அளவிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்திலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த சட்ட திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன், ஆனால் அதே சமயத்தில் காலத்தை நீட்டிக் கேட்பதற்காக மட்டுமல்லாமல், கிராம மக்களுக்கு இருக்கிற ஒரு யதார்த்தமான நிலையை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே சட்ட திருத்தத்தில் காலத்தை ஆறு மாதங்களுக்கு 12 மாதங்களாகவும், 7 மாதத்தை 13 மாதங்களாகவும் ஒரு நிலையை கொண்டு வந்ததாலே மட்டும் அவர்களுக்கு உதவி செய்ததாக கூற முடியாது. குறிப்பாக இந்த பணியை தாசில்தார்களை செய்ய கேட்டிருக்கிறீர்கள். தாசில்தார்களுக்கு தாலுகா அளவிலே இருக்கிற பல்வேறு காரியங்களுக்கு மத்தியிலே இவைகளை கவனிக்க போதிய அவகாசமில்லை. இரண்டாவது, நகரங்களில் வாழ்கிற வட்டிக்கடைக்காரர்கள் செல்வந்தர்களாக இருப்பதால், உண்மையை மறைத்துக்கொள்வதற்கு வாய்ப்பும், வசதியும் அவர்களுக்கு இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திலே இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது நல்லது தான். நல்ல எண்ணத்தோடு தான் இதைச் செய்திருக்கிறோம். அந்த சட்டத்தை அவர்கள் மதித்து நடப்பதில்லை. கடன் வாங்குகிறவர்களும் அவர்களுடைய கஷ்ட காலத்திலே இப்படி ஒத்துக்கொள்ளவில்லையென்றால் கடன் கிடைக்காது என்ற ஒரு அவலநிலையில், அவர்கள் எவ்வளவு வட்டி வைத்தாலும், எப்படியாவது கடன் வாங்க வேண்டுமென்று ஒத்துக்கொண்டு வாங்குகிறார்கள்.

(முற்பகல் 11-00)

ஆனால் அதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்று கேட்கலாம். ஒன்று செய்ய முடியும். தாலுகா தாசில்தார்கள் என்று இருப்பதை, ஒரு தனிப்பட்ட முறையில், ஒரு குறிப்பிட்ட காலத்தை வைத்து அந்தக் காலத்திற்குள் இந்த வழக்குகளை முடித்து விட வேண்டுமென்று முடிவு எடுப்போமானால், செல்வாக்குள்ள வட்டிக்கடைக்காரர்களும் மக்களை ஏமாற்றுகின்ற பணியைச் செய்வதற்குக் கொஞ்சம் அச்சப்படுவார்கள். இந்தக் கஷ்டத்தை நீக்கிக்கொள்ள விரும்புகின்றவர்கள் வெகு சிலர். இன்னும், தமிழ்நாட்டில் எத்தனை மாற்றம் வந்தாலும், கடன் வாங்கியவனுக்கு மரியாதையாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம், குறிப்பாக ஏழைகள் மத்தியிலே, படியாத மக்கள் மத்தியிலே, இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அந்த எண்ணம் இருக்கிற காரணத்தினால், மிக அதிகமான

பேர்கள் கோர்ட்டுக்குச் செல்வதுகூட வெட்கம் என்று, கோர்ட்டுக்குச் செல்லாமல், எப்படியாவது அந்தக் கடனை கொடுத்து விடுவோம், நாளைக்கு என்ன செய்வது என்று அஞ்சி வாழ்கிறார்கள் என்பதுதான் யதார்த்த உண்மை. அரசாங்கம் கொண்டு வருவது ஒரு பக்கம் இருந்தாலும், தாசில்தார்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. பல்வேறு வேலைகள் அவருக்கு இருப்ப தனால், காலம் கடத்துவதனால், அவர்களிடமிருந்து எத்தனை ரூபாய் சொத்து மதிப்பு என்று சர்ட்டிபிகேட் வாங்குவதில் ஒரு பெரிய கஷ்டமான நிலைமையிருக்கிறது. அதற்கு முன்பும் நிலைமை மோசமாக இருந்தது. இப்பொழுதிருக்கிற புதிய முறைப்படி நிரந்தர கிராம அதிகாரி நியமிக்கப்பட்ட பிறகு, 6 கிராமங்கள், 7 கிராமங்கள் ஒரு கிராம அதிகாரிக்கு என்று வைத்திருப்பதால், அவர் எந்த ஊரில் இருக்கிறார் என்று தேடுவதற்குக் காலம் கடந்து, அவர் சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு இவர் புதியவர் என்று தெரிவித்து, அவருக்கு இவர் தெரிந்தவர் என்று ஆள் கூட்டிச் சென்று, அதற்கெல்லாம் செலவழிப்பதைப் பார்த்தால், ரூ. 50-லிருந்து ரூ. 100 வரையில் செலவழித்தா லொழிய, அந்த சர்ட்டிபிகேட்டை கடன் பட்டவனால் வாங்க முடியவில்லை.

அது மட்டுமல்ல, இந்த நல்ல எண்ணத்தோடு வந்த சட்டத்தை மாற்ற வேண்டுமென்று சமூக விரோதிகள், தங்களுக்கு இருக்கிற சொத்துக்களை, அதன் உண்மையான கணக்கைச் சொல்லாமல், மனைவி பேரில், பிள்ளைகள் பேரில், அல்லது வேறு பேரில் இருப்பதை எல்லாம் விட்டு, தன் பேரில் இருக்கிற, 1 ஏக்கர் 1/2 ஏக்கர் நிலத்தைத் தவிர, வேறு அல்ல என்று சர்டிபிகேட்டை கொண்டு வந்து கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, வசதி உள்ளவர்கள் வசதியற்ற மனிதர்களிடம் கடன் வாங்கி ஏமாற்று கின்ற ஒரு நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இப்படி ஒரு குழப்பமான நிலைமைக்கு என்ன செய்வது என்று கேட்டால்,ஒன்றுகால அளவு குறைக்கப்பட வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் அல்லது 2 மாத காலத்திற்குள் தனி கோர்ட்டு களை அமைத்து, அந்த வழக்குகள் முற்றுப் பெற வேண்டுமென்று நிர்ணயிப்பது. மற்றொன்று, கொடுக்கின்றவன் அந்தஸ்து எவ்வளவு, வாங்கியவன் அந்தஸ்து என்ன என்பதைப் பகிரங்க மாக ரெவினியூ அதிகாரியிடம் சொல்வதைவிட, ஒரு தனி அதிகாரியிடம் மனுக்கள் கொடுக்கப்பட்டவுடன் வாங்கிய கடன் காரர்கள் எத்தனை பேர்கள், கொடுத்தவர்கள் என்ன தகுதி உள்ளவர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும், விசாரிக்க வேண்டும்.

நண்பர் திருவேங்கடம் சொன்னதைப்போல, சில இடங் களிலே, கிராமப் பகுதிகளிலே கடன் கொடுக்கின்றவன், வாங்கு கின்றவன் நிலைமையை பார்க்கவேண்டும். வாங்குகின்றவன் சொத்து இல்லாதவன் என்று காண்பிக்கிறான். ஆனால் கொடுக் கின்றவன் நிலைமை என்னவென்றால், கடன் கொடுக்கிறானே தவிர, அவன் மிகக் கஷ்டப்பட்டு, சேமித்து வைத்து, சேமிப்பி லிருந்து ஏதாவது சிறு வட்டிக்குக் கொடுத்தால், நலமாக



இருக்கும் என்று நம்பி கொடுக்கிறான். ஆனால், வாங்குகிற வனுக்கு அவன் பேரில் சொத்தில்லாமல், மனைவி மக்கள் பேரில் எழுதி வைத்துக்கொண்டு, ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கத் தோடு, செய்வதன் காரணமாக, வாங்கியவன் நிலைமைய விட மோசமான நிலையில் கொடுத்தவன் பணத்தையும் ஏய்க்கின்ற நிலைமை நடந்து கொண்டிருக்கிறது. அதற்குத்தான் சொல் கிறேன், ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஒரு காலம் குறிப்பிட்டு அதை விசாரித்து உண்மையை அறிந்து செய்ய வேண்டும்.

குறிப்பாக விதவைகளுக்கு அரசாங்கம் உதவி செய்கின்றது. அந்த விதவைகளைக்கூட ஏமாற்றுகின்ற விதத்தில் பல்வேறு இடங்களில் காரியங்கள் நடக்கின்றன. தாசில்தார் அவர்கள்கூட அந்த விதவையை, 3, 4 மாதம் 4, 5 தடவை வரவழைத்து, அலைக்கழித்து, கடனைத் திருப்பி வாங்கவேண்டாம், நாம் கோர்ட்டுக்கும் போகவேண்டாம் என்று எண்ணக்கூடிய சங்கட மான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதுதான் யதார்த்த நிலைமையாக இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்றால், அரசாங்கம் இரண்டுதான் செய்ய வேண்டும். தாசில்தார் இல்லாமல், தனி அதிகாரியை நியமித்து. காலக் கெடுவை நிர்ணயித்து, கொடுத்தவனுக்கும் வாங்குகிறவனுக்கும் உள்ள நிலைமை என்ன என்று தனி அதிகாரியிடம் கேட்டு, இதையெல்லாம் நாம் சற்று ஆழமாகச் சிந்தித்து செய்வோமானால், இந்த ஏமாற்றுகின்ற கும்பலைத் தடுப்பதற்கு உதவியாக இருக்கும். நல்லது செய்கின்ற அரசாங்கம் நல்ல மக்களுக்குப் போய்ச் சேர, அனுதாபத்திற்குரிய அந்த மக்களுக்குப் போய்ச் சேரச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவிற்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் தெரிந்த நம்முடைய அமைச்சர் இளைஞராக இருக்கிறார். உண்மையைச் சொன்னால் ஒத்துக்கொள்வார் என்ற நம்பிக்கை இருப்பதால் சொல்கிறேன். அரசாங்கக் கடன் கொடுக்கின்றோம். வட்டி கொடுக்கத்தான் வேண்டும். அதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அதிலே நஷ்டஈடு வட்டி கேட்கிறோம். வீட்டுக்கடன் வழங்கு சொஸைட்டியாக இருந்தாலும் சரி, கிரெடிட் சொஸைட்டி யாக இருந்தாலும் சரி, மல்ட்டி பர்ப்பஸ் கோஆபரேடிவ் சொஸைட்டியாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்த விரும்பினால், நஷ்ட ஈட்டு வட்டியைத் தள்ளுவதற்கு நாம் யோசிக்கவேண்டும்.

அவர்கள் வாங்கிய கடன் 5,000 ரூபாய் என்று இருந்து, வட்டி மட்டும் 6,000 ரூபாய், 7,000 என்று கட்டிய பிறகும், கொடுக்கப்பட வேண்டிய பணமான 5,000 ரூபாய் அப்படியே இருந்தால் அதுபோன்ற கேஸ்களைக் கவனிக்க வேண்டும். இந்த மசோதாவிற்கு இது சம்பந்தமில்லை என்றுசொன்னாலும், நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கடன் என்று வரும் பொழுது தனிப்பட்ட மனிதர்கள் கொடுத்த கடன்களாக

இருந்தாலும், வட்டிக்கடைக்காரர்கள் கொடுத்த கடன்களாக இருந்தாலும் இவைகளையெல்லாம் பற்றி ஆலோசிக்கும்பொழுது அரசாங்கம் நல்லெண்ணத்தோடு கவனித்து, கொடுத்த தொகைக்கும் மேலாக வட்டித்தொகை கொடுக்கப்பட்டிருந்தால், மீண்டும் அசல் முழுவதையும் கொடுக்கவில்லை என்ற அவல நிலைமை இருந்தால் அப்படிப்பட்ட கேஸ்களைப்பற்றி அரசாங்கம் கருணையோடு அவர்களுக்கு வழி செய்யக்கூடியோசிக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமாந்தரங்களில் கடன் கொடுப்பவர்கள் இல்லாத அவல நிலைமை இருந்தால் அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்தில் சொன்னார்கள், கூட்டுறவு கிரெடிட் சொசைட்டி மூலம் வருஷா வருஷம் அதிகத் தொகையை ஒதுக்கி விவசாயிகளுக்கு நகைகள் மூலமாகக் கடன் கொடுப்பதற்கு வழி செய்வோம் என்று. அது பாராட்டுதற்குரியது. ஆனால் இடைப்பட்ட காலத்தில் அந்தத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டது. நிதிப் பற்றாக் காரணமோ அல்லது அரசாங்க சட்டத்திலே ஏதாவது ஏற்பட்ட நிலைமையோ எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் வருங்காலத்தில் நிச்சயமாக கிரெடிட் சொசைட்டிகளின் மூலமாக விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் நகையை வைப்பது மட்டுமல்லாமல் அவர்கள் குடியிருக்கிற வீடுகளை அடமானம் கொண்டாவது கிராமாந்தரங்களில் உள்ள ஏழை மக்களுக்குக் கடன் கொடுத்தால் நல்லது. இதனால் அவர்கள் வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து தப்ப முடியும். அரசாங்க சட்டத்தின்படி ஒரு சதவீதம் என்று இருந்தால் 10 சதவீதம் வரையில் வட்டி வாங்குகிறார்கள். ஏழை மக்கள் தங்களுக்கிருக்கின்ற தரித்திர நிலைமையின் காரணமாக, என்ன கேட்டாலும் கொடுப்போம் என்று வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்கின்ற முறையில் இந்தச் சட்டத்தில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதை நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிரெடிட் சொசைட்டி மூலமாகக் கடன்களை உயர்த்தி, சட்டச் சிக்கல் இல்லாத நிலைமைகளை உண்டாக்கி ஏழை மக்களுக்குக் கடன் கிடைக்கின்ற அளவிற்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட காலத்தை, அதாவது ஐந்தாண்டு அல்லது மூன்று ஆண்டு என்று நிர்ணயித்து, ஒரு பகிரங்கமான அறிக்கை கொடுத்து, வாங்கிய கடனைவிட வட்டியைக் கொடுத்தும் அசல் அப்படியே இருக்கிறது என்ற அவல நிலைமையை நீக்க வேண்டும். நிவாரணம் செய்ய வேண்டும். 1937 ஆம் வருஷம் மறைந்த பெரியார் இராஜாஜி அவர்கள் கடன் நிவாரணச் சட்டம் என்றுக் கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் விவசாயிகளின் குடும்பங்கள் தொடர்ந்து ஆயிரக்கணக்கான நிலையில் ஆழ்ந்து போகும் நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட சூழ் நேரத்தில் மிகவும் தைரியமாக இவ்வளவு நாட்கள் ஆகியிருந்தால், இவ்வளவு கடன் தொகையைக் கொடுத்திருந்தால், இவ்வளவு



சொத்துக்கள் அவர்களுக்கு இருந்தால், அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்ன நிலைமை இருந்தது. அதைப்போன்று, இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்து, தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட அவல நிலைமை இருப்பதை எண்ணிப் பார்த்து, ஏதாவது செய்ய முடியுமா என்று பார்த்துச் செய்ய வேண்டும்.

சொத்து இல்லாத மக்கள் பிராமிசரி நோட்டின் மூலம் கடன் பெற்றிருந்தால், கடன் கொடுத்தவர்களும் ஏழைகளாக இருந்தால் அவர்களையும் பாதிக்காமல் என்ன செய்யலாம் என்பதைக் கண்டு அறிவதற்கு ஒரு குழு அமைத்து முடிவு செய்ய வேண்டும். அரசாங்கம் கொடுத்த கடன்கள் உட்பட, கோவாப்பரேட்டிவ் கிரடிட் சொசைட்டி மூலமும், பில்டிங் சொசைட்டி மூலமும் கொடுக்கப்பட்ட கடன்களாக இருந்தால், அவைகளைப் பற்றியும் ஒட்டுமொத்தமாகக் கவனிப்பதற்கு அருள்கூர்ந்து ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்தக் குழுவின் மூலம் நிலைமைகளைக் கண்டறிந்து இப்படிப்பட்ட நிவாரணங்களைச் செய்தால் அது அரசாங்கத்திற்கும் நல்லது. அமைச்சரவர்கள் உண்மையான நிலைமைகளைத் தெரிந்து செய்ய வேண்டும். அதற்கு ஒரு ஆண்டுக் காலம் ஆனாலும்கூடப் பரவாயில்லை, இதுகுறித்து நல்ல முடிவைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தத் திருத்தங்களை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11.10)

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று இந்தச் சட்டத்தை நீட்டிப்பதற்காக, ஒரு 'Statement of objects and reasons' கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இந்தக் கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்ட காலக்கெடுவைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளமுடியவில்லை. அதற்காக இந்தச் சட்டத்தை நீங்கள் நீட்டிக்கிறீர்கள் என்று சொன்னால், அது உண்மையல்ல. ஏனென்றால், இன்றைக்கு அரசுக்கு விளம்பரம் செய்வதற்கான நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இதை மக்கள் தெரிந்து கொள்ளவில்லை என்றால், அதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கவேண்டும் ஆனால் உண்மை என்னவென்றால், இன்று கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்கள், குறிப்பாக நலிந்த பிரிவினர், சாதாரண மக்கள், இன்று இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களிலே இருக்கிற மக்களைப் பொறுத்த அளவில், இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில், இந்தச் சட்டத்தை அமல் படுத்துவதிலே பல முறைகேடுகள் இருப்பதன் காரணமாக இந்தச் சட்டத்தினால் நிவாரணம் கிடைக்கும் என்பதில்

நம்பிக்கை இழந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதைப் போக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ, அதற்குப் பதிலாக, காலத்தை நீட்டிப்பதற்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கால நீட்டிப்பை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில், சாதாரண மக்கள், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில், இந்தப் பிரச்சினை முடிந்ததாக ஆகாது என்பதை திட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், இன்று இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதிலே, பல முனைகளில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் குறிப்பிட்டதுபோல், தாசில்தார்களிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. அவர்கள் அதையெல்லாம் விசாரித்து, செய்யவேண்டிய நிலை இருப்பதன் காரணமாக, அந்தத் தாசில்தார்களிடம் மனு கொடுப்பதினால் காலாகாலத்தில் இந்தச் சட்டத்தினால், நிவாரணம் கிடைப்பதில்லை. இந்தச் சட்டத்தில் உள்ள கோளாறுகளைப்பற்றி நான் பின்னர் சொல்கிறேன். நடைமுறையில் இன்றைக்கு என்னநிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்றால், ஒரு தாசில்தாரிடம் மனு கொடுத்தால், அந்த மனுவை அவர் விசாரித்து, நிவாரணம் கொடுப்பதற்குப் பல மாதங்கள் வரை காத்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தை அமல் படுத்துவது சம்பந்தமாக நியாயமாக அரசு என்ன செய்திருக்கவேண்டுமென்றால், இதற்காக தனியாக ஒரு தாசில்தாரையும், பணியாளரையும் ஒதுக்கி, தனியாக, ப்ரத்யேகமாக, இவைகளையெல்லாம் கவனிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஏற்கனவே வேலைப் பளு அதிகமாக உள்ள தாசில்தார்களிடம் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும், உண்மையில் நிவாரணம் காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்காத நிலை தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அங்கே தாசில்தார்களிடம் போய், அதற்கான மனுக்களைக் கொடுத்தால், நிவாரணம் கிடைக்காது என்ற எண்ணம் ஏராளமான விவசாயிகளிடத்திலே ஏற்பட்டிருக்கிறது, சாதாரண மக்களிடமும் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போல நலிந்த பிரிவினரிடத்திலேகூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான் இந்தச் சட்டத்தை மக்களால் பயன்படுத்திக் காள்ள முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தை அமல்படுத்தும் நேரத்திலே ஒரு குறைபாடு இருக்கிறது. அது என்னவென்றால், அதில் ரூ. 4,800 வருமானம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் நிலம் இருந்தால் அந்த ஏழை விவசாயியின் வருமானக் கணக்கு போடுவதில், சாகுபடிக்கு ஏற்படுகிற செலவையும் சேர்த்தெல்லாம் கணக்கு போடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக யதார்த்தமான நிலை என்னவென்றால், யார் யாருக்கு நிவாரணம் கிடைக்கப்படவேண்டுமோ, அவர்களுக்குக் கிடைக்காத நிலை இந்தச்



சட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக் கூடிய வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இன்று வருமானத்தைக் கணக்குப் போடுகின்றபோது, 'individually or jointly' என்று போட்டு, 5 ஏக்கர் உள்ளவர்களுக்கு இதிலே—வரி விலக்கு இதிலே நாம் என்ன பார்க்கிறோம் என்றால், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ரூ. 25 000-க்கு கீழ் சொத்து மதிப்பு இருந்தால்தான்பொருந்தும். தமிழகத்திலே எல்லாவற்றிற்கும் ஒரே கணக்கு போடப்பட்டிருப்பது சரியல்ல. கிராமங்களிலே ரூ. 25,000 மதிப்பு வரவேண்டுமென்றால், பல ஏக்கர் நிலம் இருக்கவேண்டும். ஆனால் நகர்ப் பகுதிகளிலே அது அல்ல உண்மை. ஆக இப்படி சிலவரம்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆக சரியான முறையிலே இந்தச் சட்டத்தை அமல்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று இந்தச் சட்டத்தை அமல்படுத்தி, நியாயமாக விவசாயிகளுக்கு, சாதாரணமான மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமென்றால், அதற்குத் தகுந்த அளவிலே சட்டத்திருத்தங்கள் கொண்டுவரவேண்டும். அதற்குப் பதிலாகக் காலக் கெடுவை மட்டும் நீட்டித்துவிட்டால், ஏழை எளிய விவசாயிகள், நடுத்தர மக்கள் பயன்பெற முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல் இன்னொரு விஷயம். கடனாளி என்று யாரால் நிரூபிக்கப்பட முடியும்? அதற்குச் சட்டத்திலே 5-வது, 7-வது செக்ஷன்-லே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அந்த டெட்டார், கடனை வாங்கியிருக்கக்கூடியவர்கள் சர்ட்டிபிகேட்டை ஆஜர்படுத்தவேண்டும். இன்று பிரஸ்கிரைப்டு அத்தாரிட்டியிடமிருந்து அந்த சர்ட்டிபிகேட்டைக் கொடுப்பதிலே சாதாரண மக்களுக்கு மிகப்பெரிய சிரமம் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு சர்ட்டிபிகேட்டை வாங்கிக் கொடுத்தால்தான் அவர்களுடைய மனு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற்கு சில மாமூல்கள் கொடுத்தால்தான் சர்ட்டிபிகேட்டுக்கள் வாங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பலர் இப்படிப்பட்ட சிரமங்கள் காரணமாக சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு அலைந்து பணம் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டு இந்த மனுக் கொடுக்கக்கூடிய அந்த பிராசசையே விட்டு ஓடிச்செல்லக்கூடிய நடைமுறைகள் இன்றைக்கு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதை எந்த முறையிலே தவிர்க்க முடியுமோ, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அதேபோல இன்று நடைமுறைகளைப் பொறுத்த அளவிலே தாசில்தார்களுக்கும் ஆர்.டி.ஓக்களுக்குமே 5வது பிரிவிலேயும், 7வது பிரிவிலேயும் கொடுக்கப்பட்டு இருக்கிற சில அதிகாரங்களை அது எந்த அளவிற்கு சிம்பிளிபை பண்ண முடியுமோ அந்த அளவிற்கு அதை சிம்பிளிபை பண்ண வேண்டும். இங்கே ஒருவருடைய வீட்டை

பரிசோதனை செய்ய வேண்டுமென்றால் அதற்கு ஏற்படுத்தப் பட்டு இருக்கின்ற நடைமுறைகளைப் பார்த்தால் எந்த முறையிலே சீக்கிரத்திலே, விரைவிலே நிவாரணம் அந்த விவசாயிக்கு கிடைக்கவேண்டுமோ அல்லது அந்த உரிமை யாளருக்கு அந்த முறையிலே கிடைக்க முடியாத அளவிற்கு இன்றைக்கு சட்டம் அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு பிரச்னை என்னவென்றால் கடனைப் பொறுத்த அளவிலே நிலை என்ன? வங்கிகள் இப்போது டி.ஆர்.டி.பி. ஸ்கிமிலே எல்லாம் கடன் கொடுப்பதற்கு வழி வகைள் இருக்கின்றன. ஆனால் வங்கிகளைப் போய்க் கேட்டால் அவர்கள் செக்யூரிட்டி கேட்கிறார்கள். ஆகவே இந்த முறையிலே இன்று நிவாரணம் கிடைக்கவில்லை. வங்கிகளிலே இன்றைக்கு கடன் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. நகையை வைத்துக்கொண்டு கடனை வாங்கக்கூடிய அந்த வாய்ப்புகளும் இன்றைக்கு மிகவும் கம்மியாக இருக்கிறது. தேசவுடமையாககப்பட்ட வங்கிகளிலே எல்லாம் அந்த முறை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சில கூட்டுறவு சங்கங்களில் கூட இன்றைக்கு அந்த முறை நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இன்று ஒரு பக்கத்திலே இந்தச் சட்டப்படி எந்த நிவாரணம் கிடைக்கவேண்டுமோ அந்த முறையிலே உள்ள நிவாரணம் கிடைக்கமுடியாத ஒரு நிலை இந்த நடைமுறைகளினாலே, நடவடிக்கைகளினாலே தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று ஒரு பிரத்யேகமான விஷயத்தைப் பற்றி நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இந்தச் சட்டத்தினால் வட்டியும், அபராத வட்டியும் ஒரு பக்கத்திலே ஏறிக்கொண்டு போகக்கூடிய நிலையிருக்கிறது. இன்று உண்மையிலே இந்த நாட்டிலே இந்தச் சட்டப்படி உள்ள நிவாரணம் கிடைக்கவேண்டுமென்றால் இந்த வட்டியும், அபராத வட்டியும் முடிக்கக்கூடிய முறையிலே அல்லது அதை கேன்சல் செய்யக்கூடிய முறையிலே ஒரு சட்டத் திருத்தம் இந்தச் சட்டத்திலே கொண்டு வரவேண்டும். அல்லது அதற்கான ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசும் அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்தால்தான் இன்று இந்தக் கடன் நிவாரணச் சட்டப்படி என்ன முறையிலே நிவாரணம் தமிழகத்திலே உள்ள ஏழை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று அரசு எண்ணு கிறதோ, அந்த முறையிலே உள்ள ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ளமுடியுமே தவிர, இந்தக் காலக் கெடுவை நீட்டித்துக் கொடுத்தால் மட்டும், எந்த முறையிலே நிவாரணம் கிடைக்க வேண்டுமோ அந்த முறையிலே உள்ள நிவாரணம் கிடைக்காது. இன்று இந்த முதலைவிட அதிகமாக வட்டி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தச் சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னதுபோல், இன்று வட்டிக்குக் கொடுக்கக்கூடியவர்கள், கடன் கொடுக்கக்கூடியவர்கள், வசதியானவர்களாக இருப்பதன் காரணமாக, அதிகாரிகள் அவர்களை சாதகப்படுத்திக்கொள்ள



அப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இன்று உண்மையாக இந்த நாட்டில் உள்ள ஏழை மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்ற யதார்த்தமான நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு அரசே அதற்கான ஸ்பெசலாக ஸ்டாப் ஏற்படுத்த வேண்டும். அதேபோல் உண்மையான நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையிலே சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விளக்க குறிப்பிலே குறிப்பிட்டு இருப்பதைப்போல மக்களுக்கு தெரியாத அளவிலே இன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே ஏற்பட்டு இருக்கக் கூடிய நிலை அப்படி என்று அரசோ அல்லது அமைச்சர் அவர்களே எண்ணுவார்களேயானால் அதற்கு உண்டான விளம்பரங்கள் என்னவோ அதைக் கையாளவேண்டும். ஆனால் அது மட்டும் பிரயோஜனப்படாது. உண்மையிலே பிரயோஜனப் படுத்தவேண்டும் என்றால், இங்கே குறிப்பிட்டிருக்கிற முறையிலே சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தயாராக வேண்டும். அதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

டாக்டர் கே. சமரசம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லிட முன்வருகின்றேன். 198 —ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் திருத்தத் தீர்மானத்தை ஆதரித்து, சில கருத்துக் களைப் பேசுவதற்கு முன்பாக, இந்திய துணைக் கண்டத்திலேயே அரசியல் வரலாற்றிலே நலிந்தவர்களுக்கு, அவர்களுக்குக் கடன்களை வஜா செய்யக்கூடிய ஒரு சட்டத்தை இயற்றியது தமிழ்நாடு அரசுதான். அதை எண்ணிக்கத்தக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசில்தான் செய்திருக்கிறோமே தவிர இதுவரையில் வேறு யாரும், எந்த அரசும் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நாட்டிலே நலிந்த பிரிவிலே இருக்கக் கூடியவர்கள் நலம் அடையக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததில்லை. இதனால், ஏறத்தாழ சுமார் ரூ. 200 கோடி அளவிற்குப் பலன் பெற்றிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், அதிலே நிவாரணம் பெற்றவர்கள் ஏராளம். இன்னும் நிவாரணம் பெற வேண்டுமென்று இருக்கக் கூடியவர்கள் பலருக்கு இந்த விஷயம் ஒழுங்காகத் தெரியவில்லை என்பதுதான் உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மேலும் விளம்பரங்கள் வரக்கூடிய சூழ்நிலையிலே இதைப் பைசல் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்திலேதான் இந்தச் சட்டத்தினை

என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். பெரிய அளவில் விவசாயிகளுக்கு நலிந்த மக்களுக்கு கூடுதலாக நகைக்கடன் வழங்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். அப்படி யானால்தான் தனிப்பட்ட முறையில் லேவாதேவி நடை பெறுவது ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பலர் மேலும் விண்ணப்பம் செய்து, கடன் நிவாரணம் பெறவேண்டிய வழிமுறை தெரியாமல் விட்டு விட்டோம், தயவு செய்து எங்கள் நிலைமையை பரிசீலனை செய்து எங்களுக்கு நிவாரணம் கிடைக்க ஆவன செய்யுங்கள் என்று விண்ணப்பம் செய்ததன் அடிப்படையிலே அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களால் இன்றைக்கு இந்த சட்டமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த கடன் நிவாரணச் சட்டம் இன்றையதினம் மக்களுக்கு நல்லமுறையில் விளம்பரம் ஆவதற்காகவும். நல்லமுறையில் தெரிந்து கொண்டு மேலும் இதனுடைய பலனைப் பெறுவதற் காகவும் இந்தச் சட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. கடன் நிவாரணச் சட்டத்தை இப்படி நீட்டித்துக் கொண்டே செல்லுகிறபோது அதுபற்றி ஒருசில கருத்துக்களை, மக்கள் மனதிலே உள்ள கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் கடன் வாங்குகின்ற முறைகளை மூன்றாக வகைப்படுத்தலாம். புரோநோட் மூலம் கடன் பெற்று வருவது ஒருமுறை. லைசென்ஸ் பெற்று அடகு தொழில் நடத்தும் தனியார்களிடம் கடன் பெற்றுவருவது இரண்டாவது முறை. அன் ஆதரைஸ்டாக இத்தகைய வியாபாரம் செய்பவர்களிடம் கடன் பெற்று வருவது மூன்றாவது முறை இப்படிப்பட்ட இந்த மூன்று முறைகளில் கடன் பெற்று வருகிறார்கள்.

இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் புரோநோட்டின் மூலம் கடன் வழங்கியவர்களையும், லைசென்ஸ் பெற்று கடன் வியாபாரம் செய்தவர்களையும் கட்டுப்படுத்தி வருகிறது. இன்றைக்கு ஏழை எளிய மக்கள், நலிந்த மக்கள் எல்லாம் இந்தக் கடன் நிவாரண உதவியைப் பெறுவதற்கு ஆர்வமாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அவர்கள் அதற்கு முன்வராததற்கான காரணம் மேலும் கடன் வசதி கிடைக்காது என்று அஞ்சுகிறார்கள். இதை நாம் பெற்றால் மீண்டும் கடன் கிடைக்குமா என்ற நிலையைப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து,



கூட்டுறவு ஸ்தாபனங்கள், தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நல்ல முடிவைச் செய்து, அந்தக் கடன் மீண்டும் கிடைக்கும் என்ற உறுதிமொழி இருக்குமானால் அவர்கள் கண்டிப்பாக இந்தக் கடனைப் பெற முன்வருவார்கள்.

இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் யார் யாரெல்லாம் பயன்படுகிறார்கள் என்று பார்த்தால், இன்றைக்கு தாசில்தாரிடம் மனு கொடுத்து அவர் மூலம்தான் அவர்கள் நிவாரணம் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தாசில் தாரிடம் மனுக்களைக் கொடுத்து, அவர் அவற்றை பரிசீலனை செய்து, அதற்காக பலமுறை ஒவ்வொரு கிராமத்திற்கும் வந்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை இருப்பதால் ஏழை எளிய மக்களுக்கு பலன் இல்லாமல் போகிறது. நல்ல முறையில் இதனுடைய பலன் அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றால் இதற்கு என்று தனியாக அதிகாரிகளை நியமித்து, அவர்கள் உடனடியாக விசாரணை நடத்தி, அதன் மூலம் அந்த மக்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-30)

அதுமட்டும் அல்லாமல், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் கடன் கிடைப்பது அரிதாக இருப்பதால், அன்—ஆதரைஸ்டு என்ற வகையில் லைசென்ஸ் இல்லாதவர்கள் எல்லாம் கடன் கொடுக்கக்கூடிய சூழ்நிலை பெருகியிருக்கிறது. இந்த நிலைமையை அகற்றுவதற்கு நாம் ஒரு புதிய சட்டமோ அல்லது சட்டத் திருத்தமோ கொண்டுவர வேண்டும். ஏனென்றால் இப்போது நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் இரு பிரிவினருக்கு மட்டுமே பாதுகாப்புக் கொடுக்க கூடிய சட்டமாக இருக்கிறது. ஆனால் சட்டத்திற்கு உட்பட்டு லைசென்ஸ் பெறாமல், சட்ட விரோதமாக இந்த வியாபாரத்தை செய்பவர் களிடமிருந்து, கடன் வாங்கியவர்களுக்கு, இந்தச் சட்டத்தினால் எந்தவித பயனும் இல்லை. அதனால், இப்படி லைசென்ஸ் கொடுப்பவர் வியாபாரமாக ஏற்று பலபேர் வாங்காமல் கடன் கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர் களிடம் பெருகிக் கொண்டேயிருக்கிற கடனையும் ரத்து செய்யக்கூடிய அளவுக்கு நாம் இந்தச் சட்டத்திலே வழிவகைகள் செய்ய வேண்டும்.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு இருக்கிற கடன் நிவாரணச் சட்டமும் சரி, வட்டிக்கடை தொழில் நடத்துபவர்கள் சம்பந்தமான சட்டமும் சரி பல ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பட்டவை. ஆகவே, நாம் இன்றைய நிலைமையில்—இந்த கடன் நிவாரணம் சம்பந்தப்பட்ட வரையில்—மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று சொன்னால், மக்களுக்கு அதிக அளவில் கடன் உதவி கிடைக்க வேண்டுமென்று சொன்னால், சிலவழிமுறைகளை மாற்றிஅமைக்கவேண்டும்: இப்போதுநாம் கடன்பெற்றிருப்பவர்கள்

நீட்டிக்கக்கூடிய ஒரு வழிவகை காணக்கூடிய வகையில்தான் இன்றையதினம் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறதே தவிர, வேறு அல்ல. அதுதான் இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு நிலைமையாகும். அப்படிப்பட்ட ஒரு சட்டம் வருகின்ற அந்த நேரத்தில், அதிலே பாதிக்கப்படக்கூடியவர்கள். பலன் பெறக் கூடியவர்கள் பற்றி சற்று சிந்திக்க வேண்டும்.

தாசில்தார்கள் நிர்ணயம் செய்கிறார்கள். அவர்களுடைய கடனை வஜா செய்யலாமா? ரத்து செய்யலாமா? என்று சிந்தித்து அவர்களுடைய பொருளாதார நிலை என்ன? அவர்களுடைய சொத்து என்ன? அவர்களுக்கு வரக்கூடிய வருமானம் எவ்வளவு என்பது தாசில்தார்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பலர் நல்ல முறையிலே செய்யலாம். ஆனால், எங்கேயாவது ஒருசிலர் இதை நல்லமுறையிலே செய்யாத காரணத்தால், மிகப் பெரிய பணக்கார திமிங்கலங்களே கூட இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, பயன்பெற்று விடுகின்றனர் என்கின்ற நிலை நாட்டிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, ஒரு கடன்காரன் தன்னுடைய கடன் தொகையை ரத்து செய்ய வேண்டும், வஜா செய்ய வேண்டும், வரவு வைத்துக் கொண்டதாக அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுப்பாரானால், அவருடைய சொத்துக்களைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கும் அவருக்கு ஆண்டு வருமானம் என்பதையும் எடுத்துச் சொல்வதற்கு எவ்வளவு சட்ட வல்லுநர்கள் குழு அந்தப் பகுதியிலே அமைக்கக்கூடிய துணையாக இருப்பது மிக அவசியமானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில் ஒரு குழுவாக இருக்கும் போது பலர் தப்பிக்க முடியாது. ஏழைகள், நிச்சயமாக முழுமையான பலனைப் பெற முடியும். ஏதோ சிலர் தனிப்பட்ட ஒரு அலுவலரை வைத்து, மிரட்டி விடலாம். மாற்றி விடலாம்; பலனை அனுபவித்து விடலாம் என்கின்ற சூழ்நிலை இருக்குமே யானால் அது தவிர்க்கப்படும் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே, அந்த அடிப்படையில், இப்படிப்பட்ட சொத்து மதிப்பீட்டையும், அவர்களுக்கு வருகின்ற வருமானத்தின் கணக்கையும், இருக்கின்ற கடனையும் அதிலே தள்ளுபடி செய்வதற்கு எந்த அளவுக்கு அவர்கள் தகுதி பெற்றிருக் கிறார்கள் என்ற நிலையையும் எடுத்துச் சொல்லக்கூடிய நிலையில், ஒரு சட்ட வல்லுநர் குழு இருக்குமேயானால் அது மேலும் சிறப்பானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதனைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த காலத்திலே, கடனை வஜா செய்தார்கள் என்றாலும்கூட இதற்காக அவர்கள் ஒரு சட்டம் கொண்டு வந்ததாக நிச்சயமாக இல்லையென்று நான் சொல்ல முடியும். ரூ. 100 வாங்கியவர்கள் ரூ. 50, ரூ. 60



கட்டியிருந்தால், மீதியிருக்கிற தொகையைக் கட்ட வேண்டிய தில்லை. ரூ. 200 வாங்கியிருப்பவர்கள், ரூ. 150 கட்டியிருந்தால் மீதித் தொகையைக் கட்ட வேண்டியதில்லையென்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அவர்கள் பணம் கட்டமுடியாதவர்கள், திருப்பிச் செலுத்தமுடியாதவர்கள்; ஆகவே, கொடுத்த கடனை நாங்கள் வஜா செய்கிறோம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு நிச்சயம் சட்டம் கொண்டு வரவில்லையென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், அதுகூட விவசாயிகள் என்ற போர்வைக்குள் இருந்தவர்களுக்கே அல்லாமல் நலிந்த பிரிவினருக் கும் பலன் உண்டு என்ற நிலை அன்றைக்கு இல்லை. விவசாயம் செய்ய முடியாமல், கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலம்கூட இல்லாமல் சாதாரண பாட்டாளிகளாக நலிந்த பிரிவினராக இருக்கிற அவர்களுக்கு எல்லாம் இப்போது வந்திருக்கிற இந்தச் சட்டம் தான் பயனளிப்பதாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட சலுகைகளை இந்த நலிந்த பிரிவினர் பெற முடியவில்லை; இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வரவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இப்படிப்பட்ட பிரச்சனைகளை எல்லாம் தீர்ப்பதற்காக ஒரு முன்னோடியாக இன்னொன்றையும் நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதுதான் 'பட்டா பாஸ் புக்' வழங்கும் திட்டம். இந்த பட்டா பாஸ் புக் முறை வந்து விட்டால் மற்ற பிரச்சனைகள் எல்லாம்கூட தீர்ந்துவிடும். சட்ட வல்லுநர் குழு கூட அப்போது தேவைப்படாத நிலை ஏற்பட்டு விடும். பட்டா பாஸ் புக் எல்லா இடங்களிலும் வந்துவிட்டால் அதிகாரிகள் ஏமாற்றுகிறார்கள், மிரட்டுகிறார்கள், அவதூறு சொல்லுகிறார்கள், அதிகாரிகள் பொதுமக்களோடு நேர்மையோடு உறவாடவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எல்லாம் போய்விடும். இதை அரசாங்கம் எண்ணிப்பார்த்து, வேகமாக அதைக் கொண்டுவரவேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் அது வருகிறதோ அவ்வளவு சீக்கிரம் இந்தப் பிரச்சனைகளுக்கு முடிவு கட்டுவதாக இருக்கும். அதை விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

நகைக் கடனை நாம் இன்னும் கூடுதலாக்க வேண்டும். வேறு தொழில் எதிலும் இறங்காமல், ஆள் தேடாமல், வேறு எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தனக்கு சொஞ்சம் சொத்து இருந்தால் அதை விற்றோ அல்லது குறைந்த வட்டிக்கு கடன் வாங்கியோ லேவாதேவி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் ஏராளமாக இருக்கிறது. அவர்கள் இதை ஒருபொன் முட்டை யிடும் வாத்தாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நகைக்கடன் அதிகமாக வழங்கும் நடவடிக்கை அமைந்திருக்கும். நகைக்கடன் வழங்கும்போதுகூட பெரிய அளவில் யார் நகைகளை அடமானம் வைக்கிறார்கள்

அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால், வருமானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டிருக்கிறோம். மாதத்திற்கு 400 ரூ. அளவில் ஆண்டு ஒன்றுக்கு 4,800 ரூபாய் என்று வைத்து, இந்தக் கடன் நிவாரணம் கொடுக்கவேண்டுமென்று தற்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை விட்டுவிட்டு, அவர்கள் பெற்றிருக்கிற கடன் தொகையின் அடிப்படையில், இந்தச் சலுகையை அளிக்க வேண்டும். 50 ரூ. 100 ரூபாய் என்று சிறு சிறு தொகையாக கடன் பெற்றிருந்தால் அந்தக் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும். 50 ரூபாயிலிருந்து இவ்வளவு ரூபாய் வரையில் என்று நிர்ணயித்து, கடனை வாங்கிய தொகையின் அடிப்படையில் இந்த முறையை அமுல் நடத்த வேண்டும்.

அதற்காக கடன் கொடுத்தவர்களுடைய வருமானத்தையும் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். சிறு முதலீட்டை வைத்து தங்களுடைய வாழ்க்கையை நடத்த, அவர்கள் இந்தத் தொழிலை செய்வார்களேயானால், அவர்களுக்கு— அவர்கள் கொடுத்த கடனை ரத்து செய்யக் கூடாது. ஆனால் பெரிய அளவில் லேவாதேவி என்ற வகையில், வட்டிக் கடன் கொடுப்பவர்களுக்கு—சிறு சிறு தொகையாக கடன் பெற்றிருக்கிற அந்த ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய கடனை ரத்து செய்ய வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டும். அவர்கள் கொடுக்கும் கடன் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டால் தான் இது சரியாக அமையும். வருமானத்தை அடிப்படையாக வைத்து செய்தால், வீணான கால தாமதத்தையும் அது ஏற்படுத்தும். நாம் எந்த நோக்கத்தோடு, ஏழை மக்கள் நிவாரணம் பெற வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமோ, அந்த நோக்கம் நிறைவேறாமல், அவர்களுக்கு இது பயன் அளிக்காமல் போய்விடுகிறது.

அத்தோடு இன்றைக்கு நிலவுகிற மற்றொரு நிலைமை என்னவென்றால், வங்கிகளின் மூலமாக கடன் கொடுக்கப்படுகிற காலத்திலே அவர்கள் 20 சதவீதம், 21 சதவீதம் கூட வட்டி வசூல் செய்யக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆனால் அரசியல் சட்டத்திலே இருக்கும் ஒரு விதியிலே, இந்த வியாபாரம் செய்கிறவர்களுக்கு அரசு விதித்திருக்கிற வட்டி வீதம் 12 சதவீதம் தான். 12 சதவீதம் தான் வட்டி வசூல் செய்ய வேண்டும் என்று சட்டத்தையும் இயற்றியிருக்கிறார்கள்.

1960 ஆம் ஆண்டு இயற்றப்பட்டிருக்கிற அந்தச் சட்டத்திலே வங்கிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் 6 சதவீதம் வரையில் தான் இருந்தது. அதற்குப் பிறகு வட்டிக்கு தொழில் செய்பவர்கள் 12 சதவீதம் வட்டியை வசூல் செய்யலாம் என்று சட்டத்தை இயற்றினார்கள். அதுமட்டும் அல்லாமல், இன்றைக்கு யார் வங்கிகளிலே பணத்தை டெபாசிட் செய்கிறார்களோ அவர்களுக்கு தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகளில் 11





சதவீதமும் கூட்டுறவுச் சங்கங்களில் 11 1/2 சதவீதமும் வட்டிக்கு கடன் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு அதை நியாயமான அடிப்படையில் 12 சதவீதம் என்று ஒரு கால கட்டத்திலே மாற்றினார்கள்.

ஆகவே, தற்போதைய சூழ்நிலையில், 1960 ஆம் ஆண்டு 4 சதவீதத்திலிருந்து, 6 சதவீதம் வட்டி விகிதமாக வங்கிகளில் கொடுத்து வந்த கால கட்டத்திலிருந்து இன்றைய கால கட்டம் வரை, நிலவி வரும் சூழ்நிலைகளைப் பார்த்து, தற்போதைய நிலைமைகளையும் பார்த்து, ஒரு புதிய சட்டத்தை இதில் இயற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்திலே கடன் நிவாரணம் வழங்குகிற சட்டத்தை எதிர்த்து ஹைகோர்ட்டிலேயும், உச்ச நீதிமன்றத்திலேயும் வழக்கு தொடுத்து தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அப்படி தடை உத்தரவை வழங்குகிற நேரத்தில் நீதிமன்றம் ஒரு உத்தரவையும் போட்டிருக்கிறது. அவர்கள் தங்களிடம் வைத்திருக்கக்கூடிய அந்த நகைகளையெல்லாம் ஸ்டேட் பேங்கிலோ அல்லது தேசீய உடமையாக்கப்பட்ட வங்கிகளிலோ டெபாசிட் செய்யவேண்டும் என்று கூடவே ஒரு உத்தரவையும் நீதிமன்றம் போட்டிருக்கிறது. ஆனால் இந்த உத்தரவை யாரும் நடைமுறைப்படுத்துவதில்லை. அதனாலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகையால் உச்ச நீதிமன்றத்திலே சென்று நம்முடைய சட்டங்களை எதிர்த்து யாரெல்லாம் தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்களோ, அவர்கள் உச்ச நீதிமன்றம் கொடுத்திருக்கிற அந்த உத்தரவையும் கண்டிப்பாக அமுல் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும். அதன் மூலமாகத்தான் அவர்கள் தங்களுடைய அந்த தடையை அவர்களிடமிருந்து திரும்ப வாங்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். அதன் மூலமாக நலிந்த பிரிவினருக்கு நாம் உண்மையிலே நியாயமாக உதவி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற நிலையில் இந்த அன்-ஆதரைஸ்டு லைசன்ஸ் மூலமாக செய்கின்ற அந்த அடகு தொழிலை அவர்களுக்கு இருக்கின்ற அந்தப் பாதுகாப்பை அகற்றுவதற்கு வேண்டிய வழிகளை செய்ய வேண்டும். அந்தத் தொழிலைச் செய்கின்றவர்கள் யார் யார் என்பதை கிராமத்தில் இருக்கின்ற எல்லோருக்குமே தெரிந்து இருக்கும். அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு நாம் தகுந்த உத்தரவுகளை போட்டு அந்தத் தொழிலை செய்கின்றவர்கள் யார் என்பதைப் பார்த்து அவர்களை அந்த சட்டத்திற்குள் கொண்டு வந்து அவர்கள்மீது கடுமையான தண்டனை விதிக்க வேண்டிய வழியை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சட்டத்தின் பலன் கிராமத்தில் இருக்கின்ற நலிந்த பிரிவினருக்கும், விவசாயிகளுக்கும் சிறு விவசாயத் தொழிலாளிகளுக்கும் உண்மையில் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் அங்கே இருக்கின்ற சட்டத்தை நாம்

எளிமையாக மாற்றி கிராமத்தில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கு உடனடியாகக் கடனைப் பெற்று அவர்களுக்கு வேண்டிய மாற்று வழிகளை நாம் செய்ய வேண்டும். அது மட்டும் அல்லாமல் அவர்கள் மனு போட்டு பல மாதங்களாக அதற்கு காத்துக் கொண்டு இருக்கிற அந்த நிலையை மாற்றி அவர்களுக்கு உடனே இந்த கடன் நிவாரண சட்டத்தில் நிவாரணம் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டும்என்று கேட்டு இந்தச் சட்டத்தை வரவேற்று எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983-ம் ஆண்டு கடன் நிவாரண சட்டத்தை திருத்துவதற்கான சட்ட முன்வடிவின்மீது நான் சார்ந்து இருக்கிற இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்திலே சொல்லப்பட்டு இருக்கக்கூடிய இந்த நிவாரணச் சட்டத்தினால் ஏழை எளிய மக்கள் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் கடன் பெற்று இருப்பவர்கள் இவர்களை எல்லாம் இந்த சட்டத்தினுடைய உண்மையான நிலை இதை அனுபவிக்கக்கூடிய நிலை தெரியாத காரணத்தினாலும் மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய முறையில் மக்களுக்கு இதைக் கொண்டு போகக்கூடிய முறையில் மீண்டும் ஒரு ஆண்டுக்கால இந்தச் சட்டத்தை நீட்டிப்பதற்கான கால நீட்டிப்புத்தான் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் இந்தச் சட்டத்தை முழுமையான மனதோடு வரவேற்கிறேன். வரவேற்கக்கூடிய நேரத்திலே இந்தச் சட்டம் கடந்த காலத்திலே கொண்டு வரப்பட்டதிலிருந்து இதுவரை நடைமுறைப்படுத்தப் பட்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தாலுக்காவில் தாசில்தார் அவர்களிடம் மனு கொடுத்து இதுவரை நிவாரணம் பெற்றிருக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அல்லது மனு போட்டு இருப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? எதனால் இந்த விண்ணப்பங்கள் எல்லாம் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள் என்று நாம் அவைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோமானால் தாலுக்கா மட்டத்தில் இருக்கக்கூடிய தாசில்தார்கள் கிராமத்தில் இருக்கக்கூடிய சாதாரண ஏழை எளிய மக்கள் விவசாயிகள், விவசாய கூலிகள், நகர்புறத்தில் இருக்கக்கூடிய தொழிற்சாலையில் பணி புரியக்கூடிய சாதாரண தொழிலாளர்கள் இவர்கள் போடக்கூடிய மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாத ஒரு சூழ்நிலை தாலுக்கா மட்டங்களில் இருக்கக்கூடிய தாசில்தார்கள் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய சலுகைகளை பெறுவதற்காக சாதாரண மக்கள், அவர்கள் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்றாலும்கூட அவர்களுக்கு முன்னால் கடன் கொடுத்தவர்கள் சம்பந்தப்பட்ட கடன் கொடுப்பவர்களை அணுகி அப்படிப்பட்ட நபர்களுக்கு சர்ட்டிபிகேட் கொடுக்கக் கூடாது என்று சொல்லி அங்கே இருக்கக்கூடிய தாசில்தார்கள் அங்கே இருக்கக்கூடிய பணக்காரர்களுடைய





கைப்பாவையாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்ற உண்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். யாருக்குமே சர்டிபிகேட் கொடுப்பது இல்லை உண்மையில் அவர்களுக்கு வருட வருமானம் 2,500 ரூபாய் அல்லது 3,000 ரூபாய் இருப்பதாக வைத்துக்கொண்டாலும்கூட பணம் கொடுத்து இருக்கக்கூடியவர்கள் அதற்கு முன்னாலேயே வந்து அவருக்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வருகிறது. 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் இருக்கிறது என்று சொல்லி தாசில்தாரை தன்னுடன் வசப் படுத்தி அவரை எப்படி கவனிக்கவேண்டுமோ அப்படி கவனித்து சர்டிபிகேட் வழங்காத அளவுக்கு என்ன செய்ய வேண்டுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் அங்கு இருக்கக்கூடிய தாசில்தார்கள் எடுத்து வருகிறார்கள். எனவே அவைகளை போக்க வேண்டும். அப்படிப்பட்ட சர்டிபிகேட் கொடுப்பதிலே இருக்கக்கூடிய காலதாமதத்தை விவசாயிகளின் உண்மையான நிலையை தாசில்தார்கள் புரிந்து கொள்ளாமல் நிச்சயமாக இந்த கடன் நிவாரண சட்டம் ஏழை எளிய மக்களுக்கு பயன்படாது. எனவே பயன்பட வேண்டிய அளவில் செய்யவேண்டுமானால் தாலுக்கா அலுவலகத்தில் இருக்கக்கூடிய தாசில்தார்கள் வரக் கூடிய விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை மாற்றி தாலுக்கா மட்டத்தில் ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

(முற்பகல் 11.40)

வந்திருக்கிற விண்ணப்பங்கள் எவ்வளவு வந்திருக்கின்றன, அந்த விண்ணப்பங்களிலே இருக்கக்கூடியவர்கள் உண்மையிலேயே மாத வருமானம் 2,500 அல்லது 5 ஆயிரம் வருமானத்திற்குக் குறைவானவர்களா என்பதை தாசில்தார் மட்டும் பார்த்தால் நிச்சயமாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது. அதற்கு மாறாக 5 பேர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். நான் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன். சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், கிராமங் களிலே இருக்கின்ற விவசாயிகள், நகர்ப்புறங்களிலே இருக்கின்ற தொழிலாளர் வர்க்கத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய முறையிலே உண்மையான நிலையைப் பிரதிபலிக்கக்கூடிய முறையிலே குழுவை அமைத்து அந்தக் குழு வந்திருக்கின்ற விண்ணப்பங்களை யெல்லாம் 3 மாத காலத்திற்குள்ளாகப் பரிசீலனை செய்து அந்தக் கடனை தள்ளுபடி செய்வதற்கு உத்திரவாதப்படுத்து கின்ற முறையிலே அரசாங்கம் குழுவை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை நாங்கள் வர வேற்றாலும்கூட அதே நேரத்திலே இப்படி ஒரு சட்டம் இருக்கிறதா இல்லையா என்பது தமிழகத்திலே உள்ள எத்தனை மக்களுக்குத் தெரியும்? குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக நாம் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள்

உள்பட பயன்படுத்துகிறோம். மத்திய அரசாங்கத்தின் தீவிரமான நடவடிக்கையாக இருந்தாலும் மாநில அரசாங்கமும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையிலே அந்த அடிப்படையிலே அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் நாம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குப் பிரச்சாரங்கள், விளம்பரங்கள் கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு இந்த கடன் நிவாரணச் சட்டம் ஏழை எளிய மக்களுக்குச் சாதகமான ஒரு சட்டம் என்பதை இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறதா ருஇல்லையா என்பதை பிரசாரம் செய்வதற்குக்கூட அதிகாரிகள் தயாராக இல்லை. எனவே இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறதா இல்லையா என்பதே மக்களுக்கு தெரியாமல் இருக்கிறது. எனவே ரேடியோக்கள் மூலமாக பிரச்சாரங்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய பலகைகள் மூலமாக கிராமப் பகுதிகளிலே மரங்களிலே விவசாய வளர்ச்சிக்கு எப்படி பெரிய பெரியபலகைகள் தொங்கவிட்டு இருக்கிறார்களோ அதைப்போன்று பலகைகள் அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கடன் கொடுக்கக்கூடியவர்கள், சேட்டிக் காரர்கள், கந்துவட்டிக்காரர்கள், மார்வாடிகள் போன்றவர்கள் இப்போது அதிகமாக இருக்கிறார்கள். லைசென்ஸ் இல்லாமல் இருக்கிறார்கள் சந்துக்கு சந்து. நிறைய மார்வாடிகள் பேக்டரி கேட்டுக்கு வந்து வாங்கிய கடனை வாங்கிக்கொண்டு சம்பளத்தை அப்படியே பறித்துக்கொண்டு போகிற இருக்கிறது, கணக்கு வழக்கு கிடையாது, 10 ரூபாய் போகிற நிலை வாங்கினால் 5 ரூபாய் வட்டியே இருக்கிறது. அரசாங்கம் சட்டத்திலே போட்டிருக்கிற 12½ வட்டியே வாங்குவதில்லை. அதிகப்படியான வட்டியைத்தான் வாங்குகிறார்கள். அழகுப் பொருட்களை வைக்கக்கூடிய நேரத்திலே கடைகளிலே வைத்தாலும் அல்லது வீட்டிலே இருக்கிற பாத்திர பண்டங்களை வைத்தாலும் அதற்கு ரசீது கொடுப்பது இல்லை. நகைகள் வேண்டுமென்றால் அடகுப் பொருள்களையே அவர்கள் வாங்கத் தயாராக இல்லை. இதை நான் அடகு வைத்திருக்கிறேன், இன்னாரிடத்திலே கடன் பெற்றிருக்கிறேன் என்று சொல்லி கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கிற நேரத்திலே அடகு வைத்த ரசீது தம்மிடம் இல்லாத சூழ்நிலையில் அடகு வைத்தேன் என்று நிரூபிப்பதற்கு கடன் வாங்கியவர்கள் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது? எனவே கடன் கொடுக்கக்கூடியவர்கள் ரசீது கொடுக்க வேண்டும். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். யார் கடனைக் கொடுத் தார்களோ கடனைக் கொடுத்தவர்கள் மட்டுமே அவருக்கு வருமானம் 5 ஆயிரத்திற்கு குறைவாக இருக்கிறது, வேறு சொத்தில்லை என்று நிரூபிப்பதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். கடன் பெற்றவர்கள் எனக்கு இவ்வளவு வருமானம் வருகிறது என்று நிரூபிப்பதற்காக இப்போது இருக்கிற சட்டத்தை நிச்சயமாக மாற்றியாகவேண்டும். கடன்



கொடுத்தவர்கள்தான் அதை நிரூபிக்க வேண்டுமே தவிர கடன் வாங்கியவர்கள் நிரூபிக்கக்கூடாது. அந்த வகையில் சட்டம் மாற்றப்பட வேண்டும். இன்றுள்ள சூழ்நிலையிலே கிராம மக்கள் சாதாரண கூலி விவசாயிகள்தான் அதிகமான கடன்களைப் பெற்றிருக்கிறார்கள், நகரங்களிலே சாதாரண மக்கள் ஆட்டோ ஓட்டுகிறவர்கள், கைவண்டி ஓட்டக் கூடியவர்கள் இவர்கள்தான் கடன்பெற்றிருக்கிறார்கள், அவைகளை நிரூபிப்பதற்கு தாசில் தாரரிடம் அனுகி சர்டிபிகேட்டுகளை வாங்குவதிலே சிரமம் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். ரெவின்யூ டிபார்ட் மெண்டிலே இருக்கக்கூடியவர்கள் இந்த விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு இருக்கக்கூடாது. நான் ஏற்கனவே சொன்னதை போல் 5 பேர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு அவைகளைப் பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்தச் சட்டம் நல்ல சட்டமாக இருந்தாலும்கூட சாதாரண மக்களுக்குப் பயன்படுகின்ற முறையிலே ஏழை எளிய மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய முறையிலே நல்லமுறையிலே திருத்தவேண்டும், மாற்ற வேண்டும், இந்தச் சட்டத்தின் முழுப் பலன்களையும் மக்கள் அனுபவிக்கக்கூடிய முறையிலே திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் பற்றிய அறிக்கை வைப்பது—தொடர்ச்சி.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் சம்பந்தமாக ரிப்போர்ட் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று காலையில் சொல்லப் பட்டது. ரிப்போர்ட் ரெடியாகிவிட்டது என்பது எனக்கு கிடைத்திருக்கிற நிலையில் இன்பர்மேஷன். அடுத்து இரண்டு நாட்கள் ஹாலிடேக்களாக இருக்கிறது. இப்போதே மிகவும் லேட்டாகிவிட்டது, இன்னும் இரண்டு நாட்கள் தள்ளி வைப்பது என்பது சரியல்ல. மாண்புமிகு முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார். உடனே சீப் மினிஸ்ட்டர் அவர்களிடம் காண்டாக்ட் செய்து அந்த ரிப்போர்ட்டை இன்றைக்கு வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு உமாநாத் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். கிருஷ்ணா நதிநீர் பற்றிய செய்திகள் கூட ஆந்திரா மாநிலத்திலிருந்து வெளியாகிற செய்திகளிலிருந்து நான் நம்முடைய மந்திரிகள் அடிக்கல் நாட்டுவதற்கு போகிறார்கள் என்பதையெல்லாம் அறிய முடிகிறது. தமிழகப் பகுதியில் அவைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. ஆந்திராவினுடைய அமைச்சரவையும், அதிகாரிகளும்

வெளியிடுவதைத்தான் தமிழ்நாட்டுப் பத்திரிக்கைகள் வெளியிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றன. நம்முடைய அவையில் அதற்கான அறிக்கை வைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. இப்போது இந்த அவை முடியப் போகிற தருவாயில் இருக்கிற காரணத்தாலும்—அந்த அறிக்கை ரெடியாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்கிறார்கள்; இன்றைக்கே அந்த அறிக்கையை அவையில் வைத்தால்தான் சரியாக இருக்கும்—அந்த அறிக்கையை இன்று அவை முடிவதற்குள் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்னதைப் போல, சபாநாயகர் அவர்கள் நிச்சயமாக அறிக்கை செவ்வாய்க் கிழமை வைக்கப்படுமென்று சொன்னார்கள். 27-ஆம் தேதி பவுன்டேஷன் ஸ்டோன் வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது வருகிற செய்திகள் எல்லாம் ஹைதராபாத்திலிருந்து ஆந்திரா மாநில அமைச்சரவையும், மற்ற அதிகாரிகளும் சொல்லித்தான் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே 27—ஆம் தேதிக்கு முன்னாலேயே அறிக்கை வைக்க வேண்டுமென்று கூட சொன்னேன். இப்போது ரிப்போர்ட் தயாராகயிருப்பதால், முன்னவர் அவர்கள் முன்னதாகவே அந்த அறிக்கையை இந்தச் சபைக்கு கொடுத்தால் நலமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதுபற்றிய அறிக்கையை வைப்பேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்று வைப்பது என்பதைப் பற்றி சொல்கிறபோது இரண்டு, மூன்று நாட்களில் வைக்கலாம் என்று சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 26—ஆம் தேதி வைப்பதாக தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த துறையிலிருந்து வந்தாலும் கூட அதிலே சிலபல மாற்றங்களைச் செய்து அதைச் செம்மைப் படுத்திக் கொண்டுவரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே தெரிவித்ததன் காரணமாக 26—ஆம் தேதி அறிக்கை வைக்கப்படுமென்று சொன்னார்கள். 27—ஆம் தேதி வரையில் அவை நடக்கவிருப்பதால் அந்த அறிக்கை 26—ஆம் தேதி வைக்கப்படும். அதை அறிந்து கொள்ளலாம்; இதில் இருட்டடிப்பு எதுவுமில்லை; மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனுக்காக சொல்கிறேன். அதிலே உள்ளே இருக்கிறது. வெளியே இருக்கிறது என்று எல்லாம் சொன்னார்கள். அது போல எதுவுமில்லை. அறிக்கை தெளிவாக வரும் என்பதற்காக இதைக் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.





திரு. ரா. உமாநாத்: இட் இஸ் தி பிரெஸ்டிஜ் ஆப் தி ஹவுஸ் என்று பார்க்க வேண்டும். மேலும் தாமதப்படுத்துவது என்பது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படுகிற செய்திகள் முறையாகவும் ஒழுங்காகவும், செம்மையாகவும் இருக்க வேண்டும் என்பதன் காரணமாக, அதைச் செம்மைப்படுத்தி வைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதன் காரணமாக 26—ஆம் தேதி அறிக்கை வைக்கப்படும். 27—ஆம் தேதி வரையில் அவை நடக்கவிருக்கிறது. 26—ஆம் தேதி அது வைக்கப்படும்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, அது முதலமைச்சரிடம் இருப்பதாக மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூறியிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 26 ஆம் தேதி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மீண்டும் அது பற்றி பேச வேண்டாம்.

திரு. ரா. உமாநாத்: இது மிகவும் முக்கியமான விஷயம் ஆகவே........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 26—ஆம் தேதி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவிலிருந்து தகவல் வருவதாகச் சொன்னீர்கள். இரண்டு மாநிலங்களுக் கிடையில் தொடர்பு இருப்பதன் காரணமாக அந்த தகவல்கள் வருகின்றன. அதனால் இந்த அவையின் கவுரவம் குறையவில்லை.

திரு. ரா. உமாநாத்: அவையின் கவுரவம் இதனால் குறைகிறது. நம்முடைய அவை கூடுகிற நாட்களில் நம் அவையிலிருந்து தகவல்கள் வருவது தான் முறையாக இருக்குமே தவிர பிரஸ்ஸிலிருந்து நாம் செய்திகளைத்தெரிந்து கொள்வது என்பது எப்படி சரியாக இருக்கும்,

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததை அறிவித்து விட்டார்கள். அரசின் சார்பிலே 26-ம் தேதி அறிக்கை வருகிறது. முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்று அவைக்குத்தெரிவித்தார்கள். அதற்கு மேலே உங்களைக் கட்டாயப் படுத்துவது சரியாக இருக்காது. நீங்கள் அறிக்கை வைக்க முடியாது. அரசிடத்தில் தகவல் கேட்கலாம். நீங்கள்கேட்டீர்கள். அரசின் சார்பிலே பதில் சொல்லப்பட்டது. அதற்கு மேல் உங்களைக் கட்டாயப்படுத்தினால் நீங்கள் என்ன செய்யமுடியும்?

திரு. துரைமுருகன்: இட் இஸ் மெம்பர்ஸ் பிரிவிலெஜ். நாங்கள் உங்களைத்தான் கேட்க முடியும்.

Moratordum என்ற முறையில்தான் for postponing the recovery of debts-க்கு நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. கடன் முழுவதும் ரத்து என்று கொண்டு வரவில்லை. 1972 ஆம் ஆண்டு scaling down குறிப்பிட்ட அளவிற்குக் கடனை ரத்து செய்வதற்குச் சட்டம் கொண்டு வரப்பட்டதேயொழிய முழுக் கடனையும் ரத்து செய்ய வேண்டுமென்ற சட்டம் கொண்டு வரப்படவில்லை. 1939 ஆம் ஆண்டிலே மறைந்த பெரியவர் இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது நல்லது என்று மாண்புமிகு பெரியவர் இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தில்கூட 1979 ஆம் ஆண்டு அதே அடிப்படையிலே நாம் ஒரு சட்டத்தை கொண்டு வந்தோம். அதுமட்டுமல்லாமல், அவர்கள் வாங்கிய அசலைவிட ஒன்றரை மடங்கு வட்டி அதிகமாகின்றபொழுது அந்தக் கடனெல்லாம், வட்டியை மட்டும் அவர்கள் செலுத்தும் பொழுது கடன் முழுவதும் தீர்க்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்ற சட்டம் வேண்டும் என்று சொன்னார்கள். 1979 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கருத்தே அதுதான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் பேசுகின்ற பொழுது, கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் கொடுப்பது குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விழைவதெல்லாம் இந்தக் கடன், பத்து பதினைந்து ஆண்டுகளாக, ஆண்டுக்காண்டு கூட்டுறவு வங்கிகளின் மூலமாக நகைக் கடன் கொடுக்கின்ற பணி விரிவாக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டுக்கு முன்னால் வெறுமனே 30 கோடி, 35 கோடி என்று இருந்த நிலைமைகள் மாற்றப்பட்டு, இப்பொழுது கூட்டுறவு வங்கிகள் நகர்புற கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும் சரி, கிராமப்புற கூட்டுறவுச் சங்கமாக, வங்கிகளாக இருந்தாலும் சரி, நகைக் கடனைத் தாராளமாகத் தர வேண்டுமென்று உத்தரவு இட்டதன் அடிப்படையிலே சென்ற ஆண்டு மட்டும் 179 கோடி ரூபாய் அளவிற்கு நகைக்கடன்கள் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் தரப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நடப்பு ஆண்டில் 160 கோடி ரூபாய் தரப்பட்டு, வரும் ஆண்டிலேயும் அந்த அளவிற்கு நகைக் கடன்களைத் தர வேண்டுமென்று அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும் பொழுது, சிலயிடங்களில் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக, சங்கங்களின் மூலமாக நகைக் கடன்கள் தரப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். வேறு சில உறுப்பினர்கள்கூட அதைப்பற்றிச் சொன்னார்கள். எந்தவொரு சங்கத்திலேயும் நகைக் கடன்களைத் தரக் கூடாது என்ற உத்தரவை அரசு இடவில்லை. ஆனாலும்கூட ரிசர்வ் வங்கி ஒரு 'Imitation' 'subject to limitations stipulated by the Reserve Bank of India, loans have to be distributed by the



Co-operative Societies' என்று இருக்கின்ற காரணத்தினாலே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவர்களுடைய வைப்புத் தொகையிலே நகைக்கடன் தர வேண்டுமென்ற விதி இருப்பதால் சில நேரங் களில் சில வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக, சங்கங்கள் மூலமாக நகைக் கடன் தர முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அப்பொழுதுகூட மாநில அரசு 'ways and means advance' போன்றவைகளையெல்லாம் அந்தக் கூட்டுறவு அமைப்பு களுக்குத் தருகின்றபொழுது அந்தப் பிரச்னை அவ்வப்பொழுது நிவர்த்திக்கப்பட்டு, அந்த அடிப்படையில்தான் தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 179 கோடி ரூபாய் நகைக் கடன்களைக் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக நலிந்த பிரிவினர் என்ற நிலையை, சென்ற ஆண்டு ஏற்படுத்தியிருக் கிறோம். ஆனால் இன்னொரு பிரச்னை அதிலே என்ன வென்றால், ரிசர்வ் வங்கியைப் பொறுத்தவரைக்கும், இந்த நகைக் கடன்களுக்குத் தருகின்ற பணத்தைப் பொறுத்த வரைக்கும் 'efinancing facilities' இசையவில்லை. இத்தகைய இசைவை ரிசர்வ் வங்கி மறுத்துவிட்டதால் நாம் எண்ணுகின்ற அளவிற்கு, ஏழைகளுக்குப் பலன் கிட்ட வேண்டு... எண்ணுகின்ற அளவிற்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அமைப்புகளின் மூலமாக அதிகமாக நகைக் கடன்களை நம்மால் தர முடியாமல் இருக்கிறது.

(நண்பகல் 12—00)

அப்படி ரிசர்வ் வங்கி 'ரீ—பைனான்சிங்' பெசிலிட்டிக்கு ஒத்துக்கொள்ளுமேயானால், கண்டிப்பாக, மணி லெண்டர்ஸ், பான் புரோக்கர்ஸ் என்று இருக்கின்றவர்கள் எல்லாம், அதிகப் படியான வட்டிக்கு கடன் தருகிற வட்டிக்கடைக்காரர்களிடம் சென்று, ஏழைகளின் இன்னல்களிலிருந்து, அவர்... முழுவதும் விடுதலை கிட்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ரிசர்வ் வங்கியை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ரிசர்வ் வங்கியின் மனம் மாறக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று, மைய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. சிறு விவசாயிகளுக்கு இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின்மீது பேசுகிறபோது, விவசாயிகள் சந்தித்து வருகின்ற கடனை ரத்து செய்வது குறித்து, தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும், வட்டிக் கடைக் காரனைவிட மிக மோசமாக வட்டி அவர்களுக்கு விதிக்கப் படுகிறது என்றும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். பாரதத்தில் எந்த மாநிலத்திலும், இல்லாத அளவிற்கு, தமிழகத்தில் இதுகாறும் வரலாற்றில் இல்லாத அளவிற்கு நேரடியாக, ரூ. 120 கோடியை கடனாகத் தள்ளுபடி செய்து, ரூ. 75 கோடியை வழிவகைக் கடனாக விவசாயிகளுக்குத் தந்தும், விவசாயிகள் ரிசர்வ்

(முற்பகல் 11-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுது வைக்கப்படும் என்று கேட்டதற்கு இரண்டு மூன்று நாட்களில் வைக்கலாம் என்று சொன்னேன். திட்டவட்டமாக, தெளிவாக, 26—ஆம் தேதி அந்த அறிக்கை வைக்கப்படும் என்று சொன்ன தற்குப் பிறகு, 26 ஆம் தேதிதான் வைக்கப்படும். 26—ஆம் தேதி வைக்கப்படும்போது, முழு விவரங்களும் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய விவாதத்தில் எப்படியோ துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டதன் காரணமாக, இந்தப் பிரச்னை இத்துடன் முடிந்து விடுகிறது.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1983-தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983—வது ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன் டிவை ஆய்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் வர்கள் பேசுகிற பொழுது, 'ஸ்மால் பார்மர்ஸ் அண்ட் பிக் பார்மர்ஸ்' என்ற 'டெபனிஷன்' 'அக்யூரேட்'டாக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். நான் ஏற்கனவே பட்ஜெட்டிலே பேசுகிறபொழுது, இதைச் செம்மைப்படுத்த அரசு ஆய்ந்து வருகிறது என்று கூறியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், ஒரு ஸ்மால் பார்மர், இன்னொரு மால் பார்மருக்கு கடனைத் தருகின்ற பொழுது அவருக்கு இதிலே விதிவிலக்கு இல்லையா என்று கேட்டார்கள். ஸ்மால் பார்மர் ஒருவர் இன்னொரு ஸ்மால் பார்மருக்குக் கொடுத்தால் என்ன என்பதுபற்றி இதிலெ தெளிவாக இருக்கிறது. ரூ. 4,800-க்கும் கீழே குறைந்த அளவு வருமானம் உள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது, நிலம் வைத்திருக்கின்றவர்களாக இருப்பார்களானால், 10 ஏக்கர் அன்இரி கட்டட் நிலம் அல்லது 5 ஏக்கர் இரிகேட்டட் நிலம் என்று இருக்குமேயானால், அவர்கள் இந்த நிவாரணத் திற்கு உட்படுகிறார்கள் என்று சட்டத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடகுக் கடைக்காரர்களைப் பொறுத்தவரைக்கும் 1% வட்டி என ரசீதிலே எழுதிவிட்டு, உண்மையிலே 3%, 5% என வசூலிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் பேசியதோடு, எல்லா உறுப்பினர்களுமே அதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள்- அதுகுறித்துக் கூட ஒரு கேள்விக்கு விடை அளிக்கின்ற பொழுது, ஏற்கனவே, இந்த அவையிலே



நான் சொல்லியிருக்கிறேன். 'Money Lenders and Pawnbroker Act' ஆகியவற்றின் கீழ், குறைந்த வட்டிக்கு ரசீதுகள் எழுதிவிட்டு, அதிக வட்டியை வாங்கி, அந்த அதிக வட்டியைக் கூட, அசலிலிருந்தே கழித்துக் கொண்டு, ஆரம்பத்திலேயே பிடிப்பதால், ஏழைகளுக்கு ஏற்படுகிற பாதிப்பிலேயிருந்து வர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், மேற்குறிப்பிட்ட சட்டங்களுக்குத் திருத்தங்களை அரசு விரைவில் கொண்டு வர இருக்கிறது என்பதை நான ஏற்கனவே சொல்லியிருக் றேன். அந்த அடிப்படையில் விரைவில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற பொழுது இந்தச் சட்டத்தை அடிக்கடி நீட்டி வருவது நல்லதல்ல என்ற கருத்தைச் சொன்னார்கள. நீட்ட வேண்டிய கட்டாய நிலைக்குக் காரணம், பட்டிதொட்டிகளிலுள்ள சாதாரண மக்களுக்கு ஓரளவுக்கு ரேடியோ போன்ற விளம்பரச் சாதனங்கள் மூலமாக விளம்பரம் செய்யப்பட்டிருந்த போதிலும் கூட, வசதி படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள், ஆதிக்க சக்திகள் எல்லாம், ஏழைகளை ஏமாற்றுகிற, நசுக்குகிற பணியிலே பல்வேறு இடங்களில் ஈடுபடுகிற காரணத்தால், அவர்களுக்கு இன்னும் சிறிதுகால நீட்டிப்புத் தருவது அந்த மக்கள் இந்தச் சட்டத்தினுடைய பலனை உணர்ந்து பயன்பெற வாய்ப்பாக இருக்கும் என்ற நோக்கோடுதான் இதை நாம் அவ்வப்போது நீட்டித்து ஆக்ட் 13 ஆப் 1980 என்பதைப் பலமுறை நீட்டித்து, மேலும் 6 மாத காலம் தற்போது அதை நீட்டிக்க இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பிராமிசரி நோட் போன்றவைகளை எல்லாம் செல்லாது என்று உத்தரவிடக் கூடாது என்று கூடக் கேட்டார்கள். அதற்கு ஒரு சட்டமே இயற்ற முடியாதா என்று கூடக் கேட்டார்கள். 'Negotiable Instruments Act'—லே பிராமிசரி நோட் வருகிற காரணத்தால், அது யூனியன் சப்ஜக்ட்டாக இருக்கிற காரணத்தால், மாநில அரசு இதில் ஒன்றும் செய்ய முடியாது. ஆனாலும்கூட நாம் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 4,800 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்கள், '10 acres of unirrigated land or 5 acres of irrigated land' என்ற அளவிலே நிலம் இருப்பவர்களுக்கெல்லாம் இந்தச் சட்டத்திலே நிவாரணம் கிடைக்கிறது என மிகத் தாராளமான பிரிவினைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன்னால் தமிழகத்தில் இத்தகைய ஒரு சட்டத்தை இதுகாறும் கொண்டு வந்ததில்லை.

இதைச் சொல்கிறபொழுது, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் பேசுகின்றபொழுதும் சொன்னார்கள்; டாக்டர் சமரசம் அவர்கள் பேசும்பொழுதுகூடக் கோடிட்டுக் காட்டினார்கள். இப்படி நீட்டிப்பு அவ்வப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். 1974 ஆம் ஆண்டும், 1975 ஆம் ஆண்டும்,

வங்கிக்கு காலத்தில் கட்டவேண்டிய கடனை கட்ட முடியாத
நிலை ஏற்பட்டு, அடுத்த பயிருக்கு கடன் வாங்க முடியாத
அவல நிலை ஏற்பட்டபோது, தமிழகம் உலக வங்கியல் பிளாக்
லிஸ்ட் செய்யப்பட்டுவிடுமோ என்ற அச்ச நிலை ஏற்பட்ட
போது தான், விவசாயிகள் கடன் பணத்தை, அவர்கள் கட்டா
விட்டாலும் பரவாயில்லை, அவர்களுடைய கடனை அரசு
கட்டுகிறது என்ற ஒரு முடிவை எடுத்து, அந்தப் பணத்தை
கட்டியதன் காரணமாகத்தான், நாம் கிட்டத்தட்ட ரூ. 195
கோடி விவசாயிகளுக்கு சலுகைகளை அளித்திருக்கிறோம். இதன்
காரணமாகத்தான் தமிழகம் சென்ற ஆண்டு பிளாக் லிஸ்டு
செய்யக் கூடிய நிலையிலே இருந்துகூட, தப்பிக்க முடிந்தது
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன்.

வட்டியைப் பொறுத்தவரையில், அதிகப்படியான வட்டி
என்று சொல்கிறபோது, இதற்கு மைய அரசைச் சார்ந்த
ரிசர்வ் வங்கியும் ஒரு பெரும்பொறுப்பாக இருக்கிறது. மாநில
அளவில், கிட்டத்தட்ட 2 டயர், 3 டயர் என்ற சிஸ்டங்கள்
இருக்கிறபோது, நிர்வாகச் செலவுக்காக, அந்தச் செலவிற்காக
மட்டும், ஊழியர்களுக்கு, பணியாளர்களுக்கு ஊதியம்
போன்றவை தருவதற்காக மட்டும் ஓரளவிற்கு உயர்த்தப்
படுகிறதே தவிர, உலக வங்கியிடமிருந்து, மைய அரசு பெறும்
பணத்தை குறைந்த வட்டிக்கு மாநில அரசுகளுக்குத்
தருமேயானால், கண்டிப்பாக, சிறு விவசாயிகளுக்கேனும், நாம்
குறைந்த வட்டிக்கு அவர்களுக்குக் கடன் தரக்கூடிய வாய்ப்பு
ஏற்படும்.

மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களும்
மற்றும் பல உறுப்பினர்களும் பேசுகிறபோது, தாசில்தார்கள்
மூலமாக இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை நடைமுறைப்
படுத்துகிறபோது, பல குறைபாடுகள் ஆங்கே இருப்பதைச்
சுட்டிக்காட்டினார்கள். குறைபாடுகள் இல்லாமல் தாசில்தார்கள்
செயல்படுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அரசிற்குக்
கூட அவ்வப்போது குற்றச்சாட்டுகள் எல்லாம் வந்து, தக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு சிலர் மீது நடவடிக்கையும்
எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வேலை பளு அதிகமாக
இருக்கிற தாசில்தார் அவர்களால் இந்த முக்கிய பணியை,
ஏழைகளின் சார்பில், நடத்த இருக்கின்ற இந்தப் பணியை,
செம்மையாக செய்யமுடியாத நிலை இருப்பதை உணர்ந்து,
தனியாக ஒரு அலுவலரை இதற்கென நியமித்து. அந்த
அலுவலர் ஒழுங்காக, நேர்மையாக பணியாற்றுவதற்கு
உதவுகின்ற வகையில், கண்காணிப்புக் குழு, மக்கள் குழு,
இருக்க வேண்டும். அதிலே சட்ட வல்லுனர்கள் இடம் பெற
வேண்டும். அது ஐவர் குழுவாக இருக்க வேண்டுமென்றெல்லாம்
மாண்புமிகு உறுப்பினர்கள், டாக்டர் சமரசம், ஆறுமுகம்



இளையபெருமாள் போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்
னார்கள். இந்த நல்ல யோசனையை ஏற்று, தக்க மாற்றத்தைச்
செய்து, நடைமுறைப்படுத்த ஆவன செய்யும் என்பதை நான்
தெரிவித்துக் கொள்ள விருப்புகிறேன்.

அடுத்தபடியாக ஈட்டி வட்டி என்று சொல்லி ரசீதும்
கொடுக்காமல், உரிமமும் பெறாமல், வட்டி பெறுகின்ற அந்தத்
தொழிலை நடத்துகிறவர்கள் ஏழைகளை உறிஞ்சுகிறார்கள்.
கந்து வட்டி, ஈட்டி வட்டி என்றெல்லாம் போட்டு, ஏழை
களுக்கு அவர்கள் இன்னல்களை விளைவிக்கிறார்கள்.
அதிலிருந்து அவர்களுக்கு விடுதலை வேண்டுமென்ற
கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். உண்மையிலேயே நகர்ப்புறத்திலே மட்டுமல்ல,
நகர்ப்புறத்திலே ஈட்டி வட்டி என்ற பெயரிலே ஏழைகள்
பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறபோது கிராமத்திலே உள்ளவர்
களும், மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப்
போல கந்து வட்டி என்ற பெயராலே ஏழைமக்கள் மிகவும்
பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற இந்த உண்மையை
அரசு உணர்ந்து இருக்கிறது. இதிலிருந்து ஏழைகளைக்
காப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ஆக்ட்டை தக்க வகையிலே ஒரு
சட்ட திருத்தத்தைக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அதற்கு
அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் ஒரு நல்ல
ஆலோசனையைச் சொன்னார்கள். இந்த பட்டா பாஸ் புத்தகம்
மிக விரைவிலே கிடைத்தால் கிராமப் புறத்திலே இருக்கிற
உழவர்களுக்கு தருகின்ற போது தாசில்தார் அலுவலகத்தில்
நடக்கின்ற முறைகேடுகளுக்குத் தாங்கள் உட்படுத்தப்படாமல்
அந்த பாதிப்புக்கு தங்கள் உட்படுத்தப்படாமல் அவர்களுக்கு
விரைவிலே நிவாரணம் கிடைக்க வழிவகைகள் ஏற்படும் என்று
சொன்னார்கள். அந்த முறையிலே ரெவின்யூ துறை விரைவாக
அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கிறது. விரைவிலே அது
ஈடேறியதும் அந்தப் பிரச்னைகள் நல்லமுறையிலே தீரும்
என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் பேசுகிறபோது
4,800 ரூபாய் வருமானம் அல்லது10 ஏக்கர் அன்—இர்ரிகேட்டட்
லேண்ட் அல்லது 5 ஏக்கர் இர்ரிகேட்டட் லேண்ட் என்று
பலவகை ஷரத்துக்களை எல்லாம் போட்டு, அந்த அடிப்படையிலே
கடன் நிவாரணத்தை நாம் அளிக்கின்றபோது காலதாமதம் மிக
அதிகமாக ஏற்படுகிறது. அதேநேரத்தில் ஏழை மக்களுக்கு இந்த
நல்ல பலன் கிட்டாமல் முறைகேடுகளும் நடக்கின்றன என்று
சொன்னார்கள். அதற்குப்பரிகாரமாக அவர்கள் சொன்னது ஒரு
குறிப்பிட்ட அளவு கடனைப் பெற்று இருக்கின்றவர்கள் இந்த
அளவுக்கு கடன் ரத்து செய்யப்படுகிறது என்ற ஒரு சட்டத்தைக்
கொண்டு வந்தால் நல்லது என்று சொன்னார்கள். அது குறித்து

(திரு. சி. பொன்னையன்) [1983 ஏப்ரல் 23

அரசு தனியே பரிசீலிக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது மக்களுக்கு நன்கு தெரிகின்ற அளவிற்கு, குடும்பக் கட்டுப்பாட்டிற்கு எந்த அளவிற்கு விளம்பரத்தைச் செய்கிறோமோ அந்த அளவிற்கு இந்த விளம்பரத்தை மக்களுக்கு எட்டக்கூடிய அளவிற்குச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள் ஏற்கனவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறது. ஆனாலும் அந்த நடவடிக்கை போதிய நடவடிக்கையாக இல்லை என்பதை உணர்ந்த காரணத்தால் விளம்பரத்தை மிக அதிக அளவில் அதிகப்படுத்தி என்ன செய்யவேண்டும் என்ற முறையிலே தற்போது இந்த 6 மாத கால நீட்டிப்பைத் தந்து பட்டி தொட்டி மக்களுக்கு எல்லாம் இந்த சட்டத்தினுடைய பலன் சென்றடைய வேண்டுமென்ற முறையிலே தக்க விளம்பரத்தைச் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இந்தக் கடன் நிவாரணம் பெறுவதற்காக 10 ஏக்கர் பாசன வசதி அல்லாத நிலங்கள் அல்லது 5 ஏக்கர் பாசன வசதி உள்ள நிலங்கள் என்று சொன்னார்கள். ஆனால் கூட்டாக சகோதரர்கள் 4, 5 பேர்கள் இருந்து அத்தனை பேரும் மேஜராகி, தனியாக போன பின்னாலும்கூட ஜாயிண்ட் பட்டாவாக இருக்கிற இடங்களிலே இந்த 10 ஏக்கர் ஜாயின்ட் பட்டாவிலே உன்னுடைய பெயரும் இருக்கிறது. ஆகவே இந்த மனுவை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தாசில்தார் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் சில இடங்களிலே புரோ நோட்டை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் நாங்கள் சட்டைத் தான் மீட்டிக் காடுப்போமே தவிர, அடமானப் பத்திரம், அல்லது ஒத்திப் பத்திரம் அல்லது நகை ஈடு, இவைகளைத் தான் நாங்கள் மீட்டுவோமே தவிர, புரோ நோட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று பல இடங்களிலே தாசில்தார்கள் சொல்கிறார்கள். ஆகவே இப்போது இருக்கிற சட்டத்தில் கராறான வரைமுறைகள் இல்லாத காரணத்தால் புரோ நோட்டை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஜாயின்ட்—ஆக இருக்கிற 10 ஏக்கர், 5 பேர்களுக்கு இருந்தாலும் கூட ஆளுக்கு இரண்டு ஏக்கர்தான் என்று கணக்கிட்டு அதற்குத் தள்ளுபடி பண்ணுவதற்குப் பதிலாக, இப்போது இந்த 10 ஏக்கரிலே உனக்கு இருக்கிறது என்று மனுவைத் தள்ளிவிடுகிறார்கள். இந்த விதிகளிலே சில மாற்றங்களைக் கொண்டு வந்து இந்த மாதிரி ஒரு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அந்தக் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு ஒரு சீரான விதிமுறைகளை அமைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்,



1983 ஏப்ரல் 23]

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூன்றாவது பிரிவிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தக் கடனைப் பொறுத்தவரைக்கும் It may be a debt, whether secured or unsecured, என்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. செக்யூர்ட் என்று சொல்கிறபோது அதற்கு பல collateral security இருக்கின்றன என்று பொருள். Unsecured என்று சொன்னால் The interpretation is that it denotes promissory note என்று பொருள். அந்த அடிப்படையில் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற தாக்கீதைத்தான் இந்த அரசு தாசில்தார்களுக்கு அனுப்பி இருக்கிறது. ஆனாலும்கூட அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனுவின் மீது உயர்நீதி மன்றம் தீர்ப்பு கொடுக்கின்றபோது 'ப்ராமிசரி நோட்டைப் பொறுத்தவரையில் சிவில் நீதிமன்றங்கள் தான் கொண்டு வரவேண்டும், தாசில்தார் கொண்டு வரக்கூடாது' என்று சொல்லியிருப்பதால், அந்தப் பிரச்னை எழுந்து இருக்கிறது. ஆனாலும் கூட அரசு தெளிவாக இருக்கிறது. Secured and unsecured என்று சொல்கிறபோது Unsecured debt includes promissory note அந்த அடிப்படையில் அரசு மேல் முறையீடு செய்ய இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதையொட்டி தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஜாயின்ட் பட்டவாக இருக்கிறபோது, விதி தெளிவாக இருக்கிறது. விதியைப் பொறுத்தவரைக்கும் பிரச்னை இல்லை. பட்டா பாஸ் புத்தகம் எல்லோருக்கும் கொடுத்து விட்டால் பிரச்னை இருக்காது. அதைக் கொடுப்பதற்கு ரெவின்யூ துறை நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அதை விரைவாகக் கொடுக்க வேண்டும் என்று இந்தத் துறையும் கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப்பொறுத்தவரையில், வானம் பார்த்த பூமியாக இருந்தால் 10 ஏக்கர் என்றும், தண்ணீர் வரக்கூடிய பூமியாக இருந்தால் 5ஏக்கர் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பூமியின் தரம் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுவதால், எல்லா இடத்திற்கும் 10 ஏக்கர் என்பது பொருந்துமா, அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் அதற்குத் தகுந்தவாறு அது வேறுபடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே. You mean small faem rs and big farmers சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று தற்போது நடைமுறையில் இருக்கும் கணிப்புகள் எல்லாம்

ரிசர்வ் வங்கி இட்ட ஆணையின்படி அமைக்கப்பட்டதாகும். அது சரியானதல்ல, நடைமுறையில் உழவர்கள் சந்திக்கும் பிரச்னைகளைக் கணக்கில் கொண்டு இது கணிக்கப்படவில்லை என்று இந்த அரசு கருதிக்கொண்டு இருப்பதால், வருமான அடிப்படையில் தான் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று கருதுகிறது. ஒரே மாவட்டமாக இருந்தாலும், ஏன் ஒரே கிராமமாக இருந்தால் கூட ஒரு குளத்தைச் சுற்றியுள்ள நிலம் உள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்கு சாதாரணமாக தொடர்ந்து ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பதால் நிரந்தர வருமானம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மேட்டுப் பகுதியில் இருக்கும் உழவர்களுக்கு ஆண்டுதோறும் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. வறட்சி காலத்தில் நல்ல வருமானம் பெற முடியாமல் இருப்பார்கள். ஆகவே, வருவாய் அடிப்படையில் ஸ்மால் பார்மர்ஸ், அல்லது பிக் பார்மர்ஸ் என்று வருகிறபோது உழவர்களுக்குந் தக்க பலன் கிட்டும் என்ற வகையில் தான் இந்த அரசு அதை ஆராய்ந்து வருகிறது.

என்னுடைய இந்த விளக்கங்களை ஏற்று, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்குமாறு வேண்டுகிறேன். There is an amendment standing in my name.

திரு. பொ. உத்திராபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக்கடன் நிவாரணச் சட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் விவசாயத் தொழிலாளி என்று சொல்கிற போது, நிலம் கிடையாது, சொத்து கிடையாது, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு, விவசாயக் கூலி என்ற அடிப்படையில் அந்தக் கூலிச்சட்டத்தில் போட்டுள்ள கூலியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு குடும்பத்தில் 5, 6 பேர் இருந்தால், அவர்களுக்கு வரும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 4500 ரூ. மேல் வருமானம் வருகிறது என்று சொல்லி கடன் தள்ளுபடி செய்ய முடியாது என்று தாசில்தார்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கூலி வேலை செய்து வாழ்பவர்களுக்கும், இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின்மூலம் கடன் தள்ளுபடி செய்ய அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. சில அதிகாரிகள் சில இடங்களில் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு நியாயக்கூலி என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ அதை ஒரு மாதத்திற்கு, ஒரு ஆண்டிற்கு என்று பெருக்கிக் கணக்கிட்டு, அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டது அரசின் கவனத்திற்கு வந்தது. உண்மையிலேயே விவசாயிக் கூலிகள் என்று சொன்னால், அவர்களுக்கு 365 நாட்களுக்கும் வேலை கிடைக்கும், வருமானம் கிடைக்கும் என்று தப்பாகக் கணக்கிட்டுச்செயல்பட்டது, தவறு என்று எடுத்துக்காட்டி,



Agricultural activities being seasonal என்ற காரணத்தால், ஒரு குறிப்பிட்ட சீசனில் தான் வேலை கிடைக்கும் என்ற நிலைமை இருப்பதால், ஒரு குடும்பத்தில் 6 பேர் இருந்தால் அவர்கள் அத்தனை பேருடைய வருமானத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று அரசு கூறியிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகிற போது இந்த நகைக் கடன் பேரில் நிறைய பணம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும் கூட வட்டி விகிதம் சென்ற காலத்தில் இருந்ததைவிட அதிகமாக இருக்கிறது. சென்ற காலத்தில் நகைக் கடனுக்கு வட்டி 12 சதவீதம் இருந்தது. இப்போது 18 சதவீமாக இருக்கிறது. அதைக் குறைத்து 12 சதவீதமாக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை தற்காலிகத் தலைவரவர்களே, இந்த நடவடிக்கைக்குக் காரணம் மாநில அரசு அல்ல; மத்திய அரசுதான். 19 சதவீதம்வரை நகைக் கடனுக்கு வட்டி விதிக்கலாம் என்று ரிசர்வ் வங்கி உத்திரவிட்டிருக்கிறது. ஆனாலும்கூட, அவர்கள் அந்த அளவுக்கு உயர்த்த வேண்டுமென்ற உத்தரவிட்டிருந்தாலும்கூட நாம் விதிப்பது 14 சதவீதம்தான்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எம். எஸ். மாணிக்கம்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1983 ஆம்—ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என். 16/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு—1.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்):** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு-1, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

That in Cl us: 1. for sub-clause, (2) *subsutitute* the f llowina sub-clause, namely:—

"(2) It shall be deemed to have come into f. rce on the 24th day of February 1983".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகிய வ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்,

"தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி. நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1983.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவையின் தற்காலிகத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

* 1983-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கஞக்கு தனி அதிகாரிகளின் பதவி காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு கேட்க அமைச்சரவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓராண்டு என்பதற்குப் பதிலாக 6 மாதம் போதும் என்று நான் ஒரு திருத்தம் தந்திருக்கிறேன். அந்த அமெண்ட்மென்ட் கொடுப்பதற்குக் காரணம் மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள்தான், என்று சொன்னால் மிகையாகாது. ஏனென்றால் இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும்போது அவர்களே சொன்னார்கள். இந்த மசோதாவைக் கொண்டுவந்து ஏன் ஒரு வருஷம் எக்ஸ்டன்ஷன் கேட்கிறோம் என்றால், "As it will take Quite sometime to obtain the assent of the President `to the said Bill and to make rules" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது அதிலே ஒரு காலவரம்பைகூட வைத்தார்கள். அசென்ட் பெறுவதற்கு ஒரு மாதம் ஆகும்; விதிகள் இயற்றுவதற்கு (டு மேக் ரூல்) இரண்டு மாதம் ஆகும் என்று சொன்னார்கள். ஆகையால் 3 மாதம் வருகிறது. அப்படி இருக்கும்போது ஒரு வருஷத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்று ஏன் கேட்கவேண்டும் என்று நினைத்த காரணத்தால் நான் அமென்ட்மென்ட் கொடுத்துள்ளேன். ஆகவே நான் அமென்மென்ட் கொடுப்பதற்குக் காரணம் மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள்தான் என்றால் மிகையாகாது.

(பிற்பகல்-12.20)

அது மட்டும் அல்ல இதற்கு முன்னாலே ஒரு வருஷம் எக்ஸ்டன்ஷன் வாங்கியதே—அது லேப்ஸ் ஆனதே-அடுத்த மாதம் கூட அல்ல இரண்டு மாதம் கழித்துத்தான். அதற்கே இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றது. அப்படியானால் நீங்கள் 14 மாதம் கேட்கிறீர்கள். 3 மாதங்களின் வேலையை முடிக்க 14 மாதங்கள் கேட்கிறீர்கள். 9—6—83 அன்றுதான் அது லேப்ஸ் ஆகும். அட்வான்ஸ்ஸாக பெர்மிஷன் வாங்குகிறீர்கள், ஆர்டினன்ஸ் போடக்கூடாது என்பதற்காக பரவாயில்லை, இருக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு, மூன்று மாதங்களில் பிரசிடெண்ட் அக்செப்டென்சும் வாங்கிவிடலாம், கூட்டுறவு சொசைட்டிகளுக்கு வேண்டிய ரூல்களையும் பிரேம் பண்ணிவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால் அப்படி கால தாமதம் செய்யப்படுவதன் விளைவு என்னவென்று பார்த்தால், பெரிய சர்ச்சைகள் நாட்டிலே உருவாகிறது என்பதுதான்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், நாம் ஒதுக்குகிற பணத்தைக் கூட, அதாவது மாநில ஒதுக்கீட்டைக் கூட கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. ஏன் என்று கேட்டால், அங்கே எலக்டட் பாடி இல்லை. அதேபோல மத்திய அரசு ஒதுக்குகிற தொகையைக் கூட நாம் நல்ல முறையில் பயன் படுத்த முடியவில்லை காரணம் அங்கே

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லை. கூட்டுறவு சொசைட்டியிலே இருக்கிற அதிகாரி கொடுக்கிற செக் கூட ஹனராவது இல்லை இது உண்மை. அப்படி ஒரு நிகழ்ச்சி தென்னாற்காடு மாவட்டத்திலே நடந்திருக்கிறது.

அது மட்டும் அல்ல, மத்திய சர்க்கார் நபக்கு இந்த திட்டத்தின் மூலமாக பல கோடி ரூபாய்களை ஒதுக்கிறார்கள், என்றாலும் அதை சரியாக பயன்படுத்த முடியவில்லை. காரணம் கூட்டுறவுச் சங்கங்களிலே எலக்டட் பாடி இல்லை. உதாரணத்திற்கு சொன்னால், என்.சி.டி.சி. நேஷனல் கோவாப்பிரேட்டிவ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் மூலமாக பல கோடி ரூபாய மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு தருகிறார்கள். அதை மகாராஷ்டிர மாநிலத்தில் உபயோகப்படுத்துகிற அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் உபயோகப்படுத்தப்படுகிறதா என்று ஒப்பிட்டு பார்த்தால், அதில் பத்தில் ஒரு பகுதியைக்கூட தமிழ் நாடு அரசு பயன்படுத்தியதாக எனக்குத் தெரியவில்லை. பயன் படுத்தவில்லை என்றும் எனக்குத் தகவல்கள் இருக்கின்றன. அது மட்டும் அல்ல; இதனால் ஊழல்கள், முறைகேடுகள், தவறுகள் நடைபெறுவது சகஜமாகிவிட்டது. அதற்குக் காரணம் அந்தத் தனி அதிகாரிகளே அங்கே தொடர்ந்து இருப்பதனால் இது அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

அந்த தனி அதிகாரிகள் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஊழல் செய்திருந்தாலும் கூட அவர்களுக்கு கடுமையான தண்டனை என்ற பெயரால் என்ன கொடுக்கிறார்கள் தெரியுமா? நான் அதனுடைய டெடெய்ல்ஸ்க்கு பின்னாலே வருகிறேன். 80லிருந்து 90 லட்சம் ரூபாய் அளவில் கூட ஊழல் செய்திருக் கிறார் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஒரு தனி அதிகாரி. அவருக்கு தண்டனை வேறு இடத்திற்கு டிரான்ஸ்பர் என்று மட்டும் தான். இங்கே கொள்ளை அடித்தீர்களே அது போதாது என்றால் இன்னொரு இடத்திற்கு போய் அங்கேயும் கொள்ளை அடியுங்கள் என்று அவரை மாறுதல் செய்திருக் கிறார்கள். ஆனால் அவருக்கு கீழே பணியாற்றிய 4 ஊழியர்களை இதே குற்றத்திற்காக டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சின்னவர்கள். அவர்களை சஸ்பெண்ட் செய்யலாம்; வேலை நீக்கம் கூடச் செய்யலாம். இவைகள் எல்லாம் ஏன் நடக்கிறது என்றால்; அந்த கூட்டுறவு சொசைட்டி களிலே எலக்டட் பாடி இல்லை என்பதுதான்.

கூட்டுறவு சொசைட்டி என்பதே ஒரு டெமாக்ரட்டிக் செட் அப். டெமாக்ரட்டிக் சொசைட்டியில் எலக்டட் பாடியாகத்தான் நிர்வாகம் இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், அது கூட்டுறவு சொசைட்டியே இல்லை. அப்படி என்றுதான் அறிஞர் களாக இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையிலே சிறந்த மேதாவிகள் படித்தவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக் கிறார்கள். உதாரணமாக ஒன்றைச சொல்லவிரும்புகிறேன்.





இந்தியன் கோவாப்பரேட்டிவ் லா என்ற பெயரிலே திரு. வீரராமன், திரு. திரிவேணி, திரு. சேஷாத்திரி என்னும் மூன்று அறிஞர் பெருமக்கள் எழுதிய புத்தகத்திலே—அதற்கு ஐ.சி.ஏ. கமிஷன், இந்தியன் கோவாப்பரட்டிவ் அலையன்ஸ கமிஷன் என்று பெயர். பேஜ் 39 என்பதையும் சொல்லி விடுகிறேன். அதிலே சொல்லியிருக்கிறார்கள்—" Co-operative Societies are democratic organisations. Their affairs should be administered by persons elected, not appointed" என்று அதுதான் அர்த்தம். கூட்டுறவு சொசைட்டி, சொசைட்டி என்ற முறையில், முறையாக நடைபெறவேண்டும் என்று சொல்கிற போது, அதற்கு எலக்டட் பாடி மிகவும் அவசியம். இந்த ஐ.சி.ஏ. கூட எதற்காக என்றால், டெவலப்பிங் கன்டிரீஸ்களில் எல்லாம் கூட்டுறவு முறை முறையாக செயல்பட வேண்டும். இயங்கவேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டது. அதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷனிலே உள்ள திரு. வி. வீரராமன் என்பவர் நான் முன்பு சொன்ன அந்தக் கருத்தைத் தெரிவித்திருக் கிறார்கள். ஆகவே, கூட்டுறவு சொசைட்டிகளில் எலக்டட் பாடி தான் இருக்க வேண்டும், ஸ்பெஷல் ஆபிசர்கள் நியமனம் இருக்கக்கூடாது.

ஆனால் நாம் தொடர்ந்து 76-லேயிருந்து அவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் போட்டுக்கொண்டே வருகிறோம். அதனால் கூட்டுறவு முறையே அந்த சிஸ்டமே ஸ்தம்பித்து போய் நின்றிருக்கின்றன. ஸ்தம்பித்து போயிருப்பது மட்டும் அல்ல. ஊழல்களும் பெருமளவில் நடக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் விரைவாக தேர்தலைக் கொண்டு வரவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இல்லை இல்லை அதிகமாக காலதாமதம் ஆகாது, விரைவாக தேர்தல் நடத்துகிறோம் என்று கூடச் சொன்னார்கள். ஆனால் இப்படி கால தாமதம் செய்வதால், ஸ்டேட் ஒதுக்குகிற பணமும் போய்விடுகிறது. மத்திய அரசு தருகின்ற பணத்தையும் பயன்படுத்த முடியவில்லை. நாமாகவே கூட்டுறவு சொசைட்டிகளிலே கொஞ்சம் நஞ்சம் பணம் போட்டாலும், அதிலும் இந்த தனி அதிகாரிகள் கை வைக்கிறார்கள். இந்த நிலை ஸ்பெஷல் ஆபிசர்கள் தொடர்ந்து இருக்கிற காரணத்தால் ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல. நான் ஏற்கெனவே சொன்னேன் கூட்டுறவு முறை சரியாக இல்லாத காரணத்தால் மக்களுக்கு மாநில சர்க்கார் மனம் உவந்து செய்கிற அந்த காரியத்தைக் கூட சாதாரண நாட்களில் கூட அல்ல. வறட்சி வெள்ளம் போன்ற நாட்களில் மாநில அரசு மனம் உவந்து ஐயோ விவசாய மக்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் ஒதுக்குகிற பணத்தைக்கூட இந்த கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் எலக்டட் பாடி இல்லாத காரணத்தால் முறையாக பயன்படுத்தவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக இந்த ஆண்டு

கமிட்டி ஆன் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் நம்முடைய ஸ்டேட் அசெம்பிளி அது சப்மிட் செய்த ரிப்போர்ட்டிலே கிளியராக சொல்லியிருக்கிறார்கள். Page 19. Assistance to small farmers and out of a total requirment of Rs. 200 lakhs, only a sum of Rs. 150 lakhs was provided. ஒரு எஸ்டிமேட் போட்டு நம்மால் முடிந்ததை, ஸ்டேட் கவர்ன்மெண்டால் முடிந்ததை நாம் ஒதுக்கி விட்டோம், எப்போது என்றால் Cyclone and flood relief in Tamil Nadu in 1977. Assistance to agariculturists through cooperative institutions. Only a sum of Rs. 150 lakhs has been allocated, but only Rs. 3.96 lakhs were spent so far. 150 லட்ச ரூபாயை ஒதுக்கினால் 3 லட்சத்து 96 ஆயிரம் ரூபாயைதான் செலவு செய்து இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் 3 காரணங்களை சொல்லுகிறார்கள், அதிலே ஒரு முக்கியமான காரணம் No. 2, Number of small farmers not being eligible for the loan in respect of Taladi crop as they were in arrears of cooperative dues under medium and short term loans. கூட்டுறவு சங்கத்தைப்பற்றி அறிஞர்கள் சொல்வது என்ன என்றால் சங்கம் மட்டும் வைக்கவில்லை. to educate the farmers and to educate the unknown persons. அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் அதிகாரிகள் சம்பளம் வாங்கிக் கொள்கிறார்கள். அதோடு கையையும் வைத்துவிடுகிறார்கள். பார்மருக்கு இதை செய்ய வேண்டும், இந்தக் கடனை அடைத்து விடவேண்டும், இதை இப்படிச் செய்யவேண்டும் என்று சொல்வது இல்லை. எலக்டட் பாடி இருந்தால் அரசுக்கு யோசனைச் சொல்லலாம். ஐயா இப்போது கட்டமுடியவில்லை, வறட்சியாக இருக்கிறது, வெள்ளமாக இருக்கிறது. அதனால் கட்ட முடியவில்லை என்றும் நீங்கள் கொடுங்கள் என்று சொல்லாம். இப்போது கூட மின்சாரத்தைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து சொல்லவில்லையா? இப்போது கொடுங்கள் பிறகு வந்தால் வாங்கிக்கொள்ளுங்கள் அல்லது கொடுப்பதிலே அட்ஜஸ்ட்செய்துகொள்ளுங்கள் என்று எலட்க்டட் பாடி இருந்தால் யோசனைச்சொல்லலாம். அதிகாரிகள் எல்லாம் இதை எல்லாம் சொல்லாமல் கையை வைத்து விடுகிறார்கள். சவுத் ஆர்காட்டில் கையை வைத்தார்கள். எங்கே எங்கே வைக்கவேண்டுமோ அங்கே அங்கே வைக்கிறார்கள். இங்கே சென்னையில் கூட கையை வைத்துவிட்டார்கள். ஆகவே அதிகாரிகளைத் தொடர்ந்து 1976-லிருந்து வைத்து இருப்பது முறை அல்ல, சரியல்ல என்பது என்னுடைய கருத்து மட்டும் அல்ல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி தயாரித்து தந்து இருக்கிற ரிப்போர்ட்டில் கூட தெளிவாக சொல்லப் பட்டிருக்கிறது. எனவே தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டும் அல்ல, எலக்டட் பாடி இல்லை என்றால் என்ன என்ன தவறுகள் நடக்கிறது என்று நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல இந்தியா முழுவதும் உதாரணமாக மைசூரில் எலக்டட் பாடி இல்லை என்பதால் ஒரு பெரிய தவறு நடந்து இருக்கிறது. அதற்கு மைசூரில் 1961-ல் ஒரு கேஸ் நடந்து இருக்கிறது. அந்த ஜட்ஜ்மெண்டை



படிக்கிறேன். அதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ளலாம். எலக்டட் பாடி எவ்வளவு தேவை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். The judgement of the High Court of Mysore in Writ Petition No. 307/61 says "It is clear from the cooperative scheme and the purpose of the Cooperative Act that the management of the affair of the society should be entrusted only to a comittee of members who are generally elected from amongst the members of the society. எலக்டட் பாடி இருந்தால் இது போன்ற முறைகேடுகள் எல்லாம் வராது என்று 1961-லே இப்போது கர்நாடகா என்பது அப்போது மைசூர் மாநிலம் 1961-ல் இப்படி ஒரு தீர்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். ஆகஇது அவசியம் தேவை, கூட்டுறவு சங்கங்களில் எலக்டட் பாடி தவிர்க்க முடியாத ஒன்று. அது இல்லை யென்றல் அ கூட்டுறவே இல்லை, கூட்டுக்கொள்ளை என்று தான் சொல்லமுடியும். அதே போன்று தென் ஆற்காடு மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1980–81-இல் தென் ஆற்காடு மாவட்டத்திலே விற்பனை விநியோகக் கூட்டுறவுச் சங்கம், அதிலே சரவணபவா கார்ப்பரேஷன் மார்க்கட்டிங் பிராஞ்சுகள் இருக்கின்றன. கடலூர், கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, திண்டிவனம், நெய்வேலி, சிதம்பரம், விருத்தாச்சலம் ஆகிய பிராஞ்சுகள் இருக்கின்றன........

(முற்பகல் 12–30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : ஸ்பெஷல் ஆபீசர்ஸ் பதவி நீட்டிப்பு பற்றிப் பேசுங்கள், வேறு வேண்டாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஸ்பெஷல் ஆபீசர்கள்பற்றித்தான் பேசுகிறேன். ஸ்பெஷல் ஆபீசர்தான் தப்புப் பண்ணியிருக்கிறார், அதைத்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். அத்தனை பிராஞ்சுகளிலே ஒருவர், ஸ்பெஷல் ஆபீசராக இருக்கிறார், பெயர் சொல்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன், ஏனென்றால் நீங்களே அவர்மீது ஆக்ஷன் எடுத்திருக்கிறீர்கள். அவர் பெயர் பெர்னாண்டோ. 1981–82-இல் அவர்கையாடல் செய்திருக்கிறார் என்று நீங்களே டிரான்ஸ்பர் செய்திருக்கிறீர்கள். அங்கே எலக்டட் பாடி இல்லாமல் ஸ்பெஷல் ஆபீசர் இருந்ததால்தான் இப்படி நடந்திருக்கிறது ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம், இந்த ஒரு சோறே போதும். ஸ்பெஷல் ஆபீசர்களை வெளியே அனுப்ப வேண்டும், எலக்டட் பாடியைக் கொண்டுவரவேண்டும். நாட்டுக்கு நாம் செய்யக்கூடிய நன்மையெல்லாம் முயற்சி செய்து எப்படியாவது எலக்டட் பாடியைக் கொண்டுவரவேண்டும். அந்த அதிகாரி தவறு செய்தார் என்று நீங்கள் கண்டுபிடித்தீர்கள், அவரை என்ன செய்தீர்கள்? நான் லாக்காப்பிலே செத்தவர்கள் கேஸைப்பற்றிச் சொல்லும்போது mere transfer cannot be a

punishment என்று சொன்னேன். அந்த பெர்னான்டோ என்பவரை மியர் டிரான்ஸ்பர் தான் செய்திருக்கிறீர்கள், அதிகாரிகள் சொன்னால் கீழே மட்டத்திலே உள்ளவர்கள் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ரி. பொன்னையன் : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்திலே அந்த குறிப்பிட்ட குற்றச்சாட்டு அரசினுடைய கவனத்திற்கு வந்து ஏற்கெனவே என்னுடைய பட்ஜெட் பேச்சின்போது நான் அதைப் பற்றி விளக்கியிருக்கிறேன், அரசினுடைய கவனத்திற்கு டிசம்பர் மாதத்திலே கொண்டுவரப்பட்டவுடன் ஆய்வு செய்யப்பட்டு ரகசியப் போலீசுக்கு அந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதிலே இரண்டுவிதப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, சென்னையிலே இருக்கிற கோதுமை அரவை ஆலையிலே இருந்து அந்தக் கோதுமையைப் பெற்று சென்றதற்கு பிறகு செக்போஸ்டிலே லாரியில் கொண்டு சென்றதற்கு அங்கே செக் போஸ்டிலே ஸ்டாம்ப், சீல் எல்லாம் பெற்றிருக்கிறார்கள் தென் ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பிராஞ்சுகளிலே உள்ள அந்த ரெக்கார்டுகளிலே அது போய்ச் சேர்ந்ததாக இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், அங்கிருந்து கிராமக் கூட்டுறவு சங்கங்களுக்கு அவற்றை அனுப்பிவிட்டாம் என்று சொல்கிறார்கள். கிராமச் சங்கங்களிலே போய் சி. ஐ. டி. துறையினர் கேட்டபோது எங்களுக்கு வந்து கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். கிளையைச் சேர்ந்தவர்கள் இல்லை இல்லை நாங்கள் அனுப்பிவிட்டோம். அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான ஆதாரங்களையெல்லாம் திருடிவிட்டு கிழித்து எறிந்துவிட்டார்கள். ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். சி. ஐ. டி. துறையினர் இது தொடர்புடைய அத்தனை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்திருக்கிறார்களே. அந்த அடிப்படையில் தொழிலாளர்கள் அல்ல, கிளை மேலாளர், செயலாளர் உள்பட 6 பேர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு குற்றபுலனாய்வு நடந்து வருகிறது. இதுவரைக்கும் ஸ்பெஷல் ஆபீசர் எந்த வகையில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது சி. ஐ. டி. துறையினருக்கும் ஆதாரம் கிடைக்காத காரணத்தினால் அவர் மாற்றம் செய்யப்பட்டு அந்தப் பகுதியில் அவர் இருக்கக்கூடாது என்ற முறையிலே பூர்வாங்க விசாரணை நடந்து அந்த தனி அதிகாரிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று தெரிய வருமானால் அவரும் பணிநீக்கம் செய்யப்படுவார், அது மட்டுமல்ல ஒரு வழக்கும் இப்போது நடைபெற்று வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தொழிலாளி என்று சொன்னதாக ஞாபகமில்லை. எம்ப்ளாயி என்று சொன்னேன். எம்ப்ளாயி என்றால் 'போத் ஸ்டாப் அண்ட் ஓர்க்கர்ஸ்'; இரண்டையும் சேர்த்து குறிப்பிட்டேன். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் எடுக்கிற நடவடிக்கை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். தொழிலாளியாக இருந்தாலும் பெரிய ஆபீசராக இருந்தாலும் இரண்டு பேருக்கும் நடவடிக்கை ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு எலக்டட் பாடிஸ் மிக மிக அவசியம் என்பதை



நான் வலியுறுத்த விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர் என்ற காரணத்தால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது நம்மையே பாதிக்கும். ஸ்பெஷல் ஆபீசர்ஸ் வைத்து கூட்டுறவு சொசைட்டியை நடத்தினால் அது நம்மையே பாதிக்கும். இன்றையதினம் பீகாரின் முதலமைச்சர் ஜெகனாத் மிஸ்ரா அவர்கள் மீது உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு ரீ-ட்ரையலுக்கு லோக்தாள் எம்.எல்.ஏ. முயற்சி செய்கிறார்கள். ஏற்கெனவே வழக்கை உச்சநீதிமன்றத்திலே பிராசிகியூஷன் சைட்டிலே வித்ட்ரா செய்துவிட்டார்கள். வித்ட்ரா பண்ணுவதற்கு அனுமதி தந்த ஒரு நீதிபதி கூட அண்மையில் நடைபெற்ற அஸ்ஸாம் தேர்தலிலே எம். பி. ஆகியிருக்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்டி ரீ-ட்ரையல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரீ-ட்ரையலுக்கு உத்தரவிட்டிருப்பதாக நான் அறிகிறேன். பத்திரிகையிலே வந்த செய்தியைத் தான் சொல்கிறேன். This case arises from the Panchayat Union Co-operative Bank fraud. ஆகவே மிஸ்ரா போய் அங்கே ஸ்பெஷல் ஆபீசராக இல்லை. ஏற்கெனவே அவர் முதலமைச்சர். ஆகவே முதலமைச்சரை அது பாதித்தது. அதே போல நந்தினி சத்பதி, ஒரிஸ்ஸாவில், இதேபோல கேஸ் என்று சொல்லப்படுகிறது. ஆகவே நம்மையேத் தாக்கக்கூடிய அளவிற்கு அந்த ஸ்பெஷல் ஆபீசர்களுடைய நிர்வாகம் அமைகிறது. ஆகவே இப்படிப்பட்ட கேடுகளை உருவாக்குகிற ஸ்பெஷல் ஆபீசர்கள் நிர்வாகத்தை நீக்கி உடனடியாக எலக்டட் பாடீஸ் ஏற்படுத்த அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு தனி அதிகாரிகள் பதவிக்காலம் நீட்டிப்பது என்ற மசோதாவில் என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு சங்கம் நாட்டிற்கு நல்லதென்ற ஒரு நல்ல எண்ணத்தோடு நாம் தொடங்கினோம். ஆனால் எப்படியோ 1976 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நாம் கூட்டுறவிற்கு தேர்தல் வைக்கமுடியாமல் ஒரு நிலையில் அவதிப்படுகிறோம். அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறையில் என்னென்ன நிலைமைகள் இப்போது இருக்கிறது என்பதை நான் சொல்வதை விட அமைச்சர் அவர்கள் யதார்த்த நிலைமையை நன்கு அறிவார்கள். இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜ் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் என்ன நிலை நடந்தது என்பதை பேசினார்கள். அந்த சமயத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் உண்மையென்று ஒப்புக்கொண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி சொன்னார்கள். வழக்கு இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த தனிப்பட்ட அதிகாரி ஒரே நாளில் அந்த தவறைச் செய்யவில்லை. நாம் கண்டுகொண்ட தவறு ஒன்று தான். அதற்கு முன்னாலே இருக்கிற கோப்புகளை எடுத்தால்—எனக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறேன்; அதிலே எவ்வளவு உண்மை இருக்கும் என்று எனக்குத் தெரியாது—அதில் ஒரு உண்மை மட்டும் நிச்சயம் உண்டு. அவர் அதற்கு முன்னாலே இதுபோன்ற காரியங்களைச் செய்ததாகவும், அங்கே இருக்கிற

[திரு. எல். இளையபெருமாள்] [1983 ஏப்ரல் 23

பணிகளில் அமர்த்த வேண்டியவர்களை தன் இஷ்டப்படி, சட்டத்தை மதிக்காமல், அங்கே இருக்கிறவர்களின் தகுதி, திறமையைக்கூட கேட்காமல் பல்வேறு தவறுகள் செய்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. ஒன்றை குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த கூட்டுறவுத் துறையில் அரசாங்க உத்தரவைக்கூட பல்வேறு மாவட்டங்களில் மதிப்பதில்லை. இந்த மசோதாவிற்கு சம்மந்தமில்லாவிட்டால் கூட இந்த உண்மையை அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கவேண்டுமென்ற காரணத்தால் சொல்கிறேன். பல்வேறு மாவட்டங்களில் ஆதி திராவிட மக்களுக்கு, மலை வாழ்மக்களுக்கு உத்யோகத்தில் கொடுக்க வேண்டிய பங்கை கொடுக்காமல், சட்டத்தை காட்டி, சில சந்துபொந்துகளை காரணம் காட்டி, அவர்களுக்கு உத்யோகம் கொடுப்பதில்லை. அதிலும் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் முழுமையாக அமல்படுத்துவதில்லை. இப்போது சந்தேகத்திற்கிடமான மாறுதல் செய்யப்பட்டிருக்கிற அதிகாரியின் காலத்தில்தான் இந்த அவலநிலை அதிகமாக இருந்திருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்கிறேன். நான் நேரடிக் குற்றம்சாட்டிச் சொல்லவில்லை.

(பிற்பகல் 12—40)

அமைச்சர் அவர்கள் இதில் அக்கறை உள்ளவர்கள். குறிப்பாக, நலிந்த மக்களுடைய வாழ்விலே அவர் எண்ணம் உள்ளவர் என்பது எனக்குத் தெரிந்த காரணத்தினால், இதில் கூட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, பல்வேறு விதமான ஊழல்கள் நடந்துள்ளன என்பதைத் தெரிவிக்கிறேன். இது சம்பந்தமாக, பாதிக்கப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், அங்கேயிருக்கிற நல்லெண்ணம் கொண்ட பெரியவர்கள், வழக்கறிஞர்கள் கூட அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் பல்வேறு முறையீடுகள் சமர்ப்பித்துள்ளனர். இப்பொழுது, சி.ஐ.டி. மூலம் அதைக் கவனிக்கிறார்கள், கண்காணிக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதால், அவைகளைப்பற்றியெல்லாம், நம்முடைய அமைச்சர் அவர்கள், இது சம்மந்தமான துறை காரியதரிசியை விளக்கம் கேட்பார்களானால், உண்மைக்கு மட்டுமல்ல, இந்த வழக்குகளைக் கண்டு பிடிப்பதற்காக மட்டுமல்ல, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் பல்வேறு ஆதாரங்கள் அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுபோலவே, கள்ளக்குறிச்சி, சிதம்பரம் போன்ற இடங்களில் கூட, இதுபோன்ற தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அமைச்சர், ஒரு முறை கேள்வி நேரத்தில்கூட, இதைப் பற்றி சொன்னார்கள். ஒரு தனிபட்ட அதிகாரி மட்டும் இதில் துணிந்து செய்யவில்லை. செக் போஸ்டிலே உள்ளவர்கள் மாவட்ட தலைமை அலுவலகத்தில் உள்ளவர்கள் உயர்ந்த அதிகாரிகள் மட்டுமல்ல, குமாஸ்தாக்களாக இருந்தாலும் சூப்பரின்டெண்டுகளாக இருந்தாலும், கூலி ஆட்களாக



1983 ஏப்ரல் 23] [திரு. எல். இளையபெருமாள்]

இருந்தாலும், யார் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் 6, 7 பேர்களோடு அது நிற்காது. இவ்வளவு பெரிய தவறுகளை 6 பேர், 7 பேர்கள் மட்டும் செய்ய முடியாது. தாலுகா மட்டத்தில் இருந்தாலும் சரி, அல்லது வேறு கிளைகளில் இருந்தாலும் சரி, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும் சரி, ஒரு நல்ல வழக்கு நமக்கு கிடைத்திருக்கின்ற பொழுது, அதிலும் செக் போஸ்டிலிருந்து கடைசி வரையில் அந்தத் தவறுகள் இருக்கின்றன என்பதை ஓரளவுக்கு புலனாய்வுத் துறை அதிகாரிகள் கஷ்டப்பட்டு இந்த உண்மைகளைக் கண்டு பிடித்திருப்பதால், இதில் முழுக் கவனம் நம்முடைய அமைச்சர் அவர்கள் செலுத்தி, பல அதிகாரிகளைக் கேட்டு, தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இரண்டு விஷயங்களை இதில் சொல்ல விரும்புகிறேன். இன்று தேர்தலை உடனடியாக நடத்த வேண்டியது அவசியம். நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு உண்மையான காரியத்தைச் செய்வதற்கும், நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்கும், ஊழல்கள் அதிகப்படாமல் இருக்க, தடுக்கின்ற காவலாக இருக்கின்ற அளவிலே, இந்தத் தேர்தலைக் கொண்டுவரவேண்டுமென்று முதலிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அரசாங்க உத்தரவை அமல் படுத்தாமல் இருக்கிற இடங்களில், யாரெல்லாம் செய்தார்கள், என்ன காரணத்தினால் செய்தார்கள் என்பதைக் கேட்பதோடு, வருங்காலத்திலாவது, அந்தக் குறைகளைப் போக்க வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்புக்கு வந்தபிறகு, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் பேரிலே அக்கறை கொண்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இடங்கள் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அது கெசட்டட் போஸ்ட்டாக இருந்தாலும் சரி, நான்—கெசட்டட் போஸ்ட்டாக இருந்தாலும் அதை ஊக்கத்தோடு செய்திருக்கிறார்கள் என்று நான் நன்றி சொல்லவிரும்புகிறேன். அது தனி அதிகாரிகளால் மறுக்கப்பட்டன என்பதோடு மட்டுமல்ல. கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்கள் இருந்த காலத்தில்கூட செல்வாக்கு மிகுந்தவர்களுக்கு, பொருள் உள்ளவர்களுக்கு, யாருக்குச் சிபாரிசு இருந்ததோ அப்படிப்பட்ட ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டதே தவிர—முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லவில்லை. 1%, 2% கொடுத்திருந்தால் அதிகம், குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்திலே, அந்தத் தலைமையகத்திலே, அந்த உத்தரவை மதித்து நடக்கவில்லையென்பதை நான் சொல்வதோடு, தேர்தல் கொண்டு வரவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்துகிறேன்.

இப்பொழுது கொடுக்கின்ற ஓராண்டுக்காலமே கடைசியாக வைத்து, செய்யவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். மூன்றாவதாக, கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த வேலைகளுக்கு மட்டுமல்ல, டைரக்டர், ஜாயின்ட் டைரக்டர், போன்ற பதவி களுக்கு இந்த பிற்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப் பட்ட மக்களால் வர முடியாத அவல நிலையிருக்கிறது. ஆனால், அரசாங்கம் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறது. கிராமத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய அந்தச் சந்தாத் தொகையைக்கூடக் கொடுப்பதற்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள். ஆனால், கீழ்த்தட்டிலே உள்ள மக்களுக்கு அந்த உதவிபோய்ச் சேருவதில்லை. அதிகாரிகள் இதில் அக்கறை செலுத்துவதில்லை. அதை அமுல் படுத்துவதில்லை. அதுபோல, பால் சொசைட்டியிலே கூட அவர்களை சேர்க்கமாட்டேனென்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக வைத்தாலும் கொடுக்கமாட்டேன், புதிதாக வைத்தாலும் கொடுக்கமாட்டேன் என்று ஜாயின்ட் ரிஜிட்ராராக இருக்கிறவர்கள், டெப்புட்டி ரிஜிட்ராராக இருக்கிறவர்கள் செய்கிறார்கள். இதையெல்லாம் அமைச்சரளவில் சொல்லி செய்யவேண்டிய அவல நிலையிருக்கிறது. சட்டத்தில் சொல்லப் பட்டதை மதிக்கவேண்டுமென்று கடுமையான உத்தரவு மூலம் சொல்லவேண்டும். அமுல் செய்யாதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே நாம் அக்கறை காட்ட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்று நான் அமர்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 1983 ஜூன் 9-ஆம் நாளுடன் முடிவடைய இருக்கிறது. அதை ஒரு வருஷம் நீட்டிப்பதற்காக இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நியாயம் அல்ல என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இந்தத் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை இங்கே நிறைவேற்றுகின்ற நேரத்தில், அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்காக அமைச்சரவர்களே அந்தச் சட்டத்தின் ப்ரீயாம்பிளில் சொன்ன ஒரு விஷயம் என்னவென்றால், டெமாக்கரட்டிக் மேனேஜ்மென்ட் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது. டெமாக்கரட்டிக் மேனேஜ் மென்ட் தற்போது இல்லை என்பது தெளிவாகிறது. இன்றைக்கு டெமாக்கரட்டிக் மேனேஜ்மென்டை ஏற்படுத்த வேண்டுமென்ப தற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அது நிறைவேற்றப் பட்டதற்குப் பிறகும்கூட இன்னமும் ஜூன் 9-ஆம் தேதி வரையில் காலவரையறை இருந்த பிறகும்கூட, அதிலேயிருந்து இன்னுமொரு வருஷம் நீட்டிப்பதற்கான ஒரு மசோதாவைக் கொண்டு வருவது ஜனநாயக முறையில் ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தக்கூடிய அந்த எண்ணத்தை நிறைவேற்றும் முறையில் உள்ள நடவடிக்கை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அது ஜனநாயக





விரோதமான செய்கை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கையிலிருந்து அமைச்சரும், அரசும் பின் வாங்கிக் கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டு கோளாகும்.

அடுத்து, அமைச்சரவர்கள் காரண–நோக்க விளக்கத்தில் சொல்லியிருப்பதைப்போல, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்றால், மூன்று மாத கால அளவு அல்லது மேக்சிமம் போனால் ஆறு மாத கால அளவிற்கு வேண்டுமானால் நீட்டிப்பு கேட்கலாமே தவிர, ஒரு வருஷ காலத்திற்கு என்று கேட்டிருப்பது நியாயமும் அல்ல, சரியும் அல்ல. அவ்வாறு கேட்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நேரத்தில் ஏன் டெமாக்கரட்டிக் மேனேஜ்மென்ட் வேண்டுமென்பதற்கு ஒருசில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் பல கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவிலே, பொறுப்பிலே உள்ள அதிகாரிகள், அது ஸ்பெஷல் ஆபீசராக இருந்தாலும் சரி, அல்லது செக்ரட்டரி யானாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களை எப்படிப்பட்ட பொறுப்போடு மக்களுடைய உபயோகத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளுமளவிற்கு நடத்திச் செல்ல வேண்டுமோ அந்த முறையில் நடத்திச் செல்லவில்லை என்பதற்கு ஒருசில எடுத்துக்காட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம், விளவங்கோடு தாலுக்கா மார்க்கெட்டிங் சொசைட்டி என்று இருக்கிறது. அங்கே ஒரு தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். பழங்களிலிருந்து பழ ரசத்தைத் தயாரித்து விற்று இலாபகரமாக நடந்த ஒரு கூட்டுறவுச் சங்கம் அது. ஆனால் அங்கே ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்த பிறகு இப்பொழுது அங்கே ஏற்பட்டுள்ள நிலைமை என்னவென்றால், அந்தச் சங்கம் இன்றைக்கு நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டு மல்ல, அங்கே பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரியின் டெஸ்பாட்டிக் நடைமுறை காரணமாக பல முறைகேடுகளும் இழப்புகள் அந்த சொசைட்டிக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு லாரி வாங்கினார்கள், ஒரு வேன் வாங்கினார்கள். வேனை ஓட்டு வதற்கு ஓட்டத் தெரியாத ஒரு க்ளீனரை டிரைவராகப் போட்டு விபத்து ஏற்பட்டு, அந்த வேனைச் சரி செய்வதற்காக ஒர்க் ஷாப்பிற்கு அது அனுப்பப்பட்டு, அதனுடைய ரிப்பேர் செலவுத் தொகையைப் பார்த்தால் புதிதாக ஒரு சேசிஸ் வாங்கக்கூடிய அளவிற்கு என்ன பணம் தேவைப்படுமோ அதைவிட அதிகமாகப் பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடி அங்கே இல்லை; எனவே, இவர்களைக் கேட்பதற்கு யாரும் இல்லை. இப்படிப்பட்ட எண்ணத்துடன், இலாபகரமாக நடந்த சங்கங்களை நஷ்டத்தில் நடத்துகின்ற அளவிற்கு, எந்தப் பொறுப்புணர்ச்சியும் இல்லாமல் இந்த அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு எடுத்துக்காட்டையும் நான் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலே ஸ்டேட் பேங்க் எம்ப்ளாயீஸ் கோஆப்பரேடிவ் சொஸைட்டி இருக்கிறது. அங்கே வேலை பார்த்த மூன்று ஊழியர்களான, நாராயணசாமி, சுப்பிரமணியம் ஜெயானந்தன் ஆகிய இவர்களை 22-12-77 லேயிருந்து—தற்காலிக வேலை நீக்கம் செய்தார்கள். அங்கே ஒரு சி. எஸ். ஆர். பொறுப்பிலே இருக்கிறார் ஸ்பெண்ட் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு சஸ்பென்ஷன் ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் இயற்றியதற்குப் பிறகும்கூட அவர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை.

(பிற்பகல் 12-50)

நீதி மன்றமும் இவர்களை சஸ்பெண்டு செய்தது. மேலும் அதற்குப்பிறகு, ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் டிஸ்மிஸ் செய்யப்பட்டது சரியான நடவடிக்கை அல்ல என்ற தீர்ப்பை கொடுத்தது. அப்படிக் கொடுக்கப்பட்ட பிறகும், அதை அமல்படுத்துவதற்கு இந்த அதிகாரி தயாராக இல்லை. அதே நேரத்திலே சென்னையைச் சேர்ந்த சிட்டி சிவில் கோர்ட் 3 ஆம் அசிஸ்டெண்ட் ஜட்ஜ் 1982 ஆம் ஆண்டிலே பிரசிடெண்ட்-ஆக இருப்பதற்கு தகுதி இல்லாதவர் என்று ஒருவர் மேல் தீர்ப்பு கொடுக்கப்பட்டு, அவரை தலைவர் பகுதியிலிருந்து நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தலைவரோடு உடந்தையாக இருந்து, இன்று ஊழியர்களை பழி வாங்கும் முறையிலே இந்தச் சங்கத்தை நல்லமுறையிலே நடத்தாமல் இந்த சி. எஸ். ஆர், நடந்து வருகிறார். 4 பேர்கள் டைரக்டர்கள்—11 டைரக்டர்கள் இருக்கக்கூடிய அந்தச் சங்கத்திலே ஏற்கனவே பல ஆட்கள் இந்தச் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள் காரணமாக ராஜிநாமா செய்துவிட்டார்கள். இந்த 4 டைரக்டர்களை வைத்துக்கொண்டு, இந்த சி.எஸ்.ஆர். என்ற அதிகாரி அனைத்து தொழிலாளர் விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். நீதிமன்றம் அவர்களுக்கு சஸ்பென்ஷன் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று சொன்னதற்கு பிறகும் கொடுக்கப்படவில்லை. வேலை நீக்கம் செய்தது சரியல்ல என்று சொல்லியும்கூட, இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட அனைத்து நடவடிக்கைகளை இந்த ஸ்பெஷல் ஆபீசர் செய்து கொண்டிருக்கிறார்.

இன்னொன்று நான் சொல்லவேண்டுமென்றால், அரிசியைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்திலே கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எல்லைப்பகுதியில் கிராத்தூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராத்தூர் கிராம விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் 85 ஆம் எண். அதில் பல முறைகேடுகள். அரிசி, மண்ணெண்ணெய் போன்றவை ஏழை மக்களுக்கு கொடுக்கப்படுவது கிடையாது. இதன் காரணமாக 100க்கும் மேற்பட்ட மக்கள் புகார் கொடுத்து, அந்தச் சங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது. அந்த நேரத்திலே இவர்கள் நீதிமன்றத்திலே தடை வாங்கினார்கள்





சிவில் சப்ளையில் 4 கடைகள் இருக்கின்றன. இந்த 4 கடைகளிலும் இப்படிப்பட்ட முறைகேடுகள் நடக்கின்றன. ஆக அரிசி மண்ணெண்ணெய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய நேரத்தில், நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இந்த அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கக்கூடிய கூட்டுறவு நிர்வாகிகள், கோர்ட்டு ஆர்டரின் பேரில், எந்த முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராக இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடி இருக்குமேயானால், இப்படிப்பட்ட விஷயங்களை கவனிக்கமுடியும்.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநில அரசு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு தமிழகத்திலே, மாநில ரீதியாக ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கம் நகர்ப் பகுதிகளிலே இருக்கக் கூடிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறதே தவிர, கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதில், எந்த அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ, அந்த அளவிற்கு எடுக்கவில்லை, ஆகவே கிராமங்களிலே வீடு கட்டிக்கொடுப்பதற்கு ஒரு தனியான சங்கத்தை மாநில ரீதியாக, இந்த அர்பன் ஏரியாவிலிருந்து, ரூரல் ஏரியாவாகப் பிரித்து, அதற்கு பிரத்தியேகமாக, ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான ஒரு தனி கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட முறைகேடான நடவடிக்கைகளைப் பற்றி ஏற்கனவே கூட்டுறவுச் சங்கத்தின் மீது பேசக் கூடிய நேரத்திலே ஒன்றைச் சொன்னேன். கன்னியாகுமரியிலே கன்னியா மில் என்ற ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திலே ஒரு ஊழியரை, சேம்லா ரஸ் என்றவரை முறைகேடாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவருக்கு வேலை கொடுக்கப்படவேண்டுமென்று அசிஸ்டண்ட் லேபர் கமிஷனர் சொன்னதற்குப் பிறகும், அந்த நேரத்தில், ஒரு ஸ்பெஷல் ஆபிசர் அதை அமல்படுத்தத் தயாராக இல்லை. அப்படி இந்த நாட்டிலே தொழிலாளர்களுக்காக வேண்டி, ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய தொழில் சட்டங்களை இப்போது ஸ்பெஷல் ஆபிசர்கள் மதிக்கவில்லை. கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில், என்னவோ அவர்களுக்குத் தனியான ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கவேண்டுமென்றால், நிச்சயமாக தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடி வரவேண்டும். 1976-ஆம் ஆண்டிலே இந்தத் தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 7 வருட காலம் அவர்களுடைய தர்பார் இந்த நாட்டிலே நடந்து முடிந்திருக்கிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு அவர்களுடைய தர்பாரை ஏற்படுத்துவதற்கு அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது சரியில்லை, இந்த ஒரு

இடங்களில் நடந்து இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில், தனி அதிகாரிகள் இருக்கின்ற இடங்களில் தற்போது நஷ்டத்தில் தான் அந்தச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. நான் ஒரு 4-5 ஆண்டுகள் ஒரு கூட்டுறவு சொஸைட்டியில் தலைவராக இருந்தேன். அப்போது அதிகமான அளவிற்கு இருப்பு இருந்தது. இப்போது நஷ்டத்தில் அது இயங்கிக்கொண்டு இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இப்படி இருப்பு வைத்து இருந்த சங்கங்களில் எல்லாம் ஏகப்பட்ட நஷ்டம். 30 ஆண்டுகள், 25 ஆண்டுகள் நல்ல முறையில் இயங்கி இருப்பு வைத்திருந்த சங்கங்களில் எல்லாம் இன்றைக்கு நஷ்டத்தில் உள்ளன. என்னுடைய வட்டாரத்தில் இருக்கும் ஒரு மில்க் சப்ளை யூனியன் கடந்த ஒரு வருஷ காலமாக 1 லட்ச ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வருவதாகச் சொல்லப் படுகிறது. இப்படி பல சங்கங்கள் என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்றன. இதற்கு எல்லாம் என்ன காரணம் என்று நான் சொல்லமுடியாது. அந்த நிர்வாகத்தைச் சரிசெய்தால் இது சரியாகிவிடும். இத்தகைய நடவடிக்கைகளை வைத்து நாம் பார்க்கிறபோது, அங்கே நல்லதொரு நிர்வாகத்தைக் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். இன்றைக்கு நாட்டிலே மிக மிக அத்தியாவசியமான பொருள்கள் விலை ஏறியிருக்கிறது. இந்த நேரத்தில் அந்த அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் நிர்வாகஸ்தர்கள் இருந்தால் அது நல்ல முறையில் இயங்கமுடியும். ஆகவே காலாகாலத்தில் இந்தத் தேர்தல்களை நடத்துவது என்பது பொருத்தமானது, நியாயமானது, சரியானது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஏறத்தாழ 7 ஆண்டு காலமாக அந்த தனி அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். ஏதோ நாங்கள் அவ்வப் போது சொல்கிற தன்மையில் அடிப்படையில் சிலர் ஆங்காங்கு மாற்றப்பட்டு இருக்கலாம். ஆனால் இப்படி ஆண்டுக்காண்டு இந்த அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது சரியல்ல. ஏற்கனவே போட்ட சட்டத்தின்படி ஜூன் மாதம் 9-ம் தேதி வரையில் இவர்கள் பதவியில் இருக்கலாம். கூட்டுறவு சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டபோது, அந்த ஜூன் மாதம் 9 ஆம் தேதிக்குள் தேர்தல் வரும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அப்படி வாக்குறுதி கொடுத்த பின்னாலும் அங்கே தேர்ந்தெடுக்கப் பட்ட அமைப்பு அந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு வராது, மேலும் ஒரு ஆண்டு நீட்டிப்பு—அதாவது 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில்—அந்த தனி அதிகாரிகளின்கீழ் அது இருப்பது அவசியம் தானா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் நீட்டிப்பு மசோதா வருகின்ற போது சொன்னார்கள், கூட்டுறவு சட்டம் செலக்ட் கமிட்டியில் இருக் கிறது. அந்த செலக்ட் கமிட்டி சட்ட மன்றத்தில் நிறைவேற்றப் பட்டவுடன் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். இப்போது



அந்தச் சட்டம் இங்கேயும் நிறைவேற்றப்பட்டு மேலவையிலும் நிறைவேற்றப்பட்டு விட்டது. டெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. சீக்கிரம் அங்கீகாரம் பெற்று, உடனடியாக இங்கே தேர்தல் வைக்க முன் வரவேண்டும். 1976-ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சி காலத்தில் தான் இந்த அமைப்புகள் கலைக்கப்பட்டன. ஆகவே, சீக்கிரம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கொண்டு வர வேண்டும் என்று அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அந்த சட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் பெற்று தேர்தலை நடத்துங்கள்.

அந்தச் சட்டத்தின்மீது அதிகமாக விதிகள்கூட போட வேண்டிய தேவை இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே அந்த செலக்ட் கமிட்டியில் இருந்து, விரிவான முறையில் அந்தச் சட்டத்தை ஆய்வு செய்து, அதன் மீது கூட்டுறவு அதிகாரிகளின் ஆலோசனைகளையெல்லாம் பெற்று, அந்தச் சட்டத்திலேயே விதிகளில் வரவேண்டியவற்றை எல்லாம் சேர்த்து, அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஆகவே, விதிகளில் அதிகம் கொண்டு வரவேண்டிய அவசியமும் எதுவும் இல்லை என்பதால் உடனடியாகத் தேர்தலை நடத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஒரு வருஷம் நீட்டிப்பு என்பதை ஆறு மாதமாகக் குறைக்க வேண்டும். ஆறு மாதமாகக் குறைத்து, டிசம்பர் மாதத்தில் தேர்தல் வரும் என்று அறிவித்தால் நாங்கள் சந்தோஷமாக இருப்போம். ஒரு வருஷம் என்று சொன்னால் தேர்தல் வருவது சந்தேகம்தான். ஏனென்றால் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அநேகமாக பஞ்சாயத்துத் தேர்தல், நகரசபை தேர்தல் எல்லாம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அந்தத் தேர்தல்கள் நடத்தப்படுமானால் இந்தத் தேர்தலைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யாது. ஆகவே அடுத்த வருஷம் ஜூன் என்று போகாமல் இந்த வருஷம் டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடக்கும் என்ற திருத்தத்தை அமைச்சரவர்களே கொண்டு வந்து ஆறு மாதத்திற்குள் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நான் முதலிலே சொன்னமாதிரி சென்னையிலுள்ள ஸ்டேட் பாங்க் எம்ளாயீஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டியின் நடவடிக்கை பற்றி, இந்த மசோதாவை ஒட்டி நான் சொல்லக் கூடிய சம்பவம், அதில் பணியாற்றிய சில ஊழியர்கள் 1979-ஆம் ஆண்டிலே சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். நாராயணசாமி சுப்பிரமணியம், ஜெயானந்தன் என்று சொல்லக்கூடியவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நியாயம் வழங்கக்கூடிய வகையில் அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு, அமர்கிறேன்.

வருட காலம் என்பதை 6 மாத காலமாக குறைத்து 6 மாத காலத்திற்குள்ளே — 6 மாதம் காலம் என்று சொன்னால் ஏற்கனவே ஜூன் வரையிருக்கிறது;— ஜூனிலிருந்து 6 மாதம் காலம் என்று சொன்னால் ஏறக்குறைய 9 மாத கால அவகாசம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே ஜூன் மாதத்திலிருந்து 6 மாத காலத்திற்கு என்ற முறையிலே இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும். ஒரு வருட காலம் என்பது மாற்றப்படவேண்டும். அந்த வகையிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகளினுடைய காலங்களை நீட்டிக்கக்கூடிய திருத்தச் சட்டங்கள் பல தடவை இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சமீபத்திலே சென்ற மாதம் இந்தக் கூட்டுறவுச் சம்பந்தமாக ஒரு மசோதாவே கொண்டு வரப்பட்டு இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படக் கூடிய காலத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக, கூடிய சீக்கிரம் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பை தேர்தல்களின் மூலமாகக் கொண்டுவருவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது இந்தச் சட்டம் ஜூன் மாதம் 9 ஆம் தேதி வரை தனி அதிகாரிகளுடைய காலம் அந்தப் பழைய சட்டத்தினுடைய அடிப்படையிலே ஜூன் வரையிருக்கிறது. ஆகவே ஜூனுக்கு முன்னால் தேர்தல்களை நடத்த முடியாது என்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் கொஞ்ச காலத்தை நீட்டிக்கவேண்டுமென்று சொல்லும்போது 1 வருடம் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நான் முதலாவதாகச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் அப்படியே இருந்தாலும்கூட டிசம்பர் மாதத்திற்கு முன்பாக தேர்தலை நடத்த முடியும். எவ்வளவு துரிதமாக இந்த மேலவையிலே நிறைவேற்றப்பட்டு இந்த மசோதாவானது ஜனாதிபதியினுடைய அங்கீகாரத்தை துரிதமாக பெற்று கூடிய சீக்கிரம் தேர்தலை நடத்த வேண்டும் என்பதிலே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஆர்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால் ஏறத்தாழ 1976 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை, 7 ஆண்டுக்காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களிலே, அது மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருந்தாலும் சரி, அல்லது கூட்டுறவு பால் யூனியன்களாக இருந்தாலும் சரி, இதே மாதிரியா மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள், ஆக எதை எடுத்துக் கொண்டாலும் சரி, குறிப்பாக இந்த வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இவையிலே எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகிறது. இன்றைக்கு உள்ள அந்தச் சூழ்நிலைகளை மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள்.



ஸ்டேட் பாங்க் ஸ்டாப் கோ—ஆப்பரேடிவ் சொசைட்டியிலே 11 பேர்கள் இருக்கவேண்டிய இடத்திலே இன்றைக்கு 4 பேர்கள தான் நிர்வாகஸ்தர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த 4 பேர்களிலே தலைவர் ஏற்கனவே தகுதியில்லை என்று ஒரு கோர்ட்டிலே தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. காரண தலைவர் ஒரு உறுப்பினர்மீது தகாதபடி பழியைச் சுமத்தினார் என்பதற்காக கோர்ட்டிலே போட்டு 200 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டிருக்கிறது. 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதன காரணமாக அவர்கள் பதவியிலே இருக்க தகுதியானவர்தானா என்று கோர்ட்டிலே போடப்பட்டு அவர் தகுதியில்லை என்று சிட்டி சிவில் கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்து அந்த வழக்கிலே அப்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 11 பேர்களிலே 4 பேர்கள் தான் இந்த நிர்வாக சபையிலே இருப்பதன் காரணமாக அந்த நிர்வாக சபையை கூட்டமுடியவில்லை. தலைவரே நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறார். அதன் காரணமாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு பெரிய இன்னல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் விவரமாகச் சொல்லிவிட்டார். கோர்ட்டிலே அந்த 3 பேரையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லியுங்கூட அதற்காக ஒரு என்கொயரி வைத்திருக்கிறார்கள். அந்த என்கொயரியை நடத்திய அந்த அதிகாரிகூட, அந்தக் குற்றச் சாட்டை விசாரித்த அந்த அதிகாரிகூட, இவர்கள் நிரபராதி என்று தீர்ப்பளித்துவிட்டார்கள். இதையும் ஏற்றுக்கொள்ளாத அந்த சொசைட்டியினுடைய தலைவர் அந்த மூவரையும் குற்றவாளி என்று சொல்லி, கடந்த பெப்ரவரி 1982 லே டிஸ்மிஸ் ஆர்டர் அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு நம்முடைய சட்டத்திலே என்ன சொல்கிறது என்றால், சஸ்பென்ஸன் செய்யப்பட்டவர்களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

அந்த சஸ்பென்ஷன் அலவன்ஸ் அவர்களுக்கு கொடுக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இது சம்பந்தமாக அந்தச் சங்கத்திலே உள்ள மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தச் சங்கத்திலே நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் தவறானச் செயலில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னால் நிர்வாகத்தை மாற்ற முடியவில்லை. ஆகவே, நிர்வாகத்தை மாற்றி உடனடியாக ஒரு ஜெனரல்பாடியைக் கூட்டி அங்கே புதிய நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அப்படி தேர்ந்தெடுத்து இருந்தால் முறையாக அந்தத் தொழிலாளிக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கச் சொல்லி இருக்கலாம். இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கும் கூட்டுறவுத் துறை. பதிவாளருக்கும் பல முறை பெட்டிஷன் அனுப்பியிருக்கிறார்கள் இப்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இது மாதிரி பல

திரு. ஜே. எஸ். இராசு: மாற்றுத்தலைவர் அவர்களே, கூட்டுறவுச்சங்க தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமப் பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிப்பதில் விரிவான முறையிலே கூட்டுறவுத் துறை செயலாற்றி வருகிறது என்ற கருத்தை கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருமையோடு தெரிவித்திருக்கிறார்கள். அந்த முன்னுரையின் அடிப்படையில் கூட்டுறவுத் துறை பணியாற்றி வருகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக அப்படி அரிய பணியை அவை செம்மையாகச் செய்யவில்லை என்றுதான் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய நிர்வாக சீர்கேடு, நடைமுறையிலே ஏற்படுகிற ஊழல்கள், அவை மூலம் மக்கள் நலன்கள் பாதிக்கப்படுகின்ற தன்மை, மக்களுடைய தேவைகளைப் புறக்கணிக்கின்ற ஒரு கட்டம், நிர்வாகத்திலே இந்தத் துறையில் ஏற்படக்கூடிய பெரிய நஷ்டம், பொதுவாக மக்களுக்கு கூட்டுறவுத் துறையில் இருக்கிற நம்பிக்கையின்மை ஆகியவை இன்றைக்கு இந்தத் துறையிலே அதிகமாக வளர்ந்து வருகின்றன என்பதை அமைச்சரவர்களே மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இதற்கெல்லாம் ஒரே மருந்து தனி அதிகாரிகள் நீடிப்பதை நீக்கிவிட்டு, மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் இந்த அமைப்புகள் விடப்பட வேண்டுமென்று நாங்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம்.

குறிப்பாக, ஆளும்கட்சியைத் தவிர மற்ற கட்சிகளில் இருக்கிற அனைவரும், பொதுமக்களும் கூட இந்த கூட்டுறவுத் துறையிலே தேர்தல் நடைபெற வேண்டுமென்று சொல்வதை ஏதோ நாங்கள் பொழுதுபோக்கிற்காகச் சொல்கிறோம், எங்கள் விருப்பத்திற்காக கேட்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் நினைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தனி அதிகாரிகள் ஆட்சியிலே இந்தத் துறை 6,7 ஆண்டு காலமாக இருப்பதால் எந்த அளவுக்கு நிர்வாகத்தில் குறைகள் மலிந்து கிடக்கின்றன என்பதை நாங்கள் அறிந்துகொள்வதற்கு ஓரளவுக்கு வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம். குறைபாடுகளைப்பற்றி இந்த மன்றத்திலேகூட பல உறுப்பினர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு கூட்டுறவு துறையின் பணி மக்களுடைய வாழ்வின் பல்வேறு அம்சங்களில் அதிகரித்து வருகிறது. ஒரு காலத்தில் கூட்டுறவுத் துறைக்கு தமிழ்நாட்டிலேதான் இந்தியாவிலேயே மிகப்பெருமளவில் சிறப்பான இடம் இருந்தது. அது மட்டுமல்ல. கூட்டுறவுத் துறையிலே நட்டம் இல்லை,



இலாபம் என்ற கணக்கும் ஒரு காலத்தில் காட்டப்பட்டது. அகில இந்தியாவிலேயே முதன்மை பெற்று விளங்கியது கும்பகோணம் கூட்டுறவு வங்கி என்று சொல்லி, அதற்கு பரிசுகள் கொடுத்ததை நாம் மறந்து விடுவதற்கில்லை. அப்போது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கோ. சு. மணி அவர்கள் அந்த வங்கிக்கு தலைவராக இருந்தார்கள். அதைப்போன்று கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் இந்தியாவிலேயே சிறப்பான பணியாற்றியது என்று முதல் பரிசு பெற்ற வரலாற்றை அமைச்சரவர்கள் மறந்திருக்க முடியாது. அந்த நிலை மாறி, தற்போது மத்திய வங்கிகளைப் போன்ற சில வங்கிகள் தவிர அநேகமாக அடிமட்டத்தில் இருக்கிற வங்கிகள், சொசைட்டிகள் எல்லாம் நட்டத்திலே நடக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் கூட மறுக்கமாட்டார்கள்.

(பிற்பகல் 1–10)

அதற்கு சிறந்த எடுத்துக்காட்டுத்தான் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பாபு கோவிந்தராஜன் அவர்கள் எடுத்துரைத்த ஊழல்களும் அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கங்களும் ஆகும். அதுவே ஒரு நல்ல சான்றாக இதற்கு விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மிக மிக நல்ல முறையில் மக்களுக்கு பணியாற்றவேண்டும், சேவை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரப்பட்ட, இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள், தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாகம் இல்லாத காரணத்தால் இன்றைக்கு எவ்வளவு கெட்ட பெயரை தமிழ் நாட்டிலே வாங்கியிருக்கிறது என்பதை நான் மீண்டும் சுட்டிக் காட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

மகாத்மா காந்தி அடிகள் கூட தன்னை ஒரு விவசாயி என்றோ, ஒரு நெசவாளி என்றோ சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்றத் துறைகளிலே விட்டு விட்டாலும் கூட, விவசாயத் துறையிலும், நெசவாளர் துறையிலும் கூட்டுறவுத் துறை எந்த அளவுக்கு மிகப் பெரிய பங்கை வகிக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். அந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் அப்படி நல்ல முறையில், விவசாயத்துறைக்கும், நெசவாளர் துறைக்கும் பயனளிக்கும் வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்றுதான் கூறமுடியும். நான் வேண்டுமானால் ஒரு சில ஆதாரங்களைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்.

கூட்டுறவுத் துறை பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் விவர குறிப்பிலே, சாதனைக் குறிப்பிலே பார்த்தாலும் கூட— இங்கே தந்திருக்கிற விவரங்கள் உண்மையாக இருந்தாலும், நாங்கள் சொல்வதும் உண்மைதான். ஆகவே, இதையும் அத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்

(திரு ஜே. எஸ். இராசு) [1983 ஏப்ரல் 2

கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக கிராம புறங்களில் விவசாயிகள் அதிகமாகத்தான் இருப்பார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி வானொலியிலும் டெலிவிஷனிலும் பேசியிருக்கிறார்கள். நாங்கள் அதை பல முறைக் கேட்டிருக்கிறோம். அப்படிப் பேசும்போது அவரே குறிப்பிட்டது போல 60, 70 சதவீதம் மக்கள் கிராமப் புறங்களிலே விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள்.

சம்பா பயிர் நடக்கூடிய தருணங்களில், அங்கே இருக்கக் கூடிய கூட்டுறவு வங்கி என்ன தருகிறது என்றால் ஐ. ஆர் 20 தேவையா, ஐ.ஆர் 8 தேவையா என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, விவசாயிக்கு கடன் தேவை என்பதை, உழவு நடவு செய்யும்போதுதான். ஆனால் அப்போதுதான் கடன் மனுவே கோரப்படுகிறது. கொடுத்த மனுவை பரிசீலிக்க ஒரு மாதம், மத்திய வங்கிக்குப் போக ஒரு மாதம், மத்திய வங்கியில் பரிசீலனை செய்ய ஒரு மாதம், கடன் தொகை சேங்ஷன் ஆகி திரும்பவும் சொசைட்டிகளுக்கு வருவதற்கு ஒரு மாதம், அப்புறம் பணம் இல்லாமல் பங்கு தொகை கேட்க ஒரு 10, 20 நாட்கள், இப்படி மனு வாங்கிப் போனதிலிருந்து, பணம் கைக்கு வந்துசேர்வதற்கு 4, 5 மாதங்கள் ஆனால் அதற்குள் பயிர் வளர்ந்து கதிர் விடுகிற நிலைமையில் அவன் அதை எப்படியும் பயன் படுத்த முடியாது. பூச்சி மருந்து கூட தெளிக்க முடியாது.

இப்படி எல்லாம் நடக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பார்களேயானால், அவருக்கு நான் தகுந்த சான்றுகளை இப்போதும் தர முடியும். அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வரும்போது ஒவ்வொரு சங்கமாக அழைத்துச் சென்று அவருக்குத் தேவையான சான்றுகளை நான் சரியாகத் தர முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இப்படி ரொம்ப லேட்டாக காலதாமதமாக கடன் வழங்குவதினால், விவசாயிகள் எந்த அளவுக்கு தங்களுடைய விவசாயத்தைப் பெருக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கும் காரணம் அங்கே எலக்டட் பாடி இல்லாததுதான். தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் இல்லாததுதான் என்று என்னால் நிச்சயமாகக் கூற முடியும்.

அடுத்து நெசவுத் தொழிலை எடுத்துக் கொண்டால், அண்மையிலே கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கிற துணிகள் அத்தனையும், கோவாப்டெக்ஸ் மூலமாக வாங்க வேண்டும் என்று பலர் இங்கே கேட்டார்கள். 1 கோடி ரூபாய் பெறுமான கட்டுத் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன என்று ஆரணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் ஜவுளிகள் தேங்கிக்கிடக்கின்றன என்று பலமுறை பலரும் இந்த அவையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 23] (திரு ஜே. எஸ். இராசு)

ராஜபாளையம், சத்திரப்பட்டி போன்ற இடங்களில் 2 கோடி ரூபாய் சங்கங்களுக்கு, சொசைட்டி தரவேண்டிய பாக்கியிருக்கிறது. பரமக்குடியில் 40 லட்சம் பாக்கி இருக்கிறது. தனியார்கள் பாக்கி வைத்தால், எவ்வளவு கெடுபிடி செய்து நாம் அதை வசூல் செய்கிறோம். அரசாங்கமே பாக்கி வைத்தால் அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. 17-4-1983 ஆம் நாளைய ஜனசக்தி தினசரியில், இதுபோன்ற முறைகேடுகளுக்கு காரணம் ஆளும் கட்சியினுடைய அட்டகாசம்தான் என்று எழுதியிருக்கிறார்கள். ஒருகால் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையோ அல்லது, அந்த பத்திரிகை ஆசிரியரையோ நீங்கள் கலந்து கேட்டால் விவரம் தெரியலாம்.

அடுத்து. கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்கள். அந்தத் துறையும் மிகப் பெரிய பொறுப்பை பெற்றிருக்கிறது. முதலிலே கூட்டுறவு பால் வினியோகச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து நேரிடையாக கடன் பெற்று வந்தது. இப்போது ஸ்பெஷல் ஆபிசர்கள் ரிஜிம் வந்ததற்குப் பின்னால், மத்திய கூட்டுறவு வங்கிகள்—சங்கங்கள் கிராமப்புற சங்கங்களுக்கு நேரிடையாக பணம் தருவதில்லை. ஏனென்று கேட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் சங்கங்களில் இருந்தபோது எங்களால் கொடுக்க முடிந்தது. இப்போது கொடுக்க முடியாது. கொடுப்பதற்கு விதிகளில் இடம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

நீங்கள் நேஷனலைஸ்டு வங்கியில் வாங்கலாம் வேறு இடங்
களில் வாங்கலாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அது எவ்வளவு
சிரமம் என்பதை இங்கே பேசிய எல்லோரும் சொல்லியிருக்
கிறார்கள். ஆகவே பழைய பிரகாரமே மத்திய வங்கி, கிராம
வங்கிகள், சங்கங்களுக்கு பால் மாடுகள் வாங்கக்கூடிய ஒரு
வசதியை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய விவசாய வங்கிகள் மூலமாக, சங்கங்கள் மூலமாக விதைகள் கொடுக்கிறார்கள். முளைக்காத விதைகளை நிறைய கொடுக்கிறார்கள், பருத்தி கொட்டை கூட வாங்கிப் போட்டு முளைக்காத பகுதிகளை நான் காட்டமுடியும், சோளம் முத்து சோளம் இப்படி தரம் அற்ற விதைகளை கொடுக்கிறார்கள். நான் கேலியாக சொல்வதாக நினைக்கக்கூடாது. நடை முறையை சொல்கிறேன். தகுந்த பட்டத்திலே தகுந்த விதைகளை கொடுப்பது இல்லை, பல பகுதிகளில். அதோடு மட்டும் அல்ல, எலி மருந்து கொடுக்கிறார்கள், அதை சாப்பிட்டும் எலிகள் சாகமாட்டேன் என்று சொல்கிறது. நிரூபிக்கவேண்டும் என்றால் இதை நான் எப்படி நிரூபிக்கமுடியும். என்னுடைய

(திரு ஜே. எஸ். இராசு) [1983 ஏப்ரல் 23

நண்பர் ஒருவர் எலி மருந்தை சாப்பிட்டு இன்னும் உயிரோடு இருக்கிறார். டெஸ்டு செய்து பார்த்தார். அந்த அளவுக்கு வீரியம் குறைந்த எலி மருந்துகளை நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்றால் எப்படி. வேறு கடைகளில் வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள். கடையில் வாங்கினாலும் அதுவும் எபக்ட் இல்லாமல் இருக்கிறது. ஆக ஆண்டுக்கு ஆண்டு புதிதாக உற்பத்தி ஆகிற வீரியம் உள்ள தரமான பூச்சி கொல்லி மருந்துகள், மற்ற மருந்துகளை தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் எல்லா கடன்களையும் நாங்கள் ரத்து செய்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கூட்டுறவு துறை பெரும்பாலும் கடன் வழங்கும் பணியில் இருக்கிறது. சாப்பாடு போடுகிறோம் வாங்கள் என்றால் ஒரு சோறு, ஒரு பருப்பு, இவ்வளவு குழம்பு ஒரு துளி மோர் கொடுத்தால் அதில் அர்த்தம் இல்லை. எல்லா கடனையும் ரத்து செய்கிறேன் என்றால் செய்யவேண்டும். சாப்பாடு போடுகிறார்கள் என்றால் எல்லாம் இருக்கும் என்று தான் ஜனங்கள் எதிர்பார்த்து வருவார்கள். நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். ஆனால் நீங்கள் ஓரளவுக்கு கிட்டத்தட்ட 193 கோடி ரூபாயை வஜா செய்து இருக்கிறீர்கள். நான் அதற்கு பாராட்டுகிறேன். அது அல்ல, ஆனால் அதற்கு பிறகு ஆட்சியில் கொடுத்த உறுதிமொழி மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களே என்ன உறுதிமொழி கொடுத்தார்கள் என்றால் நாங்கள் 5 ஆண்டு காலம் ஆளப்போகிறோம். அதற்குள் மிச்சத்தை நாங்கள் வஜா செய்துவிடுவோம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் ஒவ்வொரு வருட பட்ஜெட்டிலும் அதை எதிர்பார்க்கிறோம். இப்போது 3 ஆண்டுகள் முடியப்போகிறது இன்னும் 2 அண்டுகள் இருக்கிறது, நீங்கள் சொன்னதைப்போல், நாங்கள் கேட்கவில்லை, நீங்கள் சொன்னதை போல் இன்னும் உள்ள 2 வருட காலத்தில் மிச்சம் இருக்கும் 300 கோடி ரூபாய் தேறும் என்று கருதுகிறேன். அவைகளையும் நீங்கள் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் சட்டப்பிரகாரம் எனக்கு சட்டம் அவ்வளவு அதிகமாக தெரியாது ஆனால் நான் அறிந்த வரையில் இந்த கடனை எல்லாம் போய் ரொம்பவும் கம்பள் செய்து வீட்டில் ஜப்தி செய்து வீட்டில் இருக்கிறவர்களை எல்லாம் கொடுமைப்படுத்தி பொருட்களை எடுக்கும் காரியங்கள் இன்றைக்கும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பல பகுதிகளின் சான்றுகளை இங்கே படிக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த சான்றுகளை படிக்க வேண்டும்.



1983 ஏப்ரல் 23]

திரு. ஜே. எஸ். இராசு; மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, சான்றுகளை படிக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். உடுமலைப்பகுதி, சின்னவீரன்பட்டி பாலசுப்பிரமணியம் என்ற விவசாயினுடைய வீட்டில் கூட்டுறவுத் துறையில் 'வித் தி எல்ப் ஆப் போலீஸ்' ஜப்தி நடைபெற்று இருக்கிறது. பொருட்களை எடுத்துச்சென்று இருக்கிறார்கள். என்ன என்ன பொருட்கள் என்றால் ஸ்டீல் பீரோ எடுக்கப்பட்டிருக்கிறது. நரசிங்கபுரம், ரத்தினம் என்பவர் வீட்டில். . . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எப்போது, எந்த தேதி? என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரவேண்டும். அப்படி இல்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டும். நான் இதை சொல்வதற்கு காரணம் அரசு கட்டாயமான உத்தரவுகளை போட்டு இருக்கிறது. டிரவுட் என்ற பிரச்சனை வந்த பிறகு கிட்டத்தட்ட 4,5 மாத காலமாக எங்குமே அது பணக்கார விவசாயி ஆக இருந்தாலும் கூட பஞ்சத்தால் பாதிக்ப்பட்டு இருக்கிற காரணத்தால் எங்குமே ஜப்தி நடவடிக்கை செய்யக்கூடாது என்று கண்டிப்பான ஆணையை அரசு போட்டிருக்கிறது. எனவே தான் மாண்புமிகு உறுப்பினரிடம் ஆதாரத்தை தற்காப்பு முறையில் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாங்கம் சொல்கிற ஆணையை நான் மறுக்கவில்லை. ஆனால் நடைமுறையையும் நான் மறுப்பதற்கு தயாராக இல்லை. எந்தந்த ஊரில் நடபெற்றது என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேன், யார் யார் வீட்டில் என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேன். நானும் நாள் ஏடுகளில் எடுக்கிற குறிப்புகள் தான். சந்தர்ப்பவசத்தில் அந்த தேதியை நான் குறிக்கவில் ல. லைப்ரரி இருக்கிறது (குறுக்கீடு) நோ, நோ நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். தேதி எழுதாமல் மந்திரிகள் எழுதிய கடிதங்கள் என்னிடம் இருக்கிறது. ஆகவே நான் தேதியை கூறாதது பெரிய தவறாக இருக்கமுடியாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பானவர்கள், ஏதோ குற்றச்சாட்டை சொல்லவேண்டும் என்பதற்காக அவர்கள் பாட்டுக்கு சொல்லிக்கொண்டு இருப்பது நல்லது அல்ல. ஆதாரத்தை நீங்கள் அவைக்கு தரவேண்டும். அப்போதுதான் எங்களால் நடவடிக்கை எடுக்கமுடியும். பத்திரிகையைப் பார்த்தேன் அதை வைத்து பேசுகிறேன் என்று சொல்வது அதுவும் மாண்புமிகு உறுப்பினர் ராசு போன்ற பொறுப்புள்ள உறுப்பினருக்கு நல்லது அல்ல.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, சான்றுகள் அல்லது தடயங்களை கேட்கிறார்கள். நாள் ஏடுகளில் வந்ததை ஏற்கனவே இங்கே கோட் செய்து இருக்கிறோம். நாள் ஏடுகளில் வருவது எல்லாம் தவறும் அல்ல.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இது குறித்து முன்பே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். அது தவறு என்பதை அவைக்கு நான் ஏற்கனவே தெரிவித்து இருக்றேன். அதற்காகத் தான் நான் தெளிவாகச் சொல்கிறேன், நாள் ஏட்டில் வந்ததை நம்பி சொல்ல வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் இடத்தில் தக்க ஆதாரம் இருந்து சொல்வார்களானால் கண்டிப்பான நடவடிக்கையை அரசு எடுக்கும். காரணம் கிட்டத்தட்ட 4, 5 மாத காலத்திற்கு முன்பே எங்குமே ஜப்தி நடவடிக்கை எடுக்க கூடாது என்று கண்டிப்பான ஆணையை அரசு போட்டிருக்கிறது:

(பிற்பகல் 1–20)

அப்படி அதை மீறி ஜப்தி நடவடிக்கை என்று பத்திரிகைகளில் வருவதைப்பற்றி நாங்கள் விசாரித்தோம். அது உண்மையல்ல என்ற தகவல் அரசாங்கத்திற்கு ஆதாரமாக தெரிந்திருக்கிறது, அதனல்தான் நான் சொல்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: எனக்குக் கிடைத்தது அல்ல, பொறுப்பான தினமணி போன்ற இந்து போன்ற ஏடுகளில்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எம். எஸ். மாணிக்கம்): செய்தித்தாள்களில் வந்ததைக் பற்றிப் பேச வேண்டியதில்லை. உங்களிடம் ஆதாரம் இருந்தால் கொடுத்துவிட்டுப் பேசலாம். செய்தித்தாளை ஆதாரமாகக் காட்டவேண்டாம்.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் ஒரு ரோடு சரியாகப் போடப்படவில்லை, சலவழிக்கப்பட்ட பணத்திற்கு ரோடு போடப்படவில்லை என்று சொல்கிறோம். அந்த ரோட்டிலே 4 பர்லாங் என்ன பெயர்த்துக்கொண்டா வரமுடியும்? நாங்கள் பார்க்கிறோம், அந்த ஆதாரம் தான் காட்டமுடியும். கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் பேப்பரில் வந்திருக்கிறது. அதை இங்கே சொன்னார்கள், அது தப்பா? அப்படியென்றால் அதையும் நீக்குங்கள்.

திரு. துரைமுருகன்: தங்களுடைய தீர்ப்பில் நான் குறுக்கிடவில்லை, ஆனால் தவறான எண்ணத்திற்கு தங்கள் தீர்ப்பு வழிவகுத்துவிடுமோ என்றுதான் சொல்கிறேன். செய்தித்தாளிலே வந்ததையெல்லாம் இங்கே பேசக்கூடாது என்றால் ஒரு செய்தி என்றால் பத்திரிகையிலேதான் வரும், அதைத்தான் சொல்ல முடியும்.



மாண்புமிகு மாற்று தலைவர் (திரு எம். எஸ். மாணிக்கம்): செய்தி தாள்களில் வருவது நிருபர்கள், ஆசிரியர்கள் குறிப்பு. அந்த மாதிரி நீங்கள் இங்கே பேசுவதற்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டால் பேசுவதற்கு ஆட்சேபணையில்லை.

திரு ஜே. எஸ் இராசு: எவ்வளவோ இங்கே கோட் பண்ணுகிறோம், உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள்கூட ஒரு புத்தகத்தை இங்கே கோட் பண்ணி பேசினார். உடனே அந்த புத்தகத்தை எழுதியவரை கூப்பிட்டுக் கொண்டு வர முடியுமா? எங்களுக்கு டெய்லிஸ் இருக்கிறது. உங்களுக்கு ஏகப்பட்ட இலாகா இருக்கிறது. நீங்கள் பரிசீலனை செய்து பார்த்து நான் சொல்லியது ஒருக்கால் முறையற்றது அல்லது நடக்காதது என்றால் ஏற்றுக்கொள்ளத் தயார். செய்தியைப் பேசக்கூடாது என்றால் ஆனால் எந்தச் செய்தியையும் இங்கே பேசமுடியாது. புத்தகத்திலே இருப்பதைச் சொன்னால் புத்தகத்தை எழுதியது உண்மைதானா, அவன் உயிரோடு இருக்கிறானா என்று பார்க்கமுடியுமா? உங்களுக்கு சி.ஐ.டி.கள் இருக்கிறார்கள், தொலைபேசி இருக்கிறது, லைட்னிங் கால் போடலாம், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் இருக்கிறார்' டி.ஆர்:ஓ. இருக்கிறார். ஜாயின்ட் டைரக்டர் இருக்கிறார், ஜாயிண்ட்ரிஜிஸ்திரார் இருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

You can contact them immediately and c llect information from those corners. அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் நீங்கள் ஒரு ஆண்டு என்று சொல்கிறீர்கள், ஆனால் நியாயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், விரைவாக அதற்குள்ளாகவே அனைத்துக் கடன்களையும் ரத்து செய்து தமிழ்நாடு விவசாயிகளுக்கு நல்ல முறையிலே உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பல சங்கங்களுக்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதற்கு நீட்டிப்பு வேண்டுமென்று கோரிய இந்தச் சட்டமுன்வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் கரு துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசுகின்றபோது காலதாமதமின்றி எலக்சன் பாடி கூட்டுறவு அமைப்புகளுக்கு வரவேண்டுமென்ற தன்னுடைய கருத்தை, காரணங்கள் சிலவற்றைச் சொல்லி வலியுறுத்திப் பேசினர். அதிலே என்.சி.டி.சி. பொறுத்தவரைக்கும் மத்திய அரசு அமைப்பான என்.சி.டி.சி. கொடுக்கக்கூடிய உதவியில் பத்து சதவீதம் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தினாலே தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவு அமைப்புகள் பயன்படுத்தவில்லையென்றும், மராட்டிய மாநிலம் மிகையாகப் பயன் பெற்றிருக்கிறது என்றும் சொன்னார்கள். அது சரியானதல்ல என்பதற்காகச் சொல்கிறேன். என்.சி.டி.சி. பொறுத்தவரைக்கும்

மராட்டிய மாநிலமும் தமிழகமும் பாரதத்தின் ஏனைய மாநிலங்களைவிட கூட்டுறவு இயக்கத்தில் வளர்ந்துவிட்ட மாநிலங்கள் என்ற காரணத்தினால் என்.சி.டி.சி.யினுடைய உதவி இந்த அளவுக்கு தரமுடியாது என்ற ஒரு முடிவை எடுத்து அதிகப்படியான உதவியை கூட்டுறவு இயக்கம் இன்னும் வளராத மாநிலங்கள் என்று சில மாநிலங்களைக் கணித்து அந்த மாநிலங்களுக்கு தருகிற அணுகுமுறையைக் கடந்த 3 ஆண்டுக் காலமாக மைய அரசு, என்.சி.டி.சி. கடைபிடித்து வருகிறது. அதன் காரணமாக நம் தற்போது நமது மாநிலத்திற்கு வேண்டிய பதவிகளை எல்லாம் ஐ.ஆர்.டி.பி. மூலமாக, தற்போது நபார்டு என்று இருக்கிற அமைப்பின் மூலமாக அதிகப்படியாக வாங்கவேண்டிய முயற்சியிலே மாநில அரசு ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் பேசுகிறபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் அரசு சில சலுகைகளை அளித்த போதிலும் அதிகாரிகள் அவற்றை ஈடேற்றாமல் இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டினார்கள். சென்ற ஆண்டு என்னுடைய பட்ஜெட் மசோதாவில் இதுபற்றி சொன்னார்கள். 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் பல இடங்களில் பெறவில்லை என்பதைக் கூட எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கும் இது குறித்து தெளிவிக்கப்பட்ட பிறகு, இந்த துறையில் மட்டுமல்ல, எல்லா துறைகளிலும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் 18 சதவீதம் இடம் பணிகளிலே அவர்களுக்கு கட்டாயம் கொடுக்க வேண்டிய முறையில் அனைத்துத் துறைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு இடப்பட்ட அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினரின் எண்ணம் இந்தத் துறையிலே ஈடேறியிருக்கிறது என்பதை சொல்ல விரும்புகிறேன். பாரதத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலேதான் முதன் முதலாக தாழ்த்தப்பட்ட மக்கள், கூட்டுறவு அமைப்புகளில் அங்கத்தினர்களாக வர வேண்டும்; அதற்கு அவர்கள் கட்டவேண்டிய சந்தாவான 100 ரூபாய் கட்டமுடியாத ஏழ்மை நிலையிலே அவர்கள் இருக்கிறதால் அந்த பணத்தைக் கூட அரசே தரவேண்டுமென்ற முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்கள். இது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இந்த உத்தரவில்லை. அந்த அடிப்படையிலே 40 ஆயிரம் பேரை இதுவரையில் அங்கத்தினர்களாக சேர்த்திருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் தாழ்த்தப்பட்ட மக்கள், உழவர் பெருமக்கள்' எந்த கிராமத்தில் இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாக சேர்வதற்கு அரசே மானியமாக பணத்தை தரவேண்டும் என்பதை இந்த அரசு தொடர்ந்து கடைபிடிக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் கிராமப் புறத்திலே வீடு கட்ட வழிவகை செய்யவில்லை என்று சொன்னார்கள். வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில் புதிய கூட்டுறவுச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, அதையொட்டி சம்பந்தப்பட்டத் துறை தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல சில கூட்டுறவுச் சங்கங்கள் நீதிமன்றங்



களின் உத்தரவைக் கூட மீறி பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களை மீண்டும் பணியில் சேர்க்காமல் இருப்பதாகக் கூடச் சொன்னார்கள். அதிலே இருக்கிற பிரச்னை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற போது தனி அலுவலர்கள், தனி அதிகாரிகள் தமிழகத்திலே உள்ள அனைத்து கூட்டுறவு அமைப்புகளிலும் இருப்பதைப் போல ஒரு எண்ணம் உருவானதைப் போல பேசினார்கள். உண்மை நிலை அதுவல்ல என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர் ராசு அவர்கள் பேசுகின்றபோது ஆரம்பத்திலே யிருந்து, இறுதி வரைக்கும் கிட்டத்தட்ட 75-ம் ஆண்டிற்கு முன்னாலேயிருந்த நிலையையும் அதற்கு பின்னாலே இருந்த நிலையையும் ஒப்பிட்டு அவர்கள் சிலவற்றை பேசினார்கள். மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் பேசுகின்றபோது சில வற்றைச் சொன்னார்கள். நான் அந்த பாராட்டக் கூட கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், சில புள்ளிவிவரங்களை எடுத்துச் சொல்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கூட்டுறவு நிர்வாகத்திற்கு இல்லாமல் இருக்கிறபோது என்னென்ன குறை பாடுகளுக்கு வழிவகுக்கிறது என்பதை ஆதாரங்களின் அடிப் படையில் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு பதில் அளிக்கிற போது அரசே காவல்துறை சி.ஐ.டி. மூலமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைச் சொன்னேன். மாண்புமிகு ராசு அவர்கள் பேசுகின்ற போது 75-க்கு முன்னால் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் லாப நிலை இருந்தனவென்றும், ஆனால் அதற்கு பின்னால் நஷ்ட நிலைக்கு சென்று விட்டன என்றும், அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியாததல்ல என்று அழுத்துச் சொன்னார்கள். எனவே இதற்கு பதில் என்னையும் அளிக்க கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 27 ஹோல்சேல் ஸ்டோர்ஸ் இன் தி ஸ்டேட்: அதிலே இந்த ஆட்சி பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் 21 அமைப்புகள் பல லட்சம் ரூபாய் நஷ்டத்திலே இயங்கி வந்தன. அந்த நிலை மாறி இன்றைக்கு 27 அமைப்புகளிலே 22 அமைப்புகள் லாப நிலைக்கு வந்திருக்கின்றன.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்த ஆட்சி வந்த பிறகு டி. யூ. சி. எஸ். ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டாலே கூட ரூ. 55 இலட்சம் நட்டம் என்று இருந்த நிலைமை மாறி இன்று அந்த அக்குமுலேட்டட் நஷ்டம் வைப் அவுட் ஆகி, இலாபம் ரூ. 34 இலட்சம் என்ற நிலைக்கு வந்திருக்கிறது. இதை உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். இதைச் சொல்கிற காரணத்தால், ஏதோ கூட்டுறவு அமைப்பிலே தவறுகளே இல்லையென்று நான் சொல்ல [illegible] காரணமும் இருக்கிறது' கிட்டத்தட்ட 400

கூட்டுறவு அமைப்புகளுக்குத் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 20,000 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1972-73-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு தான் With borrowed life இன்னும் நீட்டிக்கப்பட்டு, நீட்டிக்கப்பட்டு அவர்கள் அந்தச் சங்கங்களின் பொறுப்பிலே இருந்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபொழுது கூட, மாண்புமிகு பெரியவர் திரு. அழகர்சாமி அவர்கள் பேசுகின்றபொழுதுகூட. சில சங்கங்கள் இடுகின்ற உத்தரவுகளைக்கூட நடைமுறைப்படுத்தவில்லை சொன்னார்கள். அத்தகைய சங்கங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, நேரிடையாக இந்தத் துறையின் பொறுப்பிலே இருக்கிற கிட்டத்தட்ட 5,000 சங்கங்கள், 1972-ம் ஆண்டிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களைக் கொண்டு, நீட்டிக்கப்பட்ட ஆயுளோடு 12 ஆண்டு காலம் அவர்கள் பதவியிலே இருந்து வருகிறார்கள். தனி அலுவலர்கள் இருப்பது 400 பேர்கள். ஆனால்- 5'000 சங்கங்களில் உள்ள குழுக்கள் 1972-ஆம் ஆண்டுதேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள். with borrowed life they are still continuing in office. என்ன காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் அறிவார்கள் எனக் கருதுகிறேன்,

மாண்புமிகு திரு. கோ. சு. மணி அவர்களைக் குறிப்பிட்டு எத்தனை செம்மையாக அவர் பொறுப்பில் இருந்தபோது பணி நிறைவேறியது. தற்போது என்ன நிலைமை என்று சொன்னரார்கள். நான் கூட்டுறவுத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு. இதையெல்லாம் நான் சட்டமன்றத்திலே பேசியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் எனக்கும் தெரியும் என்று சொன்ன காரணத்திற்காக, உண்மையை விளக்க வேண்டியது என்னுடைய கடமை என்பதற்காக சொல்கிறேன், மாண்புமிகுஉறுப்பினர் திரு, கோ சு. மணி அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு இன்னும். நிலுவையில் இருக்கிறது. சில இலட்சங்கள் தவறாக அங்கு நடந்தது என்பது கூட மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். வழக்கு விசாரணையில் இருக்கிற காரணத்தால், ஒருவேளை, இராசு அவர்களுக்கு அது தெரியாமல்இருக்கக்கூடும் என்பதற்காக அவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். Bharathi Cell has detected it. 1976 ஆம் ஆண்டு வரை அது தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால்' 1976-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அந்தக் குழு கண்டு பிடித்ததன் அடிப்படையிலே, இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்களுடைய கவனத்திற்குக், கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் பேசுகின்ற பொழுது, முளைக்காத விதைகளைச் சங்கங்கள் மூலம் விநியோகிப்பதுடன், ஆளே உண்டாலுங்கூட உயிரைப் பறிக்காத எலி மருந்துகளை சங்கங்கள் மூலம் தருவதாகச் சொன்னார்கள். இதற்கெல்லாம் சற்று ஆதாரங்களை த் தரவேண்டும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படி தனியாக. கிட்டத்தட்ட, 200, 300 சங்கங்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்தச் சங்கங்கள் எல்லாம் நான் ஏற்கனவே சொன்னதைப்போல, 5,000-க்கும் மேற்பட்ட சங்கங்கள் 1972-ஆம் ஆண்டு நடந்த தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு 12 ஆண்டுக்காலமாக, இன்னும் நீட்டிக்கப்பட்டு. அவற்றினுடைய ஆயுளைப் பெற்றிருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினா திரு. இராசுவினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன்.

நான் பாரதி செல், என்ன என்னகண்டு பிடித்தது என்பதற்கு ஒரு பெரிய கட்டையே வைத்திருக்கிறேன். இருந்தாலுங்கூட அதற்குள் செல்லவில்லை. ஆனால் இந்த ஆட்சியினுடைய எண்ணமெல்லாம், கூட்டுறவைப் பொறுத்த வரைக்கும், This is a movement by, for and of the people. என்பது. அந்தக் கொள்கையை உடையது அரசு. கூட்டுறவுத் துறையிலே' கூட்டுறவு இயக்கத்திலே, அரசியல் தலையீடும் இருக்கக் கூடாது. ஆதிக்க சக்திகளின் தலையீடும் இருக்கக் கூடாது என்ற நோக்கோடு செயல்பட வேண்டுமென்றுதான், கூட்டுறவுச் சட்டத்தையே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, புதுமையான முறையிலே, பல மாற்றங்களை அனைத்துக் கட்சிகளுடைய மேலவை, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு குழுவினிடைய உதவியோடு பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வந்து அங்குள்ள குறைகள், நிறைகள் என்ன என்பதை ஆய்ந்து, நிறைகளை ஏற்று, செய்து, தற்போது புதியதொரு சட்டத்தை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

பாரதி செல்லிலே இவ்வளவு குற்றச்சாட்டுகளைக் கண்டு பிடித்ததோடு மட்டுமல்லாமல், இந்த ஆட்சி பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகுங்கூட, கிட்டத்தட்ட, 30, 32 கூட்டுறவு நுகர்வோர் அங்காடிகளில் தவறுகள் கண்டுபிடித்துள்ளோம். குறிப்பாகப் பொருள்களை வாங்குகிறபொழுது தரமான பொருள்களை வாங்குவதில்லை. அப்படி தரமான பொருள்களை வாங்குகிறபொழுதுகூட அதிகமான விலை கொடுத்து வாங்கிவிடுகிறார்கள். இடைத் தரகர்களிடமிருந்து வாங்கி விடுகிறார்கள். கூட்டுறவு யக்கமானது உற்பத்தியாளர் களிமிருந்து பொருள்களை வாங்க வேண்டுமென்பதுதான் அந்த இயக்கத்தினுடைய நோக்கம். அதை விட்டு விட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பொருளை வாங்காமல், இடைத் தரகர்களிடமிருந்து பொருளை வாங்குகின்றபொழுது அந்த உற்பத்தியாளர்களுக்கும் நல்ல விலை கிடைப்பதில்லை,

அதைப்போலவே வாங்கி உண்ணுகின்ற நுகர்வோர்களுக்கும் நியாயமான விலையில் பொருள்கள் கிடைப்பதில்லை என்ற ஒரு இழி நிலை ஏற்படுகிறது. இதைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இருக்கின்ற சட்டத்தின் விதிகளில் சந்து பொந்துகள் நிறைய இருக்கின்ற காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்து இன்றைக்கு கிட்டத்தட்ட 70, 80 நடவடிக்கைகளை இதுகாறும் எடுத்தபோதிலுங்கூட, நீதி மன்றத்திலே சென்று அவர்கள் தப்பித்துக்கொள்ளக்கூடிய ஒரு அளவிற்கு அது, தனி அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது நான் ஏற்கனவே சொன்னதைப்போல, ஐயாயிரம் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற 72-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருந்தாலும்சரி, ஏனைய பணியாளர்களாக இருந்தாலும் சரி, ஸ்டாக் டெஃபிசிட் என்ற போர்வையிலே மிஸ்அப்ரோபிரியேஷன் செய்துவிட முடிகிறது. கொள்ளையடித்து விடுகிறார்கள். கையாடல்செய்துவிடுகிறார்கள். பொருளை எடுத்து விடுகிறார்கள், அதை ஸ்டாக் டெபிசிட் என்று எழுதிவிடுகிறார்கள். அதன்மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப் போனால், விதியிலே சட்டத்திலேக் சந்து பொந்துகள் இருந்த காரணத்தால் தப்பித்துக் கொள்ள கூடிய நிலை இருந்தது.

அதையெல்லாம் மாற்றியமைக்கத்தான் தற்பொழுது புதிய சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தபுதியசட்டத்திலே the Poroducers and the consumers should not be allowed to be eaten away by the Intermeliarses. என்ற முறையிலேதான் சட்டத்தை முழுமையாக நாம் மாற்றியிருக்கிறோம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது சட்டத்தில் தான் உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டும் தான் நுகர்பொருட்களை வாங்க வேண்டும்; இடைத் தரகர்களிடமிருந்து வாங்கக் கூடாது; அதுவும்கூட வாங்குகின்ற பொருளும் அக்மார்க் ஐ. எஸ். ஐ. போன்ற தரம் குறித்துக் காட்டப்படுகின்ற சீலோடு இருக்க வேண்டுமென்று ஒரு சட்ட ரீதியான ஒரு ஷரத்தைக்கூட இந்தப் புதிய சட்டத்திலே நாம் தற்போது கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், பல ஆண்டுக்காலமாக தவறு செய்கின்ற அதிகாரிகளின்மீது, பணியாளர்கள் மீது அல்லதுதேர்ந்தெடுக்கப் பட்ட கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமேயானால், தப்பித்துக் கொள்வதற்கு இருந்த சட்டம், தற்போது நடைமுறையிலே இருந்து வந்த சட்டம் இடம் வகுத்து விட்டது; அதைப் போக்குவதற்காக தற்போது ஒரு குறை நடந்தது. மோசடி நடந்து விட்டது என்றால் ஆடிட் செய்ய வேண்டும்: இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டும்: என்கொயரி பண்ண வேண்டும். இதற்கெல்லாம் கால நிர்ணயம் பழைய சட்டத்திலே இல்லை. ஓராண்டு, இரண்டாண்டு அல்ல, பத்தாண்டுக் காலம் கூட, பல குற்றச்சாட்டுகளைக் கொடுத்த பிறகு, 71-ஆம் ஆண்டு, 69-ஆம்



ஆண்டு கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களேகூட இன்னமும் முடிவுறாத நிலையிலேயே இருக்கின்றன. காரணம், எண் 65 என்கொயரி என்று போட்டு விடுவார்கள். பிறகு இன்வெஸ்டிகேஷன் என்று போடுவார்கள். ஆடிட் என்று போடுவார்கள். ஆனால் பல ஆண்டுகளாக அது முடியாத நிலை. இதனால் குற்றவாளிகள் இடையிலே தப்பித்து விடுகிறார்கள் அல்லது லிமிடேஷன் ஆக்ட் பிரகாரம்கூடத் தப்பித்து விடுகிறார்கள். இந்த நிலையிலே, இருந்த சட்டத்திலே, கடந்த சட்டத்திலே இருந்த சந்து பொந்துகள் காரணமாக இருந்தன. இந்தியா விலேயே எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு நமது சட்டத்தில்தான், தற்பொழுது அண்மையில் நிறைவேற்றிய சட்டத்தின் மூலம், ஆடிட் என்பதை மூன்று மாதங்களுக்குள் முடித்தாக வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறோம் என்கொயரியை மூன்று மாதங்களில் முடித்தாக வேண்டும்; இன்வெஸ்டிகேஷனை மூன்று மாதங்களிலே முடித்தாக வேண்டும் அதிகாரிகள் அவர்கள் இஷ்டம் போல காலத்தை நீட்டித்து குற்றவாளிகளோடு உடந்தையாக இருந்து அவர்கள் தப்பிக்க வழி வகுத்து விடக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் இந்தப் புதிய சட்டத்திலே இந்த மாற்றங்களையெல்லாம் நாம் தற்பொழுது கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தை நாம் அனைவருக்கும் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தை நாம் ஈடேற்றுகின்ற பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுவதைப்போல கூட்டுறவு இயக்கத்தில் தவறு செய்யவேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள் கூட வரமுடியாத நிலைகூட ஏற்படும். அதுமட்டுமல்ல, இந்தப் புதிய சட்டத்தில் அரசியல்வாதிகள் என்னதான் நினைத்தாலும் தலையிட முடியாத அளவிற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டுவப்பரட்டிருக்கின்றன. மற்ற எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு மக்களால், மக்களுடைய மக்களுக்காக என்று இருக்கின்ற இந்த இயக்கம், நலிந்தவர்களுக்காக உள்ள இயக்கம் என்று பண்டித நேரு அவர்கள் 1958-லே இந்த இயக்கம் வளர மைய அரசினுடைய, ரிசர்வ் வங்கியினுடைய, மாநில அரசுகளினுடைய அரவணைப்புத் தேவை என்பதற்குச் சொன்ன காரணத்தை உண்மையிலேயே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமேயானால் இந்தச் சட்டத் திருத்தங்கள் தேவை என்ற முறையிலே தான் இந்த திருத்தங்களை நாம் தற்பொழுது கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நாம் தேர்தலை நடத்துகின்றபொழுது இந்த இயக்கத்தில் அரசியல்வாதிகளினுடைய தலையீடு வர முடியாது; வசதி படைத்தவர்களினுடைய தலையீடு வர முடியாது. தவறு செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு யாராவது இந்த இயக்கத்திற்கு வருவார்களேயானால் 162 என்று புதிதாகக் கொண்டு வந்திருக்கின்ற பிரிவின்கீழ் கடுமையான கிரிமினல் குற்றங்களாகக் கருதப்பட்டு சிறைத் தண்டனையும் அவர்களுக்கு ளிக்கக்கூடிய அளவிற்கு பல வழிவகைகள் செய்யப்பட்டிருக் கின்ற காரணத்தினால் தூய உள்ளம் படைத்தவர்கள், நல்லவர்கள், கூட்டுறவாளர்கள் இந்தச் சங்கத்திற்கு வர

முடியுமே தவிர, இந்த அமைப்புகளுக்கு வர முடியுமேயொழிய ஊழல் புரியும் நோக்கோடு யாருமே இந்த இயக்கத்திற்குள் நுழைய முடியாத அளவிற்கு இந்தியாவிற்கே முன்மாதிரியாக ஒரு சட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

(பிற்பகல் 1—40)

எனவே மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இந்தச்சட்டத்தைப் பொறுத்த வரைக்கும், நான் தனி அதிகாரிகளுக்கு நீட்டிப்பு கேட்பதற்குக் காரணம் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம். புதிய சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். 1963-ஆம் ஆண்டு புதிய சட்டம் வந்தபோது கிட்டத்தட்ட 3 ஆண்டுக்காலம் ஆயிற்று, அதனுடைய rules to be framed ஆனால் அந்த நிலை இருக்கக்கூடாது என்பதற்காக, பொறுக்குக்குழு உறுப்பினர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் வழக்கமாக விதிகள் இயற்றப்படுவதில்லை என்றாலும்கூட இந்த இயக்கம் நலிந்த பிரிவினருக்கு நலன் ஈட்டக் கூடிய ஒரு இயக்கமாக இருக்கவேண்டுமென்ற நோக்கோடு இந்த அரசு செயல்படுகிறது அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த அங்கத்தினர்களுடைய ஆலோசனையைப் பெற்று' சட்டத்தையொட்டித்தான் விதிகள் இருக்கவேண்டும். விதிகளையும், சட்டத்தையும் ஒட்டித் தான் பை-லாஸ் இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த விதிகளை அமைக்கவேண்டுமென்று நான் ஏற்கனவே முடிவெடுத்து, அதை அவைக்கு நான் அறிவித்திருக்கிறேன். அந்த விதிகள் கூட கிட்டத்தட்ட முடியும் நிலையை எட்டியிருக்கிறது. 28, 29-ஆம் தேதி வாக்கில் மாண்புமிகு பொறுக்குக்குழு உறுப்பினர்கள் இசைவார்களேயானால், அவர்களுடைய ஆலோசனையோடு, இந்த விதிகளைக் கூட இறுதிக் கட்டத்தில் ஒரு முடிவிற்குக் கொண்டு வரமுடியும் என்ற முயற்சியில் எல்லாவற்றையும், நான் நீடித்திருக்கிறேன். 3 மாத காலம் நான் கேட்டேன். ஆனால் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் காலத்திலே, கடந்த 15 தினங்களில் விதிகள் ஏராளமாக இருந்த போதிலும், 63-வது ஆண்டு சட்டத்தினுடைய விதிகளை முடிக்க 3 4 ஆண்டுகள் ஆனபோதிலுங்கூட, நாங்கள் ஒரு மாத காலத்திற்குள் தற்போது இவற்றையெல்லாம் ஒரு முடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் நாம் தற்போது தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டியும்கூட இந்தச் சட்டம் செல்ல வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதியை விரைவில் பெற முடியும் என்ற ஒரு நம்பிக்கை அரசிற்கு இருக்கிறது. அதையொட்டித்தான் offical amendment ஆகக்கூட, பல உறுப்பினர்கள் ஏற்கனவே பேசும் போது, ஓராண்டுக்காலம் அதிகப்படியான காலம், 6 மாத காலம் போதும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு பொன்னுரங்கம் கூட ஒரு அமெண்ட்மெண்டு கொடுத்திருக்கிறார். மாண்புமிகு சோ. அழகர்சாமி அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். மாண்புமிகு ஹேமச்சந்திரன் கூட சொன்னார்கள். டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்ற போது கூட, துரிதமாக தேர்தலை நடத்தவேண்டுமென்று



சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் விரைவாக தமிழகத்தில் கூட்டுறவு இயக்கங்களுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்றும், மக்களுடைய இயக்கமாக இந்த இயக்கம் அமைய வேண்டுமென்ற முறையிலே இதை நாம் காட்டியாக வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். அதையொட்டி ஒரு official amendment கொடுக்கப்பட்டிருக்கிறது அதிலே ஓராண்டு காலம் என்பதை 6 மாத காலம் என்ற சட்ட இருத்தத்தினை கொடுத்திருக்கிறேன் என்பதனை நான் அவைக்கு தற்போது தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை I want to move theoffical amendment standing in my name.

திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கின்றபோது 40,000 உறுப்பினர்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எந்த முறைப்படி நடப்பதைஎன்பதைஅறிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, தாங்கள் சட்டம்கொடுத்தது, அமல் நடத்தப்பட்டிருக்கிறது. 18 சதவீதம் என்று சொன்னீர்கள். 1976 ஆம் ஆண்டு வரையில், சென்ட்ரல் கோ—ஆப்பரேடிவ் ஆக இருக்கின்ற அந்த மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருந்தாலும் சரி, பாங்குகளாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே எந்த இடத்திலும் அவர்களுடைய விகிதாச்சாரம் கொடுக்கப்படுவதில்லை என்பது ஒன்று. 1976-லிருந்து இன்று வரையிலும் கூட, சரியாகச் செய்யவில்லை என்பது இரண்டு. மூன்றாவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள் கணக்குப் பிரகாரம், இந்த பட்ஜெட்டில் 12.47 சதவிகிதம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. ஆனால் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக பார்த்தீர் களேயானால், Qualified candidates are available among Scheduled Castes and Scheduled Tribes. என்று அவர்களுடைய ரிப்போர்ட்டும் வருகிறது. ஆகவே எந்த வகையிலேயும், அரசாங்கம் குறிப்பிட்டு, ஒத்துக்கொண்ட 18 சதவிகிதம் கொடுக்கப் படவில்லை, என்பது ஒன்று. மற்றொன்று 40,000 பேர் என்று சொன்னீர்கள். அதை எந்த முறையில் எடுக்கிறீர்கள்? சில அதிகாரிகளைச் சேர்க்கிறீர்கள். சில அதிகாரிகள் சேர்க்கப்படவில்லை என்ற நிலைமையை விளக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களைப் பொறுத்தவரைக்கும், அனைத்து துறைகளிலும் 18 சதவிகிதம் அவர்களுக்கு வேலைகொடுக்க வேண்டுமென்பதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற உத்தரவிடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மாண்புமிகுஉறுப்பினர் அவர்கள் சொன்னதைப் சுட்டிக்காட்டினார்கள். 18 பேர்கள், 1976-ஆம் ஆண்டைச் அளவிற்குத்தான் இருந்திருக்கிறது. சதவிகிதம் என்ற

அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் 18 சதவிகிதம், அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இலக்கை எய்துகிற வகையில் அதை நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: கூட்டுறவுத் துறையிலே 18 சதவீதம் அல்ல. நம்முடைய அரசாங்கத்தின் குறிப்பிலே ஆதிதிராவிடர் நலத்துறையிலே சொன்னபோது, 12.4 சதவீதம் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய குறை எல்லாம் கூட்டுறவுத் துறையின் மூலமாக அவர்களுக்கு அமுல்படுத்தப்படவில்லைஎன்பது தான் என்னுடைய எண்ணம்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல சென்ற ஆண்டே இந்த உத்தரவையிட்டு எங்கெங்கு 18 சதவீதம் இன்னும் முற்றுறாமல் இருக்கிறதோ அதை மாற்றக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லி, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது ஆனால் இந்த 40,000 என்பது தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கூட்டுறவு சங்கங்களிலே குறிப்பாக, கிட்டத்தட்ட 400, 450 வரை இருக்கிற கிராமக் கடன் கூட்டுறவு வழங்குச் சங்கங்களில் அவர்கள் அனைவரும் அங்கத்தினர்களாக சேர வேண்டுமென்று உத்தரவிட்டு. மாவட்ட அளவிலே வட்ட அளவிலே இதை நிறைவேற்ற உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே 40 ஆயிரம் இதுகாறும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அது தொடரப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கத்தினர்களாக எந்தச் சங்கத்திலேயும் சேரவில்லை என்ற குறையே இருக்கக்கூடாது என்ற அளவிற்கு அதை நிறைவேற்றுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அரசைப் பொறுத்த வரைக்கும் கூட்டுறவு இயக்கத்திற்கு தேர்தல் துரிதமாக வரவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய தலையாய கொள்கை. நலிந்த பிரிவு மக்களுக்கு நன்மை கிட்டவேண்டுமென்ற முறையிலே அரசியல் தலையீடுகளில் இருந்து கிராமப்புற பொருளாதாரம் மீட்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் ஆதிக்கச் சக்திகளின் பிடியிலிருந்து நலிந்த பிரிவினர் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் விரைவிலே தேர்தலைக் கொண்டுவர முடிவு செய்து இன்னும் 6 மாத காலத்தில் கூட்டுறவு இயக்கத்திற்கு தேர்தல்களை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு ஈடேற்றுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் ...ங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட ...ன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். ...9/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

Mr DEPUTY SPEAKR The question is that clause 2 do stand part of the Bil

HON THIRU C. PONNAIYAN Sir move the amendmen, standing in my name

In Clause 2 for the words eight years substitute the words 7 years and six months.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய திருத்தம் ஏற்கப்பட்டுள்ள காரணத்தால் திரு. பொன்னுரங்கம் அவர்கள் திருத்தம் தேவையில்லை.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1983) திருத்தப் பெற்றப்படி நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 26-4-1983 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் [illegible] மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்;

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

262. ஏற்கனவே உள்துறையினால் வெளியிடப்பெற்ற பல்வேறு எண்களைக் கொண்ட சில அறிவிக்கைகளை ரத்து செய்வது சம்பந்தமாக உள்துறையின் (போக்குவரத்து—1) 28-12—1982-ஆம் தேதியிடப்பெற்ற 3219-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் (பற்றது).

263. ஏற்கனவே உள்துறையினால் வெளியிடப்பட்ட பல்வேறு எண்களைக் கொண்ட சில அறிவிக்கைகளை ரத்து செய்வது சம்பந்தமாக உள்துறையின் 28-12-1982—ஆம் தேதியிடப்பெற்ற 3222 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

204. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27-8-1969-ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி) பேரவையில் வைக்கப்பெறுகிறது.

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்

31-3-1981—ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. மாண்புமிகு திரு ச இராமச்சந்திரன்

31-3-1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு எம். செல்லமுத்து
2. ,, க. பாலசுப்பிரமணியன்
3. ,, தா. வீராசாமி
4. ,, மா. சுப்பிரமணியன்
5. ,, செ. இராமலிங்கம்
6. மு. ப. முனுசாமி
7. ,, எம். ஆர். கோவேந்தன்
8. ,, நா. பழனிவேல்



பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

31-3-1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர் —தொடர்ச்சி

9. ,, ஜே. ஹேமச்சந்திரன்
10. ,, வி. பாலகிருஷ்ணன்
11. ,, பி. என். பரமசிவகவுண்டர்
12. ,, பி. கந்தசாமி
13. ,, ஜீ. மூர்த்தி
14. ,, ஜே. எஸ். இராசு
15. ,, ஆர். சுந்தரமூர்த்தி
16. ,, டி. மணி
17. ,, பெ. கலியமூர்த்தி
18. ,, திருமதி தா. இராசாம்பாள்
19. திரு. கே. தனக்கோடித்தேவர்
20. ,, எம். சின்னசாமி
21. ,, நன்னிலம் அ. கலையரசன்
22. ,, என். சங்கரய்யா
23. ,, பெ. திருமாறன்
24. ,, எஸ். என். இராமசாமி
25. ,, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்
26. ,, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
27. ,, செ. சிவசாமி
28. ,, சோ. அழகர்சாமி
29. ,, கே. ஆர். சுந்தரம்
30. ,, மு. அப்பாதுரை.
31. ,, என். வரதராஜன்
32. ,, ரா. கிருஷ்ணன்
33. ,, தி. கா. நல்லப்பன்
34. ,, சி. சிவப்பிரகாசம்
35. ,, ஏ. பாலுச்சாமி

205. 1982-83 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கைக்கான (ஏழாவது சட்டமன்றப் பேரவை) இணைப்பு

206. பேரவையில் முதல் அமைச்சர் ஆற்றிய உரை [illegible] சம்பந்தமாக மீது [illegible] நாட்ட[illegible]ப்பெற்றுள்ள [illegible] பிரச்சனை மற்றும் அதன் பேரவையில் எழுப்ப பெற்ற ஒழுங்கு பிரச்சனை [illegible] பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கிய தீர்ப்புகள் பற்றிய, 24-3-1983, 30-3-1983 மற்றும் 5-4-1983 ஆகிய

## இணைப்பு II

(139 ம்பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 854 க்கான விடையைக் காண்க.)

| [illegible] துறை (1) | சேர்க்கப்பெற்ற தாழ்த்தப் பட்ட மாணவர்கள். (2) | சேர்க்கப்பெற்ற பழங்குடி மாணவர்கள். (3) | சேர்க்கப்பெற்ற பழங்குடி மாணவர்களில் கொண்டா ரெட்டி மாணவர்கள். (4) | மொத்த இட எண்ணிக்கை யின் சேர்க்கப்பெற்ற தாழ்த் தப்பட்ட பழங்குடி மாணவர் களின் சதவீதம். (5) |
|---|---|---|---|---|
| ாதியியல் : (தொழில் நுட்பக் )ல்வி இயக்ககம்) | 235 | 26 | 15 | 18.6% |
| மருத்துவம் : | 169 | 20 | 9 | 19% |
| வேளாண்மை : அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள | 78 | 5 | இல்லை | 20.3% |
| பொறியியற் கல்லூரிகள். | 92 | 16 | 10 | 19% |

V811,31 N83
136045

இணைப்பு I

நாட்களின் பேரவையின் நடவடிக்கைக்குறிப்புகளின் பகுதிகள் (பேரவையில் 6-4-1983 ஆம் தேதியன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அறிவித்ததற்கிணங்க வைக்கப்பெறுகிறது) (தமிழ் (10 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 852-க்கான விடையைக் காண்க)

தமிழ்நாடு அரசு ''அரசுக் கவிஞர்'', ''அரசுப் புலவர்'' என்ற சிறப்புக் கவிகளை தோற்றுவிக்கவில்லை. ஆனால் ',அரசவைக் கவிஞர், அரசு'' கலைஞர் என்ற பெயரில் சில நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

2. 1978ஆம் ஆண்டில் திரு. கவியரசு கண்ணதாசன் அவர்கள் அரசவைக் கவிஞராக நியமனம் செய்யப்பட்டார் அவருக்கு திங்களொன்றுக்கு ரூ. 1,000 மதிப்பூதியமாக கொடுக்கப்பட்டது. அரசு செலவில் மருந்து, தொலைபேசி ஓட்டுநர் மற்றும் அடிப்படை ஊழியர் ஆகியவை அளிக்கப் பட்டன. மேலும் அரசு செலவில் மாதம் ஒன்றுக்கு 200 லிட்டர் பெட்ரோல் வசதியும் கொடுக்கப்பட்டது. அவர் இறந்தபின், அப்பதவியில் இதுவரையில் யாரும் நியமனம் செய்யப்படவில்லை.

3. கர்நாடக இசை, பரத நாட்டியம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், கிளாரினெட் போன்ற துறைகளில். குறிப்பிடத்தக்க பணியாற்றி சிறந்து விளங்கும் கலைஞர்களை, தமிழக அரசு, அரசுக்கலைஞர்களாக நியமித்து கௌரவிக்கிறது. அரசுக் கலைஞர்களுக்கு மாதமொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

(அ) 1979-ஆம் ஆண்டு அரசுக் கலைஞர்களாகக் கீழ்க்கண்ட 8 பேர்கள் ஐந்தாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்

1. கலைமாமணி டாக்டர் மதுரை சோமசுந்தரம்—கர்நாடக இசை.
2. டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா—கர்நாடக இசை.
3. கலைமாமணி திருமதி வைஜயந்தி மாலா பாலி—பரத நாட்டியம்.
4. கலைமாமணி திரு. லால்குடி ஜெயராமன்—வயலின்,
5. கலைமாமணி திரு. கே. பி. சிவானந்தம்—வீணை.
6. கலைமாமணி திரு, நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன்—நாதஸ்வரம்.
7. கலைமாமணி திரு. [illegible] சண்முகசுந்தரம்—[illegible]
8. [illegible]



(ஆ) 1981-ஆம் ஆண்டு அரசுக கலைஞர்களாக கீழ்க்கண்ட 12 பேர்கள் மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

1. கலைமாமணி டாக்டர் திரு. சீர்காழி கோவிந்தராஜன்—கர்நாடக இசை.
2. கலைமாமணி டாக்டர் திருமதி எம். எல். வசந்தகுமாரி—கர்நாடக இசை.
3. கலைமாமணி செல்வி அலர்மேல்வள்ளி—பரத நாட்டியம்.
4. கலைமாமணி கோவிந்தசாமி நாய்க்கர்—வயலின்.
5. கலைமாமணி திரு. சிட்டிபாபு—வீணை.
6. கலைமாமணி திரு. ரமணி—புல்லாங்குழல்.
7. கலைமாமணி திரு எம். பி. என். சேதுராமன்—நாதஸ்வரம்.
8. கலைமாமணி திரு. எம். பி. என். பொன்னுசாமி—நாதஸ்வரம்
9. கலைமாமணி திரு. ஏ. கே. சி. நடராஜன்—கிளாரினெட்.
10. கலைமாமணி திரு. வலையப்பட்டி சுப்பிரமணியம்—தவில்.
11. கலைமாமணி திரு. உமையாள்புரம் சிவராமன்—மிருதங்கம்.
12. கலைமாமணி திரு. மதராஸ் கண்ணன்—மிருதங்கம்.

மேற்கண்ட 20 அரசுக் கலைஞர்களுக்கு மாதமொன்றுக்கு மதிப்பூதியமாக தலா ரூபாய் 1,000 வழங்கப்படுகிறது.